
# 1986 அவ்யக்த முரளி



**பொருளடக்கம் -30**

**01.01.1986 புத்தாண்டில் புதுமைக்கான வாழ்த்து!**

**06.01.1986 சங்கமயுகம் சேமிப்பு செய்வதற்கான யுகம்!**

**08.01.1986 பூமியின் புனித நட்சத்திரங்கள்!**

**13.01.1986 பிராமண வாழ்க்கை சதா எல்லையற்ற மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கை!**

**15.01.1986 மலிவான வியாபார ஒப்பந்தம் மற்றும் சேமிப்பிற்கான பட்ஜெட்!**

**18.01.1986 மனதின் சக்தி மற்றும் பயமற்ற நிலையின் சக்தி!**

**20.01.1986 முயற்சி மற்றும் மாற்றத்தின் பொன்னான வாய்ப்பிற்கான ஆண்டு!**

**22.01.1986 பாப்தாதாவின் ஆசை -சம்பூரணம் மற்றும் சம்பன்னம் ஆகுங்கள்!**

**16.02.1986 பொன்விழாவுக்கான பொன்னான எண்ணங்கள்!**

18.02.1986 நிரந்தர சேவாதாரி மற்றும் நிரந்தர யோகி ஆகுங்கள்!

20.02.1986 பறக்கும் கலை மூலம் அனைவருக்கும் நன்மை!

22.02.1986 பாப்தாதாவின் ஆசை -சம்பூரணம் மற்றும் சம்பன்னம் ஆகுங்கள்!

25.02.1986 இரட்டை அயல்நாட்டு சகோதர, சகோதரிகளின் சமர்ப்பண விழாவில்!

27.02.1986 கல்பகல்பம் வெற்றியடைந்த ஆன்மிக சேனை!

01.03.1986 புனித அன்னப்பறவை புத்தி, விருத்தி, திருஷ்டி மற்றும் வாய்!

04.03.1986 சர்வ சிரேஷ்ட படைப்பின் அஸ்திவாரம் –அன்பு!

07.03.1986 படிப்பின் நான்கு பாடங்களின் யதார்த்த நினைவுச்சின்னம் -மகா சிவராத்திரி!

10.03.1986 கவலையற்ற மகாராஜா ஆவதற்கான யுக்தி (வழிமுறை)!

13.03.1986 சுலபமான மாற்றத்திற்கு ஆதாரம் -அனுபவத்தின் அதிகாரம்!

16.03.1986 ஆன்மிக டிரில்!

19.03.1986 அமிர்தவேளை -சிரேஷ்ட பிராப்திகளின் வேளை!

22.03.1986 சுகம், சாந்தி மற்றும் குஷிக்கான ஆதாரம் தூய்மை!

25.03.1986 சங்கமயுகம் ஹோலி வாழ்க்கைக்கான யுகமாகும்!

27.03.1986 சதா அன்பானவராக ஆகுங்கள்!

29.03.1986 இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகளுடன் பாப்தாதாவின் உரையாடல்!

31.03.1986 சர்வ சக்திகளிலும் சம்பன்னமாக வரதானம் பெறும் வருடம்!

07.04.1986 தபஸ்வி மூர்த்தி, தியாக மூர்த்தி மற்றும் விதாதாவாக (உலகத்தை உருவாக்குபவர்) இருப்பவரே விஷ்வ இராஜ்ய அதிகாரி!

**09.04.1986 உண்மையான சேவாதாரியின் அடையாளம்!**

**11.04.1986 சிரேஷ்ட அதிர்ஷ்டத்திற்கான வரைபடம் அமைப்பதற்கான யுக்தி!**

**31.12.1986 கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தை சிறந்ததாக (சிரேஷ்டமாக) உருவாக்குவதற்கான விதி!**

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி!**

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂

# 01.01.1986 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# புத்தாண்டில் புதுமைக்கான வாழ்த்து!

இன்று நாலபுறமும் உள்ள அனைத்து சிநேகி, சகயோகி மற்றும் சக்திசாலி குழந்தைகளின் இனிமையிலும் இனிமையான, மனதின் சிரேஷ்ட சங்கல்பங்கள், அன்பின் உறுதிமொழிகள். மாற்றத்திற்கான உறுதிமொழிகள், பாபாவுக்குச் சமமாக ஆவதற்கான ஊக்கம்-உற்சாகத்தின் திட சங்கல்பம், அதாவது அநேக ஆன்மிக இசைகள் நிறைந்த மனதின் பாடல்கள் அமிர்தவேளையில் இருந்தே மனதின் நண்பரிடம் வந்து சேர்ந்தன. மனதின் நண்பர் அனைவரின் இனிய பாடல்களைக் கேட்டு சிரேஷ் சங்கல்பத்துடன் மிகவும் மகிழ்ச்சியடைந்து கொண்டிருந்தார். மனதின் நண்பர் தம்முடைய ஆன்மிக நண்பர்களுக்கு, இறை நண்பர்களுக்கு, அனைவரது பாடல்களுக்கும் பதில் கொடுத்துக் கொண்டிருந்தார். சதா ஒவ்வொரு சங்கல்பத்திலும், ஒவ்வொரு சொல்லிலும் புனிதமாக, மகிழ்ச்சியாக, ஆரோக்கியமாக இருப்பதற்கான வாழ்த்துகள்! சதா சகயோகத்தின் கை, மனதின் நண்பரின் காரியத்தில் சசுயோகத்தின் சங்கல்பத்துடன் கையோடு கை இணைத்து இருக்கட்டும். நாளாயுறமும் உள்ள குழந்தைகளின் சங்கல்பம், கடிகம், கார்டு (வாழ்த்து அட்டைகள்), மற்றும் அதோடு கூடவே நினைவின் அடையாளமாக அன்பின் பரிசுகள் அனைத்தும் பாப்தாதாவிடம் வந்து சேர்ந்தன. பாப்தாதா சதா ஒவ்வொரு குழந்தையின் புத்தி என்ற நெற்றியின் மீது வரதானங்களின், சதா வெற்றிக்கான ஆசிர்வாதங்களின் கையை, புத்தாண்டின் வாழ்த்துகளாக, குழந்தைகள் அனைவருக்கும் கொடுத்துக் கொண்டிருக்கிறார். புத்தாண்டில் சதா ஒவ்வொரு உறுதிமொழியை யும் பிரத்தியட்ச ரூபத்தில் கொண்டு வருவதற்கான, அதாவது ஒவ்வொரு அடியிலும் தந்தையைப் பின்பற்றுவதற்கான விசேஷ ஸ்மிருதி சொரூப திலகத்தை சத்குரு, கீழ்ப்படிதலான குழந்தைகள் அனைவருக்கும் கொடுத்துக் கொண்டிருக்கிறார். இன்றைய நாள் சிறியவர்-பெரியவர் அனைவரின் வாயிலும் வாழ்த்துகளின் சொற்கள் அடிக்கடி இருந்து கொண்டு தான் இருக்கிறது. அதே போல் சதா புதிய இசை உள்ளது, புதிய

விநாடி உள்ளது, புதிய சங்கல்பம் உள்ளது. ஆகவே ஒவ்வொரு விநாடியும் வாழ்த்துகள். சதா புதுமைக்கான வாழ்த்துகள் கொடுக்கப் படுகின்றன. ஏதேனும் புதிய பொருளா கட்டும், புதிய காரியமாகட்டும். வாழ்த்துகளை அவசியம் கொடுக்கின்றனர். புதுமைக்காக வாழ்த்து கொடுக்கப்படுகின்றது. ஆக உங்கள் அனைவருக்காக எப்போதுமே புதியது. இது சங்கமயுகத்தின் விசேஷமாகும், சங்கமயுகத்தின் ஒவ்வொரு சும்மமும் பறக்கும் கலையில் செவ்வதற்கானது. இக்காரணத்தால் சதா புதியதிலும் புதியது. ஒரு விநாடிக்கு முன் என்ன மனநிலை இருந்தது, வேகம் இருந்தது, அது அடுத்த விநாடி அதைக் காட்டிலும் உயர்ந்தது, அதாவது பறக்கும் கலையின் பக்கமாக இருக்கும். எனவே ஒவ்வொரு விநாடியின் மனநிலையின் வேகம் உயர்ந்தது, அதாவது புதியது. ஆக. உங்கள் அனைவருக்காகவும் ஒவ்வொரு விநாடியின் சங்கல்பத்தின் புதுமைக்கான வாழ்த்துகள்! சங்கமயுகம் என்பதே வாழ்த்துகளின் யுகம். சதா வாய் இனிப்பாக, வாழ்க்கை இனிப்பாக, உறவுகள் இனிப்பாக அனுபவம் செய்வதற்கான யுகம். பாப்தாதா புத்தாண்டிற்காக வெறுமனே வாழ்த்துகள் மட்டும் சொல்லவில்லை, ஆனால் சங்கமயுகத்தின் ஒவ்வொரு விநாடிக்கான, ஒவ்வொரு சங்கல்பத்திற்கான உயர்ந்த வாழ்த்துக்களைக் கொடுக்கிறார். மனிதர்களோ இன்று மட்டுமே வாழ்த்துகள் சொல்கின்றனர், நாளை அது முடிந்தது. பாப்தாதா சதா காலத்திற்காக வாழ்த்துகள் தருகிறார், பயராட்டுகள் தருகிறர், புது யுகத்தின் அருகிள் வருவதற்கான வாழ்த்துகள் தருகிறார். சங்கல்பங்களின் மிக நல்ல பாடல்கள் கேட்டோம். கேட்டுக் கேட்டு பாப்தாதா பாடல்களின் இசை மற்றும் இரகசியத்தில் மூழ்கி விட்டார்.

இன்று வதனத்தில் பாடல் மாலையின் (கீத் மாலா) புரோகிராம் அதிகாலையில் இருந்தே கேட்டுக் கொண்டிருந்தோம். அமிர்தவேளையும் கூட உள்நாடு மற்றும் வெளிநாடுகளின் கணக்கின் படி அவரவருடையது. ஒவ்வொரு குழந்தையும் தான் பாபாவிடம் அமிர்தவேளையில் பேசிக் கொண்டிருக்கிறோம் எனப் புரிந்து கொண்டிருக்கின்றனர். பாப்தாதாவோ நிரந்தரமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார். ஒவ்வொருவரும் பாடலைப் பாடும் விதமும் மிகவும் அன்பானது. உங்களது இசையும் அவரவருடையது.

ஆனால் பாப்தாதாவுக்கு அனைவரின் பாடல்களும் பிரியமானவை. வாழ்த்துகளோ சொல்லி விட்டார். வாயினால் கொடுத்தாலும் சரி, மனதால் கொடுத்தாலும் சரி, வழக்கத்தின் பிரமாணம் கொடுத்தாலும் சரி. அல்லது

அன்பின் பொறுப்பை நிறைவேற்றுவதற்கான உயர்ந்த எண்ணத்துடன் கொடுத்தாலும் சரி. இப்போது இனி மேற்கொண்டு என்ன செய்யப் போகிறீர்கள்? எப்படி சேலையின் 50-ஆண்டுகள் (1986-இல் முடிவடைகின்றன. அந்த மாதிரி சர்வ சிரேஷ்ட சங்கல்பம் அல்லது உறுதிமொழியை நிறைவேற்றுவீர்களா அல்லது சங்கல்பத்தோடு நின்று போகுமா? உறுதிமொழியோ ஒவ்வொரு வருடமும் மிக நன்றாகவே செய்கிறீர்கள். எப்படி இன்றைய உலகில் நாளுக்கு நாள் எவ்வளவு நல்ல-நல்ல கார்டுகளைத் தயார் செய்து கொண்டே இருக்கின்றனர். ஆக, சங்கல்பமும் ஒவ்வொரு வருடத்திலும் சிரேஷ் மானதாகச் செய்கிறீர்கள் ஆனால் சங்கல்பம் மற்றும் சொரூபம் இரண்டுமே சமமாக இருக்க வேண்டும். இது தான் உயர்ந்த தன்மையாகும். இந்த உயர்ந்த நிலையில் வருவதற்கு யார் முன் வருகிறார்களோ, அவர்கள் தாம் அர்ஜுன், அது போல் யார் ஆவார்கள்? நாம் தான் ஆவோம் என்று. அனைவருமே நினைக்கின்றனர், மற்றவர் அர்ஜுன் ஆகிறாரா அல்லது பீமன் ஆகிறாரா என்று அதைப் பார்க்கக் கூடாது. நான் நம்பர் ஒன் அதாவது அர்ஜுன் ஆக வேண்டும். வேர அர்ஜுன்! என்பது தான் பாடப் பட்டுள்ளது. அர்ஜுனனின் விசேஷம், சதா பிந்தியில் ஸ்மிருதி சொரூபமாக ஆகி வெற்றியாளர் ஆக வேண்டும். அந்த மாதிரி நஷ்டோமோகா ஸ்மிருதி சொரூபம் ஆகிறவர் அர்ஜுன். சதா கீதா ஞானத்தைக் கேட்பவர் மற்றும் மனனம் செய்பவர் அர்ஜுன். அந்த மாதிரி விதேகி, அனைவரும் உயிருடன் இருந்தாலும் இறந்தவராக உள்ளனர் -அது போல் எல்லையற்ற வைராக்ய விருத்தி உள்ள அர்ஜுனாக யார் ஆவார்கள்? ஆக வேண்டுமா அல்லது வெறுமனே சொல்ல வேண்டுமா? புது வருடம் எனச் சொல்கிறீர்கள். சதா ஒவ்வொரு விநாடியிலும் புதுமை, மனதில், சொல்லில், கர்மத்தில், சம்மந்தத்தில் புதுமையைக் கொண்டு வர வேண்டும். இந்தப் புது வருடத்தின் வாழ்த்தை சதா கூடவே வைத்திருக்க வேண்டும். ஒவ்வொரு விநாடி, ஒவ்வொரு சமயம் ஸ்திதியின் சதவிகிதம் முன்னால் இருக்க வேண்டும். எப்படி ஏதேனும் இலக்கைச் சென்று சேர்வதற்காக எத்தனை அடி எடுத்து வைத்துச் செல்கிறார்களோ, ஒவ்வொரு அடியிலும் இலக்கை நோக்கி முன்னால் சென்று கொண்டே இருக்கிறார்கள். முதலில் இருந்த இடத்தைக் அங்கேயே நின்று விடுவதில்லை. அது போல் ஒவ்வொரு விநாடி, ஒவ்வோர் அடியிலும் சமீப நிலை மற்றும் சம்பூர்ண நிலையின் சமீபம் வருவதற்கான லட்சணம் தனக்கும் அனுபவம் ஆக வேண்டும் மற்றும் மற்றவர்களுக்கும் அனுபவம் ஆக வேண்டும். சதவீதத்தை முன்னேற்றுவது எனச் சொல்லப் படுவது இது

தான். சதவீதத்தின் புதுமை, வேகத்தின் புதுமை என்று சொல்லப் படுவது இது தான். ஆக, ஒவ்வொரு சமயமும் புதுபையைக் கொண்டு வந்து கொண்டே இருங்கள். புதிதாக என்ன செய்வது என்று அனைவரும் கேட்கின்றனர். முதலில் தன் மீது புதுமையைக் கொண்டு வாருங்கள். அப்போது சேவையில் புதுமை தானாகவே வந்து விடும். இன்றைய மனிதர்கள் நிகழ்ச்சியின் புதுமையை விரும்ப வில்லை ஆனால் பிரபாவத்தின் புதுமையை விரும்புகின்றனர். ஆக, தன்னுடைய புதுமையின் மூலமாக பிரபாவத்திலும் புதுமை தானாக வந்து விடும். இந்த வருடம் பிரபாவம் உள்ளவராக ஆவதற்கான விசேஷத்தைக் காட்டுங்கள். பிராமண ஆத்மாக்கள் தங்களுக்குள் தொடர்பில் வரும் போது சதா ஒவ்வொருவருக்காகவும் மனதின் பாவனை சிநேகம் சகயோகம் மற்றும் நன்மையின் பிரபாவம் உள்ளதாக இருக்கட்டும். ஒவ்வொரு சொல்லும் யாருக்காவது தைரியம், உற்சாகம் கொடுப்பதற்கான பிரபாவம் உள்ளதாக இருக்கட்டும். வீணானதாக இருக்கக் கூடாது. சாதாரண உரையாடலில் அரை மணி நேரம் கூடக் கழித்து விடுகிறீரர்கள். பிறகு யோசிக்கிறீர்கள் --இதன் முடிவு என்னவாக வெளிப்பட்டது? ஆக, அந்த மாதிரி கெட்டதும் இல்லாமல், நல்லதும் இல்லாமல் சாதாரண பேச்சு. நடவடிக்கைகளும் கூட பிரபாவம் உள்ள பேச்சு எனச் சொல்ல மாட்டார்கள். அதே போல் ஒவ்வொரு கர்மமும் பலன் கொடுப்பதாக இருக்க வேண்டும் -தனக்காக என்றாலும் சரி, மற்றவர்களுக்காக என்றாலும் சரி. ஆக, தங்களுக்குள்ளேயும் கூட ஒவ்வொரு ரூபத்திலும் ஆன்மிகப் பிரபாவம் உள்ளவராக ஆகுங்கள். சேவையிலும் கூட ஆன்மிகப் பிரபவம் உள்ளவராக ஆகுங்கள். நன்கு முயற்சி செய்கிறீர்கள். மனதாரச் செய்கிறீர்கள். இதையோ அனைவருமே சொல்கிறார்கள் ஆனால் இவர்கள் இராஜயோக ஃபரிஸ்தாக்கள், ஆன்மிகம் என்றால் இங்கே தான் உள்ளது, பரமாத்ம காரியம் இங்கே தான் நடக்கிறது என்று அந்த மாதிரி பாபாவைப் பிரத்யட்சம் செய்வதற்கான பிரபாவம் இருக்க வேண்டும். வாழ்க்கை நன்றாக உள்ளது, காரியம் நன்றாக உள்ளது என்று இதையும். சொல்கிறார்கள்.ஆனால் பரமாத்ம காரியம், பரமாத்ம குழந்தைகள், இதுவே நிறைவான வாழ்க்கை.

முழுமையான வாழ்க்கை -இந்தப் பிரபாவம் இருக்க வேண்டும். சேவையில் இன்னும் பிரபாவம் உள்ளவராக இருக்க வேண்டும். இப்போது இந்த அலையைப் பரப்புங்கள் -நாமும் நல்லவராக ஆக வேண்டும் என்று அவர்கள் சொல்ல வேண்டும். நீங்கள் மிக நல்லவர்கள் -இது பக்த மாலையாக

உருவாகிக் கொண்டிருக்கிறது ஆனால் இப்போது வெற்றி மாலை, அதாவது சொர்க்கத்தின் அதிகாரி ஆவதற்கான மாலையை முதலில் தயார் செய்யுங்கள். முதல் ஜென்மத்திலேயே 9-லட்சம் வேண்டும். பக்த மாலை மிக நீண்டதாகும். இராஜ்யத்தின் அதிகாரி, இராஜ்யம் செய்கிறவராக இல்லை. இராஜ்யத்தில் வருவதற்கான அதிகாரி -இதுவும் கூட இப்போது வேண்டும். ஆக, இப்போது அந்த மாதிரி அலையைப் பரவச் செய்யுங்கள். நல்லது எனச் சொல்பவர்கள், நல்லவராக, ஆவதில் தொடர்பில் உள்ளவர்கள் குறைந்தது பிரஜையின் சம்மந்தத்திலே வரட்டும். பிறகும் உங்களுடைய தொடர்பில் வருகிறார்கள் என்றால் அவர்களை சொர்க்கத்தின் அதிகாரியாகவோ ஆக்குவீர்கள் இல்லையா? அந்த மாதிரி சேவையில் பிரபாவம் உள்ளவராக ஆகுங்கள். இவ்வருடத்தைப் பிரபாவசாலி ஆவது மற்றும் பிரபாவத்தின் மூலம் பாபாவைப் பிரத்யட்சம் செய்வதற்கான விசேஷத்தன்மையின் மூலம் விசேஷ ரூபத்தில் கொண்டாடுங்கள். தான் பிரபாவத்தில் வந்து விடக் கூடாது, ஆனால் பாபா மீது பிரபாவத்தை ஏற்படுத்துங்கள். புரிந்ததா? எப்டி பக்தியில் சொல்கிறீர்கள் இல்லையா இவை அனைத்தும் பரமாத்மாவின் வடிவங்கள். அதைத் தலைகீழான் பாவனையில் சொல்லி விடுகின்றனர் ஆனால் ஞானத்தின் பிரபாவத்தினால் உங்கள் அனைவரின் ரூபத்தின் மூலம் அவர்கள் பாபாவை அனுபவம் செய்ய வேண்டும். யாரைப் பார்த்தாலும் பரமாத்ம சொரூபத்தின் அனுபூதி ஏற்பட வேண்டும். அப்போது புது யுகம் வரும். இன்னும் முதல் பிறவியின் பிரஜைகளைக் கூடத் தயார் செய்யவில்லை. பின்னால் வரக்கூடிய பிரஜைகளேய சுலபமாகத் தயாராகி விடுவார்கள் ஆனால் முதல் பிறவியின் பிரஜைகள் தயாராக வேண்டும். எப்படி இராஜா சக்திசாலியாக இருப்பாரோ, அது போல் பிரஜைகளும் கூட சக்திசாலியாக இருப்பார்கள். ஆகவே சங்கல்பம் என்ற விதையை சதா பலன் சொரூபத்தில் கொண்டு வந்து கொண்டே இருங்கள். உறுதிமொழியைப் வெளிப்படையான ரூபத்தில் சதா கொண்டு வந்து கொண்டே இருக்க வேண்டும். இரட்டை வெளிநாட்டினர் என்ன செய்வீர்கள்? அனைவரிடமும் இரட்டை ரிசல்ட்டை வெளிப்படுத்துவீர்கள் இல்லையா? ஒவ்வொரு விநாடியின் புதுமையின் மூலம் ஒவ்வொரு விநாடியும் பாபாவின் வாழ்த்துகளைப் பெற்றுக் கொண்டே இருக்க வேண்டும். நல்லது.

சதா ஒவ்வொரு சங்கல்பத்திலும் புதுமையின் மகான் தன்மையைக் காண்பிக்கக் கூடிய ஒவ்வொரு விநாடியும் பறக்கும் கலையின் அனுபவம் செய்யக்கூடிய, சதா பிரபாவசாலி ஆகி, பாபாவின் பிரபாவத்தைப்

பிரத்தியட்சம் செய்யக்கூடிய, ஆத்மாக்களிடம் புது வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கான புதிய தூண்டுதலைக் கொடுக்கக் கூடிய, புது யுகத்தின் அதிகாரி ஆக்குவதற்கான சிரேஷ்ட அலையைப் பரப்பக் கூடிய -அப்படிப்பட்ட சதா வரதுனி ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் சதா சங்கல்பங்களுடன் கூடிய அன்பு நினைவு மற்றும் நமஸ்தே!

**தாதிகளுடன்**: சக்திசாலி சங்கல்பத்தின் சகயோகம் விசேஷமாக இன்றைய அவசியமாக உள்ளது. தன்னுடைய புருஷார்த்தம் என்பது வேறு பொருள் ஆனால் சிரேஷ்ட சங்கல்பத்தின் சகயோகம் விசேஷத் தேவையாக உள்ளது. இந்த சேவை தான் விசேஷ ஆத்மாக்களாகிய உங்களுக்கானது. சங்கல்பத்தால் சகயோகம் கொடுப்பதென்பது இந்த சேவையை அதிகப் படுத்துவதாகும். வாய்மொழி மூலம் கற்பிப்பதற்கான சமயம் முடிந்து போய் விட்டது. இப்போது சிரேஷ்ட சங்கல்பத் தால் மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும். சிரேஷ் பாவனை மூலம் மாற்றம் செய்யும் சேவை தான் அவசியமாக உள்ளது. இந்த பவம் தான் அனைவருக்கும் தேவையாக உள்ளது. சங்கல்பமோ அனைவருமே செய்கின்றனர் ஆனால் சங்கல்பத்தில் பலத்தை நிரப்ப வேண்டியது இப்போதைய தேவையாகும். ஆக. எவ்வளவு சுயம் சக்திசாலியோ, அவ்வளவு மற்றவர்களிடமும் சங்கல்பத்தில் பலம் நிரப்ப முடியும். எப்படி தற்சமயம் சூரியனின் சக்தியை சேமித்து அநேகக் காரியங்களில் பயன்படுத்துகின்றனர் இல்லையா? இதுவும் சங்கல்ப சக்தி ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது -அதன் மூலம் மற்றவர்களுக்கும் பலக்கை நிரப்ப முடியும், காரியத்தை வெற்றிகரமாக ஆக்க முடியும். எங்களிடம் தைரியம் இல்லை என்று. அவர்கள் தெளிவாகச் சொல்கின்றனர்,

ஆகவே அவர்களுக்கு தைரியம் கொடுக்க வேண்டும். வார்த்தை மூலமாகவும் தைரியம் வருகிறது, ஆனால் சதா காலத்திற்கும் இருக்காது. வார்த்தையோடு கூடவே சிரேஷ்ட சங்கல்பத்தின் சூட்சும சக்தி அதிகமான காரியம் செய்யும். எவ்வளவு சூட்சுமமான பொருளாக உள்ளதோ, அது அதிகமான வெற்றியைக் காண்பிக்கும், வார்த்தையைக் காட்டிலும் சங்கல்பம் சூட்சுளானது இல்லையா? ஆகவே இன்று இது தான் அவசியமாக உள்ளது. இந்த சங்கல்ப சக்தி மிகவும் சூட்சுமமானது. எப்படி இஞ்செக்ஷ்ன் மூலமாக இரத்தத்தில் சக்தியை நிரப்பி விடுகின்றனர் இல்லையா? அது போல் சங்கல்பம் என்பது ஒரு இன்ஞ்செக்ஷ்னின் வேலையைச் செய்கிறது. அதனால் உள்ளுக்குள் உள்ளுணர்வில் சங்கல்பத்தின் மூலம் சங்கல்பத்தில்

சக்தி வந்து விடுகிறது. இப்போது இந்த சேவை மிகவும் அவசியமாக உள்ளது. நல்லது.

**டீச்சர்களுடன்**: நிமித்த சேவாதாரி ஆவதில் பாக்கியத்தின் பிராப்தியை அனுபவம் செய்கிறீர்களா? சேவைக்கு நிமித்தமாவது என்றால் பொன்னான வாய்ப்பு கிடைப்பதாகும். ஏனென்றால் சேவாதாரிக்கு தானாகவே நினைவு மற்றும் சேவையைத் தவிர வேறு எதுவுமே இருப்ப தில்லை. உண்மையான சேவாதாரி என்றாள் இரவும் பகலும் சேவையில் பிஸியாக இருப்பதால் சகஜமாகவே முன்னேற்றத்தின் அனுபவம் செய்வார்கள். இது மாயாஜீத் ஆவதற்கான கூடுதல் லிஃப்ட்டாகும். ஆக, நிமித்த சேவாதாரி எவ்வளவு முன்னேறிச் செல்ல விரும்புகிறாரோ, அவ்வளவு சகஜமாக முன்னேறிச் செல்ல முடியும். இது விசேஷ வரதானமாகும். ஆக, கிடைக்கின்ற கூடுதல் லிஃப்ட் அல்லது பொன்னான வாய்ப்பின் மூலம் லாபத்தை எடுத்துக் கொண்டீர்கள். சேவாதாரி தானாகவே சேவைக்கான பவனை உண்ணக்கூடிய ஆத்மா ஆகிறார். ஏனென்றால் சேவையின் பிரத்தியட்ச பலன் இப்போதே கிடைக்கிறது. நல்ல தைரியம் வைத்திருக்கிறீர்கள். தைரியசாலி ஆத்மாக்கள் மீது பாப்தாதாவின் உதவி என்ற கை சதா உள்ளது. இந்த உதவியின் மூலம் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறீர்கள் மற்றும் முன்னேற்றத்தில் சென்று கொண்டே இருக்க வேண்டும். பாபாவின் இந்த உதவி எனும் கை சதா காலத்திற்குமான ஆசிர்வாதமாகி விடுகிறது. பாப்தாதா சேவாதாரிகளைப் பார்த்து விசேஷமாகக் குஷியடைகிறாம். ஏனென்றால், பயப்சபான் காரியத்தில் நிமித்தமாகியிருக்கிறீர்கள். சதா உங்களைப் போன்ற ஆசிரியர்களை விருத்தி செய்து கொண்டே செல்லுங்கள். சதா புதிய ஊக்கம், புதிய உற்சாகத்தைத் தனக்குள் தாரணை செய்யுங்கள் மற்றும் மற்றவர்களுக்கும் காண்பியுங்கள். உங்கள் ஊக்கத்தைப் பார்த்துத் தானாகவே சேவை நடை பெற்றுக் கொண்டே இருக்க வேண்டும். ஒவ்வொரு சாயமும் ஏதேனும் சேலையின் புதுமைக்கான திட்டத்தை உருவாக்கிக் கொண்டே இருங்கள். அந்த திட்டம், அதிவேகமான சேவைக்கான விசேஷ சாதனமாக ஆகக்கூடிய அளவுக்கு இருக்க வேண்டும். இப்போது அந்த மாதிரி ஏதாவது அற்புதம் செய்து காட்டுங்கள். எப்போது சுயம் நிர்விக்னமாக இருக்கிறீர்களோ, அசையாதவராக இருக்கிறீர்களோ, அப்போது சேவையில் புதுமையை எளிதாகக் காண்பிக்க முடியும். எவ்வளவு யோகயுக்த் ஆகிறர்களோ, அவ்வளவு புதுமை, இது போல் செய்ய வேண்டும் என்று டச் ஆகும் மற்றும்

நினைவின் பலத்திலயல் வெற்றி கிடைத்து விடும். ஆக, விசேஷமான ஏதேனும் காரியத்தைச் செய்து காட்டுங்கள்.

**பார்ட்டிகளுடன்**: 1. சர்வ கஜானாக்களால் நிரம்பப் பெற்ற சிரேஷ்ட ஆத்மாக்கள் என்பதாக அனுபவம் செய்கிறீர்களா? எவ்வளவு கஜானாக்கள் கிடைத்துள்ளன என அறிவீர்களா? எண்ணிப் பார்க்க முடியுமா? அவிநாசி மற்றும் அளவற்றது. ஆக, ஒவ்வொரு கஜானாவையும் ஸ்மிருதியில் கொண்டு வாருங்கள். கஜானாவை ஸ்மிருதியில் கொண்டு வருவதால் குஷி இருக்கும். எவ்வளவு கஜானாக்களின் நினைவில் இருக்கிறீர்களோ, அவ்வளவு சக்திசாலி ஆகி க் கொண்டே செல்வர்கள். மேலும் எங்கே சக்தி உள்ளதோ, அங்கே வீணானவை முடிந்து போகும். விண் சங்கன்பம், வீண் சமயம், வீண் வார்த்தை அனைத்தும் மாறி விடும். அந்த மாதிரி அனுபவம் செய்கிறீர்களா? மாற்றம் ஏற்பட்டு விட்டது இல்லையா? புதிய வாழ்க்கையில் வந்து விட்டீர்கள். புதிய வாழ்க்கை, புதிய ஊக்கம். புதிய உற்சாகம் ஒவ்வொரு கணமும் புதிது, ஒவ்வொரு சமயமும் புதிது. ஆக, ஒவ்வொரு சங்கல்பத்திலும் புதிய ஊக்கம், புதிய உற்சாகம் இருக்க வேண்டும். நேற்று என்னவாக இருந்தோம், இன்று என்னவாக ஆகி விட்டோம்! இப்போது பழைய சங்கல்பம், பழைய சம்ஸ்காரமே மிஞ்சியிருக்கவில்லை தானே? கொஞ்சம் கூட இல்லை, ஆக, சத இதே ஊக்கத்தில் முன்னேறிச் சென்று கொண்டே இருங்கள். எப்போது அனைத்தையும் அடைந்து விட்டீர்களோ, அப்போது நிறைவடைந்து விட்டீர்கள் இல்லையா? நிறைவான பொருள் குழப்பத்தில் வருவதில்லை. நிரம்புவது என்றால் ஆடாததாக இருப்பது. ஆக, தன்னுடைய இந்த சொரூபத்தை முன்னால் வையுங்கள் -நாம் குஷியின் கஜானாவினால் நிரம்பியவராக ஆகி விட்டோம். எங்கே குஷி உள்ளதோ, அங்கே சதா காலத்திற்கும் துக்கம் லிலகிப் போய் விட்டது. ஒருவர் எவ்வளவு சுயம் குஷியாக இருக்கிறாரோ, அந்த அளவு மற்றவர்களுக்கு மகிழ்ச்சி தரும் செய்தியைச் சொல்லிக் கொண்டே இருப்பார்.

2. சதா விஸ்தாரத்தை அடையக்கூடிய ஆன்மிகத் தோட்டம் இல்லையா? மேலும் நீங்கள் அனைவரும் ஆன்மிக ரோஜாக்கள் இல்லையா? எப்படி அனைத்து மலர்களிலும் ரோஜா மலர் சிரேஷ்டமானது எனப் பாடப் படுகின்றது. அது அல் காலத்திற்கு மணம் தரக்கூடியது. நீங்கள் யார்? ஆன்மிக ரோஜா என்றால் அவிநாசி மணம் தருபவர். சதா ஆன்மிகத்தின் மணத்தில் இருப்பவர்கள் மற்றும் ஆன்மிக மணம் தருபவர்கள். அந்த மாதிரி

ஆகியிருக்கிறீர்களா? அனைவரும் ஆன்மிக ரோஜாக்களா அல்லது மற்றப் பூக்களா'? இன்னும் கூட விதவிதமான மலர்கள் உள்ளன ஆனால் எவ்வளவு ரோஜா மலரின் மதிப்பு உள்ளதோ, அவ்வளவு பிற மலர்களுக்கு இல்லை. பரமாத்ம தோட்டத்தில் சதா மலர்ந்திருக்க்கும் மலர்கள் நீங்கள். ஒரு போதும் வடிப் போகிறவர்கள் அல்லர். சங்கல்பத்திலும் கூட ஒரு போதும் மாயாவினால் வாடிப்போகக் கூடாது. மாயா வருகிறது என்றால் வாடிப் போகிறீர்கள். மாயாஜீத் என்றால் சதா மலர்ந்த நிலையில் இருக்கிறீர்கள். எப்படி பாபா அவிநாசியாக இருக்கிறார். அது போல் குழந்தைகளும் கூட சதா அவிநாசி ரோஜாக்கள். புருஷார்த்தமும் அலிநாசி (அழிவில்வாத) என்றால், பிராப்தியும் அவிநாசி.

3. சதா தன்னை சகயோகி என அனுபவம் செய்கிறீர்களா? சகஜமாகத் தோன்றுகிறதா அல்லது கஷ்டமாகத் தோன்றுகிறதா?  தந்தையின் ஆஸ்தி குழந்தைகளின் உரிமையாகும். ஆகவே உரிமை எப்போதுமே சகஜமாகக் கிடைக்கிறது. ஆக, நீங்களும் கூட அதிகாரிகள் தாம். அதிகாரிகளாக இருப்பதால் சகஜயோகிகளாக இருக்கிறீர்கள். கடின உழைப்பிற்கான தேவை இல்லை. தந்தையை நினைவு செய்வது ஒரு போதும் கஷ்டமாக இருப்பதில்லை. இவர் எல்லையற்ற தந்தை மற்றும் அவிநாசி தந்தை. அதனால் சதா சகஜயோகி ஆத்மாக்கள். பக்தி என்றால் முயற்சி (கடின உழைப்பு). ஞானம் என்றால் சகஜமான பலன் பிராப்தியாவதாகும். எவ்வளவு சம்மந்தம் மற்றும் அன்போடு நினைவு செய்கிறீர்களோ, அவ்வளவு சகஜமாக அனுபவம் ஆகும். சதா தன்னுடைய இந்த வரதானத்தை நினைவு வைக்க வேண்டும் -நான் சகஜ யோகியாகவே இருக்கிறேன். ஆக, எப்படி ஸ்மிருதி உள்ளதோ, அப்படி ஸ்திதி தானாகவே அமைந்து விடும். நல்லது.

**வரதானம்: ஒவ்வொரு கர்மத்தையும் சரித்திர ரூபத்தில் மகிமைக்குத் தகுதியுள்ளதாக ஆக்கக் கூடிய மகான் ஆத்மா ஆகுக!**

யாருடைய ஒவ்வொரு சங்கல்பமும் ஒவ்வொரு கர்மமும் உயர்ந்ததாக உள்ளதோ, அவர் தாம் மகான் ஆத்மா ஆவார். ஒரு சங்கல்பம் கூட சாதாரணமானதாக அல்லது வீணானதாக இருக்கக் கூடாது. ஒரு கர்மம் கூட சாதாரணமான அல்லது அர்த்தமற்றதாக இருக்கக் கூடாது. கர்மேந்திரியங்கள் மூலமாக என்ன கர்மங்கள் நடைபெற்றாலும் அவை அர்த்தத்துடன் கூடியதாக இருக்க வேண்டும். சமயமும் மகான் காரியத்தில்

பயனுள்ளதாக ஆகி க் கொண்டே இருக்க வேண்டும். அப்போது ஒவ்வொரு சரித்திரமும் மகிமை பாடுவதற்குரியதாக ஆகும். மகான் ஆத்மாக்களின் நினைவுச்சின்னம் தான் மலர்ந்த முகமுள்ள மூர்த்தி, கவர்ச்சி மூர்த்தி மற்றும் அவ்யக்த மூர்த்தியின் ரூபத்தில் உள்ளது.

**சுலோகன்: மரியாதை பெறுவதற்கான ஆசையை விட்டு சுவமானத்தில் நிலைத்து விட்டீர்களானால் மரியாதை என்பது நிழலைப் போல் பின்னால் வரும்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 06.01.1986 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சங்கமயுகம் சேமிப்பு செய்வதற்கான யுகம்!

இன்று அனைத்துக் குழந்தைகளின் மூன்று காலங்களையும் தெரிந்திருக்கும் திரிகால தரிசி பாப்தாதா அனைத்துக் குழந்தைகளின் சேமிப்புக் கணக்கைப் பார்த்துக் கொண்டிருந்தார். முழுக் கல்பத்தில் சிரேஷ்ட கணக்கு சேமிப்பு செய்வதற்கான காலம் இந்த சங்கமயுகம் மட்டும் தான் என்பதை நீங்கள் அனைவரும் தெரிந்தேயிருக்கிறீர்கள். சின்னஞ்சிறு யுகம், சின்னச்சிறு வாழ்க்கை ஆனால் இந்த யுகத்தின், இந்த வாழ்க்கையின் விசேஷமே இப்பொழுது எவ்வளவு சேமிக்க விரும்புகிறீர்களோ அவ்வளவு சேமிப்பை செய்ய முடியும். இந்த நேரத்தின் சிரேஷ்ட கணக்கின் பிரகாரம் பூஜைக்குரிய வாழ்க்கை பதவியையும் அடைகிறீர்கள், மேலும் பூஜைக் குரியவர்களிலிருந்து பூஜாரி யாகவும் ஆகிறீர்கள். இந்த நேரத்தின் சிரேஷ்ட காரியத்தின், சிரேஷ்ட ஞானத்தின், சிரேஷ்ட சம்பந்தத்தின், சிரேஷ்ட சக்திகளின், சிரேஷ்ட குணங்களின் அப்படி அனைத்து சிரேஷ்ட கணக்கு களையும் இப்பொழுது சேமிப்பு செய்கிறீர்கள். துவாபர் யுகத்திலிருந்து பக்தியின் கணக்கு அது அற்பகாலமானது, இந்த நேரம் செய்தீர்கள், இந்த நேரமே பலனை அடைந்தீர்கள் மற்றும் முடிந்து விட்டது. பக்தியின் கணக்கு அற்பகாலத்திற்கானது. ஏனென்றால் இந்த நேரம் சம்பாதித் தீர்கள், மேலும் அதை சாப்பிட்டு முடித்தும் விட்டீர்கள், சேமிப்பு செய்வதற்கான அழியாத கணக்கு பல பிறவிகள் உடன் வருவதற்கான சேமிப்பு செய்யும் நேரம் இந்த நேரம் தான்! எனவே இந்த சிரேஷ்ட சமயத்தை புருஷோத்தம யுகம் அல்லது நன்மையே பயக்கும் யுகம் என்று கூறுவது. பரமாத்மாவின் அவதாரம் ஆகும் யுகம் என்றும் கூறுவது. நேரடியாக தந்தை மூலமாக அனைத்து சக்திகளையும் பிராப்தி செய்யும் யுகம் இது தான் என்று வர்ணிக்கப்படுகிறது. இந்த யுகத்தில் தான் தந்தை வழங்குபவர் மற்றும் வரம் அளிக்கும் வள்ளலின் பங்கைச் செய்கிறார். எனவே இந்த யுகத்தை வரம் பெறும் யுகம் என்றும் கூறுவோம். இந்த யுகத்தில் அன்பின் காரணமாக தந்தைகள்ளம் கபடமற்ற வெகுளியாக வாரி வாரி

வழங்குபவராக ஆகி விடுகிறார். இந்த நேரம் ஒன்றிற்கு பல மடங்கு பலன் கொடுக்கிறார். ஒன்றிற்கு பல மடங்கு சேமிப்பு ஆவதற்கான விசேஷ பாக்கியம் இந்த நேரம் தான் பிராப்தியாகிறது. மற்ற யுகங்களில் எந்தளவு சேமிப்போ அந்தளவு பலன் என்ற கணக்கு இருக்கிறது, எனவே வித்தியாசம் உள்ளது இல்லையா? எனென்றால் இப்போது நேரடியாக தந்தை ஆஸ்தி மற்றும் வரதானம் இரண்டு ரூபத்திலும் பிராப்தி செய்விப்பதற்கு பொருப்பாளர் ஆகிறார். பக்தியில் பாவனைக்கான பலன் இருக்கிறது. இப்போது ஆஸ்தி மற்றும் வரதானத்தின பலன் இருக்கிறது. எனவே இந்த நேரத்தின் மகத்துவத்தைத் தெரிந்து, பிராப்திகளைத் தெரிந்து, சேமிப்பு கணக்கை தெரிந்து, திரிகால தரிசியாகி வாழ்க்கையின் ஒவ்வொரு அடியையும் எடுத்து வைத்துக் கொண்டே இருக்கிறீர்களா? இந்த நேரத்தின் ஒரு வினாடி சாதாரண நேரத்தை விட எவ்வளவு பெரியது என்பதை தெரிந்திருக்கிறீர்களா? ஒரு நொடியில் எவ்வளவு வருமானம் செய்ய முடியுமா? மேலும் ஒரு நொடியில் எவ்வளவு இழக்கிறீர்கள்? இந்த கணக்கை நல்ல முறையில் தெரிந்திருக்கிறீர்களா? அல்லது சாதாரண முறையில் கொஞ்சம் சம்பாத்தித்தோம் சொஞ்சம் இழந்தோம் என்று அப்படி இருக்கிறதா? அம்மாதிரி விலை மதிக்க முடியாத நேரத்தை ஒன்றுமில்லாமல் இழந்து விட்டோம் என்று இருக்கவில்லையே? பிரம்மா குமார் குமாரிகளாகவோ ஆகி விட்டீர்கள் ஆனால் அழியாத ஆஸ்தி விசேஷ வரதானங்களின் அதிகாரியாக ஆகியிருக்கிறீர்களா? ஏனென்றால், இந்த நேரத்தில் அதிகாரி ஆகுபவர்கள் பல பிறவிகளுக்கு (உரிமையுள்ள) அதிகாரியாக ஆகிறார். இந்த நேரத்தில் ஏதாவது சுபாவம் சம்ஸ்காரம் மற்றும் ஏதாவது உறவின் அடிமையாக இருக்கும் ஆத்மா பல ஜென்மங்களுக்கு அதிகாரி ஆவதற்குத் பதிலாக, பிரஜை பதவியின் அதிகாரி ஆகிறார். இராஜ அதிகாரியாக ஆவதில்லை. பிரஜா பதவி அதிகாரி ஆகிறார். இராஜயோகி இராஜ்ய அதிகாரியாக ஆவதற்காக வந்தார் ஆனால் அடிமைத்தனத்தின் சம்ஸகாரத்தின் காரணமாக வழங்குபவரின் குழந்தையாக இருந்தபோதிலும் இராஜ்ய அதிகாரியாக ஆக முடியவில்லை. எனவே சுய அதிகாரி யாக எந்தளவு ஆகியிருக்கிறீர்கள் என்று உங்களை நீங்களே சோதனை செய்யுங்கள். யார் சுய அதிகாரித்தை அடைய முடியவில்லையோ அவர் விஷ்வ இராஜ்யத்தை எப்படி பிராப்தி செய்ய முடியும்? விஷ்வ ராஜ்ய அதிகாரி ஆவதற்கான சைத்தன்ய மாடலை இப்பொழுது சுய ராஜ்ய அதிகாரி ஆவதனால் தயார் செய்கிறீர்கள். எந்த ஒரு

பொருளுக்கும் முதலில் மாடல் தயார் செய்வார்கள் இல்லையா? எனவே முதலில் இந்த மாடலைப் பாருங்கள்.

சுய அதிகாரி என்றால் அனைத்து இந்திரியங்கள் என்ற பிரஜைகளின் இராஜா ஆவது. பிரஜையின் இராஜ்யம் இருக்கிறதா? அல்லது இராஜாவின் இராஜ்யம் இருக்கிறதா? பிரஜையின் இராஜ்யம் இருக்கிறது என்றால் இராஜா என்று கூறமாட்டோம் என்று உங்களால் தெரிந்து கொள்ள முடியும் அல்லவா? பிரஜைகளின் இராஜ்யத்தில் இராஜ வம்சம் முடிவடைந்து விடுகிறது. ஏதாவது ஒரு கர்மேந்திரியம் ஏமாற்றம் கொடுக்கிறது என்றால் சுய இராஜ்ய அதிகாரி என்று கூறமாட்டோம். சம்பூரணமாகவோ இறுதியில் தான் ஆக வேண்டும் ஓரிரு பலவீனங்கள் இருக்கத்தான் செய்யும் என்று அந்த மாதிரி ஒரு பொழுதும் நினைக்காதீர்கள் ஆனால் நீண்ட காலத்தின் ஒரு பலகீனம் கூட தேவையான நேரத்தில் ஏமாற்றம் கொடுத்து விடுகிறது. நீண்ட காலத்து அடிமையாக இருக்கும் சம்ஸ்காரம் அதிகாரி ஆக விடாது. எனவே அதிகாரி என்றால் சுய அதிகாரி. இறுதியில் (எப்படியாவது) சம்பூர்ணம் ஆகி விடுவோம் என்ற இந்த ஏமாற்றத்திலேயே இருந்து விடாதீர்கள். நீண்ட காலத்து சுய அதிகாரியின் சம்ஸகாரம் நீண்ட காலத்து விஷ்வ அதிகாரியாக ஆக்கும். கொஞ்ச காலத்து சுயராஜ்ய அதிகாரி கொஞ்ச காலத்திற்கு விஷ்வ இராஜ்ய அதிகாரி ஆவார். யார் இப்பொழுது தந்தையின் சமநிலையில் இருக்க வேண்டும் என்ற கட்டளைப்படி தந்தையின் இதய சிம்மாசனதாரியாக ஆகிறார்களோ அவர்கள் தான் இராஜ்ய சிம்மாசதனாரியாகவும் ஆகிறார்கள். தந்தைக்குச் சமமாக ஆவது என்றால் தந்தையின் இதய சிம்மாசனதாரியாக ஆவது. எப்படி பிரம்மா தந்தை சம்பன்னம் மற்றும் சமமாக ஆனாரோ, அதேபோல் சம்பூர்ணம் மற்றும் சமமாக ஆகுங்கள். இராஜ சிம்மாசனதாரியாக ஆகுங்கள். எந்தவிதமான அலட்சியத்தில் தன்னுடைய அதிகாரித்தின் ஆஸ்தியை மற்றும் வரதானத்தை குறைவாக பிராப்தி செய்யாதீர்கள். எனவே சேமிப்புக் கணக்கை சோதனைச் செய்யுங்கள். புதிய வருடம் தொடங்கி விட்டது இல்லையா? பழைய கணக்கை சோதனை செய்யுங்கள். மேலும் புதிய கணக்கில் நடக்கும் நேரம் மற்றும் தந்தையின் வரதானத்தினால் அதிகத்திலும் அதிகமாக சேமிப்பு செய்யுங்கள். சம்பாதித்தோம் மற்றும் சாப்பிட்டோம் என்ற கணக்கை உருவாக்காதீர்கள். சேமிப்பு செய்தேனா என்றும் பாருங்கள், அமிர்தவேளை யோகா செய்தேன் -சேமிப்பு செய்தேன், வகுப்பில் முரளி கேட்டேன், சேமிப்பு செய்தேன், பிறகு முழு நாளும்

பிரச்சனைகளின் வசமாகி, மற்றும் மாயாவின் தாக்குதலின் வசமாகி, மற்றும் தன்னுடைய சம்ஸ்காரங்களின் வசமாகி என்னென்ன சேமிப்பு செய்தீர்களோ அதை யுத்தம் செய்து வெற்றி அடைவதிலேயே செலவழித்து விட்டீர்கள். அப்படியானால் ரிசல்ட் என்ன ஆனது? சம்பாதித்தீர்கள் மற்றும் செலவழித்தீர்கள், சேமிப்பு என்ன ஆனது? எனவே சேமிப்பு கணக்கை எப்போதும் சோதனை செய்யுங்கள்., மேலும் அதை அதிகரித்துக் கொண்டே இருங்கள். தினசரி சார்ட்டில் வகுப்பு கேட்டீர்களா? ஆம் என்று அப்படியே ரைட் என்று எழுதாதீர்கள். யோகா செய்தீர்களா? ஆனால் எப்படி சக்திசாலியான யோகா நேரத்திற்கேற்றபடி இருக்க வேண்டுமோ அப்படி இருந்ததா? நேரத்தை நன்றாகக் கழித்தேன், மிகுந்த ஆனந்தம் வந்தது, நிகழ்காலமோ நன்றாக ஆனாது ஆனால் நிகழ்காலத்தின் கூடவே சேமிப்பு செய்தீர்களா? அந்தளவு சக்திசாலியான அனுபவம் ஆனதா? இந்த வாழ்க்கையில் நன்றாக இருக்கிறேனா என்பதை மட்டும் சோதனை செய்யாதீர்கள். யாரிடமாவது எப்படி இருக்கிறீர்கள் என்று கேட்டால் மிக நன்றாக இருக்கிறேன் என்று கூறுவார்கள் ஆனால் எந்த வேகத்தில் இந்த வாழ்க்கையில் நான் சென்று கொண்டிருக்கிறேன் என்பதை சோதனை செய்யுங்கள். என்னுடைய வேகம் எறும்பு மாதிரி நகர்கிறதா? அல்லது ராக்கெட் மாதிரி வேகமாக செல்கிறதா? இந்த வருடம் அனைத்து விசயங்களில் சக்திசாலியாக ஆவதின் வேகத்தை மற்றும் சதவிகிதத்தை சோதனை செய்யுங்கள். எத்தனை சதவிகிதத்தில் சேமிப்பு செய்து கொண்டிருக்கிறீர்கள் 5-ரூபாய் கூட சேமிப்பு என்று தான் கூறுவோம், 500-ரூபாயும் சேமிப்பு என்று தான் கூறுவோம். சேமிப்பு செய்தீர்கள், ஆனால் எந்தளவு சேமிப்பு செய்தீர்கள்? புரிந்ததா என்ன செய்ய வேண்டும் என்று?

பொன்விழாவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறீர்கள். இந்த முழு ஆண்டுமே பொன் விழா ஆண்டு தான் இல்லையா? எனவே ஒவ்வொரு விசயத்திலும் பொற்காலம் அதாவது சதோபிரதான நிலை இருக்கிறதா என்று சோதனை செய்யுங்கள். அல்லது சதோ அதாவது வெள்ளிக் கால நிலையா? முயற்சி செய்வது கூட சதோபிரதான பொற்கால நிலையாக இருக்க வேண்டும். சேவையும் பொற்காலத்திற்குத் தகுதியானதாக இருக்க வேண்டும். சிறிதளவு கூட பழைய சம்ஸ்காரத்தின் கலப்படம் இருக்க வேண்டாம். எப்படி இன்றைய நாட்களில் வெள்ளியின் மேலும் தங்க முலாம் பூசி விடுகிறார்கள். வெளியில் இருந்து பார்த்தால் தங்கமாகத் தெரியும் ஆனால் உள்ளே என்ன இருக்கிறது? கலப்படம் என்று தான் சொல்வோம்

இல்லையா? அதேபோல் சேவை யிலும் அபிமானம் மற்றும் அவமானத்தின் கலப்படம் இருக்க வேண்டாம். இதைத்தான் பொற் காலத்து நிலையில் உள்ள சேவை என்று கூறுவோம். சுபாவத்திலும் கூட பொறாமைப் படுவது, பிடிவாதம் செய்வது, மற்றும் நிரூபணம் செய்வதின் பாவனை இருக்க வேண்டாம், இதுவெல்லாம் கலப்படம். இந்த கலப்படத்தை முடித்து விட்டு பொற்காலத்தின் சுபாவம் உள்ளவராக ஆகுங்கள். சம்ஸ்காரத்தில் எப்போதும் சரி சரி என்று கூறும் பழக்கம் இருக்க வேண்டும். எப்படி நேரமோ, எப்படி சேவையோ, அப்படி தன்னை வளைத்துக் கொள்ள வேண்டும். அதாவது உண்மையான தங்கம் ஆக வேண்டும். நான் வளைந்து கொடுக்க வேண்டும். மற்றவர்கள் செய்தார்கள் என்றால் நானும் செய்வேன் என்பது பிடிவதாம் செய்வதாக ஆகி விடும். அது உண்மையான தங்கம் ஆகாது. இந்த கலப்படத்தையும் அகற்றி பொற்காலத்து நிலை உள்ளவராக ஆகுங்கள். சம்மந்தத்தில் எப்பொழுதும் ஒவ்வொரு ஆத்மாவிற்காக சுபபாவனை, நன்மையே பயக்கும் பாவனை இருக்கட்டும். அன்பின் பாவனை, சகயோகத்தின் பாவனை இருக்கட்டும். மற்றவர்கள் எப்படிப்பட்ட சுபாவம் உள்ளவர்களாக இருந்தாலும், நீங்கள் எப்போதும் சிரேஷ்ட பாவனை உள்ளவராக இருங்கள். இந்த அனைத்து விசயங்களிலும் தன்னை மாற்றிக் கொள்வது தான் பொன்விழாவைக் கொண்டாடுவது என்பதாகும். கலப்படத்தை எரிப்பது என்றால் பொன் விழா கொண்டாடுவது. வருடத்தின் தொடக்கத்தை பொற்கால நிலையில் இருந்து செய்யுங்கள் சுலபம் தான் இல்லையா? கேட்கும் நேரத்திலோ கண்டிப்பாக செய்ய வேண்டும் என்று அனைவரும் நினைக்கிறீர்கள் ஆனால் பிரச்சனை எதிரில் வரும்பொழுது, இதுவோ மிகவும் கடினமான விசயம் என்று யோசிக்கிறீர்கள். பிரச்சனையின் நேரத்தில் சுய ராஜ்ய அதிகார தன்மையின் அதிகாரத்தை காண்பிப்பதற்கான நேரமாகத்தான் இருக்கும் தாக்குதலின் நேரத்தில் வெற்றி அடைபவர் ஆவதாக இருக்கும். பரிட்சை யின் நேரத்தில் நம்பர்-1 பெறுவதற்கான நேரமாக இருக்கும். எனவே பிரச்சனை சொரூப மானவராக ஆகாதீர்கள் ஆனால் சமாதான சொரூபமாக ஆகுங்கள். இந்த வருடம் என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா? அப்பொழுது தான் பொன்விழாவின் முடிவு நிறை வேறியதின் பொன் விழா என்று கூறுவோம். வேறு என்ன புதுமை செய்வீர்கள்? பாப்தாதாவிடம் அனைத்துக் குழந்தை களின் எண்ணமோ வந்து சேர்ந்து கொண்டேதான் இருக்கிறது. நிகழ்ச்சியிலும் புதுமையாக என்ன செய்வீர்கள்? பொன்னான எண்ணங்களைக் கூறும் தலைப்பு வைத்திருக்கிறீர்கள் இல்லையா! நல்ல எண்ணம் நல்ல சிந்தனை

அது ஒருவரை தங்கமாக ஆக்கி விட வேண்டும் மேலும் பொன்னு லகத்தைத் கொண்டுவந்து விடவேண்டும். இந்த தலைப்பு வைத்திருக்கிறீர்கள் இல்லையா? நல்லது. இன்று சூட்சம வதனத்தில் இந்த விசயத்தின் மேல் ஆன்மீக உரையாடல் நடந்தது. அதைப் பற்றி பின்பு கூறுவோம். நல்லது.

அனைத்து ஆஸ்தி மற்றும் வரதானத்தின் இரட்டை அதிகாரி பாக்கியவான் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் சுயராஜ்ய அதிகாரி சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தன்னை பொற்கால நிலையில் நிலைத்திருக்கச் செய்யும் உண்மையான தங்கமான குழந்தைகளுக்கு, எப்பொழுதும் சுய பரிவர்த்ததனை செய்யும் ஈடுபாட்டின் மூலம் விஷ்வ பரிவர்த்தனை செய்வதில் முன்னேறிச் செல்லும் விசேஷ ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினனவுகள் மற்றும் நமஸ்காரம்.

**மீட்டிங்கில் வந்திருக்கும் டாக்டர்களுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு:** தன்னுடைய சிரேஷ்ட ஊக்கம், உற்சாகம் மூலமாக அநேக ஆத்மாக்களை நிரந்தர குஷியானவராக ஆக்கும் சேவையில் நீங்கள் ஈடுபட்டிருக்கிறீர்கள் தான் இல்லையா? ஒவ்வொரு ஆத்மாவிற்கும் குஷி கொடுப்பது தான் டாக்டர்களின் விசேஷ காரியம். குஷி தான் முதல் மருந்து. குஷி பாதி நோயை அகற்றி விடுகிறது. அம்மாதிரி ஆன்மீக டாக்டர்கள் என்றால் குஷி என்ற மருந்து கொடுப்பவர்கள். நீங்கள் அம்மாதிரியான டாக்டர்கள் தான் இல்லையா? ஒருதடவையாவது ஆத்மாவிற்கு குஷியின் அனுபவம் ஆகி விட்டது என்றால், அந்த ஆத்மா எப்பொழுதுமே குஷியின் அந்த உணர்விலேயே முன்னேறிச் சென்று கொண்டேயிருப்பார். அம்மாதிரி நீங்கள் அனைவரையும் டபுள் லைட்டாக அதாவது சுமையற்றவராக ஆக்கி, பறக்க வைக்கும் டாக்டர்கள் தான் இல்லையா? அந்த டாக்டர்கள் படுக்கையிலிருந்து எழுப்பி விடுகிறார்கள். படுக்கையில் தூங்கிக் கொண்டிருக்கும் நோயாளியை எழுப்பி விட்டு நடக்க வைக்கிறார்கள். நீங்கள் பழைய உலகத்திலிருந்து எழுப்பி புதிய உலகத்தில் அமர வையுங்கள். அம்மாதிரியான திட்டத்தை உருவாக்கியிருக்கிறீர்கள் இல்லையா? ஆன்மீகக் கருவிகளை உபயோகிப்பதற்கான திட்டத்தை உருவாக்கியிருக்கிறீர்களா? இன்ஞெக்ஷன் (ஊசி) என்றால் என்ன?, மாத்திரைகள் என்றால் என்ன? இரத்தம் கொடுப்பது என்றால் என்ன என்ற இந்த அனைத்து ஆன்மீக சாதனைங்களை உருவாக்கியிருக்கிறீர்களா? யாருக்காவது இரத்தம் கொடுப் பதற்கான அவசியம் இருக்கிறது என்றால்

ஆன்மீக இரத்தமாக எதைக் கொடுப்பது? இதய நோயாளிக்கு என்ன மருந்து கொடுப்பது? இதய நோயாளி என்றால் மனம் உடைந்து போயிருக்கும் நோயாளி. அம்மாதிரி இந்த அனைத்து ஆன்மீக பொருட்கள் தேவையாக இருக்கின்றன. எப்படி அவர்கள் புதுப்புது கண்டுபிடிப்புகள் செய்கிறார்கள், அவர்கள் அறிவியலின் சாதனங்கள் மூலம் கண்டுபிடிப்பு செய்கிறார்கள். நீங்கள் அமைதியின் சாதனங்கள் மூலமாக நிரந்தரமாக நோயற்ற வர் ஆக்கி விடுங்கள். எப்படி அவர்களிடம் இந்த கருவி, அந்த கருவி என்று அனைத்து பட்டியலும் இருக்கிறது. அதேபோல் உங்களுடைய பட்டியலும் நீளமானதாக இருக்கட்டும். நீங்கள் அம்மாதிரி யான டாக்டர்கள். நிரந்தர ஆரோக்கியமானவராக ஆக்குவதற்கு இத்தனை நல்ல சாதனம் இருக்கட்டும். தன்னுடைய தொழிலை அந்த மாதிரியானதாக ஆக்கியிருக்கிறீர்களா? அனைத்து டாக்டர்களும் அவரவர்களின் ஸ்தானங்களில் எவர் ஹெல்தி எவர் ஹெல்தி ஆவதற்கான மருத்துவ மனை என்ற போர்டு போட்டு இருக்கின்றீர்களா? எப்படி அவர்கள் தங்களுடைய தொழிலை போர்டில் எழுதுகிறார்கள். அதேபோல் உங்களுடைய போர்டைப் பார்த்து இது என்ன என்று புரிந்து கொள்ள வேண்டும் என்று உள்ளே வர வேண்டும். கவர்ந்திழுக்கும் போர்டாக இருக்கட்டும். அந்த போர்டில் எழுதப்பட்டிருப்பது படிப்பவர்களுக்கு இதைத் தெரிந்து கொள்ளமால் இருக்க முடியாத அளவுக்கு இருக்க வேண்டும். நீங்கள் ஒருவரை அழைப்பதற்கான அவசியமே யில்லாமல் அவர்களே விரும்பா விட்டாலும் உள்ளே வந்து விடவேண்டும், அந்த மாதிரியான போர்டு இருக்கட்டும். அந்த டாக்டர்கள் எம்.பி.பி.எஸ் இந்த மாதிரி தொழில் இருப்பவர்கள் என்று போர்டில் எழுதுகிறார்கள். அதேபோல் நீங்களும் உங்களுடைய போர்டில் ஆன்மீக தொழிலை எழுதுங்கள். இதைப் படிப்பவர்கள் இம்மாதிǒயான மருத்துவமனையும் அவசியம் வேண்டும் என்று புரிந்து கொள்ள வேண்டும். அம்மாதிரி தன்னுடைய ஆன்மீகத் தகுதி, பட்டத்தை உருவாக்கியிருக்கிறீர்களா? அல்லது பழைய டிகிரிகளையே எழுதுகிறீர்களா?

(சேவைக்கான சிரேஷ்ட சாதனமாக என்ன இருக்க வேண்டும்) சேவைக்கான மிகவும் சக்திசாலியான சாதனம் -சக்திசாலியான எண்ணம் மூலம் சேவை செய்வது. சக்திசாலியான எண்ணமும் இருக்கட்டும், வார்த்தைகளும் இருக்கட்டும் மேலும் காரியமும் இருக்கட்டும். மூன்றும் சேர்ந்து காரியம் செய்யட்டும்,. இது தான் சக்திசாலியான சாதனம். வார்த்தைகளில்

வருகிறீர்கள் என்றால் சக்திசாலியான எண்ணத்தின் சதவிகிதம் குறைந்து விடுகிறது, அல்லது அந்த சதவிகிதம் இருக்கிறது என்றால் வார்த்தைகளின் சக்தியில் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது ஆனால் அப்படியிருக்க வேண்டாம். மூன்றுமே சேர்ந்தே இருக்க வேண்டும். எப்படி ஏதாவது ஒரு நோயாளியை ஒரே நேரத்தில் ஒருவர் நாடி பிடித்துப் பார்க்கின்றார், ஒருவர் ஆப்ரேஷன் செய்கின்றார்..... அப்படி சேர்ந்தே செய்கிறார்கள், நாடி பிடித்துப் பார்ப்பவர் காலம் தாழ்த்தி பின்னால் பார்க்கிறார் மற்றும் ஆப்ரேஷன் செய்பவர் முதலில் செய்து விடுகிறார் என்றால் என்ன வாகும்? சேர்ந்தே எத்தனை காரியங்கள் நடக்கின்றன. அதேபோல் ஆன்மீகத்தின் சேவை யிலும் சேர்ந்தே அனைத்து சாதனங்களும் செயல் படட்டும். மற்றப்படி சேவைக்கான திட்டத்தை உருவாக்கியிருக்கிறீர்கள், அது மிகவும் நன்றாக இருக்கிறது ஆனால் ஏதாவது அந்த மாதிரி சாதனத்தை உருவாக்குங்கள் அதன் மூலம் அனைவருமே ஆம் இந்த ஆன்மீக டாக்டர் நிரந்தரமாக ஆரோக்கிய மாக ஆக்குபவர் என்று புரிந்து கொள்ளட்டும் நல்லது.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு:** (1) யார் அநேக தடவை வெற்றி அடைந்த ஆத்மாக்களாக இருப்பார்களோ அவர்களுடைய அடையாளமாக என்ன இருக்கும்? அவருக்கு ஒவ்வொரு விசயமும் மிகவும் சுலபமானதாக மற்றும் இலேசானதாக அனுபவம் ஆகும். யார் ஒவ்வொரு கல்பத்திலும் வெற்றி அடைந்த ஆத்மாவாக இல்லையோ அவருக்கு சிறிய காரியம் கூட கடினமாக அனுபவம் ஆகும். சுலபமாக இருக்காது. ஒவ்வொரு காரியம் செய்வதற்கு முன்பு இந்தக் காரியம் கண்டிப்பாக நடக்கும் என்று தனக்குள் அனுபவம் செய்வார்கள். நடக்குமா? அல்லது நடக்காதா? என்ற இந்த கேள்வி எழாது. கண்டிப்பாக நடக்கும். இந்த உணர்தல் எப்போதுமே இருக்கும். எப்பொழுதுமே வெற்றி கிடைக்கும் என்று தெரியும் என்ற நிச்சயப்புத்தி உள்ளவராக இருப்பார். எந்த ஒரு விசயமும் புதியதாக அனுபவம் ஆகாது. இது மிகவும் பழைய விசயம் என்ற இந்த நினைவின் மூலம் தன்னை முன்னேற்றிக் கொண்டேயிருப்பார்.

(2) டபுள் லைட் ஆனதற்கான அடையாளமாக என்ன இருக்கும்? டபுள் லைட் ஆத்மாக்கள் எப்பொழுதும் சுலபமாக பறக்கும் கலையின் அனுபவம் செய்வார்கள். சில நேரம் நிற்பது மேலும் சில நேரம் பறப்பது என்று அந்த மாதிரி இருக்காது. எப்பொழுதும் பறக்கும் கலையின் அனுபவம் நிறைந்த டபுள் லைட் ஆத்மாக்கள் தான் இரட்டை கிரீடங்களுக்கு அதிகாரியாக

ஆகிறார்கள். டபுள் லைட்டாக இருப்பவர்கள் இயல்பாகவே உயர்ந்த நிலையின் அனுபவம் செய்வார்கள். எந்த ஒரு சூழ்நிலை அல்லது பிரச்சனை வந்தாலும் நான் டபுள் லைட்டாக இருக்கிறேன் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். குழந்தை ஆகி விட்டீர்கள் என்றால், லேசானவர் ஆகி விட்டீர்கள். எந்த ஒரு சுமையையும் தூக்க முடியாது. நல்லது

**வரதானம்: நற்சிந்தனை மற்றும் நற்சிந்தனையாளர் நிலையின் அனுபவம் மூலமாக பிரம்மா தந்தைக்குச் சமமான மாஸ்டர் வள்ளல் ஆகுக!**

பிரம்மா தந்தைக்குச் சமமாக மாஸ்டர் வள்ளல் ஆவதற்காக பொறாமை, வெறுப்பு மற்றும் விமர்சனம் செய்வது என்ற இந்த மூன்று விசயங்களிலிருந்தும் விடுபட்டவர் ஆகி, அனைவருக்காகவும் நற்சிந்தனையாளர் ஆகுங்கள். மேலும் நற்சிந்தனை நிலையின் அனுபவம் செய்யுங்கள். ஏனென்றால் யாரிடம் பொறாமையின் அக்னி இருக்குமோ அவர் தானும் எரிவார், மற்றவர்களையும் தொந்தரவு செய்வார், வெறுப்புணர்வு உள்ளவர் அவரும் கீழே விழுவார், மற்றவர்களையும் விழ வைப்பார். மேலும் நகைச்சுவைக்காக (கிண்டல்) விமர்சனம் செய்பவர்கள் ஆத்மாவை தைரியம் இல்லாதவர் ஆக்கி துக்கப்படுத்துகிறார்கள். எனவே இந்த மூன்று விசயங்களிலிருந்தும் விடுபட்டவர் ஆகி, நற்சிந்தனையாளர் நிலையின் அனுபவம் மூலமாக வள்ளலின் குழந்தைகள் மாஸ்டர் வள்ளல் ஆகுங்கள்.

**சுலோகன்: மனம் புத்தி மற்றும் சம்ஸ்காரங்கள் மீது சம்பூர்ண இராஜ்யம் செய்யும் சுய ராஜ்ய அதிகாரி ஆகுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 08.01.1986 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பூமியின் புனித நட்சத்திரங்கள்!

இன்று ஞான சூரியன் தந்தை தன்னுடைய அநேக விதமான விசேஷங்களினால் நிரம்பிய விசேஷ நட்சத்திரங்களைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். ஒவ்வொரு நட்சத்திரத்தின் விசேஷம் உலகை மாற்றுவதற்கு பிரகாசம் கொடுக்கக்கூடியது. இன்றைய நாட்களில் விசேஷமாக நட்சத்திரங்களைத் தேடி கண்டுப் பிடிப்பதில் உலகத்தினர் ஈடுபட்டிருக்கிறார்கள், ஏனென்றால் நட்சத்திரங்களின் பிரபாவம் பூமியின் மேல் ஏற்படுகிறது. அறிவியலைச் சேர்ந்தவர்கள் ஆகாயத்தின் நட்சத்திரங்களைத் தேடுகிறார்கள், பாப்தாதா தன்னுடைய புனித நட்சத்திரங்களின் விசேஷங்களைப் பார்த்துக் கொண்டி ருக்கிறார். எப்பொழுது ஆகாயத்தின் நட்சத்திரங்கள் அவ்வளவு தூரத்தில் இருந்து தன்னுடைய நல்லது அல்லது தீய பிராபவத்தை ஏற்படுத்த முடிகிறது எனறால் புனித நட்சத்திரங்கள் நீங்கள் இந்த உலகத்தை பரிவர்த்தனை செய்வதற்கு, தூய்மை, சுகம்,. சாந்தி நிரம்பிய உலகை உருவாக்கு வதற்கான பிரபாவத்தை எவ்வளவு சுபலமாக ஏற்படுத்த முடியும். நீங்கள் பூமியின் நட்சத்திரங்கள், அவைகள் ஆகாயத்தின் நட்சத்திரங்கள், பூமியின் நட்சத்திரங்கள் நீங்கள் இந்த உலகத்தை குழப்பத்திலிருந்து காப்பாற்றி சுகம் நிறைந்த உலகம் மற்றும் பொன்னான உலகத்தை உருவாக்குபவர்கள். இந்த நேரம் இயற்கை மற்றும் மனிதர்கள் இருவர்களுமே குழப்பம் ஏற்படுத்துவதற்குக் காரணமாக இருக்கிறார்கள் ஆனால் புருஷோத்தம ஆத்மாக்கள் நீங்கள் உலகிற்கு சுகம், சாந்தியின் மூச்சைக் கொடுப்பதற்கு பொறுப்பாளராக இருக்கிறீர்கள். பூமியின் நட்சத்திரங்கள் நீங்கள் அனைத்து ஆத்மாக்களின் அனைத்து விருப்பங்களை நிறைவேற்றுபவர்கள், பிராப்தி சொரூபமான நட்சத்திரங்கள், அனைவரின் நம்பிக்கையின்மையை நம்பிக்கையில் மாற்றக்கூடிய சிரேஷ்ட நம்பிக்கை நட்சத்திரங்கள் நீங்கள். எனவே அமைதியின் நட்சத்திரம், புனித நட்சத்திரம், சுக சொரூப நட்சத்திரம் எப்பொழுதும் வெற்றி அடையும் நட்சத்திரம் அனைவரின் விருப்பங்களை நிறை வேற்றும் நட்சத்திரம், திருப்தியின்

பிரபாவம் நிறைந்த நட்சத்திரமாகிய நான் என்னுடைய பிரபாவம் ஏற்படுத்தி ஜொலிப்பு, மற்றும் பொலிவு எந்தளவு இருக்கிறது என்று உங்களை நீங்களே சோதனை செயுயங்கள். நான் எந்தளவு பிரபாவம் ஏற்படுத்திக் கொண்டிருக்கறேன்? பிரபாவத்தின் வேகம் எந்தளவு உள்ளது? எப்படி அந்த நட்சத்திரங்களின் வேகத்தை சோதனை செய்கிறார்கள், அதேபோல் தன்னுடைய பிரபாவத்தின் வேகத்தை நீங்களே சோதனை செய்யுங்கள். ஏனென்றால் உலகத்தில் இந்த நேரம் புனித நட்சத்திரங்கள் உங்களுடைய தேவையாக இருக்கிறது. அம்மாதிரி பாப்தாதா அனைத்து விதமான நட்சத்திரங்களைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

இந்த ஆன்மீக நட்சத்திரங்களின் கூட்டம் எவ்வளவு சிரேஷ்டமானதாக இருக்கிறது, மேலும் எந்தளவு சுகம் நிறைந்தாக இருக்கிறது. அந்த மாதிரி தன்னை மின்னிக் கொண்டிருக்கும் நட்சத்திரம் என்று நினைக்கிறீர்களா? எப்படி அந்த நட்சத்திரங்களைப் பார்ப்பதற்காக மனிதர்கள் எவ்வளவு விருப்பம் வைக்கிறார்கள். இப்பொழுது புனித நட்சத்திரங்கள் உங்களைப் பார்ப்பதற்காக அனைவரும் விருப்பமாக இருப்பார்கள் என்ற அந்த நேரமும் வந்து கொண்டிருக்கிறது, இந்த அமைதியின் பிரபாவம், சுகத்தின் பிரபாவம், ஆடாத அசையாதவராக ஆக்குவதற்கான பிரபாவம் எங்கிருந்து வந்து கொண்டிருக்கிறது என்று நட்சத்திரங்களாகிய உங்களைத் தேடுவார்கள். இதையும் ஆராய்ச்சி செய்வார்கள். இப்பொழுதோ இயற்கையின் தேடுதலில் ஈடுபட்டிருக்கிறார்கள், எப்பொழுது இயற்கையின் தேடுதலில் களைப்படைந்து விடுவார்களோ அப்பொழுது இந்த ஆன்மீக ஆராய்ச்சி செய்வதற்கான எண்ணம் வரும். அதற்கு முன்பு புனித நட்சத்திரங்கள் நீங்கள் உங்களை சம்பன்னமாக ஆக்கி விடுங்கள். ஏதாவது குணத்தின், அது அமைதி அல்லது சக்தியின் விசேஷமாக இருந்தாலும் அதை தன்னில் நிரப்புவதில் விசேஷமாக அதிவேகமாக தயார் செய்யுங்கள், நீங்களும் ஆராய்ச்சி செய்யுங்கள். அனைத்து குணங்களும் இருக்கின்றன ஆனால் குறைந்தது ஒரு குணத்தின் விசேஷமாக தன்னை அதில் சம்பன்னமாக (முழுமையாக) ஆக்குங்கள். எப்படி டாக்டர்கள் இருக்கின்றார்கள் -பொதுவான நோய்களின் ஞானத்தையோ அனைவரும் வைத்துக் கொள்கிறார்கள் ஆனால் கூடவே சிலரில் விசேஷ ஞானம் இருக்கிறது. அந்த விசேஷத்தின் காரணமாக பெயர் பெற்றவர்கள் ஆகி விடுகிறார்கள். அந்த மாதிரி அனைத்து குணங்களிலும் நிரம்பியவராக ஆகி யே தீர வேண்டும். இருந்தாலும் ஒரு விசேஷத்தை விசேஷ ரூபத்தில்

அனுபவத்திலும் சேவையிலும் கொண்டு வந்து கொண்டே முன்னேறிச் செல்லுங்கள். எப்படி பக்தியிலும் ஒவ்வொரு தேவியின் மகிமையில், ஒவ்வொருவரின் விசேஷமும் வேறு வேறாக மகிமைபாடப்படுகிறது. மேலும் பூஜையும் அதே பிரகாரம் நடக்கும். எப்படி சரஸ்வதியை கல்வியின் தேவி என்று நம்புகிறார்கள். மேலும் பூஜை செய்கின்றார்கள், அவரும் சக்தி சொரூபம் தான், ஆனால் விசேஷமாக கல்வியின் தேவி என்று கூறி பூஜை செய்கிறார்கள். லக்ஷ்மியை செல்வத்தின் தேவி என்று கூறி பூஜை செய்கின்றார்கள் அதே போல் தனக்குள் அனைத்துக் குணங்கள், அனைத்து சக்திகள் இருந்தபோதிலும் ஒரு விசேஷத்தில் ஆழமாய் ஆராய்ச்சி செய்து தன்னை பிராபவசாலியாக ஆக்குங்கள். இந்த வருடத்தில் ஒவ்வொரு குணத்தின், ஒவ்வொரு சக்தியின் ஆராய்ச்சி செய்யுங்கள்.. ஒவ்வொரு குணத்தின் நுணுக்கத்தில் செல்லுங்கள். நுணுக்கத்தின் மூலம் அதனுடைய மகான் தன்மையை அனுபவம் செய்ய முடியும். நினைவு செய்வதின் பல்வேறு நிலைகளில் முயற்சி செய்வதின் வித வித நிலைகளின் ஆழமாகச் சென்று ஆராய்ச்சி செய்யு.ங்க.ள், ஆழத்தில் செல்லுங்கள் ஆழ்ந்த அனுபவங்களை செய்யுங்கள். அனுபவத்தின் கடலின் ஆழத்தில் செல்லுங்கள். மேலோட்டமாக அலைகளின் நீந்துவதில் அனுபவியாக ஆவது மட்டும் சம்பூர்ண அனுபவம் கிடையாது,. மேலும் உள்நோக்குமுகமுடைய வராகி ஆழ்ந்த அனுபவங்களின் இரத்தினங்களினால் புத்தியை நிரம்பியதாக ஆக்குங்கள். ஏனென்றால் பிரத்யக்ஷம் ஆவதின் நேரம் அருகில் வந்து கொண்டிருக்கிறது. சம்பன்னம் ஆகுங்கள், சம்பூர்ணம் ஆகுங்கள். பிறகு அனைத்து ஆத்மாக்களின் எதிரில் அறியாமை என்ற திரைச் சீலை அகன்றுவிடும். உங்களுடைய சம்பூர்ண நிலையின் வெளிச்சத்தின் மூலம் இந்த திரைச்சீலை தானாகவே விலகி விடும். எனவே ஆராய்ச்சி செய்யுங்கள்,. மிகப் பிரகாசமான லைட்டாக ஆகுங்கள் அப்பொழுது தான் பொன்விழாவை கொண்டாடி இருக்கிறீர்கள் என்று கூறுவோம்.

பொன்விழாவின் விசேஷமாக உங்கள் ஒவ்வொருவர் மூலமாக அனைவருக்கும் ஒளிக்கிரணங்கள் ஆத்மாக்களை பொன்னானதாக ஆவதற்கான சக்தி கொடுத்துக் கொண்டிருக்கின்றன என்ற இந்த அனுபவம் ஆகட்டும், திருஷ்டி மூலமாகவும், நல்ல சக்திகளின் அனுபவம் ஆகட்டும். எனவே உங்களுடைய ஒவ்வொரு எண்ணம், ஒவ்வொரு காரியமும் பொன்னானதாக இருக்க வேண்டும், பொன்னாதாக ஆக்கக்கூடியதாக

இருக்க வேண்டும். இந்த பொன் விழா ஆண்டில் தன்னை பாரஸ்நாத்தின் குழந்தை மாஸ்டர் பாரஸ் நாத் (மாஸ்டர் வைரமாக்குபவர்) என்று புரிந்து கொள்ளுங்கள். எப்படிப்பட்ட இரும்புக்கு சமமான ஆத்மாவாக இருந்தாலும், ஆனால் பாபாவின் தொடர்பு மூலம் அந்த இரும்பும் தங்கமாக ஆகி விடட்டும். இவர் இரும்பாக இருக்கிறார் என்று நினைக்காதீர்க்ள் ஆனால் நான் தங்கமாக இருக்கிறேன் என்று புரிந்து கொள்ள வேண்டும். பாரஸின் வேலையே இரும்பையும் தங்கமாக ஆக்குவது. இதே லட்சியத்தை மற்றும் இதே லட்சணத்தை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அப்பொழுது தான் புனித நட்சத்திரங்களின் பிரபாவம் உலகின் பார்வையில் வரும். இப்பொழுதோ இந்த நட்சத்திரம் வந்து கொண்டிருக்கிறது என்று பாவம் பயந்து கொண்டிருக்கிறார்கள். பிறகு புனித நாட்சத்திரங்கள் வந்துக் கொண்டிருக்கின்றன என்று குஷி அடைவார்கள். உலகின் நாலா புறங்களிலும் புனித நட்சத்திரங்களின் சாரல் அனுபவம் ஆகும். அனைவரின் வாயிலிருந்தும் அதிர்ஷ்ட நட்சத்திரங்கள், வெற்றி நட்சத்திரங்கள் வந்து விட்டன என்ற இந்த வார்த்தைகள் தான் வெளியாகும். சுகம், சாந்தியின் நட்சத்திரங்கள் வந்து விட்டன என்று கூறுவார்கள். இப்பொழுதோ தூர திருஷ்டி கண்ணாடி (டெலஷ்கோப்) எடுத்து பார்க்கிறார்கள் இல்லையா? பிறகு மூன்றாவது கண், தெய்வீகக் கண் மூலம் பார்ப்பார்கள் ஆனால் இந்த வருடம் தயார் செய்வதற்கானது நல்ல முறையில் தயார் செய்ய வேண்டும். நல்லது. நிகழ்ச்சியில் என்ன செய்வீர்கள். பாப்தாதாவும் சூட்சும வதனத்தில் காட்சியை வெளிப்படுத்தினார், காட்சி என்னவாக இருந்தது?

மகாநாட்டு மேடையிலேயோ பேச்சாளர்களைத்தான் அமர வைக்கிறீர்கள் இல்லையா? மகாநாட்டு மேடை என்றால் பேச்சாளர்களின் மேடை., தலைப்பின் மேல் சொற்பொழிவு எப்பொழுதுமே செய்கிறீர்கள். மேலும் நன்றாகச் செய்கிறீர்கள். இந்த சொற்பொழிவிற்கான நேரம் குறைவாக இருக்கட்டும். மேலும் பிரபாவம் அதிகமாக இருக்கட்டும். அதே நேரத்தில் அனைத்து விதமான பேச்சாளர்கள் தங்களுடைய பிரபாவசாலியான சொற்பொழிவை செய்ய முடியும். அதற்கு ஏற்ற நிகழ்ச்சி நிரல் இருக்க வேண்டும். ஒரு நாள் விசேஷமாக அரை மணி நேரத்திற்காக இந்த நிகழ்ச்சியை வையுங்கள். மேலும் எப்படி வெளியில் இருந்து வந்திருப்பவர்கள், அல்லது விசேஷ சொற்பொழிவாளர்கள் சொற்பொழிவு செய்து கொண்டிருக்கிறார்கள், அது நடந்து கொண்டிருக்கட்டும் ஆனால்

அரை மணி நேரத்திற்காக ஒரு நாளில் மேடையின் எதிரிலும் பலவிதமான ஆயுளில் இருப்பவர்கள் ஒரு சின்னஞ்சிறு குழந்தை, ஒரு குமாரி, ஒரு தூய்மையான தம்பதிகள் இருக்கட்டும். ஒரு குடும்பத்தில் இருக்கும் தம்பதிகள் இருக்கட்டும், ஒரு வயதானவர் இருக்கட்டும், விதவிதமான வயதினர் அவர்கள் சந்திரன் மாதிரி மேடையில் அமர்ந்திருக்கட்டும். மேலும் மேடையில் உள்ள லைட் மந்தமாக இருக்கட்டும். மிகப் பிரகாசமாக இருக்க வேண்டாம். சாதாரணமாக இருக்கட்டும். மேலும் ஒவ்வொருவரும் மூன்று மூன்று நிமிடங்கள் இந்த சிரேஷ்ட வாழ்க்கை உருவாக்குவதற்காக பொன்னான வாக்கியங்கள் என்ன கிடைத்தது அதன் மூலம் நான் இந்த வாழ்க்கையை உருவாக்கி விட்டேன் என்று தன்னுடைய விசேஷ பொன்னான வார்த்தைகளைக் கூறட்டும். சிறு வயது குமார் (குழந்தை) அதாவது பெண் குழந்தை கூறட்டும், குழந்தைகளுக்காக சொன்ன வாக்கியங்கள் என்ன கிடைத்தது என்று கூறட்டு.ம். குமாரி வாழ்க்கைக்காக பொன்னான வார்த்தைகள் என்ன கிடைத்து, பால பிரம்மாசாரி தம்பதியினருக்கு பொன்ன வார்த்தை என்ன கிடைத்து, குடும்பத்தில் டிரஸ்டியாக இருக்கும் ஆத்மாக்களுக்காக என்ன கிடைத்து, வயதானவர்களுக்கு பொன்னான வார்த்தைகள் என்ன கிடைத்து என்று ஒவ்வொருவரும் மூன்று மூன்று நிமிடங்கள் பேசட்டும் ஆனால் இறுதியில் பொன்னான வார்த்தைகளை சுலோகன் ரூபத்தில் முழு சபையினரையும் சொல்ல வையுங்கள். மேலும் எந்த நேரம் யார் சொல்கிறாரோ, அந்த நேரம் அவர் மீது ஒளி பரவட்டும். அப்போது இயல்பாகவே அனைவரின் கவனம் அவர் பக்கம் செல்லும். அமைதியின் பிராபவம் இருக்கட்டும். எப்படி ஏதாவது நாடகம் நடத்துகிறீர்கள், அதே மாதிரியான காட்சிகள் இருக்கட்டும் சொற்ப்பொழிவு இருக்கட்டும், ஆனால் காட்சியைப் பார்க்கும் ரூபத்தில் இருக்கட்டும், குறைவாக பேசட்டு மூன்று நிமிட நேரத்தை விட அதிகமாகப் பேச வேண்டாம், முன்பாகவே தயார் செய்திருக்க வேண்டும். மேலும் இரண்டாவது நாள் இதே ரூபத்தில் பலவிதமான துறைகளைச் சேர்ந்தவர்களுக்கான நிகழ்ச்சி இருக்கட்டும். யாராவது ஒருவர் டாக்டர் இருக்கட்டும், ஒரு வியாபார துறையைச் சார்ந்தவர் இருக்கட்டும், ஒருவர் அலுவலகத்தில் அதிகாரியாகப் பணி செய்பவராக இருக்கட்டும்... அம்மாதிரி பலவிதமான துறைகளைச் சேர்ந்தவர்கள் 3-நிமிடங்கள் பேசட்டும். அதிகாரிக்குரிய வேலையைச் செய்து கொண்டே எந்த முக்கிய பொன்னான வார்த்தைகளின் தாரணையின் மூலம் செய்யும் காரியத்தில் வெற்றி அடைந்தவராக இருக்கட்டும். அவருடைய வெற்றியின் முக்கியமான

விசயங்களை பொன்னான வார்த்தைகளின் ரூபத்தில் கூறட்டும். சொற் பொழிவாகத்தான் இருக்கும், ஆனால் சொல்லும் முறை கொஞ்சம் வேறு முறை இருப்பதினால் இந்த ஈஸ்வரிய ஞானம் எந்தளவு விசாலமானது, மேலும் ஒவ்வொரு துறைக்காக என்ன விசேஷம் இருக்கிறது என்பதை மூன்று மூன்று நிமிடங்களில் அனுபவம், தன்னுடைய அனுபவம் என்ற முறையில் சொல்ல வேண்டாம், ஆனால் அநேகர்கள் அனுபவம் செய்து விடட்டும். சூழ்நிலை அந்த மாதிரி அமைதியாக இருக்கட்டும். அதனால் கேட்பவர்களிலும் இடையில் பேசுவதற்கும் குழப்பம் செய்வதற்கும் தைரியமே இருக்க வேண்டாம். ஒவ்வொரு பிராமணனும் எவ்வளவு நேரம் நிகழ்ச்சி நடக்கிறதோ அவ்வளவு நேரம் எப்படி டிராப்பிக் கண்டோரல் பாடல் ஒலிக்கும் போது அனைவருமே ஒன்றாகச் சேர்ந்து அமைதியின் சூழ்நிலையை உருவாக்குகிறீர்கள் அதேபோல் இந்த தடவை, இந்த வாயு மண்டலத்தை சக்திசாலியாக ஆக்குவதற்காக வாயினால் சொற்பொழிவு நிகழ்த்த வேண்டாம் ஆனால் அமைதியின் சொற்பொழிவு செய்ய வேண்டும் என்ற லட்சியத்தை வைத்துக் கொள்ள வேண்டும், நானும் ஒரு பேச்சாளன், கட்டுப்பட்டிருக்கிறேன். அமைதியின் பாஷையும் குறைந்தது அல்ல. இந்த பிராமணர்களின் சூழ்நிலை மற்றவர்களையும் அதே அனுபவத்தில் கொண்டு வரும். எந்தளவு முடியுமோ மற்ற காரிய நடவடிக்கைகளை முடித்து விட்டு சபை நடக்கும் நேரத்தில் அனைத்து பிராமணர்களுக்கும் வாயுமண்டலத்தை உருவாக்குவதற்கான சகயோகம் கண்டிப்பாக கொடுக்கக் வேண்டும். ஒருவேளை யாருக்காவது அந்த மாதிரி முக்கியமான வேலை இருக்கிறது என்றால் அவர் முன்னுக்கு அமர வேண்டாம். முன்னால் குழப்பம் ஏற்படக்கூடாது. உதாரணமாக மூன்று மணி நேரம் பட்டி இருக்கிறது என்றால் அந்த நேரம் சொற் பொழிவு நன்றாக இருந்தது என்று சொல்ல மாட்டோம் ஆனால் நல்ல உணர்வு வந்தது என்று தான் கூறுவோம். சொற்பொழிவின் கூடவே அனுபவத்தின் உணர்வும் வர வேண்டும் இல்லையா! பிராணமணர்கள் யாரெல்லாம் வருகிறார்களோ அவர் நானும் பட்டியில் வர வேண்டும் என்று புரிந்து வர வேண்டும். மாநாட்டை பாேப்பதற்காக வர வேண்டும் ஆனால் சகயோகி ஆகி வர வேண்டும். இதே விதமாக வாயு மண்டலத்தை அந்த மாதிரி சக்திசாலியானதாக ஆக்குங்கள். அதன் மூலம் எப்படிப்பட்ட குழப்பத்தில் இருக்கும் ஆத்மாக்களும் கொஞ்ச நேரத்திற்காவது அமைதி மற்றும் சக்தியின் அனுபவத்தை செய்து செல்லட்டும். இது 3000-பேர்கள் அமர்ந்திருக்கும் சபை என்று சொல்லாமல் பரிஸ்தாக்களின் சபை என்று அனுபவம் ஆகட்டும். கலை நிகழ்ச்சிகள்

நடக்கும் நேரத்தில் சிரித்துக் கொள்ளுங்கள், கலகலப்பாக இருந்துக் கொள்ளுங்கள், ஆனால் மாநாட்டின் நேரத்தில் சக்திசாலியான சூழ்நிலை இருக்கட்டும், அதனால் வரக்கூடிய மற்றவர்களும் அதேபோன்று தான் பேசுவார்கள். எப்படி வாயுமண்டலம் இருக்குமோ, அதே மாதிரி பேசக் கூடிய மற்றவர்களும் அதே வாயுமண்டலத்தில் வந்து விடுவார்கள். எனவே கொஞ்ச நேரத்தில் அதிகமான பொக்கிஷங்களைக் கொடுப்பதற்கான நிகழ்ச்சியை உருவாக்குங்கள். அது சிறியதாக மற்றும் இனியதாக இருக்கட்டும். ஒருவேளை நம்முடைய பிராமணர்கள் (பிரம்மா குமார் குமாரிகள்) மெதுவாக பேசினார் என்றால் வெளியில் இருந்து வந்த மற்றவர்களும் மெதுவாகப் பேசுவார்கள் -நல்லது இப்போது என்ன செய்வீர்கள்? தன்னை விசேஷ நட்சத்திரம் என்று பிரத்யட்சம் செய்வீர்கள், அப்படியா? இல்லை, இந்த பொன்விழா ஆண்டை தன்னை சம்பன்னம் மற்றும் சம்பூர்ணம் ஆக்குவதற்கான வருடமாகக் கொண்டாடுங்கள் நீங்கள் குழப்பத்தில் வராதீர்கள், மற்றவர்களையும் குழப்பத்தில் கொண்டு வராதீர்கள். குழப்பம் செய்யும் இயற்கையே மிகவும் அதிகம். இந்த இயற்கை தன்னுடைய காரியத்தை செய்து கொண்டிருக்கிறது, நீங்கள் உங்களுடைய காரியத்தை செய்யுங்கள். நல்லது.

எப்பொழுதும் புனித நட்சத்திரம் ஆகி, உலகை சுகம் சாந்தி நிறைந்ததாக ஆக்கக்கூடிய, மாஸ்டர் பாரஸ்நாத் ஆகி, பொன்னான உலகத்தை உருவாக்கக்கூடிய, அனைவரையும் பொன்னாக ஆக்கக் கூடிய, எப்போதும் அனுபவங்களின் கடலின் ஆழத்தில், அனுபவங்களின் இரத்தினத்தினால் தன்னை நிரப்பக்கூடிய, சக்திசாலியான லைட் ஆகி அறியாமை என்ற திரைச் சீலையை அகற்றக்கூடிய, அந்த மாதிரி தந்தையை பிரத்யட்சம் செய்யக்கூடிய விசேஷ நட்சத்திரங்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**டீச்சர்களுடன் சந்திப்பு:** புது உலகை உருவாக்குவதற்கான காண்ட்ராக்ட் (ஒப்பந்தம்) எடுத்திருக்கிறீர்கள் தான் இல்லையா? அப்டியானால் புது உலகை உருவாக்குவதற்காக எப்பொழுதுமே புதிய ஊக்கம் புதிய உற்சாகம் இருக்கிறதா? அல்லது விசேஷமான நேரத்தில் மட்டும் ஊக்கம் வருகிறதா? சில நேரம் இருக்கும் ஊக்கம், உற்சாகத்தினால் புது உலகம் ஸ்தாபனை ஆவதில்லை. எப்பொழுதுமே ஊக்கம் உற்சாகத்தில் இருப்பவர்கள் தான் புது உலகை உருவாக்கு வதற்கு பொறுப்பாளர் ஆகிறார்கள். எந்தளவு புது

உலகத்தில் அருகாமையில் வந்து கொண்டேயிருப்பீர்களோ, அந்த அளவே புதிய உலகத்தின் விசேஷ பொருட்களின் விஸ்தாரமும் ஆகி க் கொண்டேயிருக்கும். புதிய உலகத்தில் வருபவர்களும் நீங்கள் என்றால் அதை உருவாக்கு பவர்களும் நீங்களே தான். உருவாக்குவதில் சக்திகளும் ஈடுபடுத்தப்படுகிறது, நேரமும் எடுக்கிறது, யார் சக்திசாலியான ஆத்மாக்களாக இருப்பார்களோ அவர்கள் எப்போதும் தடைகளை அகற்றி விட்டு முன்னேறிச் சென்று கொணடே இருப்பார்கள். அம்மாதிரி நீங்கள் புதிய உலகத்தின் அஸ்திவாரமாக இருக்கிறீர்கள். ஒருவேளை அஸ்திவாரம் உறுதியற்றதாக இருக்கிறது என்றால் அதன் மேல் உள்ள கட்டிடத்திற்கு என்னவாகும். எனவே புது உலகை உருவாக்குவதற்கான கடமை உள்ளவர்கள் யாராக இருக்கிறார்களோ அவர்கள் கடுமையாக உழைத்து அஸ்திவாரத்தை உறுதியானதாக ஆக்க வேண்டும். 21-பிறவிகளுக்கு அந்த கட்டிடம் உறுதியாக இருக்கும் அளவிற்கு இப்போது அஸ்திவாரத்தை உறுதியாக ஆக்குங்கள். நீங்கள் உங்களுடைய 21-பிறவிகளுக்கான கட்டிடத்தை தயார் செய்திருக்கிறீர்கள் தான் இல்லையா? நல்லது.

நான் தந்தையின் இதய சிம்மாசனதாரி ஆத்மா என்ற அனுபவம் செய்கிறீர்களா? இந்த நேரம் இதய சிம்மாசனதாரியாக இருப்பவர் பிறகு உலக இராஜ்யத்தின் சிம்மாசனதாரியாக ஆகிறார். யாருடைய இதயத்தில் ஒரு தந்தையின் நினைவு நிரம்பியிருக்கிறதோ அவர் தான் சிம்மாசன தாரியாக ஆகிறார். எப்படி தந்தையின் இதயத்தில் எப்பொழுதும் குழந்தைகள் நிரம்பியிருக்கிறார்கள். அதே போல் தந்தையின் நினைவு எப்பொழுதும் மற்றும் இயல்பாகவே இருக்கட்டும். தந்தையைத் வேறு என்ன தான் இருக்கிறது. எனவே நாம் சிம்மாசனதாரி என்ற இந்த போதையில் இருங்கள். குஷியில் இருங்கள்.

**விடைபெறும் நேரத்தில்: வியாழக்கிழமை (குருவார்) காலை 6 மணிக்கு:** நாலாபுறங்களிலுமுள்ள அன்பான சகயோகி குழந்தைகள் மீது எப்போதும் மரத்தின் தலைவனின் பிரகஸ்பதி, அதாவது குருவின் திசையோ இருக்கவே இருக்கிறது. மேலும் இதே பிரகஸ்பதியின் திசையின் மூலம் சிரேஷ்டமாக ஆக்கும் சேவையில் முன்னேறிச் சென்று கொண்டேயிருக்கிறீர்கள். சேவை மற்றும் நினைவு இரண்டிலும் விசேஷமாக வெற்றியை அடைந்துக் கொண்டேயிருக்கிறீர்கள். மேலும் அடைந்து கொண்ப்டிடயிருப்பீர்கள். குழந்தைகளைப் பொருத்தவரை

சங்கமயுகம் தான் பிரகஸ்பதி யின் அதாவது குருதிசையின் வேளையாகும். ஒவ்வொரு நேரமும் சங்கம யுகத்தின் பிரகஸ்பதி அதாவது பாக்கிவான். எனவே பாக்கியவானாக இருக்கிறீர்கள், பகவானுடையவர்களாக இருக்கிறீர்கள். பாக்கியத்தை உருவாக்கு பவர்களும் நீங்கள். நீங்கள் பாக்கியம் நிறைந்த உலகத்தின் அதிகாரிகள். அம்மாதிரியான நிரந்தர பாக்கியவான் குழந்தைகளுக்கு அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம்.

**வரதானம்: ஈஸ்வரிய மரியாதைகளின் ஆதாரத்தில் உலகின் எதிரில் உதாரணமாக ஆகக்கூடிய சகஜயோகி ஆகுக!**

உலகின் எதிரில் உதாரணமாக ஆவதற்காக அமிர்தவேளையிலிருந்து இரவு வரை என்னென்ன ஈஸ்வரிய மரியாதைகள் இருக்கின்றனவோ அதன்படியே நடந்து கொண்டேயிருங்கள். விசேஷமாக அமிர்த வேளையின் மகத்துவத்தை தெரிந்து அந்த நேரம் சக்திசாலியான நிலையை உருவாக்கினீர்கள் என்றால் முழு நாளின் வாழ்க்கை மகான் ஆகி விடும். எப்பொழுது அமிர்தவேளையில் விசேஷமாக தந்தையிடமிருந்து சக்தியை நிரப்பிவிட்டீர்கள் என்றால் சக்தி சொரூபமாகி நடந்து கொள்வதினால் எந்த ஒரு காரியத்திலும் கடினம் அனுபவம் ஆகாது, மேலும் மரியாதைப் பூர்வமான வாழ்க்கையை வாழ்வதினால் சகஜயோகின் நிலையும் இயல்பாக உருவாகி விடும். பிறகு உலகம் உங்களுடைய வாழக்கையைப் பார்த்து தங்களுடைய வாழ்க்கையை உருவாக்குவார்கள்.

**சுலோகன்: தன்னுடைய நடத்தை மற்றும் முகம் மூலம் தூய்மையின் சிரேஷ்ட தன்மையின் அனுபவத்தை செய்வியுங்கள்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 13.01.1986 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பிராமண வாழ்க்கை சதா எல்லையற்ற மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கை!

இன்று பாப்தாதா தனது தூய்மை (ஹோலி) மற்றும் மகிழ்ச்சி நிறைந்த அன்னப்பறவைகளின் சபையைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். அனைவரும் தூய்மையின் கூடவே மகிழ்ச்சியாகவும் சதா இருக்கிறீர்களா? ஹோலி என்றால் தூய்மை, இதன் அடையாளம் மகிழ்ச்சி (ஹேப்பி) சதா வெளிப்படையான முறையில் தென்படும். ஒருவேளை மகிழ்ச்சி இல்லையெனில் அவசியம் ஏதாவது அசுத்தம் அதாவது எண்ணம் அல்லது செயலில் யதார்த்தம் இல்லை, அதனால் தான் மகிழ்ச்சியில்லை. அசுத்தம் என்பது 5-விகாரங்களை மட்டுமே கூறப்படுவது கிடையாது. சம்பூர்ண ஆத்மாக்களுக்கு, தேவதைகளாக ஆகக் கூடியவர்களுக்கு யதார்த்தமற்ற, வீணான, சாதாரண எண்ணம், சொல் அல்லது செயலும் முழு தூய்மை என்று கூற முடியாது. சம்பூர்ண நிலையின் அருகாமையில் நெருங்கிக் கொண்டிருக்கிறீர்கள், ஆகையால் நிகழ்கால நேரத்தின் படி வீணான மற்றும் சாதாரண செயல்கள் இருக்கக் கூடாது. இதிலும் பரிசேதானை (செக்கிங்) மற்றும் மாற்றம் (சேஞ்ச்) தேவை. எந்த அளவிற்கு எண்ணம், சொல் மற்றும் செயல்கள் சக்திசாலியாக மற்றும் உயர்ந்ததாக இருக்குமோ அந்த அளவிற்கு சதா மகிழ்ச்சியின் ஒளி, அதிஷ்டசாலியின் ஜொலிப்பு அனுபவம் ஆகும், மேலும் பிறருக்கு அனுபவம் செய்விப்பீர்கள். இந்த இரண்டு விசயங் களையும் பாப்தாதா அனைத்து குழந்தைகளிடத்திலும் பரிசோதித்துக் கொண்டிருந்தார் -எந்த அளவிற்கு தூய்மையை தாரணை செய்திருக்கிறீர்கள்? வீணானவைகள் மற்றும் சாதாரண நிலை இன்று வரை எவ்வளவு இருக்கிறது? மேலும் ஆன்மீகக் குஷி, அழிவற்ற குஷி, உள்ளார்ந்த குஷி எந்த அளவிற்கு இருக்கிறது? அனைத்து பிராமண குழந்தையும் பிராமண வாழ்க்கை தாரணை செய்வதன் இலட்சியமே சதா குஷியாக இருக்க வேண்டும் என்பதாகும். குஷியான வாழ்க்கை வாழ்வதற்காகவே பிராமணனாக ஆகியிருக்கிறீர்களே தவிர கடின உழைப்பிற்கான முயற்சி அல்லது ஏதாவது குழப்பத்தில் இருப்பதற்காக பிராமணன் ஆகி வில்லை.

முழு கல்பத்திலும் அடைய முடியாத ஆன்மீக உள்ளார்ந்த குஷி அல்லது அதீந்திரிய சுகத்தை பிராப்தியாக அடைவதற்கு பிராமணனாக ஆகியிருக்கிறீர்கள் ஆனால் அந்த குஷியானது ஏதாவது சாதனங்களின் ஆதாரத்தில், ஏதாவது எல்லைக்குட்பட்ட பலனின் ஆதாரத்தில் அல்லது சிறிது காலத்திற்கான வெற்றியின் ஆதாரத்தில், மதிப்பு அல்லது மரியாதையின் ஆதாரத்தில், மனதின் எல்லைக்குட்பட்ட ஆசைகளின் ஆதாரத்தில் அல்லது இது தான் எனக்கு பிடிக்கிறது அது மனிதனாக இருக்கலாம், இடங்களாக அல்லது பொருட்களாக இருக்கலாம் இவ்வாறு மனதிற்கு பிடித்தமானவைகளின் ஆதாரத்தில் குஷி இருப்பதில்லை தானே? இவைகளின் ஆதாரத்தில் குஷி அடைவது என்பது உண்மையான குஷி அல்ல. அழிவற்ற குஷி கிடையாது. ஆதாரம் அசைந்து விட்டால் குஷியும் அசைந்து விடும். இப்படிப்பட்ட குஷியடைவதற்காக பிராமணனாக ஆகவில்லை. அல்பகால பலன்களினால் குஷியடைவது உலகத்தினரிடமும் இருக்கிறது. சாப்பிடுங்கள், குடியுங்கள், மகிழ்ச்சியைக் கொண்டாடுங்கள் என்பது அவர்களது சுலோகன் ஆகும் ஆனால் அந்த அல்ப கால ஆதாரம் அழிந்து விட்டால் குஷியும் அழிந்து விடும். அதே போன்று பிராமண வாழ்க்கையிலும் இவைகளின் ஆதாரத்தில் குஷி ஏற்பட்டால் என்ன வேறுபாடு இருக்கிறது? குஷிக்கடலின் குழந்தைகளாக ஆகியிருக்கிறீர்கள் எனில் ஒவ்வொரு எண்ணம், ஒவ்வொரு விநாடியும் குஷியின் அலைகளில் விளையாடக் கூடியவர்கள். குஷியியின் களஞ்சியமாக சதா இருக்கிறீர்கள். இதைத் தான் ஹோலி (தூய்மை) மற்றும் குஷியின் (ஹேப்பி) அன்னப்பறவை என்று கூறப்படுகிறது. எந்த எல்லைக்குட்பட்ட ஆதாரமின்றி சதா உள்ளார்ந்த குஷியில் இருப்பதற்கான இலட்சியம் வைத்திருக்கிறீர்கள், ஆனால் அந்த இலட்சியத்திலிருந்து விலகி எல்லைக்குட்பட்ட பிராப்திகளின் சிறிய சிறிய தெருக்களில் மாட்டிக் கொள்கின்ற காரணத்தினால் சில குழந்தைகள் இலட்சியத்திலிருந்து தூர விலகி விடுவதை பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கின்றார். நெடுஞ்சாலையை விட்டு விட்டு தெருக்களில் மாட்டிக் கொள்கின்றனர். தனது இலட்சியம், குஷியை விட்டு விட்டு எல்லைக்குட்பட்ட பிராப்திகளின் பின்னால் சென்று விடுகின்றனர். இன்று பெயர் கிடைத்தது அல்லது காரியம் நடந்து முடிந்தது, ஆசை நிறை வேறியது எனில், குஷி ஏற்படுகிறது. மனதிற்கு பிடித்தமானது நடந்தது, எண்ணங்கள் நிறை வேறியது எனில் மிகுந்த குஷி ஏற்படுகிறது. சிறிது குறை ஏற்பட்டால் இலட்சியத்தை அங்கேயே விட்டு விடுகின்றனர்.

இலட்சியம் எல்லைக்குட்பட்டதாக ஆகி விடுகிறது. ஆகையால் எல்லை யற்ற அழிவற்ற குஷியிலிருந்து விலகி விடுகின்றனர். எனவே பாப்தாதா குழந்தைகளிடம் கேட்கின்றார் -இதற்காகத் தான் பிராமணர்களாக ஆனீர்களா? இதற்காகத் தான் இந்த ஆன்மீக வாழ்க்கை தாரணை செய்தீர்களா? இது சாதாரண வாழ்க்கையாகும். இதை உயர்ந்த வாழ்க்கை என்று கூற முடியாது.

எந்த ஒரு காரியமும் செய்யுங்கள், அது மிகப் பெரிய சேவைக்கான காரியமாக இருக்கலாம், ஆனால் எந்த சேவை உள்ளார்ந்த குஷி, ஆன்மீக மகிழ்ச்சி, எல்லையற்ற பிராப்தியிலிருந்து கீழான நிலைக்கு கொண்டு செல்கிறதோ அதாவது எல்லைக்குட்பட்டு அழைத்து வருகிறதோ, இன்று மகிழ்ச்சி நாளை குழப்பம், இன்று குஷி நாளை வீண் குழப்பங்களில் கொண்டு செல்கிறதோ, குஷியிலிருந்து வஞ்சித்து விடுகிறதோ அப்படிப்பட்ட சேவையை விட்டு விடுங்கள், ஆனால் குஷியை விட்டு விடாதீர்கள். உண்மையான சேவை சதா எல்லையற்ற ஸ்திதி, எல்லை யற்ற குஷியின் அனுபவத்தை ஏற்படுத்தும். ஒருவேளை அப்படிப்பட்ட அனுபவம் இல்லை யெனில், அது கலப்பட சேவையாகும். உண்மையான சேவை அல்ல. இந்த இலட்சியம் சதா வையுங்கள் -சேவையின் மூலம் சுய முன்னேற்றம், சுய பிராப்தி, திருப்தி மற்றும் மகான் நிலை அனுபவம் ஏற்பட்டதா? எங்கு திருப்தி என்ற உயர்ந்த நிலையிருக்குமோ அங்கு அழிவற்ற பிராப்தியின் அனுபவம் இருக்கும். சேவை என்றால் பூக்கள் நிறைந்த தோட்டத்தை செழிப்பாக்கு வதாகும். சேவை என்றால் பூந்தோட்டத்தின் அனுபவம் செய்ய வேண்டுமே தவிர முட்கள் நிறைந்த காட்டில் மாட்டிக் கொள்ளக் கூடாது. சிக்கல், பிராப்தியற்ற நிலை, மனக் குழப்பம், சிறிது நேரம் மகிழ்ச்சி, அடுத்த சிறிது நேரம் குழப்பம் -இது முள்ளாகும். இந்த முட்களிலிருந்து விலகியிருப்பது என்றால், எல்லையற்ற குஷியின் அனுபவம் செய்வதாகும். என்ன நடந்தாலும் எல்லைக்குட்பட்ட பிராப்திகளை தியாகம் செய்ய வேண்டியிருக்கலாம், சில விசயங்களை விட வேண்டியிருக் கலாம், விசயங்களை விட்டு விடுங்கள், ஆனால் குஷியை விட்டு விடாதீர்கள். எதற்காக வந்தீர்களோ, அந்த இலட்சியத்திலிருந்து விலகி விடாதீர்கள். இந்த சூட்சும பரிசோதனை செய்யுங்கள். குஷியிருக்கிறது, ஆனால் அல்பகால பிராப்தியின் ஆதாரத்தில் குஷியுடன் இருப்பது -இதைத் தான் குஷி என்று புரிந்து கொள்ளவில்லை அல்லவா? சாலையோரக் காட்சி களையே (சைட் சீன்) இலட்சியம் என்று புரிந்து

கொள்வதில்லை தானே? ஏனெனில் சாலையோரக் காட்சிகளும் கவர்ச்சிக்கக் கூடியதாக இருக்கிறது ஆனால் இலட்சியத்தை அடைவது என்றால் எல்லையற்ற இராஜ்ய அதிகாரி ஆவதாகும். இலட்சியத்திலிருந்து விலகுபவர்கள் இராஜ்ய அதிகாரியாக ஆக முடியாது. இராயல் குடும்பத்திலும் வர முடியாது. ஆகையால் இலட்சியத்தை சதா நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நாட்கள் செல்ல செல்ல எந்த எல்லைக்குட்பட்ட தெருக்களுக்கு சென்று விடவில்லை தானே? என்று தனக்குள் கேளுங்கள். அல்ப கால பிராப்தியின் குஷியானது சதா கால குஷியிலிருந்து விலக்கி விடவில்லை தானே? சிறிதளவிலேயே குஷி அடையக் கூடியவன் கிடையாது தானே? தன்னைத் தானே குஷிபடுத்திக் கொள்ளவில்லை தானே? அப்படியிருக்கிறேன், இப்படியிருக்கிறேன், நன்றாக இருக்கிறேன், குஷியாக இருக்கிறேன். அழிவற்ற குஷியின் அடையாளம் அவர்களுக்கு மற்றவர்களைக் காட்டிலும் சதா குஷிக்கான ஆசீர்வாதம் அவசியம் பிராப்தியாக கிடைக்கும். பாப்தாதா மற்றும் நிமித்தமாக இருக்கும் பெரியவர்களின் அன்பு என்ற ஆசீர்வாதம் உள்ளுக்குள் அலௌகீக, ஆன்மீகக் குஷிக் கடலில் நீந்தும் அனுபவம் செய்விக்கும். சோம்பலில் வந்து நான் நன்றாக இருக்கிறேன், ஆனால் என்னை மற்றவர்கள் புரிந்துகொள்ளவில்லை என்று நினைக்காதீர்கள். சூரியனின் ஒளி மறையுமா என்ன? சத்தியத்தின் நறுமணம் ஒருபோதும் அழிக்க முடியாது, மறைக்க முடியாது. ஆகையால் ஒருபோதும் ஏமாற்றம் அடைந்து விடாதீர்கள். இதே பாடத்தை பக்கா செய்து கொள்ள வேண்டும். முதலில் தனது எல்லையற்ற, அழிவற்ற குஷி, பிறகு தான் மற்ற விசயங்கள். எல்லையற்ற குஷியானது சேவையின் அல்லது அனைவரின் அன்பு, அனைவரின் மூலம் அழிவற்ற மரியாதை பிராப்தியாக அடைவிக்கும் குஷி அதாவது உயர்ந்த பாக்கியத்தின் அனுபவத்தை தானாகவே ஏற்படுத்தும். யார் சதா குஷியாக இருக்கிறார்களோ அவர்கள் அதிஷ்டசாலிகள் ஆவர். உழைப்பின்றி, ஆசையின்றி அதாவது எதுவும் கூறாமலேயே அனைத்து பிராப்திகளும் எளிதாக ஏற்படும். இந்த பாடத்தை பக்கா செய்தீர்களா?

பாப்தாதா பார்க்கின்றார் எதற்காக வந்திருக்கிறீர்கள்? எங்கு செல்ல வேண்டும்? எங்கு சென்று கொண்டிருக்கிறீர்கள்? எல்லையற்றதை விட்டு விட்டு பிறகு மீண்டும் எல்லைக்குட் பட்டதிலேயே செல்கிறீர்கள் எனில், பிறகு எல்லையற்றதன் அனுபவம் எப்பொழுது செய்வீர்கள்? பாப்தாதா விற்கும் குழந்தைகளின் மீது அன்பு இருக்கிறது. கருணை காண்பிக்கமாட்டார்.

ஏனெனில் யாசிப்பவர்கள் அல்ல. வள்ளல் மற்றும் விதாதாவின் குழந்தைகளாக இருக்கிறீர்கள். துக்க மானவர்களின் மீது தான் கருணை காண்பிக்கப்படும். நீங்கள் சுக சொரூபமானவர்கள், சுகதாதாவின் குழந்தைகள். என்ன செய்ய வேண்டும் என்பதை இப்போது புரிந்து கொண்டீர் களா? பாப்தாதா இந்த ஆண்டு வித விதமான விசயங்களில் அடிக்கடி கவனம் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றார். இந்த ஆண்டு விசேஷமாக சுயத்தின் மீது கவனம் செலுத்துவதற்காக நேரம் கொடுக்கப்படுகிறது. உலகத்தினர்கள் சாப்பிடுங்கள், குடியுங்கள், மகிழ்ச்சி கொண்டாடுங்கள் என்று மட்டுமே கூறுகின்றனர் ஆனால் பாப்தாதா கூறுகின்றார் –சாப்பிடுங்கள் மற்றும் பகிருங்கள். மகிழ்ச்சியாக இருங்கள் மற்றும் மகிழ்ச்சியை ஏற்படுத்துங்கள். நல்லது.

சதா அழிவற்ற, எல்லையற்ற குஷியில் இருக்கக் கூடியவர்களுக்கு, ஒவ்வொரு காரியத்திலும் அதிஷ்டத்தின் அனுபவம் செய்யக் கூடியவர்களுக்கு, சதா அனைவருக்கும் குஷியின் பொக்கிஷத்தைப் பகிர்ந்து கொடுக்கக் கூடியவர்களுக்கு, சதா குஷியின் நறுமணத்தை பரப்பக் கூடியவர்களுக்கு, சதா குஷியின் ஆர்வம், உற்சாகம் என்ற அலைகளில் நீந்தக் கூடியவர்களுக்கு, இவ்வாறு சதா குஷியின் ஒளி மற்றும் ஜொலிப்பில் இருக்கக் கூடியவர்களுக்கு, உயர்ந்த இலட்சியத்தை பிராப்தியாக அடையக் கூடிய உயர்ந்த ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் சதா ஹோலி மற்றும் ஹேப்பியாக இருப்பதற்கான அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு**: இல்லறத்தில் இருந்தாலும் சதா விடுபட்டவர்கள் மற்றும் தந்தைக்குப் பிரியமானவர்கள் அல்லவா! ஒருவேளை யாரிடமாவது பற்றுதல் இருந்தால் அவர்கள் சதா காலத்திற்ம் தனது வாழ்க்கையில் தடையானவர்களாக ஆகி விடுவர். ஆகையால் சதா தடையற்றவர்களாகி முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். கல்பத்திற்கு முன்பு போன்று அங்கதனாகி, ஆடாது, அசையாதவர்களாக இருங்கள். அங்கதனின் சிறப்புக்களாக என்ன காண்பிக்கின்றனர்? அந்த அளவிற்கு நிச்சயயுத்தி யுடையவர், அவரது பாதங்களைக் கூட யாரும் அசைக்கவே முடியாது. மாயை நிச்சயம் என்ற பாதங்களை அசைப்பதற்காக வித விதமான முறையில் வருகின்றன ஆனால் மாயை அசைந்து விட வேண்டும், உங்களது நிச்சயம் என்ற கால்கள் அசையக் கூடாது. மாயை சுயம் சரண்டர் ஆகி விடும். நீங்கள்

சரண்டர் ஆகமாட்டீர்கள் அல்லவா! தந்தையிடத்தில் சரண்டர் அல்லவா! மாயையிடம் அல்ல. இப்படிப்பட்ட நிச்சயபுத்தியுடையவர்கள் சதா கவலையற்று இருப்பர். ஒருவேளை சிறிது ஏதாவது கவலையிருந்தால் நிச்சயத்தில் குறையிருக்கிறது. எப்பொழுதாவது, ஏதாவது ஒரு விசயத்தில் கவலை ஏற்பட்டு விடுகிறது அதற்கான காரணம் என்னவாக இருக்கும்? கண்டிப்பாக ஏதாவது ஒரு விசயத்தில் நிச்சயம் குறைவு இருக்கிறது. அது நாடகத்தின் மீதிருக்கும் நிச்சயம் குறைவாக இருக்கலாம், தன் மீதிருக்கும் நிச்சயம் குறைவாக இருக்கலாம் அல்லது தந்தையின் மீதிருக்கும் நிச்சயம் குறைவாக இருக்கலாம். மூன்று வகையாக நிச்சயத்தில் சிறிது குறையிருந்தாலும் நிச்சயத்துடன் இருக்க முடியாது. அனைத்தையும் விட மிகப் பெரிய நோய் கவலையாகும். கவலை என்ற நோய்க்கு மருத்துவர்களிடம் மருந்து கிடையாது. தற்காலிகமாக தூங்கு வதற்கான மருந்து கொடுத்து விடுவார்கள் ஆனால் சதா காலத்திற்கும் கவலையைப் போக்கி விட முடியாது. கவலையுடையவர்கள் எந்த அளவிற்கு பிராப்திக்குப் பின்னால் செல்கிறார்களோ அந்த அளவிற்கு பிராப்தியும் முன்னால் ஓடிக் கொண்டே இருக்கும். ஆகையால் நிச்சயம் என்ற பாதங்கள் சதா உறுதியானதாக இருக்க வேண்டும். சதா ஒரே பலம், ஒரே நம்பிக்கை இது தான் பாதம். நிச்சயம் என்று கூறினாலும், நம்பிக்கை என்று கூறினாலும் ஒரே விசயம் தான். இப்படிப்பட்ட நிச்சயபுத்தியுடைய குழந்தை களுக்கு வெற்றி உறுதியாகும்.

சதா தந்தையிடத்தில் பலியாகக் கூடியவர்கள் தானே? பக்தியில் செய்த உறுதிமொழியைக் கடைப்பிடிக்கக் கூடியவர்கள் தானே? என்ன உறுதிமொழி செய்திருந்தீர்கள்? சதா உங்களிடம் பலியாகி விடுவோம். பலி என்றால் சதா சமர்பனமாகி, பலசாலி ஆகக் கூடியவர்கள். ஆக பலி ஆகி விட்டீர்களா? அல்லது ஆகயிருக்கிறீர்களா? பலியாவது என்றால் எனது எதுவும் கிடையாது. எனது என்பது அழிந்து விட வேண்டும். சரீரமும் என்னுடையது அல்ல. ஆக எப்போதாவது தேக அபிமானத்தில் வருகிறீர்களா? எனது என்பதால் தான் தேக உணர்வு வருகிறது. இதிலிருந்தும் விலகியிருப்பார்கள், இதற்குப் பெயர் தான் பலி ஆவதாகும். எனவே எனது என்பதை சதா காலத்திற்கும் விலக்கிக் கொண்டே செல்லுங்கள். அனைத்தும் உங்களுடையது என்ற அனுபவம் செய்து கொண்டே செல்லுங்கள். எந்த அளவிற்கு அதிகம் அனுபவிகளாக ஆகிறீர்களோ, அந்த அளவிற்கு அதாரிட்டி சொரூபம். அவர்கள் ஒருபோதும்

ஏமாற்றம் அடைய முடியாது. துக்க அலைகளில் வரவே முடியாது. ஆக அனுபவத்தின் கதைகளை அனைவருக்கும் சதா கூறிக் கொண்டே இருங்கள். அனுபவி ஆத்மாக்கள் குறுகிய காலத்தில் அதிக வெற்றியை பிராப்தியாக அடைவார்கள். நல்லது.

**விடைபெறும் நேரத்தில் -14 ஜனவரி, மகர சங்கிராந்தியின் அன்பு நினைவுகள்!** இன்றைய நாளின் மகத்துவம் சதா சாப்பிடுவது மற்றும் பகிர்வது என்பதாக ஆக்கி விட்டனர். சிறிது சாப்பிடுகின்றனர், சிறிது பகிர்கின்றனர். அவர்கள் எள்ளை தானம் செய்கின்றனர் அல்லது சாப்பிடுகின்றனர். எள் என்றால் மிகச் சிறிய பிந்து. எந்த விசயமாக இருந்தாலும் சிறியதாக இருந்தால் இது எள்ளுக்குச் சமமானது, பெரியதாக இருந்தால் இது மலைக்கு சமமானது என்று கூறுகின்றனர் அல்லவா? ஆக மலை மற்றும் எள் இரண்டிற்கும் மிகப் பெரிய வித்தியாசம் இருக்கிறது அல்லவா?! எள்ளின் மகத்துவம் இதனால் தான் இருக்கிறது. ஏனெனில் மிக சூட்சம பிந்துவாக ஆகின்றனர். எப்போது பிந்து ரூபமாக ஆகிறீர்களோ அப்போது பறக்கும் கலையின் லிப்டாக ஆகிறீர்கள். எனவே எள்ளிற்கும் மகத்துவம் இருக்கிறது. மேலும் எள் சதா குழு ரூபத்தில் இனிப்பை உருவாக்குகிறது. எள்ளை அப்படியே சாப்பிடமாட்டார்கள். இனிமை அதாவது அன்பினால் குழுவாக உருவாக்குவதன் அடையாளமாகும். எள்ளில் இனிப்பு சேர்க்கின்ற போது நன்றாக இருக்கிறது. எள் மட்டும் சாப்பிட்டால் கசக்கும், ஆனால் இனிப்பு சேர்த்தால் மிகவும் நன்றாக இருக்கும். ஆக ஆத்மாக்களாகிய நீங்களும் இனிமையாக இருந்து சம்பந்தங்களில் வருகின்ற போது, அன்பில் வருகின்ற போது சிரேஷ்டமாகி ஆகி விடுகிறீர்கள். ஆக இது குழு ரூபத்தில் இனிமையாக இருப்பதன் நினைவார்த்தமாகும். இதற்கும் அடையாளம் இருக்கிறது. எனவே தன்னை சதா இனிமையின் ஆதாரத்தில் குழுவின் சக்தியில் கொண்டு வர வேண்டும், பிந்து ரூபம் ஆக வேண்டும் மற்றும் லிப்ட் ஆகி பறக்கும் கலையில் பறப்பதாகும். இது இன்றைய நாளின் மகத்துவமாகும். ஆக கொண்டாடுவது என்றால் அவ்வாறு ஆவதாகும். நீங்கள் ஆகிறீர்கள், அவர்கள் சிறிது காலத்திற்குக் கொண்டாடுகிறார்கள். இதில் தானம் கொடுப்பது என்றால் தனக்குள் இருக்கக் கூடிய பலவீனங்களை தானமாகக் கொடுத்து விடுங்கள். சிறிய விசயம் என்று புரிந்து கொண்டு கொடுத்து விடுங்கள். எள் போன்றது என்று புரிந்து கொண்டு கொடுத்து விடுங்கள். பெரிய விசயம் என்று நினைக்காதீர்கள் விட வேண்டியிருக்கிறது, கொடுக்க

வேண்டியிருக்கிறது என்று நினைக்காதீர்கள். எள் போன்று சிறிய விசயத்தை தானம் கொடுக்க வேண்டும். சிறிய விசயம் என்று புரிந்து கொண்டு குஷி குஷியாக கொடுத்து விடுங்கள். இது தானத்தின் மகத்துவமாகும். புரிந்ததா!

சதா அன்பானவர்களாக ஆவது, சதா குழுவுடன் இணைக்கமாக இருப்பது மற்றும் சதா பெரிய விசயத்தை சிறியதாக நினைத்து சமாப்தி செய்ய வேண்டும். நெருப்பில் எரித்து விட வேண்டும் இது தான் மகத்துவமாகும். ஆக கொண்டாடி விட்டீர்கள் தானே! திட சங்கல்பம் என்ற நெருப்பை உருவாக்கி விட்டீர்கள். இன்றைய நாளில் நெருப்பு எரிய வைப்பார்கள் அல்லவா! ஆக சன்ஸ்காரங்களை மாற்றக் கூடிய நாள், அவர்கள் சங்கிராந்தி என்று கூறுகின்றனர், நீங்கள் சன்ஸ்கார மாற்றம் என்று கூறுவீர்கள். நல்லது, அனைவருக்கும் அன்பு மற்றும் குழுவின் சக்தியில் சதா வெற்றியுடன் இருப்பதற்கான அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம்.

**வரதானம்: சதா பகவான் மற்றும் பாக்கியத்தின் நினைவில் இருக்கக் கூடிய சர்வ சிரேஷ்ட பாக்கியவான் ஆகுக!**

சங்கமயுகத்தில் சைத்தன்ய சொரூபத்தில் பகவான் குழந்தைகளுக்கு சேவை செய்து கொண்டிருக்கின்றார். பக்தி மார்க்கத்தில் அனைவரும் பகவானுக்கு சேவை செய்கின்றனர் ஆனால் இங்கு சைத்தன்ய விக்கிரகங்களுக்கு சுயம் பகவான் சேவை செய்கின்றார். அமிர்த வேளையில் எழுப்புகின்றார், போக் வைக்கின்றார், படுக்க வைக்கின்றார். பாட்டு கேட்டு தூங்குவது மற்றும் பாட்டு கேட்டு எழுந்திருப்பது இவ்வாறு செல்லமாக அல்லது சர்வ சிரேஷ்ட பாக்கியவான்கள் நாம் பிராமணர்கள். இதே பாக்கியத்தின் குஷியில் சதா ஆடிக் கொண்டே இருங்கள். தந்தைக்குச் செல்லமானவர்களாக ஆகுங்கள், போதும், மாயைக்கு அல்ல. யார் மாயைக்குச் செல்லமானவர்களாக ஆகிறார்களோ அவர்கள் மிகவும் சேட்டை செய்வர்.

**சுலோகன்: தனது புன்முறுவலான முகத்தின் மூலம் அனைத்து பிராப்திகளின் அனுபவத்தை ஏற்படுத்துவது தான் உண்மையான சேவையாகும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 15.01.1986 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மலிவான வியாபார ஒப்பந்தம் மற்றும் சேமிப்பிற்கான பட்ஜெட்!

இரத்தின வியாபாரி பாபா தம்முடைய பெரியதிலும் பெரிய வியாபார ஒப்பந்தம் செய்யக்கூடிய வியாபாரி களாகிய குழந்தைகளைப் பார்த்துப் புன்சிரித்துக் கொண்டு இருக்கிறார். வியாபாரம் எவ்வளவு பெரியது மற்றும் அதைச் செய்கிற வியாபாரிகள் உலகில் எவ்வளவு சாதாரணமாக, வெகுளியாக இருக்கிறார்கள்! பகவானோடு வியாபாரம் செய்யக்கூடிய எந்த ஆத்மாக்கள் பாக்கியவான் ஆகிறார்கள்? இதைப் பார்த்துப் புன்சிரித்துக் கொண்டிருக்கிறார். ஒரு பிறவியில் செய்யப்படும் இந்த வியாபாரம் 21-பிறவிகளுக்கு சதா செல்வந்தர் ஆக்குமளவுக்கு அவ்வளவு பெரியதாக உள்ளது. கொடுப்பது என்ன மற்றும் பெறுவது என்ன? அளவற்ற பல மடங்கு வருமானம் அல்லது பல மடங்கு வியாபாரத்தை எவ்வளவு சுலபமாகச் செய்கிறீர்கள்! வியாபாரம் செய்வதற்கு உண்மையில் ஒரு விநாடி தான் ஆகிறது. மேலும் எவ்வளவு மலிவான வியாபாரம் செய்தீர்கள்! ஒரு விநாடியில் மற்றும் ஒரு வார்த்தையில் வியாபாரம் செய்து முடித்து விட்டீர்கள் என்னுடைய பாபா என்று... மனதால் ஏற்றுக் கொண்டீர்கள், இந்த ஒரு வார்த்தை மூலம் இவ்வளவு பெரிய அளவற்ற கஜானாவுக்கான வியாபாரம் செய்து விடுகிறீர்கள்! மலிவான வியாபாரம் இல்லையா? கடின உழைப்பும் இல்லை, அதிக விலையும் இல்லை. நேரத்தைச் செலவழிக்கவும் தேவை இல்லை. வேறு எந்த ஒரு எல்லைக்குட்பட்ட வியாபாரமும் செய்தால் எவ்வளவு நேரம் செலவாகிறது! கடினமாக உழைக்கவும் வேண்டி உள்ளது. மேலும் விலைவாசியும் நாளுக்கு நாள் கூடிக் கொண்டே போகிறது. அதுவும் எது வரை நடைபெறும்? ஒரு பிறவிக்கும் கூட கேரண்டி இல்லை. ஆக, இப்போது சிரேஷ்ட வியாபாரம் செய்து விட்டீர்களா, அல்லது இப்போது செய்யலாமா? என்று யோசித்துக் கொண்டிருக்கிறீர்களா? பக்கா வியாபாரம் செய்து விட்டீர்கள் இல்லையா? பாப்தாதா தம்முடைய வியாபாரிக் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். வியாபாரிகளின் பட்டியலில் யார்-யார் புகழ் பெற்றவர்கள்? உலக மனிதர்களும் புகழ் பெற்றவர்களின்

பட்டியலைத் தயாரிக்கின்றனர் இல்லையா? விசேஷ டைரக்டரியும் தயார் செய்கின்றனர். பாபாவின் டைரக்டரியில் யார்-யாருடைய பெயர்கள் உள்ளன? யார் மீது உலக மனிதர்களின் பார்வை செல்வதில்லையோ, அவர்கள் தாம் பாபாவுடன் வியாபாரம் செய்துள்ளனர் மற்றும் பரமாத்ம கண்களின் நட்சத்திரங்களாக ஆகி விட்டனர், கண்ணின் மணிகளாக ஆகி விட்டனர். நம்பிக்கையிழந்த ஆத்மாக்களை விசேஷ ஆத்மாக்களாக ஆக்கி விட்டார். அந்த மாதிரி நஷா(போதை) சதா உள்ளதா? பரமாத்ம டைரக்டரியின் விசேஷ வி.ஐ.பி. நாம், அதனால் தான்கள்ளம்-கபடமற்றவர்களின் பகவான் எனப் பாடப் பட்டுள்ளார். சாமர்த்திய சாலிகளும் உள்ளனர், ஆனால்கள்ளம்-கபடற்றவர்களைத் தான் அவருக்குப் பிடித்திருக்கிறது. உலகத்தின் வெளிப்புற சாமர்த்தியம் பாபாவுக்குப் பிடிப்பதில்லை. அவர்களுக்குக் கலியுகத்தில் இராஜ்யம். அங்கே அவ்வப்போது லட்சாதிபதி, அவ்வப்போது ஒன்றுமில்லாதவர் ஆனால் நீங்கள் அனைவரும் சதா காலத்திற்கான பத்மாபதம்பதி (பல கோடிக்கு அதிபதி) ஆகி விடுகிறீர்கள். பயத்தின் இராஜ்யம் இல்லை. பயமற்றது.

இன்றைய உலகில் செல்வமும் உள்ளது, பயமும் உள்ளது. எவ்வளவு செல்வம் உள்ளதோ, அவ்வளவு பயத்திலேயே தான் உண்ணுகின்றனர், பயத்திலேயே தான் உறங்குகின்றனர் ஆனால் நீங்கள் கவலையற்ற மகாராஜா ஆகி விடுகிறீர்கள். பயமற்றவர்களாக ஆகி விடுகிறீர்கள். பயம் என்பது பூதம் என்றும் சொல்லப் படுகிறது. நீங்கள் அந்த பூதத்திடம் இருந்தும் விடுபட்டு விடுகிறீர்கள். ஏதாவது பயம் உள்ளதா? எங்கே எனது என்பது உள்ளதோ, அங்கே பயம் இருக்கும். மேரா பாபா (என்னுடைய பாபா). ஒரு சிவபாபா மட்டுமே பயமற்றவராக ஆக்குபவர். அவரைத் தவிர வேறு எந்த ஒரு தங்க மானாக இருந்தாலும் அது எனது என்றால் பயம் தான். ஆகவே சோதித்துப் பாருங்கள், எனது-எனது என்ற சம்ஸ்காரம் பிராமண வாழ்க்கையில், எந்த ஒரு சூட்சும ரூபத்திலும் இருந்து விடவில்லையே? வெள்ளி விழா, பொன்விழா கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? வெள்ளியாக இருந்தாலும் தங்கமாக இருந்தாலும் அதை நெருப்பிலிட்டு, கலப்படத்தை நீக்கினால் தான் உண்மையானதாக ஆகும். உண்மையான வெள்ளி விழா, உண்மையான பொன்விழா இல்லையா? ஆக, விழாக் கொண்டாடுவதற்காக உண்மையான வெள்ளி, உண்மையான தங்கம் ஆகத்தான் வேண்டும். வெள்ளி விழாக் கொண்டாடுபவர்கள் வெள்ளி தான் என்பதில்லை. இதுவோ வருடங்களின் கணக்கின்படி

வெள்ளி விழா எனச் சொல்கிறீர்கள் ஆனால் அனைவரும் பொன்யுகத்தின் அதிகாரி, பொன்யுகத்தினர். ஆகவே சோதித்துப் பாருங்கள், உண்மையான தங்கமாக எது வரை ஆகியிருக்கிறீர்கள்? வியாபாரமோ செய்திருக்கிறீர்கள், ஆனால் வந்ததை உடனே சாப்பிட்டு விட்டீர்கள் என்று அந்த மாதிரி இல்லையே? 21-தலைமுறைகளுக்கு சதா அனைத்தும் நிறைந்த வர்களாக இருக்குமளவு சேமித்திருக்கிறீர்களா? உங்கள் வம்சாவளியும் கூட மிகப்பெரும் செல்வந்தர்களாக இருக்க வேண்டும். 21-பிறவிகள் மட்டுமில்லை, ஆனால் துவாபரயுகத்திலும் கூட பக்த ஆத்மாக்களாக இருக்கும் காரணத்தால் எந்த ஒரு குறைவும் இருக்காது. அவ்வளவு செல்வம் துவாபரயுகத்திலும் இருக்கும் --அதைக் கொண்டு தான-புண்ணியம் நன்கு செய்ய முடியும். கலியுகத்தின் கடைசியிலும் பாருங்கள், கடைசிப் பிறவியிலும் கூட பிச்சைக்காரர் களாக ஆகவில்லை தானே? இச்சமயத்தின் வருமானம் அல்லது வியாபாரம் முழுக் கல்பத்திலும் உங்களைப் பிச்சைக்காரராக ஆக்கி விடாது. அவ்வளவு சேர்த்து வைத்திருக்கிறீர்கள் -கடைசிப் பிறவியிலும் கூட பருப்பு-ரொட்டி சாப்பிடுகிறீர்கள். இவ்வளவு சேமிப்பின் கணக்கு வைத்திருக்கிறீர்களா? பட்ஜெட் தயாரிப்பதற்கு வருகிறதா? சேமிப்பதில் சாமர்த்தியசாலிகள் தாம் இல்லையா? இல்லையென்றால் 21-பிறவிகளுக்கு என்ன செய்வீர்கள்? வருமானம் சம்பாதிப் பவர்களாக ஆவீர்களா அல்லது இராஜ்ய அதிகாரி ஆகி இராஜ்யம் செய்வீர்களா? இராயல் குடும்பத்திற்கு சம்பாதிப்பதற்கான அவசியம் இருக்காது. பிரஜைகள் சம்பாதிக்க வேண்டிய திருக்கும். அதிலும் நம்பர் உள்ளது. பணக்காரப் பிரஜை மற்றும் சாதாரணப் பிரஜை. ஏழையோ இருக்கவே மாட்டார்கள் ஆனால் இராயல் குடும்பம், புருˆô ர்த்தத்தின் பிராலப்தமாக இராஜ்யத்தை அடைவார்கள். பல பிறவிகளாக இராயல் குடும்பத்தின் அதிகாரி ஆகிறார்கள். இராஜ்ய சிம்மாசனத்தின் அதிகாரி ஒவ்வொரு ஜென்மத்திலும் ஆவதில்லை, ஆனால் இராயல் குடும்பத்தின் அதிகாரத்தை பல பிறவிகளுக்கு அடைகிறார்கள். ஆக, என்னவாக ஆவீர்கள்? இப்போது பட்ஜெட்டை உருவாக்குங்கள். பட்ஜெட்டின் திட்டத்தைத் தயார் செய்யுங்கள்.

இப்போதைய உலகத்தில் வீணானவற்றிலிருந்து சிறந்தவற்றை உருவாக்குகின்றனர். வீணான வற்றைத் தான் சேமிக்கின்றனர். ஆகவே நீங்கள் அனைவரும் கூட பட்ஜெட்டின் கணக்கை சதா ஸ்மிருதியில் வையுங்கள். பட்ஜெட் தயார் செய்யுங்கள். சங்கல்ப சக்தி, வாய்மொழியின்

சக்தி, கர்மத்தின் சக்தி, சமயத்தின் சக்தி இவற்றை எப்படி எங்கே காரியத்தில் ஈடுபடுத்துவது? இத்தனை சக்திகளும் வீணாகிப் போகின்றன என்று இருக்கக் கூடாது. சங்கல்பம் கூட சாதாரணமானது என்றால், வீணானது என்றால் வீணானது மற்றும் சாதாரணம் இரண்டும் சேமிப்பு கிடையாது ஆனால் இழந்து விட்டீர்கள். நாள் முழுவதிலும் தனது சார்ட்டை உருவாக்குங்கள். இந்த சக்திகளைக் காரியத்தில் ஈடுபடுத்தி எந்த அளவுக்கு அதிகரிக்கச் செய்தீர்கள்? ஏனென்றால் எவ்வளவு காரியத்தில் ஈடுபடுத்துவீர்களோ, அவ்வளவு சக்தி அதிகரிக்கும். அனைவரும் அறிந்திருக்கிறீர்கள், சங்கல்ப சக்தி உள்ளது என்று, ஆனால் காரியத்தில் ஈடுபடுத்துவதற்கான அப்பியாசம் --இதில் நம்பர்வார் உள்ளனர். சிலர் பிறகு காரியத்திலும் ஈடுபடுத்துவ தில்லை, பாவ காரியத்திலும் இழப்பதில்லை ஆனால் சாதாரண தினசரி நடவடிக்கையில் சம்பாதிக்கவும் இல்லை, இழக்கவும் இல்லை. சேமிப்போ ஆகவில்லை இல்லையா? சாதாரண சேவையின் தினச்சரியா அல்லது சாதாரண செயல்பாடுகளின் தினச்சரியாவை பட்ஜெட் கணக்கு சேமிப்பானதாகச் சொல்ல மாட்டார்கள். தங்கள் சக்திக்கேற்றவாறு சேவையும் செய்தோமா, படிப்பையும் படித்தோமா என்பதை மட்டுமே சோதிக்காதீர்கள். யாருக்கும் துக்கம் தராமல் இருந்தோமா? எந்த ஒரு தலைகீழான காரியமும் செய்யாதிருந்தோமா? ஆனால் துக்கம் தராமல் இருந்த நாம் சுகம் கொடுத்தோமா? எவ்வளவு மற்றும் எத்தகைய சக்திசாலி சேவை செய்ய வேண்டுமோ, அவ்வளவு செய்தோமா? எப்படி பாப்தாதா சதா வழிகாட்டுதல் (டைரக்ஷன்) கொடுக்கிறார், நான், எனது என்பதைத்தியாகம் செய்வது தான் உண்மையான சேவை. அந்த மாதிரி சேவை செய்தோமா? தலைகீழான வார்த்தைகளைப் பேசவில்லை, ஆனால் நம்பிக்கை யற்றவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்துகிற மாதிரி வார்த்தையைப் பேசினோமா? தைரியமற்ற வர்களை தைரியசாலி ஆக்கினோமா? குஷியின் ஊக்கம்-உற்சாகத்தில் யாரையாவது கொண்டு வந்தோமா? இது தான் சேமிப்பதாகும், சிக்கனம் மேற்கொள்வதாகும். அது போலவே இரண்டு மணி நேரம், நான்கு மணி நேரம் கடந்து விட்டது என்றால் அது சேமிப்பாகாது. அனைத்து சக்திகளையும் சிக்கனம் செய்து சேமித்து வையுங்கள். அந்த மாதிரி பட்ஜெட் தயார் செய்யுங்கள். இந்த வருடம் பட்ஜெட் தயாரித்துக் காரியம் செய்யுங்கள். ஒவ்வொரு சக்தியையும் எப்படிக் காரியத்தில் ஈடுபடுத்துவது என்பதற்கான திட்டத்தை உருவாக்குங்கள். உலகத்தின் ஒவ்வொரு ஆத்மாவும் ஏதேனும் பிராப்தியடைந்து உங்களது குணத்தைப்

புகழ்ந்து பாடுகிற மாதிரி ஈஸ்வரிய பட்ஜெட்டை உருவாக்குங்கள். அனைவருக்கும் எதையாவது கொடுக்கத் தான் வேண்டும். முக்தி கொடுங்கள், அல்லது ஜீவன்முக்தி கொடுங்கள். மனித ஆத்மாக்களை மட்டுமென்ன, இயற்கையையும் கூட பாவனமாக்குகின்ற சேவை செய்து கொண்டி ருக்கிறீர்கள். ஈஸ்வரிய பட்ஜெட், அதாவது சர்வ ஆத்மாக்களும், இயற்கையோடு கூடவே பாவனமாகி விடுகின்றனர். அந்த அரசாங்கத்தினர் பட்ஜெட் தயாரிக்கின்றனர் -அதாவது இவ்வளவு தண்ணீர் கொடுப்போம். இவ்வளவு வீடுகள் கொடுப்போம். இவ்வளவு மின்சாரம் கொடுப்போம். நீங்கள் என்ன பட்ஜெட் தயாரிக்கிறீர்கள்? அனைவருக்கும் அநேகப் பிறவிகள் வரை முக்தி, ஜீவன்முக்தி கொடுப்போம். பிச்சைக்கார நிலையிலிருந்து, துக்கம், அசாந்தியிலிருந்து விடுவிப்போம். அரைக்கல்பம் ஓய்வாக இருப்போம். அவர்களின் ஆசையோ நிறை வேறவே செய்யும். இவர்களோ முக்தி தான் வேண்டுகின்றனர் இல்லையா? முக்தி பற்றித் தெரியாது, ஆனால் வேண்டுதல் வைக்கின்றனர் இல்லையா? ஆகவே தனக்காகவும் உலகத்திற்காகவும் ஈஸ்வரிய பட்ஜெட் தயார் செய்யுங்கள். என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா? வெள்ளிவிழா மற்றும் பொன்விழா இதே வருடம் நடத்திக் கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? ஆகவே இது மகத்துவ மான வருடமாகும். நல்லது.

சதா சிரேஷ்ட வியாபாரத்தை நினைவில் வைக்கக் கூடிய, சதா சேமிப்புக் கணக்கை அதிகப் படுத்தக் கூடிய, சதா ஒவ்வொரு சக்தியையும் காரியத்தில் ஈடுபடுத்தி, விருத்தியை ஏற்படுத்தக் கூடிய, சதா சமயத்தின் மகத்துவத்தை அறிந்து, மகான் ஆகக்கூடிய மற்றும் ஆக்கக்கூடிய. அத்தகைய சிரேஷ்ட செல்வந்தர்கள், சிரேஷ்ட புத்திசாலிகளாகிய குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் நமஸ்தே.

**குமார்களுடன்**: குமார் வாழ்க்கையும் கூட அதிர்ஷ்டசாலி வாழ்க்கை தான். ஏனென்றால் தலைகீழான ஏணியில் ஏறுவதில் இருந்து தப்பித்துக் கொண்டீர்கள். தலைகீழான ஏணியில் ஏறுவதற்கான சங்கல்பம் ஒரு போதும் வருவதில்லை. ஏறுகிறவர்களும் இறங்கிக் கொண்டுள்ளனர். இல்லறவாசிகள் அனைவருமே கூடத் தங்களைக் குமார்-குமாரி எனச் சொல்லிக் கொள்கின்றனர் இல்லையா? ஆக, ஏணியில் இறங்கினார்கள் இல்லையா? ஆகவே சதா தன்னுடைய இந்த சிரேஷ்ட பாக்கியத்தை நினைவில் வையுங்கள். குமார் வாழ்க்கை என்றால் பந்தனங்களில் இருந்து

தப்புவதற்கான வாழ்க்கை. இல்லையென்றால் பாருங்கள், எத்தனை பந்தனங்களில் உள்ளனர்! ஆக, பந்தனங்களில் ஈர்க்கப்படுவதில் இருந்து தப்பித்து விட்டனர். மனதாலும் சுதந்திரம், சம்மந்தத் தாலும் சுதந்திரம். குமார் வாழ்க்கை என்றாலே சுதந்திரமானது. ஒரு போதும் கனவில் கூட சிந்தனை வருவதில்லை --கொஞ்சம் யாராவது சகயோகி கிடைத்து விட வேண்டும், யாராவது துணை கிடைத்து விட வேண்டும். நோயில் உதவி ஆகி விட வேண்டும் --இது போல் எப்போதாவது யோசிக்கிறீர்களா? முற்றிலும் சிந்தனை வருவதில்லையா? குமார் வாழ்க்கை என்றால் சதா பறக்கும் பறவை, பந்தனத்தில் சிக்கிய நிலையில் இல்லை. ஒரு போதும் எந்த ஒரு சங்கல்பமும் வரக் கூடாது. சதா நிர்பந்தனமாகி, தீவிர வேகத்தில் முன்னேறிச் செல்லுங்கள்.

**குமாரிகளுடன்**: குமாரிகளுக்கு சேவையில் முன்னேறுவதற்கான லிஃப்ட் கிடைத்துள்ளது. இந்த லிஃப்ட் தான் உயர்ந்த கிஃப்ட். இந்த கிஃப்ட்டைப் பயன்படுத்துவதற்கு வருகிறது இல்லையா? எவ்வளவு தன்னை சக்திசாலி ஆக்குவீர்களோ, அவ்வளவு சேவையும் கூட சக்திசாலியாகச் செய்வீர்கள் தானே! ஏதாவது விஷயத்தில் பலவீனமாக இருப்பீர்களானால் சேவையும் பலவீன மாக இருக்கும். எனவே சக்திசாலி ஆகி, சக்திசாலி சேவாதாரி ஆகுங்கள். அந்த மாதிரி ஏற்பாடு களைச் செய்து கொண்டே செல்லுங்கள். அப்போது சமயம் வரும் போது வெற்றிப் பூர்வமாக சேவையில் ஈடுபட்டு விடுங்கள் மற்றும் நம்பர் முன்னால் பெற்றுக் கொள்ளுங்கள். இப்போதோ படிப்பிற்காக நேரம் ஒதுக்க வேண்டி உள்ளது. பிறகோ ஒரு வேலை மட்டுமே இருக்கும். எனவே எங்கே இருந்தாலும் பயிற்சி எடுத்துக் கொண்டே இருங்கள். நிமித்தமாகியுள்ள ஆத்மாக்களின் துணையில் ஏற்பாடுகள் செய்து கொண்டே இருங்கள். அப்போது தகுதியுள்ள சேவாதாரி ஆகி விடுவீர்கள். எவ்வளவு முன்னேறிச் செல்கிறீர்களோ, அவ்வளவு தனக்குத் தான் நன்மை.

**சேவாதாரி -டீச்சர் சகோதரிகளுடன்**: சேவாதாரி என்றால் சதா நிமித்தமாக இருப்பவர். நிமித்த உணர்வு சேவையில் தானாகவே வெற்றியை உருவாக்கும். நிமித்த உணர்வு இல்லை என்றால் வெற்றி இல்லை. சதா பாபாவுடைவர்களாக இருந்தீர்கள், பாபாவுடையவர்களாக இருக்கிறீர்கள், இனியும் பாபாவுடையவர்களாகவே இருப்பீர்கள் -அந்த மாதிரி உறுதிமொழி எடுத்துக் கொண்டி ருக்கிறீர்கள் இல்லையா?

சேவாதாரி என்றால் ஒவ்வொரு அடியும் பாபாவின் அடி மீது வைப்பவர்கள். இதைத் தான் தந்தையைப் பின்பற்றுவது எனச் சொல்வது. நீங்கள் ஒவ்வொரு அடியிலும் சிரேஷ்ட வழிப்படி சிரேஷ்டமாக ஆக்குகிற சேவாதாரிகள் தாம் இல்லையா? சேவையில் வெற்றி பெறுவது தான் சேவாதாரியின் சிரேஷ்ட லட்சியம். ஆக, அனைவரும் சிரேஷ்ட லட்சியம் வைப்பவர்கள் தாம் இல்லையா? எவ்வளவு சேவையில் மற்றும் சுயத்தில் வீணானவை முடிந்து போகின்றனவோ, அவ்வளவு தான் சுயம் மற்றும் சேவை சக்திசாலி ஆகின்றது. ஆகவே வீணானவற்றை முடித்து விட்டு சதா சக்திசாலி ஆக வேண்டும். இது தான் சேவாதாரிகளின் சிறப்பு. எவ்வளவு சுயம் நிமித்த மாகியிருக்கும் ஆத்மாக்கள் சக்திசாலியாக இருப்பார்களோ, அவ்வளவு சேவையும் கூட சக்திசாலியாக இருக்கும். சேவாதாரி என்பதன் அர்த்தமே சேவையில் சதா ஊக்கம்-உற்சாகத்தைக் கொண்டு வருவதாகும். சுயம் ஊக்கம்-உற்சாகத்தில் இருப்பவர்கள் மற்றவர்களுக்கு ஊக்கம்-உற்சாகம் கொடுக்க முடியும். ஆகவே சதா பிரத்தியட்ச ரூபத்தில் ஊக்கம்-உற்சாகம் தென்பட வேண்டும். நான் உள்ளேயே இருக்கிறேன், ஆனால் வெளிப்புறத்தில் காணப்படவில்லை என்று அந்த மாதிரி இல்லை. குப்த புருஷார்த்தம் என்பது வேறு பொருள், ஆனால் ஊக்கம்-உற்சாகம் மறைந்திருக்க முடியாது. முகத்தின் மீது சதா ஊக்கம்-உற்சாகத்தின் பொலிவு தானாகவே தென்படும். சொன்னாலும் சரி, சொல்லா விட்டாலும் சரி, முகமே பேசும், முகத்தின் ஜொலிப்பு பேசும். அந்த மாதிரி சேவாதாரி தானே?

சேவைக்கான பொன்னான வாய்ப்பு, இதுவும் சிரேஷ்ட பாக்கியத்தின் அடையாளமாகும். சேவாதாரி ஆவதற்கான பாக்கியமோ கிடைத்து விட்டது. இந்த பாக்கியத்தையும் உருவாக்க வேண்டும் மற்றும் இப்போது நாம் சேவாதாரி நம்பர் ஒன்னா அல்லது நம்பர் டூவா என்பதையும் பார்க்க வேண்டும். ஒரு பாக்கியம் மட்டுமன்று, ஆனால் பாக்கியத்தின் மேல் பாக்கியம் பிராப்தி யாகின்றது. எவ்வளவு பாக்கியத்தை அடையச் செய்து கொண்டே செல்கிறீர்களோ, அவ்வளவு நம்பர் தானாகவே முன்னால் அதிகரித்துக் கொண்டே செல்லும். இதைத் தான் பத்மாபதம் பாக்கியவான் எனச் சொல்வது. ஒரு பாடத்தில் மட்டுமில்லை, அனைத்துப் பாடங்களிலும் வெற்றி சொரூபம். நல்லது.

2. அனைவரிலும் அதிகக் குஷி யாருக்கு உள்ளது? பாபாவுக்கா, உங்களுக்கா? எனக்கு என்று ஏன் நீங்கள் சொல்வதில்லை? துவாபரயுகத்திலிருந்து பக்தியில் அழைத்தீர்கள் மற்றும் இப்போது அடைந்து விட்டீர்கள் என்றால் எவ்வளவு குஷி இருக்கும்! 63 பிறவிகளாக அடைவதற்கான ஆசை இருந்தது மற்றும் 63 பிறவிகளின் ஆசை இப்போது நிறைவடைந்து விட்டது என்றால் குஷி உள்ளது இல்லையா? இந்தக் குஷி தான் உலகத்திற்குக் குஷி கொடுப்பதாகும். நீங்கள் குஷியடைகிறீர்கள் என்றால், முழு உலகமும் குஷி அடைந்து விடுகிறது. அந்த மாதிரி குஷி கிடைத்துள்ளது இல்லையா? எப்போது நீங்கள் மாறுகிறீர்களோ, அப்போது உலகமும் மாறி விடுகிறது. அதுவும் --துக்கம்-அசாந்தியின் பெயர்-அடையாளமே இல்லை என்கிற மாதிரி மாறி விடுகிறது. ஆகவே சதா குஷியில் நடனமாடிக் கொண்டே இருங்கள். சதா தன்னுடைய சிரேஷ்ட கர்மங்களின் கணக்கைச் சேமித்துக் கொண்டே செல்லுங்கள். அனைவர்க்கும் குஷியின் கஜானாவைப் பகிர்ந்தளியுங்கள். இன்றைய உலகத்தில் குஷி இல்லை. அனைவரும் குஷிக்காக யாசிப்பவர்கள் தாம். அவர்களைக் குஷியினால் நிரப்புங்கள். சதா இதே சேவையில் முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். மனச்சோர்வடைந்துள்ள ஆத்மாக்களுக்குள் ஊக்கம்-உற்சாகத்தைக் கொண்டு வந்து கொண்டே இருங்கள். எதையும் செய்ய முடியவில்லை, இது நடக்க முடியாது இது போல் மனச்சோர்வடைந்தவராக அவர்கள் ஆகி விட்டுள்ளனர், ஆனால் நீங்கள் வெற்றியாளர் ஆகி, வெற்றியாளர் ஆக்குவதற்கான ஊக்கம்-உற்சாகத்தை அதிகப் படுத்துபவர்கள். சதா வெற்றியின் ஸ்மிருதி யினுடைய திலகம் அணிந்தவராக இருக்க வேண்டும். திலகதாரியும் கூட, மற்றும் சுயராஜ்ய ஆதிகாரியும் கூட --இதே ஸ்மிருதியில் சதா இருங்கள்.

**கேள்வி: சமீப நட்சத்திரங்களின் லட்சணம் என்னவாக இருக்கும்?**

பதில்: அவர்களிடம் சமநிலை காணப்படும். சமீப நட்சத்திரங்களிடம் பாப்தாதாவின் குணங்கள் மற்றும் காரியம் பிரத்தியட்சமாகக் காணப்படும். எவ்வளவு சமீபமோ, அவ்வளவு சமநிலை இருக்கும். அவர்களின் முகம் பாப்தாதாவின் சாட்சாத்காரம் செய்விக்கும் கண்ணாடியாக இருக்கும். அவர்களைப் பார்த்ததுமே பாப்தாதாவின் அறிமுகம் கிடைத்து விடும். உங்களைப் பார்க்கும் போது அவர்களுக்குக் கவர்ச்சி பாப்தாதாவின் பக்கம் இருக்கும். மகன் தந்தையை எடுத்துக் காட்டுவான் எனச் சொல்லப் படுவது இது தான். நீங்கள் யார் மீது அன்பு வைத்தாலும் அதன் முத்திரையானது

நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் காணப்படும். எவ்வளவு புன்சிரித்த மூர்த்தியோ, அவ்வளவு கவர்ச்சி மூர்த்தி ஆகி விடுவீர்கள். நல்லது.

**வரதானம்: சேவையின் மூலம் அநேக ஆத்மாக்களின் ஆசீர்வாதம் பெற்று, சதா முன்னேறக்கூடிய மகாதானி ஆகுக!**

மகாதானி ஆவது என்றால், மற்றவர்களுக்கு சேவை செய்வது. மற்றவர்களுக்கு சேவை செய்தால் தன்னுடைய சேவை தானாகவே நடந்து விடுகிறது. மகாதானி ஆவது என்றால் தன்னைப் பெரும் செல்வந்தர் ஆக்கிக் கொள்வது. எவ்வளவு ஆத்மாக்களுக்கு சுகம், சாந்தி மற்றும் ஞானத்தின் தானம் செய்வீர்களோ, அந்த அளவு ஆத்மாக்களின் பிராப்தியின் சப்தம் அல்லது நன்றி வெளிப்படுகிறது. அது உங்களுக்கு ஆசிர்வாதத்தின் ரூபம் ஆகி விடும். இந்த ஆசீர்வாதங்கள் தாம் முன்னேறுவதற்கான சாதனமாகும். யாருக்கு ஆசீர்வாதங்கள் கிடைக்கின்றனவோ, அவர்கள் சதா குஷியாக இருப்பார்கள். ஆகவே தினந்தோறும் அமிர்தவேளையில் மகாதானி ஆவதற்கான திட்டத்தை உருவாக்குங்கள். தானம் செய்யாத நேரம் அல்லது நாள் என்று எதுவும் இருக்கக் கூடாது.

**சுலோகன்: இப்போதைய பிரத்தியட்ச பலன், ஆத்மாவுக்கு பறக்கும் கலையின் பலனைக் கொடுக்கும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 18.01.1986 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மனதின் சக்தி மற்றும் பயமற்ற நிலையின் சக்தி!

இன்று விருட்சபதி தன்னுடைய புதிய விருட்சத்தின் அஸ்திவாரமான குழந்தைகளைப் பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள். விருட்சபதி தன்னுடைய விருட்சத்தின் அடிமரத்தைப் பார்த்துக் கொண்டு இருக்கின்றார். விருட்ச பதியின் பாலனையில் வளர்ந்திருக்கும் சிரேஷ்ட மான பலன் சொரூபமான அனைத்து குழந்தைகளையும் பார்த்துக் கொண்டு இருக்கின்றார். ஆதிதேவன் தனது ஆதி இரத்தினங்களைப் பார்த்துக் கொண்டு இருக்கின்றார். ஒவ்வொரு இரத்தினத்தின் மகான்தன்மை, விஷேத்தன்மை வெவ்வேறானது ஆனால், அனைவரும் புதிய படைப்பிற்கு நிமித்தமாகி இருக்கும் விசேஷஆத்மாக்கள் ஆவீர்கள். ஏனெனில், தந்தையை அறிந்து கொள்வது, தந்தையின் காரியத்தில் சகயோகி ஆவதில் நிமித்தமாகியிருக்கிறீர்கள் மற்றும் அனேகருக்கு முன்னால் உதாரணம் ஆகியிருக்கிறீர்கள். உலகத்தைப் பார்க்காமல், புது உலகத்தைப் படைக்கக் கூடியவரைப் பார்த்தீர்கள். உலகத்திற்கு முன் உறுதியான நம்பிக்கை மற்றும் தைரியத்தின் சான்றாக ஆகி க்காட்டுவீர்கள், ஆகையினால், அனைவரும் விசேஷ ஆத்மாக்கள் ஆவீர்கள். விசேஷ ஆத்மாக்களை விசேஷமான ரூபத்தில் குழுவாகப் பார்த்து, பாப்தாதாவும் மகிழ்ச்சி அடைகின்றார்கள் மற்றும் அத்தகைய குழந்தைகளின் மகிமையின் பாடல் பாடுகின்றார்கள். தந்தையை அறிந்துகொண்டீர்கள், மேலும், தந்தை நீங்கள் யாராக இருந்தாலும், எப்பேற்பட்டவர்களாக இருந்தாலும் உங்களை விரும்பியிருக்கின்றார். ஏனெனில், சத்தியமான உள்ளம் உடையவர்களே திலாராமிற்கு விருப்பமானவர்கள் ஆவார்கள். உலகத்தின் புத்திசாலித்தனம் இல்லாமலும் கூட இருக்கலாம், ஆனால், தந்தைக்கு உலகீய புத்திசாலித்தனம் கொண்டவர்கள் விருப்பமானவர்கள் அல்ல, பாவனையான உள்ளம் உடையவர்களே விருப்பமானவர்கள் ஆவார்கள். புத்தியோ தந்தை அவ்வளவு பெரியதாகக் கொடுக்கின்றார், அதன் மூலம் படைப்பாளரை அறிந்துகொள்வதனால் படைப்பின் முதல், இடை, கடை

பற்றிய ஞானத்தை அறிந்து விடுகிறீர்கள். ஆகையினால், பாப்தாதா உள்ளத்திலிருந்து விரும்புகின்றார்கள். சத்தியமான தூய்மையான உள்ளத்தின் ஆதாரத்தினால் நம்பரும் உருவாகிறது, சேவையின் ஆதாரத்தினால் அல்ல. சேவையில் கூட சத்தியமான உள்ளத்தோடு சேவை செய்வீர்களா அல்லது வெறும் புத்தியின் ஆதாரத்தில் சேவை செய்வீர்களா? உள்ளத்தின் சப்தம் உள்ளம் வரை சென்ற டைகிறது, புத்தியின் சப்தம் புத்தி வரை சென்றடைகிறது.

இன்று பாப்தாதா உள்ளம் உடையவர்களின் பட்டியலைப் பார்த்துக் கொண்டு இருந்தார்கள். புத்தி உடையவர்கள் பெயரை சம்பாதிக்கின்றனர், உள்ளம் உடையவர்கள் ஆசீர்வாதங்களை சம்பாதிக்கின்றனர். எனவே, இரண்டு மாலைகள் உருவாகிக் கொண்டிருந்தன. ஏனெனில், இன்று வதனத்தில் அட்வான்ஸாக சென்றிருக்கும் ஆத்மாக்கள் எமர்ஜ் ஆகியிருந்தார்கள். அந்த விசேஷ ஆத்மாக்கள் உரையாடல் செய்துகொண்டிருந்தார்கள். முக்கியமாக என்ன உரையாடல் நடக்கும்? நீங்கள் அனைவரும் கூட விசேஷ ஆத்மாக்களை எமர்ஜ் செய்து விட்டீர்கள் அல்லவா. சமயம் மற்றும் சம்பூரண நிலை ஆகிய இரண்டிற்கும் எவ்வளவு வித்தியாசம் உள்ளது? எத்தனை நம்பர் தயாராகி உள்ளன? நம்பர் தயாராகி விட்டதா அல்லது இப்பொழுது தயாராக வேண்டுமா என்ற உரையாடல் வதனத்திலும் நடந்து கொண்டிருந்தது. வரிசைக்கிரமமாக அனைவரும் மேடைக்கு வந்து கொண்டிருக்கின்றார்கள் அல்லவா. இப்பொழுது நாங்களோ அட்வான்ஸ் காரியம் (முன்னேற்பாடு) செய்து கொண்டிருக்கின்றோம், ஆனால், நம்முடைய துணையானவர்கள் நம்முடைய காரியத்தில் விசேஷமாக என்ன சகயோகம் கொடுத்துக் கொண்டு இருக்கின்றார்கள்? என்று அட்வான்ஸ் பார்ட்டியில் சென்றவர்கள் கேட்டுக் கொண்டு இருந்தார்கள். அவர்களும் மாலையை உருவாக்கிக் கொண்டு இருக்கின்றார்கள். என்ன மாலையை உருவாக்கிக் கொண்டு இருக்கின்றார்கள்? எங்கெங்கு யார் யார் புது உலகத்தின் ஆரம்ப காரியத்திற்காகப் பிறப்பெடுப்பார்கள். இது நிச்சயம் செய்யப்பட்டுக் கொண்டு இருக்கின்றது. அவர்களுக்கும் கூட அவர்களுடைய காரியத்தில் சூட்சுமமான சக்திசாலியான மனதினுடைய விசேஷ சகயோகம் தேவைப்படுகிறது. யார் சக்திசாலியான ஸ்தாபனைக்கு நிமித்தமாகியிருக்கக்கூடிய ஆத்மாக்களோ, அவர்கள் சுயம் பாவனமாக இருக்கின்றார்கள், ஆனால், மனிதர் களுடைய, இயற்கையினுடைய

வாயுமண்டலம் தமோகுணமாக உள்ளது. அதிக தமோகுணத்திற்கு நடுவில் குறைவான சதோகுணமான ஆத்மாக்கள் தாமரை மலருக்குச் சமமானவர்கள். ஆகையினால், இன்று, நம்முடைய துணையானவர்களுக்கு இவ்வளவு பெரிய சேவையின் நினைவு உள்ளதா அல்லது சென்டர்களிலேயே பிஸியாக ஆகி விட்டனரா அல்லது ஜோனில் (மண்டலம்) பிஸியாகி விட்டனரா என்ன? என்று உரையாடல் செய்துகொண்டே உங்களுடைய மிகவும் அன்பான சிரேஷ்ட ஆத்மாக்கள் புன்னகைத்துக் கொண்டே பேசிக் கொண்டு இருந்தார்கள்.

இவ்வளவு பெரிய இயற்கையின் மாற்றத்திற்கான காரியம், தமோகுண சமஸ்காரம் உடைய இத்தனை ஆத்மாக்களின் விநாசம் ஏதோ ஒரு விதி மூலம் நடந்தேறும் ஆனால், திடீரென ஏற்படும் மரணம், அகால மரணம், மொத்தமான மரணம் ஏற்படும்பொழுது அந்த ஆத்மாக்களின் அதிர்வலைகள் (வைப்பிரேசன்) எவ்வளவு தமோகுணமானதாக இருக்கும்! அதை பரிவர்த்தனை செய்வது மற்றும் தன்னையும் கூட அத்தகைய இரத்த வெள்ள வாயுமண்டலத்தின் வைப்பிரேசனில் இருந்து பாதுகாப்பது மற்றும் அந்த ஆத்மாக்களுக்கு சகயோகம் கொடுப்பது ஆகி ய இந்த விசாலமான காரியத்திற்காக தயாராகிக் கொண்டு இருக்கிறீர்களா என்ன? அல்லது யாரோ வந்தார்கள், புரிய வைத்தோம் மற்றும் சாப்பிட்டோம், இதிலேயே சமயம் செல்லவில்லை தானே? இதைப் பற்றி கேட்டுக் கொண்டு இருந்தார்கள். இன்று பாப்தாதா அவர்களுடைய செய்தியைக் கூறிக் கொண்டு இருக்கின்றார்கள். இத்தகைய எல்லையற்ற காரியத்தை செய்வதற்கு நிமித்தமானவர்கள் யார்? ஆதியில் நிமித்தமாகி இருக்கிறீர்கள் எனில், இறுதியிலும் கூட பரிவர்த்தனையின் எல்லையற்ற காரியத்தில் நிமித்தம் ஆக வேண்டும் அல்லவா? யார் முடித்து வைத்தார்களோ அவர்கள் அனைத்தையும் செய்தார்கள் என்ற பழமொழி கூட உள்ளது. கர்ப்ப மாளிகையையும் தயார் செய்ய வேண்டும், அப்பொழுதே புதிய படைப்பினுடைய, யோகபலத்தினுடைய ஆரம்பம் ஆகும். யோகபலத்திற்காக மனதின் சக்தி அவசியமானதாக உள்ளது. தன்னுடைய பாதுகாப்பிற்காகக் கூட மனதின் சக்தியே சாதனமாக ஆகும். மனதின் சக்தி மூலமே தன்னுடைய இறுதி நேரத்தை அழகானதாக ஆக்குவதற்கு நிமித்தம் ஆக முடியும். இல்லையெனில், சாகாரமான சகயோகம் தக்க சமயத்தில் சூழ்நிலையின் அனுசாரம் கிடைக்க முடியாமலும் போகலாம். அந்த சமயத்தில் மனதின் சக்தி அதாவது சிரேஷ்ட சங்கல்ப சக்தி, ஒருவருடன்

லைன் (தொடர்பு) கிளியராக இல்லையெனில், தன்னுடைய பலவீனங்கள் பட்சாதாப ரூபத்தில் பூதங்கள் போன்று அனுபவம் ஆகும். ஏனெனில், பலவீனங்கள் நினைவில் வருவதனால் பயமானது பூதம் போல் அனுபவம் ஆகும். இப்பொழுது எப்படியோ சமாளித்து விடுகிறீர்கள், ஆனால், இறுதியில் பயம் அனுபவம் ஆகும். ஆகையினால், இப்பொழுதிலிருந்தே எல்லையற்ற சேவைக்காக, தன்னுடைய பாதுகாப்பிற்காக மனதின் சக்தி மற்றும் பயமற்ற நிலையின் சக்தியை சேமிப்பு செய்யுங்கள். அப்பொழுதே இறுதி நேரம் அழகானதாகவும் ஆகி மற்றும் எல்லையற்ற காரியத்தில் சகயோகியாகவும் ஆகி எல்லையற்ற விஷ்வ இராஜ்யத்தின் அதிகாரி யாக ஆகுவீர்கள். இப்பொழுது உங்களுடைய துணையானவர்கள், உங்களுடைய சகயோகத்திற் காகக் காத்துக் கொண்டு இருக்கின்றார்கள். காரியம் வெவ்வேறாக இருக்கலாம், ஆனால், பரிவர்த்தனைக்கு இருவருமே நிமித்தமானவர்கள் ஆவீர்கள். அவர்கள் தங்களுடைய ரிசல்ட்டை கூறிக் கொண்டு இருந்தார்கள்.

அட்வான்ஸ் பார்ட்டியைச் சேர்ந்த சிலர் சுயம் சிரேஷ்ட ஆத்மாக்களை வரவேற்பதற்காக காத்திருந்தார்கள் மற்றும் காத்துக் கொண்டு இருக்கின்றார்கள், சிலர் தயார் செய்வதில் ஈடுபட்டு இருக்கின்றார்கள். நட்பு மற்றும் நெருக்கமான சம்பந்தமே அவர்களுடைய சேவைக்கான சாதனம் ஆகும். இதன் மூலம் வெளிப்படையான ரூபத்தில் ஞானத்தின் உரையாடல் செய்ய மாட்டார்கள், ஆனால், ஞான சொரூப ஆத்மா என்ற சம்ஸ்காரம் இருக்கும் காரணத்தினால் ஒருவருக் கொருவர் சிரேஷ்ட சம்ஸ்காரம், சிரேஷ்ட வைப்பிரேசன் மற்றும் சதா தூய்மையான மற்றும் மகிழ்ச்சியான முகம் ஒருவருக் கொருவர் தூண்டுதலை கொடுக்கக்கூடிய காரியத்தை செய்துகொண்டு இருக்கிறது. வெவ்வேறு குடும்பத்தில் உள்ளனர், ஆனால், ஏதாவது சம்பந்தம் அல்லது நட்பின் ஆதாரத்தில் ஒருவருக் கொருவர் தொடர்பில் வருவதனால், ஞானம் நிறைந்த ஆத்மாக்களாக இருக்கும் காரணத்தினால் இவர்கள் என்னுடையவர்கள் மற்றும் நெருக்கமான வர்கள் என்ற அனுபவம் ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது. தன்னுடையவர் என்ற ஆதாரத்தினால் ஒருவரை ஒருவர் அறிந்துள்ளார்கள். இப்பொழுது சமயம் நெருக்கத்தில் வந்து கொண்டிருக் கிறது, ஆகையினால், அட்வான்ஸ் பார்ட்டியின் காரியம் தீவிர வேகத்தில் நடந்து கொண்டிருக்கிறது. இத்தகைய கொடுக்கல் வாங்கல் வதனத்தில் நடந்து கொண்டிருந்தது. விசேஷமாக ஜெகதம்பா அனைத்து குழந்கைளுக்காகவும் இரண்டு

இனிமையான வார்த்தைகளை கூறிக் கொண்டு இருந்தார்கள். வெற்றிக்கான ஆதாரம் சதா பொறுமை சக்தி மற்றும் கரைக்கும் சக்தி, இந்த விசேஷத்தன்மைகள் மூலம் வெற்றியானது சதா சகஜமானதாக மற்றும் சிரேஷ்ட மானதாக அனுபவம் ஆகும் என்ற இரண்டு வார்த்தைகளில் அனைவருக்கும் நினைவை ஏற்படுத்தினார்கள். பிறருடையதையும் கூறவா என்ன? இன்று சந்தித்து உரையாடும் தினமாக, விசேஷமான சந்திப்பிற்கான நாளாக இருந்ததனால் ஒவ்வொருவரும் தன்னுடைய அனுபவத்தை வர்ணனை செய்து கொண்டிருந்தார்கள். நல்லது, வேறு யாருடையதை கேட்க விரும்புகிறீர்கள்? (விஷ்வ கிஷோர் சகோதரருடைய உரையாடல்) அவர் எப்பொழுதும் குறைவாகப் பேசுவார், ஆனால், என்ன பேசுகிறாரோ சக்திசாலியாக பேசுவார். அவருடைய பேச்சிலும் கூட ஒரே வார்த்தையில் முழு அனுபவமும் இருந்தது, அதாவது, எந்த ஒரு காரியத்திலும் வெற்றிக்கான ஆதாரம் உறுதியான நம்பிக்கை மற்றும் முழுமையான போதை என்று கூறினார். ஒருவேளை, நம்பிக்கை உறுதியாக இறுக்கிறது எனில், பிறருக்கும் கூட தானாகவே போதை அனுபவம் ஆகும். ஆகையினால், நம்பிக்கை மற்றும் போதை வெற்றிக்கான ஆதாரமாக இருந்தது. இது அவருடைய அனுபவம் ஆகும். எவ்வாறு சாகார தந்தைக்கு, நான் வருங்காலத்தின் விஷ்வ மகாராஜனாக ஆகியே ஆகி விட்டேன் என்ற நம்பிக்கை மற்றும் போதை சதா இருந்ததோ, அவ்வாறு விஷ்வ கிஷோர் சகோதரருக்கும் கூட, நான் முதல் விஷ்வ மகாராஜனுடைய முதல் இளவரசன் ஆவேன் என்ற போதை இருந்தது. நிகழ்கால மற்றும் எதிர்காலத்தினுடைய இந்த போதை உறுதியானதாக இருந்தது. எனவே, சமநிலை வந்து விட்டது அல்லவா? யார் அவருடன் இருந்தீர்களோ, அவர்கள் அவரை அப்படிப் பார்த்தீர்கள் அல்லவா.

நல்லது, தீதி என்ன கூறினார்கள்? தீதி மிகவும் நன்றாக உரையாடல் செய்து கொண்டிருந்தார்கள். நீங்கள் அனைவரையும் எந்த அறிவிப்பும் இல்லாமல் ஏன் அழைத்து விட்டீர்கள்? விடை பெற்று வந்திருப்போம் அல்லவா ஒருவேளை, நீங்கள் கூறியிருந்தால் நாங்கள் விடைபெற்றுக் கொண்டு தயாராக இருந்திருப்போம் என்று கூறினார்கள். நீங்கள் விடைகொடுத்தீர்களா? பாப்தாதா குழந்தைகளுடன் உரையாடல் செய்து கொண்டிருந்தார்கள். தேக சகிதம் தேகத்தின் சம்பந்தம், தேகத்தின் சம்ஸ்காரம், அனைவருடைய சம்பந்தமும் லௌகீகமானதாக இல்லை யென்றாலும் அலௌகீகமான சம்பந்தம் உள்ளது. அலௌகீக சம்பந்தத்தில்

இருந்து, தேகத்திலிருந்து, சம்ஸ்காரத்திலிருந்து நஷ்டமோஹா ஆவதற்கான விதியாக இதுவே நாடகத்தில் பதிவாகி இருக்கிறது. ஆகையினால், இறுதியில் அனைத்திலிருந்தும் நஷ்டமோஹா ஆகி தன்னுடைய வேலைக்காக வந்தடைந்து விட்டார்கள். விஷ்வ கிஷோருக்குக் கொஞ்சம் முன்னரே தெரிந்திருந்தது, ஆனால், எந்த சமயம் செல்வதற்கான சமயமாக இருந்ததோ, அந்த சமயத்தில் அவரும் மறந்து விட்டார். இது கூட நாடகத்தில் நஷ்டமோஹா ஆவதற்கான விதியாகப் பதிவாகி இருந்தது, அதுவே திரும்ப நடந்தது. ஏனெனில், கொஞ்சம் தனது முயற்சி இருந்தது மற்றும் கொஞ்சம் தந்தை, நாடகத்தின் அனுசாரம் கர்மபந்தனத்தில் இருந்து விடுபட்டவராக ஆக்குவதில் சகயோகமும் கொடுக்கின்றார். யார் நீண்ட கால சகயோகி குழந்தைகளாக இருக்கின்றார்களோ, ஒரு தந்தையைத் தவிர வேறு எவரும் இல்லை என்ற இந்த முக்கியமான பாடத்தில் பாஸ் ஆகி இருக்கின்றார்களோ, இவ்வாறு ஒரு அனுபவம் செய்யக்கூடியவர்களுக்கு தந்தை அத்தகைய சமயத்தில் விசேஷமாக ஒரு சகயோகம் கண்டிப்பாகக் கொடுக்கின்றார். இவர்கள் அனைவரும் கர்மாதீத நிலையை அடைந்து விட்டார்களா என்ன? என்று சிலர் யோசிக்கின்றனர். இதுவே கர்மாதீத நிலையாகும் ஆனால், அத்தகைய ஆரம்பத்திலிருந்து சகயோகியாக இருக்கும் குழந்தைகளுக்கு அதிகப்படியான சகயோகம் கிடைக்கிறது. ஆகையினால், கொஞ்சம் தனது முயற்சி குறைவாக இருக்கிறது என்றாலும் தந்தையின் உதவி அந்த சமயத்தில் இறுதியில் அதிகப்படியான மதிப்பெண்கள் கொடுத்து மதிப்புடன் தேர்ச்சி பெற்றவராக ஆக்கி விடுகின்றது. அது குப்தமாக நடக்கின்றது. ஆகையினாலேயே என்ன இப்படி ஆகி விட்டது என்ற கேள்வி எழுகின்றது ஆனால், இது சகயோகத்தின் கைமாறாகும். இறுதி நேரத்தில் பயன்படும் என்று சொல்லப்படுகிறது அல்லவா? எனவே, யார் உள்ளத்தால் சகயோகியாக இருந்திருக்கிறார்களோ, அவர்களுக்கு அத்தகைய சமயத்தில் அதிகப்படியான மதிப்பெண்கள் கைம்மாறாகக் கிடைக் கின்றது. இந்த இரகசியத்தைப் புரிந்து கொண்டீர்களா? ஆகையினால், நஷ்டமோஹா நிலை யின் விதி மூலம், அதிகப் படியான மதிப்பெண்கள் என்ற பரிசு மூலம் வெற்றியைப் பிராப்தியாக அடைந்து விட்டீர்கள். புரிந்ததா -முடிவு என்ன என்று கேட்டுக் கொண்டு இருந்தீர்கள் அல்லவா? அதை இன்று இந்த உரையாடலில் கூறிக் கொண்டு இருக்கின்றார்கள் நல்லது, தீதி என்ன கூறினார்கள்? அவர்களுடைய அனுபவத்தையோ அனைவரும் அறிந்திருக்கிறீர்கள். சதா தந்தை மற்றும் தாதாவின் விரலைப் பிடித்துக்

கொள்ளுங்கள் அல்லது விரல் கொடுங்கள். ஒன்று குழந்தையாக்கி விரலைப் பிடியுங்கள் அல்லது தந்தையாக்கி உங்கள் விரலைக் கொடுங்கள் என்ற வார்த்தைகளைக் கூறிக் கொண்டு இருந்தார்கள். இரண்டு ரூபத்தினால் ஒவ்வொரு அடியிலும் விரலைப் பிடித்துக் கொண்டு துணையின் அனுபவத்தை செய்துகொண்டே செல்ல வேண்டும். இதுவே என்னுடைய வெற்றிக்கான ஆதாரம் ஆகும். இந்த விசேஷ உரையாடலே நடந்தது. ஆதி இரத்தினங்களினுடைய குழுவில் அவர்கள் (தீதி) எவ்வாறு வராமல் போவார்கள்? ஆகையினால், அவர்களும் எமர்ஜ் ஆகியிருந்தார்கள். நல்லது. இதுவே அட்வான்ஸ் பார்ட்டியினுடைய விசயங்கள் ஆகும், நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

அட்வான்ஸ் பார்ட்டி தன்னுடைய வேலையை செய்து கொண்டிருக்கிறது. நீங்கள் அட்வான்ஸ் போர்ஸை (சக்தி) நிறைத்திடுங்கள். இதன் மூலம் பரிவர்த்தனை (மாற்றம்) செய்யும் காரியத்தினுடைய கோர்ஸ் முடிவடைந்து விடவேண்டும். ஏனெனில், அஸ்திவாரம் ஆவீர்கள். அஸ்திவாரமே எல்லையற்ற சேவாதாரியாகி எல்லையற்ற தந்தையைப் பிரத்யட்சம் செய்வார்கள். விரைவில் இந்த சிருஷ்டியில் பிரத்யட்சதாவின் பறைசாற்றப்படுவதைக் கேட்பீர்கள். கிடைத்து விட்டார், வந்து விட்டார் என்ற இந்த ஒரே முழக்கம், ஒரே இசையில் நாலாபுறங்களில் இருந்தும் முழங்கும். இப்பொழுதோ அதிக வேலை உள்ளது. முடிந்து கொண்டிருக்கிறது என்று நீங்கள் நினைத்துக் கொண்டு இருக்கிறீர்கள். இப்பொழுதோ பேச்சு மூலம் மாற்றம் செய்வதற்கான காரியம் நடந்து கொண்டிருக்கிறது. இப்பொழுது விருத்தி மூலம் விருத்திகள் மாற வேண்டும், சங்கல்பத்தின் மூலம் சங்கல்பம் மாற வேண்டும். இப்பொழுது இந்த ஆராய்ச்சியை ஆரம்பிக்கக் கூட இல்லை. கொஞ்சம் கொஞ்சம் செய்துள்ளீர்கள், அதனால் என்ன கிடைத்தது? இந்த சூட்சும சேவை தானாகவே சில பலவீனங்களில் இருந்து விடுவித்து விடும். இது எவ்வாறு நடக்கும் என்று நினைக்கின்றீர்கள். அது எப்பொழுது இந்த சேவையில் பிஸியாக இருப்பீர்களோ, அப்பொழுது தன்னுடைய பலவீனங்கள் தனக்கே தெளிவாக அனுபவம் ஆகும்படி தானாகவே வாயுமண்டலம் உருவாகும். மேலும், வாயுமண்டலத்தின் காரணத்தினால் சுயம் தானே வெட்கப் பட்டு மாற்றம் அடைந்து விடுவார்கள். சொல்ல வேண்டியது இருக்காது. சொல்வதன் பலனைப் பார்த்தாகி விட்டது, ஆகையினால், இப்பொழுது இதற்கான திட்டத்தை உருவாக்குங்கள். மாணவர்கள் இன்னும் அதிகமாக ஆவார்கள், அதைப் பற்றிய கவலை

கொள்ளாதீர்கள் பண்டாரா (உண்டியல்) வரவும் அதிகமாக அதிகரிக்கும், அதைப் பற்றிய கவலையும் கொள்ளாதீர்கள். வீடும் கிடைத்து விடும், அதைப் பற்றியும் கவலை கொள்ளாதீர்கள். அனைத்தும் கிடைத்து விடும். இந்த விதி அத்தகையது, இதன் மூலம் வெற்றி சொரூபம் ஆகி விடுவீர்கள். நல்லது.

சக்திகள் அதிகமானோர் உள்ளனர், ஆதியில் அதிகமான சக்திகளே நிமித்தமாக ஆனார்கள். பொன் விழாவிலும் கூட அதிகமாக சக்திகளே இருந்தனர். பாண்டவர்கள் குறைவான எண்ணிக்கையே உள்ளனர். ஆனாலும் பாண்டவர்கள் ஆவார்கள். நல்லது, தைரியத்துடன் ஆரம்பத்தில் பொறுத்துக் கொண்டதன் சான்று இந்த ஆதி இரத்தினங்களே ஆவார்கள். தடை களை அழிப்பவர்கள் ஆகி, நிமித்தம் ஆகி, நிமித்தம் ஆக்கும் காரியத்தில் அமரர்களாக இருந்தீர்கள். ஆகையினால், பாப்தாதாவிற்கும் கூட அழிவற்ற, அமர்பவ என்ற வரதானி குழந்தைகள் சதா பிரியமானவர்கள் ஆவார்கள். மேலும், இந்த ஆதி இரத்தினங்கள் ஸ்தாபனையினுடைய, அவசியமான நேரத்தினுடைய சகயோகிகள் ஆவார்கள். ஆகையினால், அத்தகைய நிமித்தம் ஆகக்கூடிய ஆத்மாக்களுக்கு, இறுதி நேரத்தில் சகயோகி ஆகக்கூடிய ஆத்மாக்களுக்கு, எந்தவொரு கடினமான நேரம் வந்தாலும் பாப்தாதாவும் அவர்களுக்கு அதற்கான கைம்மாறு செய்கின்றார்கள். ஆகையினால், நீங்கள் அனைவரும், யாரெல்லாம் அத்தகைய சமயத்தில் நிமித்தம் ஆக ஆகியிருக்கிறீர்களோ, அவர்களுக்கு இந்த அதிகப்படியான பரிசானது நாடகத்தில் பதிவாகி உள்ளது. ஆகையினால், அதிகப்படியான பரிசின் அதிகாரி ஆவீர்கள்.

புரிந்ததா -தாய்மார்களின் துளித் துளியான பங்கேற்பினால் ஸ்தாபனை காரியம் ஆரம்பம் ஆனது மற்றும் இப்பொழுது வெற்றியின் அருகாமையில் வந்தே வந்து விட்டீர்கள். மாதாக்களினுடையது உள்ளத்தின் வருமானம் ஆகும், தொழிலின் வருமானம் அல்ல. உள்ளத்தின் வருமானம் ஓராயிரத்திற்கு சமமானது. அன்பின் விதை விதைத்து விட்டீர்கள். ஆகையினால், அன்பின் விதைக்கான பலன் கிடைத்துக் கொண்டு இருக்கின்றது, பாண்டவர்களும் உடன் இருக்கின்றார்கள். பாண்டவர்கள் இல்லாமல் எந்த காரியமும் நடைபெறாது ஆனால், அதிகமான எண்ணிக்கை சக்திகளுடையதே. ஆகையினால், 5-பாண்டவர்கள் என்று எழுதி இருக்கின்றனர். ஆனாலும், இல்லறத்தை பராமரித்துக் கொண்டே பற்றற்றவர் ஆகி, தந்தைக்கு அன்பானவர் ஆகி தைரியம் மற்றும்

ஊக்கத்தினுடைய சான்று கொடுத்திருக்கின்றீர்கள், ஆகையினால், பாண்டவர்களும் குறைந்தவர்கள் அல்ல. சக்திகளின் சர்வசக்திவான் என்ற மகிமை பாடப்பட்டுள்ளது, அவ்வாறே பாண்டவர்களின் பாண்டவபதி என்றும் மகிமை பாடப்பட்டுள்ளது. ஆகையினால், எவ்வாறு நிமித்தம் ஆகியிருக்கிறீர்களோ, அந்த நிமித்த உணர்வை சதா நினைவில் வைத்து முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். நல்லது.

சதா பத்மாபதம் பாக்கியத்தின் அதிகாரி, சதா வெற்றியின் அதிகாரி, சதா தன்னை சிரேஷ்ட ஆதாரமூர்த்தி எனப் புரிந்து அனைவரையும் முன்னேற்றக் கூடிய சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**வரதானம்: அனுபவங்களின் ஆழத்தின் ஆராய்ச்சிக்கூடத்தில் இருந்து புதிய ஆராய்ச்சி செய்யக்கூடிய உள்நோக்கு முகமுடையவர் ஆகுக!**

எப்பொழுது தனக்குள், முதலில், அனைத்து அனுபவங்களும் பிரத்யட்சம் ஆகுமோ, அப்பொழுதே பிரத்யட்சதா ஏற்படும். இதற்காக உள்நோக்கு முகமுடையவர் ஆகி நினைவு யாத்திரை மற்றும் ஒவ்வொரு பிராப்தியின் ஆழத்தில் சென்று ஆராய்ச்சி செய்யுங்கள், சங்கல்பத்தைக் கொண்டு வாருங்கள் மற்றும் பிறகு, என்ன சங்கல்பம் செய்தீர்களோ அது வெற்றி அடைந்ததா இல்லையா? என்று அதன் விளைவு மற்றும் வெற்றியைப் பாருங்கள். இவ்வாறு அனுபவங்களினுடைய ஆழத்தின் ஆராய்ச்சிக்கூடத்தில் இருங்கள், இவர்கள் அனைவரும் ஏதோ ஒரு விசேஷ அன்பில் ஈடுபாட்டில் மூழ்கி இந்த உலகத்தில் இருந்து விடுபட்டு இருக்கிறார்கள் என்ற உணர்வு பிறருக்கு ஏற்பட வேண்டும். கர்மம் செய்துகொண்டே யோகத்தின் சக்திசாலியான நிலையில் இருப்பதற்கான பயிற்சியை அதிகரித்திடுங்கள். எவ்வாறு பேச்சில் வருவதற்கான பயிற்சி உள்ளதோ, அவ்வாறு ஆன்மிகத்தன்மையில் இருப்பதற்கான பயிற்சியை ஏற்படுத்துங்கள்.

**சுலோகன்: திருப்தி என்ற ஆசனத்தில் அமர்ந்துகொண்டு சூழ்நிலைகளின் விளையாட்டைப் பார்க்கக்கூடியவர்களே திருப்திமணி ஆவார்கள்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 20.01.1986 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# முயற்சி மற்றும் மாற்றத்தின் பொன்னான வாய்ப்பிற்கான ஆண்டு!

இன்று சக்திசாலி பாபா தனது சக்திசாலியான குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். இந்த சக்திசாலியான ஆத்மாக்கள் அனைத்திலும் பெரியதிலும் பெரிய சக்திசாலியான காரியமான உலகைப் புதியதாக, சிரேஷ்ட உலகமாக ஆக்குவதற்காக திடசங்கல்பம் செய்துள்ளனர். ஒவ்வொரு ஆத்மாவையும் அமைதி மற்றும் சுகமானவர் ஆக்குவதற்கான சக்திசாலி யான காரியத்தை செய்வதற்கான சங்கல்பம் செய்துள்ளனர், மேலும் இதே சிரேஷ்ட சங்கல்பத்தை எடுத்து கொண்டு, உறுதியான நம்பிக்கை புத்தியுடைவராகி காரியத்தை வெளிப்படையான ரூபத்தில் கொண்டு வந்து கொண்டிருக்கின்றனர். அனைத்து சக்திசாலியான குழந்தைகளுக்கு இந்த சிரேஷ்ட காரியம் ஆகியே தீர வேண்டுமென்ற ஒரே ஒரு சிரேஷ்ட எண்ணம் தான் இருக்கிறது, இதையும் விட இந்த காரியம் ஏற்கனவே நடந்தேறியிருக்கிறது என்ற நம்பிக்கை அதிகமாக இருக்கிறது. கர்மம் மற்றும் பலனின், முயற்சி மற்றும் பலனின், நிமித்தம் மற்றும் பணிவின், கர்ம தத்துவத்தின் அனுசாரம் நிமித்தமாகி மட்டும் காரியம் செய்து கொண்டிருக்கின்றனர். விதி அசைக்க முடியாதது ஆனால் சிரேஷ்டமான உங்களது பாவனையின் மூலமாக மட்டுமே, பாவனைக் கான பலன் அழிவற்றதாக பிராப்தி செய்வதற்கு நிமித்தமாகியிருக்கின்றன. உலகிலுள்ள அஞ்ஞான ஆத்மாக்கள் அமைதி ஏற்படுமா? என்ன ஆகுமோ? எப்படி ஆகுமோ? என்று யோசிக்கின்றனர். எந்த ஒரு நம்பிக்கையும் தென்படவில்லை, உண்மையிலேயே ஆகுமா! மேலும் நீங்கள் சொல்கிறீர்கள் -ஆகுமா என்பது என்ன! ஏற்கனவே ஆகியே இருக்கிறது, ஏனெனில் புதிய விஷயமில்லை, அநேக முறை ஆகியிருக்கிறது, மேலும் இப்பொழுதும் ஆகியே தீரும். நம்பிக்கை புத்தி கவலையற்றது என்ற விதியைத் தெரிந்திருக்கிறீர்கள். இவ்வளவு அசைக்க முடியாத நம்பிக்கை ஏன்? ஏனெனில் சுயமாற்றத்தின் வெளிப்படையான சான்றின் மூலம் தெரிந்திருக்கிறீர்கள், அதாவது வெளிப்படை யான சான்றின் முன்பு வேறு

எந்தவொரு சான்றும் அவசியமில்லை என்று. கூடவே பரமாத்மாவின் காரியம் வெற்றியடைந்தே தீரும். இந்தக் காரியம் ஆத்மாகளுடையதோ, மகான் ஆத்மாக்க ளுடையதோ அல்லது தர்ம ஆத்மாக்களுடையதோ அல்ல. பரமாத்மாவின் காரியம் வெற்றி யடைந்தே இருக்கிறது, அப்படிப்பட்ட நம்பிக்கை புத்தியுள்ள, கவலையற்ற எதிர்காலத்தைத் தெரிந்திருக்கக் கூடிய கவலையற்ற ஆத்மாக்கள் நீங்கள். உலகத்தினர் விநாசம் ஆகுமென்று சொல் கின்றனர், அல்லது பயப்படுகின்றனர். மேலும் நீங்கள், புதிய உலகம் ஸ்தாபனை ஆகுமென்று கவலையின்றி இருக்கின்றீர்கள். நடக்காதது மற்றும் நடக்கிறது என்ற இந்த இரண்டிற்கும் எவ்வளவு வித்தியாசம்! உங்களுக்கு முன்னால் எப்பொழுதும் பொன்னுலகத்தின், பொன்னான சூரியன் உதயமாகியே விட்டது. மேலும் அவர்களுக்கு முன்னால் விநாசத்தின் கார்மேகங்கள்! இப்பொழுது நீங்கள் அனைவரும் நேரம் நெருங்கிக் கொண்டிருப்பதன் காரணத்தால், குஷி என்ற சிலம்பை, ஒலித்து நடனமாடிக் கொண்டிருக்கிறீர்கள். அதாவது இன்று பழைய உலகம், நாளை புதிய உலகம் என்று. இன்று மற்றும் நாளை இவ்வளவு நெருக்கத்தில் சென்று விட்டீர்கள்.

இப்பொழுது இந்த வருடம் சம்பூர்ணத்தன்மை மற்றும் மகான் தன்மையின் அருகாமையை அனுபவம் செய்ய வேண்டும். சம்பூர்ணத்தன்மையானது ஃபரிஸ்தாக்கள் உங்கள் அனைவரையும் வெற்றி மாலையை வைத்துக் கொண்டு வரவேற்கிறது. வெற்றி மாலையின் அதிகாரியாகவும் ஆக வேண்டுமல்லவா! சம்பூர்ணமான தந்தை மற்றும் சம்பூர்ண நிலை இரண்டுமே குழந்தைகளாகிய உங்களை வாருங்கள், சிரேஷ்ட ஆத்மாக்களே! வாருங்கள், சமமான குழந்தைகளே வாருங்கள், சக்திசாலி குழந்தைகளே வாருங்கள், சமமாகி தனது இனிய வீட்டில் ஓய்வு எடுப்பவர் ஆகுங்கள்! என்று அழைத்துக் கொண்டிருக்கின்றனர். விதியை உருவாக்கக் கூடியவராக, வரத்தை வழங்கும் வள்ளலாக இருக்கிறாரோ, அவ்வாறே நீங்களும் இந்த ஆண்டு விசேஷமாக பிராமண ஆத்மாக்களாகவும் மற்றும் அனைத்து ஆத்மாக்களாகவும் உருவாக்கக் கூடியவர் ஆகுங்கள், வரமளிப்பவர் ஆகுங்கள். நாளை தேவதை ஆகக்கூடியவர்கள், எனவே இப்பொழுது கடைசி ஃபரிஸ்தா சொரூபம் ஆகுங்கள். ஃபரிஸ்தா என்ன செய்கிறது? வரமளிப்பவராகி, வரதானத்தைக் கொடுக்கிறது. தேவதை எப்பொழுதும் கொடுக்கிறது, பெறுவதில்லை. பெறக்கூடியவர் என்று சொல்லவதில்லை, எனவே வரமளிப்பவர் மற்றும் விதியை உருவாக்குபவர்,

ஃபரிஸ்தாவிலிருந்து தேவதை.... என்ற இந்த மகா மந்திரத்தை இப்பொழுது நாம் விசேஷ நினைவு சொரூபமாக்குங்கள். மன்மனாபவ என்றோ ஆகி விட்டீர்கள், இது முதல் மந்திரமாக இருந்தது. இப்பொழுது இந்த சக்திசாலியான மந்திரத்தை அனுபவத்தில் கொண்டுவாருங்கள். இது ஆகவேண்டும், இது கிடைக்க வேண்டும்'என்ற இரண்டு வி ̂யங்கள் தான் பெறுபவர் ஆக்குகிறது. இந்த பெறக்கூடியத் தன்மையின் சம்ஸ்காரம் தேவதை ஆகுவதில் நேரத்தை அதிகப்படுத்துகிறது. எனவே இந்த சம்ஸ்காரங்களை முடித்து விடுங்கள். முதல் பிறவியில் பிரம்மாவின் வீட்டிலிருந்து தேவதையாகி புதிய வாழ்க்கை, புதிய யுகத்தின் முதல் நம்பரில் வாருங்கள். சகாப்தம் கூட 1-1-1 என்று இருக்க வேண்டும். இயற்கை கூட சதோபிரதான நம்பர் ஒன்னாக இருக்க வேண்டும். இராஜ்யம் கூட நம்பர் ஒன்னாக இருக்க வேண்டும். உங்களது கோல்டன் ஸ்டேஜ் கூட நம்பர் ஒன்னாக இருக்க வேண்டும். ஒரு நாளின் வித்தியாசம் கூட 1-1-1 லிருந்து மாறிவிடும். இப்பொழுதிலிருந்தே ஃபரிஸ்தாவிலிருந்து தேவதை ஆவதற்காக நீண்ட கால சம்ஸ்காரத்தை நடைமுறை கர்மத்தில் வெளிப்படுத்துங்கள். ஏனெனில் நீண்ட காலத்தின் புகழ் என்ன இருக்கிறதோ, அது நீண்ட காலத்தின் எல்லை இப்பொழுது முடிந்து கொண்டிருக்கிறது. அதற்கான தேதியை எண்ணிக் கொண்டிருக்காதீர்கள். விநாசத்தை கடைசி நேரம் என்று சொல்லப்படும், அந்த நேரத்தில் நீண்ட காலத்தின் வாய்ப்பு முடிந்தே விடுகிறது, ஆனால் சிறிது நேரத்திற்கான வாய்ப்பு கூட முடிந்து விடும். எனவே பாப்தாதா நீண்ட காலத்தின் முடிவுக்கான சமிக்ஞை கொடுத்துக் கொண்டிருக்கிறார். பிறகு நீண்ட காலத்தின் வாய்ப்பு முடிவடைந்து, சிறிது காலத்திற்கான முயற்சி, சிறிது காலத்திற்கான பலன் என்றே சொல்லப்படும். கர்மகணக்கில் இப்பொழுது நீண்ட காலம் என்பது முடிந்து, சிறிது காலம் மற்றும் அல்பகாலம் என்பது ஆரம்பமாகிக் கொண்டிருக்கிறது, எனவே இந்த ஆண்டு பரிவர்த்தனை காலத்தின் ஆண்டாகும். நீண்ட காலத்திலிருந்து சிறிது காலத்திலேயே பரிவர்த்தனை ஆக வேண்டும். எனவே இந்த ஆண்டிற்கான முயற்சியில் நீண்ட காலம் என்ற கணக்கை எவ்வளவு சேமிக்க விரும்புகிறீர்களோ, அவ்வளவு சேமித்துக் கொள்ளுங்கள். பிறகு நாங்களோ அலட்சியமாக இருந்து விட்டோம் என்று சொல்லக் கூடாது. இன்று இல்லையென்றால், நாளை மாறியே தீருவோம். எனவே கர்மத்தின் ஆழத்தை தெரிந்து கொண்டவர் ஆகுங்கள். ஞானம் நிறைந்தவர் ஆகி அதிவேகமாக முன்னேறிச் செல்லுங்கள். 2000-மாவது ஆண்டில் முடிந்து விடும் என்று

கணக்கிடா தீர்கள். முயற்சியின் கணக்கு தனிப்பட்டது. உலக மாற்றத்திற்கான கணக்கு தனிப்பட்டது. இன்னும் 15-ஆண்டுகள் இருக்கின்றன, இன்னும் 18-ஆண்டுகள் இருக்கின்றன என்றெல்லாம் யோசிக்காதீர்கள். 1999-ம் ஆண்டில் ஆகும்... இவ்வாறு யோசித்துக் கொண்டிருக்க கூடாது. கணக்கைப் புரிந்து கொள்ளுங்கள். தனது முயற்சி மற்றும் பலனை தெரிந்து கொண்டு அதன் வேகத்தை அதிகரியுங்கள், இல்லையென்றால் நீண்ட காலத்தின் பழைய சம்ஸ்காரம் அப்படியே இருந்து விட்டால், நீண்ட காலத்தின் கணக்கு தர்மராஜின் கணக்கில் சேர்ந்து விடும். சிலருக்கு நீண்ட காலமாக வீணானது, முறையற்ற கர்மம், விகர்மத்தின் கணக்கு இப்பொழுதும் கூட இருக்கிறது. பாப்தாதா தெரிந்திருக்கிறார், ஆனால் அவுட் (ரிசல்ட்) மட்டும் செய்யவில்லை. சிறிது திரை போட்டிருக்கிறார் ஆனால் வீணானது மற்றும் முறையற்றது என்ற இந்தக் கணக்கு இப்பொழுதும் கூட நிறைய இருக்கிறது, எனவே இந்த ஆண்டு அதிகப்படியான பொன்னான வாய்ப்பிற்கான ஆண்டாகும். எவ்வாறு முயற்சிக்கான யுகமாக இருக்கிறதோ, அவ்வாறே இது முயற்சி மற்றும் மாற்றத்திற்கான பொன்னான வாய்ப்பிற்கான ஆண்டாகும். எனவே விசேஷமாக துணிவு மற்றும் உதவிக்கான இந்த விசேஷமான வரதானத்தின் ஆண்டை சாதரணமான 50-ம் ஆண்டு போல எண்ணி இழந்து விடக்கூடாது. இதுவரை பாபா அன்பின் கடலாகி அனைத்து உறவுகளின் சிநேகத்தில், அலட்சியம், சாதாரண முயற்சி போன்றவற்றைப் பார்த்தும் கேட்டும் கூட, பார்க்காததுப் போல, கேட்காதது போல குழந்தைகளுக்கு அன்பின் அதிகப்படியான உதவி மூலம் அதிகமான மதிப்பெண் கொடுத்து முன்னேற்றிக் கொண்டிருக்கிறார். உயர்த்திக் கொண்டிருக்கிறார் ஆனால் இப்பொழுது நேரம் மாறிக் கொண்டிருக்கிறது, அதனால் இப்பொழுது கர்மத்தின் ஆழத்தை நல்ல முறையில் புரிந்து கொண்டு நேரத்தின் இலாபத்தை எடுங்கள். 18வது அத்தியாயம் ஆரம்பமாகி விட்டது என்பதைக் கேட்டீர்கள் தானே! 18வது அத்தியாத்தின் விசேஷம் -இப்பொழுது நினைவு சொரூபம் ஆகுங்கள். அவ்வப்பொழுது நினைவு, அவ்வப்பொழுது மறதி என்று இருக்கக் கூடாது. நினைவு சொரூபம் என்றாலே நீண்ட கால நினைவு தானாகவும் எளிதாகவும் இருக்க வேண்டும். இப்போதைய போரிடும் (மாயாவுடன்) சம்ஸ்காரம், கடும் முயற்சியின் சம்ஸ்காரம், மனதைக் குழப்பிக் கொள்வதற்கான சம்ஸ்காரத்தை முடித்து விடுங்கள். இல்லையென்றால் இதுவே நீண்ட காலத்தின் சம்ஸ்காரமாகி அந்த் மதி சோ கதியின் (கடைசியில் என்ன நினைவோ, அந்த நிலை) பிராப்தி அடைவதற்கு

நிமித்தமாகி விடுவீர்கள். கேட்டீர்கள் தானே! -இப்பொழுது நீண்ட காலத்திற்கான முயற்சியின் நேரம் முடிவடைந்து கொண்டிருக்கிறது. மற்றும் நீண்ட கால பலஹீனத்தின் கணக்கு ஆரம்பமாகிக் கொண்டிருக்கிறது. புரிந்துகொள்ள முடிந்ததா! எனவே இது விசேஷமாற்றத்திற்கான சமயமாகும். நினைவு சொரூபம் ஆகுங்கள். நினைவு சொரூபம் தானாகவே பற்றற்றவர் ஆக்கி விடும். இப்பொழுதோ பற்றுதலின் பட்டியல் மிகவும் நீண்டு விட்டது. ஒன்று தனது இல்லறம் (உடல் சம்மந்தப்பட்டது), ஒன்று தெய்வீக பரிவாரத்தின் இல்லறம், சேவையின் இல்லறம், எல்லைக்குட்பட்ட பிராப்திகளின் இல்லறம் -இவை அனைத்திலுமிருந்தும் பற்றற்றவர் அதாவது விடுப்பட்டு அன்பானவர் ஆகுங்கள். எனது என்றாலே பற்றுதல், இதிலிருந்து பற்றற்றவர் ஆகுங்கள், அப்பொழுது நீண்ட கால முயற்சியினால் நீண்ட கால பதவியின் பிராப்திக்கு அதிகாரி ஆவீர்கள். நீண்ட காலம் அதாவது முதலில் இருந்து கடைசி வரை பிராலப்தத்தின் பலனை அடைய வேண்டும். அவ்வாறே ஒவ்வொரு இல்லறத்தில் இருந்து துறவறம் (விடுபடுவதற்கான) இரகசியத்தையும் தெரிந்துள்ளீர்கள். மேலும் சொற்பொழிவும் நன்றாக ஆற்றலாம் ஆனால் துறவு செய்வது அதாவது பற்றற்றவர் ஆவது! பாயிண்ட்ஸோ (ஞானக்கருத்துக்களோ) பாப்தாதாவை விட உங்களிடம் அதிகம் இருக்கின்றன. அதனால் என்ன பாயிண்ட் சொல்வது? பாயிண்ட்ஸோ இருக்கின்றன, இப்பொழுது பாயிண்ட் (புள்ளி) ஆகுங்கள். நல்லது.

சதா சிரேஷ்ட கர்மங்களின் பிராப்தியின் நிலையைத் தெரிந்து கொள்ளக்கூடிய, சதா நீண்ட காலத்தின் தீவிர முயற்சியின், சிரேஷ்ட முயற்சியின் சிரேஷ்ட சம்ஸ்காரம் உடைய, சதா தங்கயுகத்தின் ஆதி இரத்தினம், சங்கயுகத்திலும் ஆதி இரத்தினம் அப்படிப்பட்ட ஆதி தேவனுக்கு (பிரம்மா) சமமான குழந்தைகளுக்கு, ஆதி தந்தை, அனாதி தந்தையின் சதா அருகில் வருவதற்கான சிரேஷ்ட வரதானி அன்பு நினைவுகள் மற்றும் கூடவே சேவாதாரி தந்தையின் நமஸ்தே.

**தாதிகளுடன்**: வீட்டின் வாசலை (கேட்) யார் திறப்பார்? கோல்டன் ஜுப்ளி கொண்டாடுபவர்களோ அல்லது சில்வர் ஜுப்ளி கொண்டாடுபவர்களோ, பிரம்பாவுடன் கேட்-ஐ திறப்பீர்கள் அல்லவா! அல்லது பின்னால் வருவீர்களா? கூடவே சென்றீர்கள் என்றால் மணப்பெண்ணாகி செல்வீர்கள், மேலும் பின்னால் சென்றீர்கள் என்றால் ஊர்வலத்தில் ஒருவராகச்

செல்வீர்கள். உறவினர்களைக் கூட ஊர்வலத்தில் செல்பவர்கள் என்று தானே சொல்வோம், அருகிலோ இருக்கின்றார்கள், ஆனால் ஊர்வலம் வந்திருக்கிறது என்று தான் சொல்லப்படும். அதனால் யார் கேட்-ஐ திறப்பார்கள். கோல்டன் ஜூப்ளி கொண்டாடுபவர்களா? அல்லது சில்வர் ஜூப்ளி கொண்டாடுபவர்களா? யார் வீட்டின் கேட்-ஐத்திறப்பார்களோ, அவர்களே சொர்க்கத்தின் கேட்-ஐ திறப்பார்கள். இப்பொழுது வதனத்தில் வருவதற்கு யாருக்கும் தடையில்லை. என்னதான் இருந்தாலும் நேரத்தின், சூழ்நிலையின் பந்தனம் இருக்கிறது. வதனத்தில் வருவதற்கோ எந்த பந்தனமும் இல்லை.. யாரும் தடுக்க மாட்டார்கள், டர்ன் செய்ய வேண்டிய அவசியமில்லை. இங்கு சரீரத்தில் இருந்து கொண்டு ஒரு வினாடியில் சுற்றி வந்து விட்டது போல் பயிற்சியினால் அனுபவம் செய்வீர்கள். சம்பூரண ஃபரிஸ்தா (அன்த்வாஹக்) சரீரத்துடன் சுற்றி வருவதற்கான மகிமை இருக்கிறது. உள்ளே இருக்கும் ஆத்மா வாகனம் ஆகி விடுகிறது. எனவே அவ்வாறு அனுபவம் செய்வீர்கள் அதாவது எவ்வாறு முற்றிலும் பட்டன் அழுத்தப்பட்டது, விமானம் பறந்தது, சுற்றி வந்து விட்டோம். மேலும் மற்றவர்களும் அனுபவம் செய்வார்கள் அதாவது இவர்கள் இங்கு இருந்தாலும் இல்லாதது போல் மற்றவர்கள் அனுபவம் செய்வார்கள். எவ்வாறு சாகாரத்தில் (பிரம்மா) பார்த்தீர்கள் தானே -பேசிக் கொண்டே யிருந்தாலும் வினாடியில் இருக்கிறார், மேலும் இப்பொழுது இல்லை. அவ்வப்பொழுது இருக்கிறார், அவ்வப்பொழுது இல்லை. இந்த அனுபவம் செய்தீர்கள் தானே? அனுபவம் செய்தீர்கள் தானே? இதில் ஸ்தூலமான விஸ்தாரத்தை உள்ளடக்குவது அவசியமாகும். இவ்வளவு விஸ்தாரத்தில் இருந்தும் கூட கடைசி நிலை என்னவாக இருந்தது என்பதை சாகாரத்தில் பார்த்தீர்கள் அல்லவா? விஸ்தாரத்தை உள்ளடக்கும், விடுபட்ட உயர்ந்த (உப்ராம்) நிலையில் இருப்பதைப் பார்த்தீர்கள், அவ்வப்பொழுது ஸ்தூலத்தின் டைரக்சன் கொடுத்துக் கொண்டிருக்கிறார். அவ்வப்பொழுது அசரீரி நிலையின் அனுபவத்தை செய்வித்துக் கொண்டிருக்கிறார். அதனால் இந்த உள்ளடக்கும் சக்தியின் வெளிப்பாட்டைப் பார்த்தீர்கள். பாபா இங்கு இருக்கிறாரா அல்லது இல்லையா? என்று நீங்கள் சொல்லியிருந்தீர்கள். கேட்டுக் கொண்டிருக்கிறாரா அல்லது கேட்க வில்லையா? ஆனால் எந்த காரியத்தையும் தவறவிடாதளவிற்கு அவருடைய அதிவேகம் அவ்வாறு இருக்கிறது. நீங்கள் சொல்லிக் கொண்டியிருக்கிறீர்கள். என்றாலும் விஷயத்தை தவறவிடமாட்டார் ஆனால் இரண்டு காரியத்தையும் ஒரு நிமிடத்தில் செய்து முடிக்குமளவிற்கு வேகம்

அதிகமாக இருக்கிறது. சாரத்தை கேட்ச் (பிடித்தல்) செய்து விடுவார், மேலும் சுற்றி வந்து விடுவார். யாரோ பேசிக் கொண்டிருக்கிறார், நீங்கள் சொல்வீர்கள் கேட்கவே இல்லை என்பது போலவும் அசரீரியாக இருக்கமாட்டார். வேகம் அதிகமாக ஆகி விடுகிறது. ஒரே நேரத்தில் இரண்டு காரியமும் செய்து விடுமளவிற்கு புத்தி விசாலம் ஆகி விடுகிறது. இது எப்பொழுது ஆகிறது என்றால், உள்ளடக்கும் சக்தியை பயன்படுத்தும் பொழுது தான். இப்பொழுது இல்லறத்தின் விஸ்தாரம் ஆகி விட்டது. அதிலிருந்து கொண்டே இந்த பயிற்சி தான் ஃபரிஸ்தா தன்மையின் சாட்சாத்காரத்தை செய்விக்கும். இப்பொழுது ஒவ்வொரு சின்னஞ்சிறு விசயங்களில் பின்னால் எவ்வளவு உழைக்க வேண்டியிருக்கிறதோ, அது தானாகவே உயரே செல்வதினால் இந்த சிறிய விசயங்கள் தெளிவான வழியின் அனுபவம் செய்விக்கும். உயரே செல்வதினால் கீழான தன்மை தானாகவே விடுபட்டுவிடும். கடும் முயற்சியிலிருந்து தப்பித்து விடுவீர்கள். சமயமும் சேமிப்பாகும். மற்றும் சேவை வேகமாக நடக்கும். இல்லையெனில் எவ்வளவு நேரம் கொடுக்க வேண்டியிருக்கிறது! நல்லது.

**சில்வர் ஜூப்ளியில் வந்திருக்கக்கூடிய சகோதர சகோதரிகளுக்காக அவ்யக்த பாப்தாதாவின் இனிய செய்தி:** பொன்விழாவின் மங்கலமான தருணத்தில் ஆன்மீகக் குழந்தைகளுக்காக சிநேகத்தின் பொன் மலர்கள்: முழு உலகில் உயர்ந்ததிலும் உயர்ந்த மகா யுகத்தின் மகான் பார்ட்தாரி, யுகத்தை மாற்றக்கூடிய குழந்தைகளுக்கு சிரேஷ்டமான சுபம் நிறைந்த வாழ்க்கைக்கான வாழ்த்துகள்! சேவையின் வளர்ச்சிக்கு நிமித்தமாவதற்கான விசேஷ பாக்கியத்தின் வாழ்த்துகள்! முதலிலிருந்தே பரமாத்ம சிநேகி மற்றும் சகயோகி ஆவதற்கான, எடுத்துக்காட்டு ஆவதற்கான வாழ்த்துகள்! சமயத்தின் பிரச்சனைகள் என்ற புயலை பரிசாகப் புரிந்து கொண்டு சதா தடைகளை அழிப்பவர் ஆவதற்கான வாழ்த்துகள்!

பாப்தாதா சதா தன்னுடைய அப்பேர்ப்பட்ட அனுபவங்களின் கஜானாக்களால் நிறைந்த சேவைக்கான அடித்தளமாக இருந்த குழந்தைகளைப் பார்த்து, புன்முறுவல் பூக்கிறார், மேலும் குழந்தைகளின் துணிவு என்ற குணங்களின் மாலையை நினைவு செய்கிறார், அப்படிப்பட்ட அதிர்ஷ்டமான மற்றும் அன்பான தருணத்தில் விசேசமாக பொன்னான வரதானத்தைக் கொடுத்து, சதா ஒற்றுமை ஆகி, ஒருவரை

வெளிப்படுத்துவதற்கான காரியத்தில் வெற்றியடைபவர் ஆகுக! ஆன்மீக வாழ்க்கையில் அமரர் ஆவீர்களாக! வெளிப்படையான பலன் மற்றும் அழிவற்ற பலனை அடைவதற்கு பல மடங்கு பாக்கியவான் ஆவீர்களாக!

**வரதானம்: ஆஹா! டிராமா ஆஹா! என்ற நினைவின் மூலம் அநேகருக்கு சேவை செய்யக் கூடிய சதா குஷி நிறைந்தவர் ஆகுக!**

இந்த நாடகத்தில் எந்தவொரு காட்சியைப் பார்த்தாலும் ஆஹா! டிராமா ஆஹா! என்ற நினைவில் இருந்தீர்கள் என்றால் ஒருபொழுதும் குழப்பமடையமாட்டீர்கள். ஏனெனில் தற்சமயம் நன்மை செய்யக்கூடிய யுகமாக இருக்கிறது என்ற நாடகத்தின் ஞானம் கிடைத்திருக்கிறது. இதில் எந்த விதமான காட்சி முன்னால் வந்தாலும் அதில் நன்மை நிறைந்திருக்கிறது. தற்சமயத்தில் நன்மை தென்படவில்லை என்றாலும் கூட, எதிர்காலத்தில் உள்ளடங்கியிருக்கும் நன்மை வெளிப்பட்டுவிடும் -அதனால் ஆஹா டிராமா! ஆஹா! என்ற நினைவின் மூலம் சதா குஷியாக இருப்பீர்கள். முயற்சியில் ஒருபொழுதும் சோர்வு வராது. தானாகவே உங்கள் மூலம் பலருக்கு சேவை ஏற்பட்டுக் கொண்டேயிருக்கும்.

**சுலோகன்: அமைதியின் சக்தி தான் மனதின் சேவைக்கான எளிய சாதனமாகும், அதனால். எங்கு அமைதியின் சக்தி இருக்கிறதோ, அங்கு திருப்தி இருக்கிறது!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 22.01.1986 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பாப்தாதாவின் ஆசை -சம்பூரணம் மற்றும் சம்பன்னம் ஆகுங்கள்!

இன்று விசேஷமாக துரதேசத்தில் இருப்பவர்கள் துரதேச நிவாசி குழந்தைகளைச் சந்திப்பதற்காக வந்திருக்கின்றார்கள். இவ்வளவு தூரத்திலிருந்து சந்திப்பதற்காக வந்திருக்கின்றார்கள். நீங்கள் இவ்வளவு

தூரத்தில் இருந்து எந்த ஈடுபாட்டுடன் வந்திருக்கின்றீர்கள்? பாப்தாதா குழந்தை களுடைய ஆர்வத்தை அறிந்திருக்கின்றார்கள். ஒருபுறம் உள்ளத்தினுடைய சந்திப்பிற்கான ஈடுபாடு உள்ளது. மறுபுறம் தந்தையுடன் சந்திப்பதற்காக பொறுமையையும் கடைபிடித்திருக்கிறீர்கள். ஆகையினால், பொறுமையின் பலனை விசேஷமான ரூபத்தில் கொடுப்பதற்காக வந்திருக்கின்றார்கள். விசேஷமாக சந்திப்பதற்காக வந்திருக்கின்றார்கள். அனைத்து இரட்டை அயல்நாட்டு குழந்தைகளுடைய அன்பான எண்ணம், உள்ளத்தில் சந்திப்பின் ஊக்கத்தை ஒவ்வொரு நேரமும் பாப்தாதா பார்த்துக் கொண்டும் கேட்டுக் கொண்டும் இருக்கின்றார்கள். தூரத்தில் இருந்தாலும் அன்பின் காரணத்தினால் அருகாமையில் இருக்கின்றீர்கள். எவ்வாறு இரவெல்லாம் கண் விழித்து குழந்தைகள் திருஷ்டி மற்றும் வைப்ரேஷன் (அதிர்வலைகள்) மூலம் அன்பு மற்றும் சக்தியை கேட்ச் (கிரஹித்தல்) செய்கின்றனர் என்பதை பாப்தாதா ஒவ்வொரு நேரமும் பார்க்கின்றார்கள். இன்று விசேஷமாக முரளி சொல்வதற்காக வரவில்லை. முரளிகள் நிறைய கேட்டுவிட்டீர்கள். இந்த வருடத்தில் விசேஷமாக பிரத்யட்ச சொரூபம், பாப்தாதாவினுடைய சிநேகத்தின் அத்தாட்சி சொரூபம், சம்பூரணம் மற்றும் சம்பன்ன நிலைக்கு சமீபமான சொரூபம், சிரேஷ்டமான சங்கல்பம், சிரேஷ்டமான பேச்சு, சிரேஷ்டமான கர்மம், சிரேஷ்டமான சம்பந்தம் மற்றும் தொடர்பு ஆகி ய இத்தகைய சிரேஷ்டமான சொரூபத்தை இப்பொழுது பாப்தாதா பார்க்க விரும்புகின்றார்கள். என்ன கேட்டீர்களோ, அதை கேட்பது மற்றும் சொரூபம் ஆகுவது என்பதில் சமநிலையைப் பார்க்க விரும்புகின்றார்கள். நடைமுறையில் மாற்றத்தினுடைய சிரேஷ்டமான விழாவைப் பார்க்க விரும்பு கின்றார்கள். இந்த வருடத்தில் வெள்ளி, பொன் விழாவைக் கொண்டாடிவிட்டீர்கள் மற்றும் கொண்டாடப் போகிறீர்கள் ஆனால், பாப்தாதா உண்மையான, கறையற்ற, விலைமதிப்பற்ற வைரங்களின் மாலையை உருவாக்க விரும்புகின்றார்கள். ஒவ்வொரு வைரமும் அத்தகைய விலைமதிப்பற்றதாக ஜொலிக்கக்கூடியதாக ஆக வேண்டும், அதன் ஒளி மற்றும் சக்தியின் ஜொலிப்பானது எல்லைக்குட்பட்டதாக அல்லாமல் எல்லைக்கப்பாற்பட்டு செல்ல வேண்டும். பாப்தாதா குழந்தைகளுடைய எல்லைக்குட்பட்ட சங்கல்பம், எல்லைக்குட்பட்ட பேச்சு, எல்லைக்குட் பட்ட சேவைகள், எல்லைக்குட்பட்ட சம்பந்தங்களை அதிக காலம் பார்த்து விட்டார்கள் ஆனால், இப்பொழுது தந்தை எல்லைக்கப் பாற்பட்டவர் ஆதலால் எல்லையற்ற சேவையின் அவசியம் உள்ளது. அதற்கு முன்னால் இந்த தீபங்களின் வெளிச்சம் எத்தகையதாக இருக்கும்?

இப்பொழுது லைட் ஹவுஸ் மற்றும் மைட் ஹவுஸ் ஆக வேண்டும். எல்லையற்றதின் பக்கம் பார்வையை கொண்டு செல்லுங்கள். எல்லையற்ற பார்வை இருந்தாலே சிருஷ்டி மாற்றம் அடையும். சிருஷ்டி யின் மாற்றம் என்ற இவ்வளவு பெரிய காரியம் குறைவான சமயத்தில் நிறைவடைய வேண்டும். எனவே, கதி மற்றும் விதி கூட எல்லைக்கப்பாற்பட்ட வேகத்துடன் இருக்க வேண்டும்.

உங்களுடைய விருத்தி மூலம் உள்நாடு மற்றும் அயல்நாட்டினுடைய வாயுமண்டலத்தில், எல்லையற்ற எஜமானர்கள், விஷ்வத்தின் எஜமானர்கள், எல்லையற்ற இராஜ்ய அதிகாரிகள், எல்லையற்ற உண்மையான சேவாதாரிகள், நம்முடைய தேவ ஆத்மாக்கள் வந்து விட்டனர் என்ற இந்த ஒரு சப்தம் ஒலிக்க வேண்டும். இப்பொழுது இந்த எல்லையற்ற ஒரு சப்தம் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் ஒலிக்க வேண்டும். அப்பொழுதே சம்பூரண நிலை மற்றும் சமாப்தி அருகாமையில் இருப்பதாக அனுபவம் ஆகும். புரிந்ததா? நல்லது.

நாலா புறங்களிலும் உள்ள சிரேஷ்ட பாவனை, சிரேஷ்ட விருப்பத்தைப் பூர்த்தி செய்யக் கூடிய, ஃபரிஷ்தாவாகி தேவதையாகும் ஆத்மாக்களுக்கு, சதா உயர்ந்த ஸ்திதியில் நிலைத்திருக்கக் கூடிய லைட் ஹவுஸ், மைட் ஹவுஸ் ஆன விசேஷ ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் சூட்சும சமிக்ஞைகளை புரிந்து கொள்ளக்கூடிய விசாலபுத்தி உடைய குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

உள்நாடு மற்றும் வெளிநாட்டினுடைய அனைத்து குழந்தைகளுக்காகவும் பாப்தாதா சந்தேஷ் (செய்தி) ரூபத்தில் அன்பு நினைவு கொடுத்தார்கள்: நாலாபுறங்களிலும் உள்ள சிநேகி, சகயோகி மற்றும் சக்திசாலி குழந்தைகளுடைய விதவித மான அலைகளின் கடிதத்தைப் பார்த்து பாப்தாதா அன்புக் கடலில் மூழ்கி விட்டார்கள். அனைவருடைய விதவிதமான அலைகளானது அவரவர் ஊக்க உற்சாகத்தின் அனுசாரம் சிரேஷ்ட மானவையே! பாப்தாதா அந்த அலைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றார்கள். ஊக்கமும் மிகவும் நன்றாக உள்ளது, திட்டமும் உயர்ந்ததாக, நன்றாக உள்ளது. இப்பொழுது பிராக்டிகலின் (செய்முறையின்) மதிப்பெண்களை பாப்தாதாவிடம் இருந்து பெற வேண்டும் மற்றும் எதிர்கால கணக்கை சேமிக்க வேண்டும். தற்சமயம்

பாப்தாதா ஒவ்வொரு குழந்தையினுடைய செய்முறை பாடத்தின் மதிப்பெண்களை குறித்துக் கொண்டு இருக்கின்றார்கள். மேலும், இந்த வருடமானது விசேஷமாக செய்முறை பாடம் (பிராக்டிகல் கோர்ஸ்) மற்றும் செய்முறை வேகத்திற்கான (பிராக்டிகல் ஃபோர்ஸ்) அதிகப்படியான மதிப்பெண்கள் பெறுவதற்கான வருடம் ஆகும். ஆகையினால், அவ்வப்போது என்ன சமிக்ஞைகள் கிடைக்கின்றனவோ, அந்த சமிக்ஞைகளை ஒவ்வொருவரும் அது தனக்கானது எனப் புரிந்துகொண்டு நடைமுறையில் கொண்டு வர வேண்டும், அப்பொழுதே முதல் எண்ணைப் பெற முடியும். வெளிநாடு மற்றும் உள்நாட்டுக் குழந்தைகளுக்கு தொலைவில் இருந்தாலும் நெருக்கமான அன்பின் அனுபவம் சதா ஏற்படுகின்றது மற்றும் ஏதாவது செய்து காண்பிக்க வேண்டும், இதைச் செய்ய வேண்டும், அவ்வாறு செய்யவேண்டும் என்ற ஊக்கம் சதா உள்ளது. எனவே, இப்பொழுது எல்லையற்ற சேவையின் நிரூபணம் ஆகி ஊக்கத்தை நடை முறையில் கொண்டு வருவதற்கான விசேஷமான வாய்ப்பு உள்ளது. ஆகையினால், பறக்கும் கலை யின் ரேஸ் (பந்தயம்) செய்யுங்கள். நினைவில், சேவையில், தெய்வீக குண மூர்த்தி ஆகுவதில் மற்றும் கூடவே ஞான சொரூபம் ஆகி ஞானத்தின் உரையாடல் செய்வதில், நான்கு பாடங்களிலும் பறக்கும் கலையின் பந்தயத்தில் விசேஷமான நம்பர் பெறுவதற்கு இந்த வருடம் வாய்ப்பாக உள்ளது. இந்த விசேஷ வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். புதிய அனுபவம் செய்திடுங்கள். புதுமையை விரும்புகின்றீர்கள் அல்லவா? எனவே, இந்தப் புதுமையைச் செய்து நீங்கள் நம்பர் பெற முடியும். இப்பொழுது இந்த வருடத்தில் அதிகப்படியான (எக்ஸ்ட்ரா) ரேஸிற்கு அதிகப்படியான மதிப் பெண்கள் கிடைக்கும். சமயமும் அதிகப்படியாகக் கிடைத்துள்ளது. எப்பொழுதுமே முயற்சிக் கேற்ப பலன் உண்டு ஆனால், இந்த வருடம் விசேஷமாக அதிகப்படியான மதிப்பெண்கள் பெறுவதற்கான வருடம் ஆகும். ஆகையினால், நல்ல முறையில் பறக்கும் கலையின் அனுபவியாகி முன்னேறிச் சென்று பிறரையும் முன்னேற்றுங்கள். தந்தை அனைத்து குழந்தைகளின் கழுத்தில் கைகளின் மாலை அணிவிக்கின்றார்கள். உள்ளத்தைப் பெரிதாக்கினால் சாகாரத்தில் வந்தடைவது கூட சகஜமாகி விடும். எங்கு உள்ளம் உள்ளதோ, அங்கு செல்வம் வந்து விடுகிறது. உள்ளமானது செல்வத்தை எங்கெங்கிருந்தோ கொண்டு வருகிறது. ஆகையினால், உள்ளம் இருக்கிறது ஆனால், செல்வம் இல்லை என்ற இந்தக் கூற்றை பாப்தாதா ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். உள்ளம் உடையவர் களுக்கு ஏதாவதொரு விதத்தில் டச்சிங் ஏற்படுகின்றது

மற்றும் வந்தடைந்து விடுகின்றனர். அதிக முயற்சி என்ற பணம் இருக்கவேண்டும். அதிக முயற்சி என்ற செல்வம் பல கோடி மடங்கு இலாபம் கொடுக்கிறது. நினைவு செய்து செய்து சம்பாதிக்கின்றார்கள் அல்லவா? எனவே, நினைவின் கணக்கில் சேமிப்பாகி விடுகிறது மற்றும் வந்து சேர்ந்து விடுகின்றனர். நல்லது. அனைவரும் அவரவர் பெயர் மற்றும் விசேஷத்தன்மையுடன் கரங்களில் மாலை சகிதமாக அன்பு நினைவுகள் சுவீகாரம் செய்து கொள்ளுங்கள்.

**பொன்விழாவிற்கு வந்திருக்கும் டீச்சர் சகோதரிகளுடன்:** அனைவரும் வெள்ளி விழா கொண்டாடிவிட்டீர்களா? ஆகவேண்டியதோ தங்கம், வெள்ளி ஆகக் கூடாது அல்லவா! தங்கம் போல் ஆகுவதற்காக இந்த வருடம் என்ன திட்டம் தீட்டியுள்ளீர்கள்? சேவைக்கான திட்டம் தீட்டுகின்றீர்கள், ஆனால், சுய மாற்றம் மற்றும் எல்லையற்ற மாற்றம் -இதற்காக என்ன திட்டம் தீட்டியிருக்கின்றீர்கள்? இதைச் செய்யலாம் என்று அவரவர் இடத்திற்கான திட்டம் தீட்டுகின்றீர்கள் ஆனால், நீங்கள் ஆதி நிமித்தமானவர்கள் ஆவீர்கள், ஆதலால், எல்லை யற்ற திட்டம் உடையவர்கள் ஆவீர்கள். நாம் முழு விஷ்வத்திற்கு நன்மை செய்ய வேண்டும் என்பது புத்தியில் தோன்றுகிறது. இது தோன்றுகிறதா? அல்லது இது யாருடைய காரியமோ, அவர்களே அறிவார்கள் என்று நினைக்கின்றீர்களா? எப்பொழுதாவது எல்லையற்ற சிந்தனை வருகிறதா அல்லது தங்களுடைய இடங்களின் சிந்தனை மட்டும் உள்ளதா? உங்களது பெயரோ விஷ்வ கல்யாணகாரி என்பதாகும், இன்ன இடத்தின் கல்யாணகாரி என்று கூறுவதில்லை ஆனால், எல்லையற்ற சேவைக்கான சங்கல்பம் என்ன வருகின்றது? எல்லையற்ற எஜமானர் ஆகவேண்டும் அல்லவா! மாநிலத்தின் எஜமானர் ஆகக்கூடாது. சேவாதாரிகளான நிமித்த ஆத்மாக்களிடம் எப்பொழுது இந்த அலை உருவாகிறதோ, அப்பொழுது அந்த அலை பிறருக்குள்ளும் உருவாகும். ஒருவேளை, உங்களுக்குள் இந்த அலை உருவாகவில்லை என்றால் பிறருக்குள்ளும் உருவாகாது. எனவே, சதா எல்லையற்ற அதிகாரி எனப் புரிந்து எல்லையற்ற திட்டத்தை உருவாக்குங்கள். முதல் முக்கியமான விசயம் -எந்த விதமான எல்லைகுட்பட்ட பந்தனத்தில் மாட்டியிருக்கவில்லை தானே! பந்தனத்திலிருந்து விடுபட்டவர்களே எல்லையற்ற சேவையில் வெற்றி அடைவார்கள். இங்கேயே இது பிரத்யட்சம் ஆகி க் கொண்டு இருக்கிறது மற்றும் ஆகி க் கொண்டே இருக்கும். எனவே, இந்த வருடத்தில் என்ன விசேஷத் தன்மையைக் காண்பிக்கப் போகின்றீர்கள்? திட

சங்கல்பமோ ஒவ்வொரு வருடமும் செய்கின்றீர்கள். எப்பொழுது அத்தகையதொரு வாய்ப்பு கிடைக்கிறதோ, அப்பொழுது கூட திட சங்கல்பம் செய்கின்றீர்கள், பிறரை செய்யவும் வைக்கின்றீர்கள். எனவே, திட சங்கல்பம் செய்வது கூட சாதாரணம் ஆகி விட்டது. சொல்லும் பொழுது திடசங்கல்பம் என்று சொல்கின்றீர்கள், ஆனால், செய்வதோ வெறும் சங்கல்பம் தான். ஒருவேளை, திடமானதாக இருக்கிறது என்றால் மறுமுறை சங்கல்பம் செய்யவேண்டியது இருக்காது. திட சங்கல்பம் என்ற இந்த வார்த்தை சாதாரணமானதாக ஆகி விட்டது. இப்பொழுது எந்தக் காரியம் செய்யும் பொழுதும், சரி, நாங்கள் திடசங்கல்பம் செய்கின்றோம் என்று தான் கூறுகின்றீர்கள், ஆனால், அத்தகையதொரு புதிய சாதனத்தை உருவாக்குங்கள், அதன் மூலம் சிந்தித்தல் மற்றும் செயல் ஆகி ய இரண்டும் சமமாக வேண்டும். திட்டம் (பிளான்) மற்றும் செய்முறை (பிராக்டிகல்) ஆகி ய இரண்டும் இணைந்து இருக்கவேண்டும். திட்டங்களோ அதிகமாக உள்ளன, ஆனால், நடைமுறையில் பிரச்சனைகளும் வருகின்றன, அதிக முயற்சி செய்யவேண்டியதாக உள்ளது, எதிர்கொள்ள வேண்டியதாகவும் உள்ளது, இது இவ்வாறு தான் இருக்கிறது மற்றும் இருந்து கொண்டே தான் இருக்கும் ஆனால், எப்பொழுது இலட்சியம் உள்ளதோ, அப்பொழுது நடைமுறையில் சதா முன்னேறிக் கொண்டே இருப்பீர்கள். ஏதாவது புதுமை தென்படவேண்டும், இதற்கு இப்பொழுது திட்டம் போடுங்கள். இல்லையெனில், ஒவ்வொரு வருடமும் ஒன்று சேர்கின்றீர்கள், பிறகு, எப்படி இருந்ததோ அப்படியே உள்ளது என்று கூறுகின்றீர்கள். ஒருவரை ஒருவர் அப்படியே பார்க்கின்றீர்கள். மனதிற்கு பிடித்தமானதாக இல்லை. எவ்வளவு விரும்புகிறீர்களோ, அவ்வளவு ஏற்படுவதில்லை. அது எவ்வாறு ஏற்படும்? இதற்காகவே கூறப்படுகிறது -யார் முத-ல் செய்பவர்களோ, அவர்கள் அர்ஜூனன் ஆவார் க.ள். ஒருவர் நிமித்தமாகி விட்டால், பிறருக்குள் கூட ஊக்கம், உற்சாகம் வந்து விடுகின்றது. எனவே, இத்தனை பேர் ஒன்று கூடியிருக்கின்றீர்கள், அத்தகையதொரு செய்முறைத்திட்டம் போடுங்கள். பாடத்திற்கான (தியரி) தேர்வுகளும் உள்ளன, செய்முயைத் தேர்வுகளும் (பிராக்டிக்கல்) உள்ளன. யார் ஆதியிலிருந்து நிமித்தமாகி இருக்கின்றார்களோ, அவர்களுடைய பாக்கியம் சிரேஷ்டமான தாகும். இப்பொழுது புதுமை என்ன செய்யப்போகின்றீர்கள்?

இதற்காக விசேஷ கவனம் கொடுக்க வேண்டிய விசயம் என்னவென்றால், ஒவ்வொரு கர்மம் செய்வதற்கு முன்பும், நான் என்னை சம்பன்னமாக்கி

சாம்பிள் (மாதிரி) ஆக்கவேண்டும் என்ற இலட்சியம் வைத்திடுங்கள். நடப்பது என்ன? குழுவாக இருப்பதன் இலாபமும் உள்ளது, நஷ்டமும் உள்ளது. குழுவில் ஒருவரை ஒருவர் பார்த்து சேம்பேறித்தனமும் வருகின்றது மற்றும் குழுவில் ஒருவரை ஒருவர் பார்த்து ஊக்க உற்சாகமும் வருகிறது, இவை இரண்டும் நடக்கிறது. எனவே, குழுவை, சோம்பேறித்தனத்துடன் கூடிய பார்வையில் பார்க்கக்கூடாது. இப்பொழுது இது ஒரு வழக்க மாகி விட்டது -இவர்களும் செய்கின்றார்கள், அவர்களும் செய் கின்றார்கள், நானும் செய்தால் என்ன? இவ்வாறு இருக்கத்தான் செய்கின்றது. இது குழுவில் சேம்பேறித்தனத்தின் நஷ்டம் ஆகி விடுகிறது. குழுவில் சிரேஷ்டம் ஆகுவதற்கான சகயோகம் பெறுவது என்பது வேறு. ஒருவேளை, நான் செய்யவேண்டும், நான் செய்து பிறரை செய்யவைக்க வேண்டும் என்ற இலட்சியம் இருந்தது என்றால், பிறகு, தான் செய்வதற்கும் மற்றும் பிறரை செய்ய வைப்பதற்கும் ஊக்கம் உற்சாகம் இருக்கும். மேலும், அடிக்கடி இந்த இலட்சியத்தை எமர்ஜ் (வெளிப்படுத்துதல்) செய்யவேண்டும். ஒருவேளை, இலட்சியம் மட்டும் வைத்திருந்தால் கூட அது மெர்ஜ் (அமிழ்ந்து) ஆகி விடுகிறது. ஆகையினால், நடைமுறையில் வருவதில்லை. எனவே, இலட்சியத்தை அவ்வப்போது எமர்ஜ் செய்யுங்கள். இலட்சியம் மற்றும் இலட்சணத்தை அடிக்கடி இணைத்துக் கொண்டே செல்லுங்கள். பிறகு, சக்திசாலி ஆகி விடுவீர்கள். இல்லையெனில், சாதாரண நிலை ஆகி விடுகின்றது. நான் சிம்பிள் (எளிமை) மற்றும் சாம்பில் (மாதிரி) ஆகவேண்டும் என்று இந்த வருடத்தில் இப்பொழுது ஒவ்வொருவரும் நினைக்க வேண்டும். இந்த சேவையின் பிரவிருத்தி குடும்ப (நடைமுறை) வளர்ச்சி அடைந்து கொண்டேயிருக்கின்றது ஆனால், இந்த பிரவிருத்தி முன்னேற்றத்தில் தடை ரூபம் ஆகக்கூடாது. ஒருவேளை, முன்னேற்றத்தில் தடைரூபம் ஆகின்றது என்றால், அதை சேவை என்று கூறமுடியாது. நல்லது. இந்தக் கூட்டம் மிகப் பெரிய கூட்டம். ஒரு சிறிய அணுகுண்டு கூட அதிசயம் செய்து காண்பிக்கிறது என்றால் இத்தனை ஆன்மிக குண்டுகள் (பாம்ஸ்) என்ன செய்ய முடியாது! மேடைக்கு வரப்போகின்றவர்கள் நீங்கள் தானே! பொன்விழா கொண்டாடுபவர்களோ முதுகெலும்பு ஆவார்கள், ஆனால், நடைமுறையில் மேடைக்கு வரப்போகின்றவர்கள் நீங்களே. இப்பொழுது ஏதாவது செய்து காட்டுங்கள். எவ்வாறு பொன்விழா கண்ட நிமித்த ஆத்மாக்களினுடைய அன்பான குழு இருக்கிறது மற்றும் அந்த அன்பான குழுவானது சேவையில் விருத்தி, சேவையில் வெற்றியைப் பிரத்யட்ச பலனாகக் காண்பித்துள்ளதோ, அவ்வாறு அத்தகைய குழுவை

உருவாக்குங்கள், அது கோட்டை போல் இருக்கவேண்டும். எவ்வாறு பொன்விழா கண்ட நிமித்த தீதிகள், தாதிகள் எவரெல்லாம் உள்ளனரோ, அவர்கள் அன்பு மற்றும் குழுவினுடைய சக்தியின் பிரத்யட்ச பலனைக் காண்பித்திருக்கின்றார்கள், எனில், நீங்களும் பிரத்யட்ச பலனைக் காண்பியுங்கள். எனவே, ஒருவருக் கொருவர் அருகாமையில் வருவதற்காக சமமாக ஆக வேண்டும். சமஸ்காரம் வெவ் வேறாகவே உள்ளது மற்றும் அவ்வாறே இருக்கும். இப்பொழுது ஜெகதம்பாவைப் பாருங்கள் மற்றும் பிரம்மாவைப் பாருங்கள். வெவ்வேறு சமஸ்காரம் தான் இருந்தது. இப்பொழுது நிமித்தமாக தீதி, தாதிகள் எவரெல்லாம் உள்ளனரோ, அவர்களுடைய சமஸ்காரம் ஒரே மாதிரி இல்லை, ஆனால், சமஸ்காரங்களை இணக்கமாக ஆக்குவதே அன்பின் பிரமாணம் ஆகும். சமஸ்காரங்கள் இணக்க மானால் தான் குழு உருவாகும் என்று நினைக்காதீர்கள், அவ்வாறு அல்ல. சமஸ்காரங்கள் ஒத்துப்போவதாலேயே குழு உறுதியானதாக ஆகின்றது. நல்லது, இதுவும் நடந்தேறிவிடும். சேவை ஒன்று தான், ஆனால், நிமித்தம் ஆவது, நிமித்த உணர்வோடு நடப்பது -இதுவே விசேஷத்தன்மை ஆகும். இந்த எல்லையைப் போக்கவேண்டும் அல்லவா? இதற்காகவே அனைவரையும் மாற்ற வேண்டும் என்ற யோசனை செய்யப்பட்டது அல்லவா? ஒரு சென்டரில் உள்ளவர்கள் மற்ற சென்டர்களுக்குச் செல்ல வேண்டும். அனைவரும் தயாரா? கட்டளை கொடுக்கப்படும். உங்களுடையது ஹான்ஸ் அப் (உடனடியாக செய்யும் எவரெடி நிலை மற்றும் எதுவும் நமது கைகளில் இல்லை) நிலையல்லவா! மாறுவதில் இலாபமும் உள்ளது. இந்த வருடம் இந்தப் புதிய விசயத்தைச் செய்ய வேண்டும் அல்லவா! மோகத்தை வென்றவராக ஆகி யே தீர வேண்டும். தியாகி, தபஸ்வியாக ஆகி விட்ட உங்களுக்கு இது என்ன பெரிய விசயம்! தியாகமே பாக்கியமாகும். எனவே, பாக்கியத்திற்கு முன்னால் இது தியாகமா என்ன? தானே விரும்பிக் கொடுப்பவர்களுக்குப் பரிசு கிடைக்கின்றது. நீங்கள் அனைவரும் துணிச்சலானவர்கள். மாற்றம் என்றால் மாற்றம் தான். யார் வேண்டுமானாலும் செய்ய முடியும். துணிச்சல் உள்ளது என்றால் இது என்ன பெரிய விசயம். நல்லது, இந்த வருடம் இந்தப் புதுமையைச் செய்யப்போகின்றீர்கள், விருப்பம் தானே! யார் எவரெடி (எப்பொழுதும் தயார் நிலை) என்ற பாடத்தை ஆரம்பத்தி-ருந்து படித்துள்ளார்களோ, அவர்களிடம் இந்த பலம் உள்ளுக்குள் நிறைந்திருக்கும். எந்தவொரு கட்டளையையும் கடைப்பிடிப்பதற்கான பலம் தானாகவே கிடைக்கின்றது. எனவே, சதா ஆக்ஞாகாரி (கட்டளைப்படி நடப்பவர்கள்) ஆகியிருப்பதற்கான

பலம் கிடைத்துள்ளது. நல்லது, சதா சிரேஷ்டமான பாக்கியம் உள்ளது மற்றும் பாக்கியத்தின் காரணமாக சகயோகம் கிடைத்துக் கொண்டேயிருக்கும். புரிந்ததா?

(2) சேவையானது நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் ஆகி ய இரண்டையும் சிரேஷ்டமாக ஆக்கு கின்றது. சேவையின் பலம் குறைந்தது அல்ல. நினைவு மற்றும் சேவை ஆகி ய இரண்டின் சமநிலை வேண்டும். அப்பொழுது சேவை முன்னேற்றத்தின் அனுபவம் செய்விக்கும். நினைவில் இருந்து கொண்டு சேவை செய்வது இயல்பாக வேண்டும். பிராமண வாழ்க்கையின் இயல்பு என்ன? நினைவில் இருப்பது. பிராமணப் பிறப்பு எடுப்பது என்றால் நினைவின் பந்தனத்தில் கட்டப்படுவது என்று அர்த்தம். எவ்வாறு அந்த பிரமாண வாழ்க்கையில் ஏதாவது அடையாளம் வைத்துக் கொள் கிறார்களோ, அதேபோல் இந்த பிராமண வாழ்க்கையின் அடையாளம் நினைவு ஆகும். நினைவில் இருப்பது என்பது இயற்கையானதாக ஆகவேண்டும். ஆகையால், நினைவு தனியாக செய்தேன், சேவை தனியாக செய்தேன் என்பது கூடாது. இரண்டும் இணைந்து இருக்கவேண்டும். நினைவு தனியாக செய்வதற்கும், சேவை தனியாக செய்வதற்கும் நேரம் எங்கு உள்ளது? ஆகையினால், நினைவு மற்றும் சேவை ஆகி ய இரண்டும் இணைந்தே இருக்கவேண்டும். இதன் மூலமே அனுபவியாகவும் ஆகின்றீர்கள், வெற்றியும் பெறுகின்றீர்கள். நல்லது,

**வரதானம்: கர்மங்களின் நிலையை அறிந்து கதி, சத்கதியின் தீர்ப்பு வழங்கக் கூடிய மாஸ்டர் துக்கத்தைப் போக்கி சுகம் அளிப்பவர் ஆகுக!**

இப்பொழுது வரை தனது வாழ்க்கைக் கதையைப் பார்ப்பது மற்றும் சொல்வதில் பிஸியாக இருக்காதீர்கள். அதற்கு பதிலாக, ஒவ்வொருடைய கர்மத்தின் நிலையை அறிந்து கதி, சத்கதி கொடுப்பதற்கான தீர்ப்பு வழங்குங்கள். மாஸ்டர் துக்கத்தைப் போக்கி சுகம் அளிப்பவர் என்ற நடிப்பை நடித்திடுங்கள். தனது படைப்பினுடைய துக்கம், அசாந்திக்கான பிரச்சனையை முடிவடையச் செய்யுங்கள், அவர்களுக்கு மகாதானம் மற்றும் வரதானம் கொடுங்கள். சுயம் தான் வசதிகளைப் பெறாதீர்கள், இப்பொழுது வள்ளல் ஆகி க் கொடுங்கள். வசதிகளின் ஆதாரத்தில் தனது முன்னேற்றம் மற்றும் சேவையில் அல்பகாலத்திற்கு வெற்றி கிடைக்கிறது, ஆனாலும்,

இன்று மகானாக இருப்பீர்கள், நாளை மகான் தன்மையின் தாகம் கொண்ட ஆத்மாவாகி விடுவீர்கள்.

**சுலோகன்: அனுபவம் கிடைக்காமல் இருப்பது என்பது யுத்தத்தின் நிலையாகும். யோகியாகுங்கள், போர்வீரர் ஆகாதீர்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 16.02.1986 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பொன்விழாவுக்கான பொன்னான எண்ணங்கள்!

இன்று பாக்கியத்தை வழங்கும் வள்ளல் தந்தை தம்முடைய நாலாபுறமும் உள்ள பத்மாபதம் பாக்கியவான் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். முழுக் கல்பத்திலும் இத்தகைய ஒரு தந்தை இருக்க முடியாது -அவருடைய அத்தனைக் குழந்தைகளும் பாக்கியவான்! நம்பர்வார் பாக்கியவான்கள் இருந்தாலும் உலகத்தின் இன்றைய உயர்ந்த பாக்கியத்திற்கு முன்னால் கடைசி நம்பர் பாக்கியவான் குழந்தை கூட மிகவும் சிரேஷ்டமானவர். எனவே எல்லையற்ற பாப்தாதாவுக்கு அனைத்துக் குழந்தைகளின் பாக்கியத்தைப் பற்றிய பெருமிதம் உள்ளது. பாப்தாதாவும் கூட சதா ஆஹா! என் பாக்கியவான் குழந்தைகளே, ஆஹா! ஒரே ஈடுபாட்டில் மூழ்கியிருக்கக் கூடிய குழந்தை களே! என்ற பாடலைப் பாடிக் கொண்டே இருக்கிறார். பாப்தாதா இன்று விசேஷமாக அனைத்துக் குழந்தைகளின் அன்பு மற்றும் துணிச்சல், இரண்டு விசேஷங்களுக்காகவும் வாழ்த்துச் சொல்வதற்காக வந்துள்ளார்.

ஒவ்வொருவரும் தகுதிக்கேற்றவாறு அன்பிற்கான பிரதிபலனை சேவையில் காண்பித்தீர்கள். ஒரே ஈடுபாட்டில் ஒரு தந்தையைப் பிரத்தியட்சம் செய்வதற்கான தைரியத்தைப் பிரத்தியட்ச ரூபத்தில் காட்டினீர்கள். அவரவர் காரியத்தை ஊக்கம்-உற்சாகத்துடன் நிறைவு செய்தீர்கள். இந்தக் காரியத்தின் குஷியினுடைய வாழ்த்துக்களை பாப்தாதா கொடுத்துக் கொண்டிருக்கிறார். உள்நாடு-வெளி நாடுகளில் இருந்து முன்னால் வந்துள்ள மற்றும் தூரத்தில் இருந்தாலும் தங்களின் மனதின் சிரேஷ்ட சங்கல்பங்கள் மூலம் மற்றும் சேவையின் மூலம் சகயோகி ஆகி யுள்ளனர் என்பதால் அனைத்துக் குழந்தைகளுக்கும் பாப்தாதா சதா வெற்றியாளர் ஆகுக!, சதா ஒவ்வொரு காரியத்திலும் சம்பன்ன மாகுக! சதா பிரத்தியட்ச பிரமாணம்! ஆகுக என்ற வரதானங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். அனைவரின் சுயமாற்றத்தின், சேவையில் மேலும்

முன்னேறுவதற்கான, சுப ஊக்கம்-உற்சாகத்திற்கான உறுதிமொழிகளை பாப்தாதா கேட்டார். கேட்டீர்கள் இல்லையா – பாப்தாதா விடம் உங்களுடைய சாகார உலகை விடவும் சக்திசாலி டி.வி. உள்ளது. நீங்கள் வெறுமனே சரீரத்தின் செயலை (நடிப்பை)த் தான் பார்க்க முடியும். ஒவ்வொருவரும் என்ன பார்ட் நடித்தார்களோ, அவை அனைத்தும் சங்கல்பங்களுடன் கூடவே, மனதின் நிலைகள் மற்றும் உடலின் நிலைகள் இரண்டையுமே பார்த்தார், கேட்டார். என்ன பார்த்தார்? இன்றோ வாழ்த்துக்களை வழங்குவதற்காக வந்துள்ளோம். அதனால் மற்ற விஷயங்களை இன்று சொல்ல மாட்டோம். பாப்தாதா மற்றும் சேவையில் துணையாக இருக்கும் குழந்தைகள் அனைவரும் மிகவும் குஷியின் கைதட்டலைச் செய்தார்கள். கைகளின் தட்டல் இல்லை, குஷியின் கைதட்டல் செய்தார்கள் -குழு முழுவதிலும் சேவையின் மூலம் இப்போதே பாபாவைப் பிரத்தியட்சம் (வெளிப்படுத்த) செய்து விட வேண்டும், இப்போதே உலகத்தில் சப்தம் பரவிவிட வேண்டும் என்பதற்காக. இந்த ஒரு ஊக்கம்-உற்சாகத்தின் சங்கல்பம் அனைவரிடமும் ஒன்றாக இருந்தது. சொற்பொழிவு செய்பவராக இருந்தாலும் சரி, கேட்பவராக இருந்தாலும் சரி, ஏதாவது ஸ்தூல காரியம் செய்பவராக இருந்தாலும் சரி, அனைவரிடமும் இந்த சங்கல்பம் குஷியின் ரூபத்தில் நன்றாக இருந்தது. அதனால் நாலாபுறமும் குஷியின் ஜொலிப்பு, பிரத்தியட்சம் செய்வதற்கான ஊக்கம், சூழ்நிலையைக் குஷியின் அலைகளில் கொண்டு வருவதாக இருந்தது. பெரும்பாலானவர்கள் குஷி மற்றும் சுயநலமற்ற அன்பு என்ற அனுபவத்தின் பிரசாதத்தை எடுத்துச் சென்றனர். எனவே பாப்தாதாவும் கூட குழந்தைகளின் குஷியில் மகிழ்ந்திருந்தனர். புரிந்ததா?

பொன்விழாவும் கொண்டாடி விட்டீர்கள் இல்லையா? இப்போது அடுத்து என்ன கொண்டாடுவீர்கள்? வைரவிழாவை இங்கேயே கொண்டாடுவீர்களா? அல்லது உங்களது இராஜ்யத்தில் கொண்டாடுவீர்களா? பொன்விழாவை எதற்காகக் கொண்டாடினீர்கள்? பொன்னான உலகைக் கொண்டு வருவதற்காகக் கொண்டாடினீர்கள் இல்லையா? இந்தப் பொன்விழாவின் மூலம் என்ன சிரேஷ்ட மான பொன்னான சங்கல்பம் செய்தீர்கள்? மற்றவர்களுக்கோ பொன்னான எண்ணங்களை நிறைய சொன்னீர்கள். மிக நல்ல எண்ணங்கள் சொன்னீர்கள். தனக்காக முழு வருடமும் ஒவ்வொரு சங்கல்பமும் ஒவ்வொரு கணமும் பொன்மயமாக இருக்கும் வகையில் என்ன பொன்னான சங்கல்பம் செய்தீர்கள்? மக்களோ வெறுமனே

பொன்னான காலைப் பொழுது அல்லது பொன்னான இரவு எனச் சொல்கின்றனர் அல்லது பொன்னான மாலைப் பொழுது எனச் சொல்கின்றனர் ஆனால் அனைவரைவிடவும் உயர்ந்த ஆத்மாக்களாகிய உங்களுக்கோ ஒவ்வொரு விநாடியும் பொன்னான தாக இருக்க வேண்டும். பொன்னான விநாடியாக இருக்க வேண்டும். வெறுமனே பொன்னான காலை அல்லது பொன்னான இரவு என்பதில்லை. ஒவ்வொரு சமயமும் உங்களின் இரண்டு கண்களிலும் பொன்னான உலகம் மற்றும் பொன்னொளியின் இனிய வீடு இருக்க வேண்டும். ஒன்று பொன்னிற ஒளி, மற்றது பொன்னுலகம். இந்த மாதிரி அனுபவம் ஆக வேண்டும். நினைவுள்ளது இல்லையா! ஆரம்பத்தில் ஒரு சித்திரம் உருவாக்கப் பட்டது -ஒரு கண்ணில் முக்தி, இன்னொரு கண்ணில் ஜீவன் முக்தி. இந்த அனுபவம் செய்விக்க வேண்டும். இது தான் பொன்விழாவின் பொன்னான சங்கல்பம். அத்தகைய சங்கல்பத்தை அனுபவம் செய்தீர்களா அல்லது காட்சியை மட்டும் பார்த்துப் பார்த்து மகிழ்ந்து கொண்டே இருந்தீர்களா? பொன்விழா இந்த சிரேஷ்ட காரியத்திற் கானது. காரியத்தின் நிமித்தமாக இருக்கும் நீங்கள் அனைவரும் கூட காரியத்திற்குத் துணையாக இருக்கிறீர்கள். விஷ்வ வித்யாலயத்தின் பொன்விழா. ஒரு நாள் மாணவராக இருந்தாலும் சரி. அவருக்கும் கூட பொன்விழா. மேலும் உருவாக்கப்பட்ட பொன்விழாவுக்கு வந்து சேர்ந்திருக்கிறீர்கள். உருவாக்குவதற்கான முயற்சியை அவர்கள் செய்தார்கள். மேலும் கொண்டாடும் நேரத்தில் நீங்கள் வந்து சேர்ந்தீர்கள். ஆக, அனைவருக்கும் பாப்தாதாவும் பொன்விழா வாழ்த்துகளைக் கூறுகிறார். அனைவரும் இது போல் புரிந்து கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? வெறுமனே பார்ப்பவர்களாகவோ இல்லை தானே? ஆகிறவர்களா? அல்லது பார்ப்பவர்களா? உலகத்தில் அனைத்தையுமே பார்த்து விட்டீர்கள் ஆனால் இங்கே பார்ப்பது என்றால் ஆவது. ஆக, என்ன சங்கல்பம் செய்தீர்கள்? ஒவ்வொரு விநாடியும் பொன்னாக இருக்க வேண்டும். ஒவ்வொரு சங்கல்பமும் பொன்னாக இருக்க வேண்டும். சதா ஒவ்வொரு ஆத்மாவுக் காகவும் அன்பின் குஷியின் பொன்மலர்களைப் பொழியச் செய்து கொண்டே இருங்கள். விரோதி யாக இருந்தாலும் சரி, அன்பின் மழை விரோதியைக் கூட நண்பனாக்கி விடும். யாரேனும் உங்களுக்கு மதிப்பளித்தாலும் சரி, அளிக்கா விட்டாலும் சரி, ஆனால் நீங்கள் எப்போதும் சுவமானில் இருந்து மற்றவர்களுக்கு அன்பின் திருஷ்டியால், அன்பின் விருத்தியால் ஆத்மிக மதிப்பளித்துக் கொண்டே செல்லுங்கள். அவர்

உங்களுக்கு மதிப்பளித்தாலும் சரி, அளிக்கவில்லை என்றாலும் சரி, நீங்கள் அவரை இனிமையான சகோதரர், இனிமையான சகோதரி என மதிப்பளித்துக் கொண்டே செல்லுங்கள். அவர் மதிப்பளிக்காமல் இருக்கலாம், நீங்களோ மதிப்பளிக்க முடியும் இல்லையா? அவர் கல்லை வீசினாலும் நீங்கள் இரத்தினத்தைக் கொடுங்கள். நீங்களும் கல்லை வீசாதீர்கள். ஏனென்றால் நீங்கள் இரத்தின வியாபாரி தந்தையின் குழந்தைகள். இரத்தினங்களின் சுரங்கத்திற்கு மாலிக் (எஜமானர்) நீங்கள். பல கோடிக்கு அதிபதி நீங்கள். பிச்சைக்காரர் இல்லை -அவர் கொடுத்தால் நான் கொடுப்பேன் என்று யோசிப்பதற்கு. இது பிச்சைக்கார சம்ஸ்காரமாகும். வள்ளலின் குழந்தைகள் ஒரு போதும் பெற்றுக் கொள்வதற்காக அல்லது யாசிப்பதற்காகக் கையேந்துவதில்லை. புத்தியாலும் கூட இந்த சங்கல்பம் செய்வது -அதாவது இவர் செய்தால் நான் செய்வேன், இவர் அன்பு செலுத்தினால் நானும் செலுத்துவேன். இவர் எனக்கு மதிப்பளித்தால் நானும் இவருக்கு மதிப்பளிப்பேன். இதுவும் கூட கையேந்துவதாகும். இதுவும் ராயல் பிச்சைக்காரத்தனம் ஆகும். இதில் பலனை எதிர்பார்க்காத யோகி ஆகுங்கள். அப்போது தான் பொன்மய உலகின் குஷியின் அலைகள் உலகம் முழுவதும் சென்றடையும். எப்படி விஞ்ஞானத்தின் சக்தி முழு உலகையும் முடித்து விடுவதற்கான மிகவும் சக்திசாலி சாதனங்களை உருவாக்கியுள்ளது -கொஞ்ச நேரத்திலேயே முடித்து விடுவதற்காக. விஞ்ஞானத்தின் சக்தி அது போல் முன்பை விட சிறந்த பொருட்களை உருவாக்கிக் கொண்டுள்ளது. ஞான சக்தி உள்ள நீங்கள் அந்த மாதிரி சக்திசாலி உள்ளுணர்வு மற்றும் வாயுமண்டலத்தை உருவாக்க வேண்டும் -கொஞ்ச நேரத்தில் நாலாபுறமும் குஷியின் அலைகள், சிருஷ்டியின் சிரேஷ்ட வருங்காலத்தின் அலைகள், மிகவும் விரைவிலும் விரைவாகப் பரவி விட வேண்டும். பாதி உலகம் இப்போது பாதி இறந்ததாக ஆகி விட்டுள்ளது. பயத்தின் சாவினுடைய படுக்கையில் தூங்கி விட்டுள்ளது. அதற்கு குஷியின் அலைகளினுடைய பிராணவாயு கொடுங்கள். இதே பொன் விழாவின் பொன்னான சங்கல்பங்கள் சதா வெளிப்படையான ரூபத்தில் இருக்கட்டும். புரிந்ததா -என்ன செய்ய வேண்டும் என்று? இப்போது இன்னும் வேகததைத் தீவிரப் படுத்த வேண்டும். இது வரை என்ன செய்திருக்கிறீர்களோ, அதை நன்றாகவே செய்திருக்கிறீர்கள். இன்னும் வரப்போகிற காலத்திலும் நன்றாகச் செய்து கொண்டே செல்லுங்கள். நல்லது.

இரட்டை வெளிநாட்டினர்க்கு மிகுந்த ஊக்கம் உள்ளது. இப்போதோ இரட்டை வெளிநாட்டினருக்கான வாய்ப்பாக உள்ளது. அநேகர் வந்து சேர்ந்திருக்கவும் செய்கிறீர்கள். புரிந்ததா? இப்போது அனைவருக்கும் குஷியின் டோலி கொடுங்கள். மனதை மகிழ்விக்கும் மிட்டாய் உள்ளது இல்லையா? ஆக, நன்றாக மனதை மகிழ்விக்கும் மிட்டாயைப் பகிர்ந்தளியுங்கள். நல்லது -சேவாதாரிகளும் குஷியில் நடனமாடிக் கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? நடனமாடுவதால் களைப்பு நீங்கி விடுகிறது. ஆக, சேவையின் அல்லது குஷியின் நடனத்தை அனைவருக்கும் காண்பித்தீர்களா? என்ன செய்தீர்கள்? நடனத்தைக் காட்டினீர்கள் இல்லையா? நல்லது.

சர்வ சிரேஷ்ட பாக்கியவான், விசேஷ ஆத்மாக்களுக்கு, ஒவ்வொரு நொடியையும், ஒவ்வொரு சங்கல்பத்தையும் பொன்மயமாக ஆக்கக் கூடிய அனைத்து கீழ்ப்படிதலான குழந்தைகளுக்கு, சதா வள்ளலின் குழந்தைகளாகி, அனைவரின் பைகளை நிரப்பக் கூடிய, அனைத்தும் நிறைந்த குழந்தைகளுக்கு, சதா விதிகளை உருவாக்குபவர் மற்றும் வரங்களை வழங்கும் வள்ளலாகி, அனைவருக்கும் முக்தி, ஜீவன் முக்தியின் பிராப்தி செய்விக்கக் கூடிய, சதா நிறைவான குழந்தைகளுக்கு பாப்தாதாவின் பொன்னான அன்பின் பொன்னான குஷியின் மலர்களுடன் கூடிய அன்பு நினைவு, வாழ்த்துகள் மற்றும் நமஸ்தே.

**பார்ட்டிகளுடன்**: சதா தந்தை மற்றும் ஆஸ்தி நினைவிருக்கிறதா? தந்தையின் நினைவு தானாகவே ஆஸ்தியையும் நினைவு படுத்தும். மேலும் ஆஸ்தி நினைவிருக்கிறது என்றால் தந்தையின் நினைவு தானாகவே இருக்கும். தந்தை மற்றும் ஆஸ்தி இரண்டும் சேர்ந்தே உள்ளது. ஆஸ்திக்காகத் தான் தந்தையை நினைக்கின்றனர். ஆஸ்தியின் பிராப்தி இல்லை என்றால் தந்தையையும் கூட ஏன் நினைக்க வேண்டும்? ஆக, தந்தை மற்றும் ஆஸ்தி -இந்த நினைவு தான் சதா நிறைவானவர்களாக ஆக்குகிறது. கஜானாக்களால் நிரம்பிய நிலை மற்றும் துக்கம் வேதனைகளி-ருந்து விலகிய நிலை. இரண்டு நன்மைகளும் உள்ளன. துக்கத்திலிருந்து விலகி விடுகின்றனர் மற்றும் கஜானாக்களால் நிரம்பி விடுகின்றனர். அத்தகைய சதா காலத்திற்கான பிராப்தியை பாபாவைத் தவிர வேறு யாராலும் செய்விக்க முடியாது. இந்த நினைவு தான் சதா திருப்தியானவராக, அனைத்தும் நிறைந்த வராக ஆக்கி விடும். எப்படி பாபா கடலாக, அனைத்தும் நிறைந்தவராக இருக்கிறார். எவ்வளவு தான் கடலை

வற்றச் செய்தாலும் கடல் முடிந்து போகாது. கடல் நிரம்பியதாக உள்ளது. ஆக, நீங்கள் அனைவரும் சதா நிரம்பிய ஆத்மாக்கள் தாம் இல்லையா? காலியாகி விட்டால் எங்காவது கையேந்த நேரிடும் ஆனால் நிரம்பிய ஆத்மா சதா குஷியின் ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருப்பார். சுகத்தின் ஊஞ்சலில் ஆடிக் கொண்டே இருப்பார். ஆக, அத்தகைய சிரேஷ்ட ஆத்மாக்களாக ஆகி விட்டீர்கள். சதா நிறைவானவர்களாகவே இருக்கத் தான் வேண்டும். சோதித்துப் பாருங்கள்-கிடைத்துள்ள கஜானாக்களை எது வரை காரியத்தில் ஈடுபடுத்தி யிருக்கிறீர்கள்?

சதா தைரியம் மற்றும் ஊக்கத்தின் இறக்கைகள் மூலம் பறந்து கொண்டே இருங்கள் மற்றும் மற்றவர் களையும் பறக்க வைத்துக் கொண்டே இருங்கள். தைரியம் உள்ளது, ஊக்கம்-உற்சாகம் இல்லை என்றால் கூட வெற்றி இல்லை. ஊக்கம் உள்ளது, தைரியம் இல்லை என்றாலும் வெற்றி இல்லை. இரண்டும் சேர்ந்திருந்தால் பறக்கும் கலை உள்ளது. அதனால் சதா தைரியம் மற்றும் ஊக்கத்தின் இறக்கைகளால் பறந்து கொண்டே இருங்கள். நல்லது.

**வரதானம்: ஈஸ்வரிய ராயல்டியின் சம்ஸ்காரத்தின் மூலம் ஒவ்வொருவரின் சிறப்புகளை வர்ணனை செய்யக்கூடிய புண்ணிய ஆத்மா ஆகுக!**

சதா தன்னை விசேஷ ஆத்மா என உணர்ந்து ஒவ்வொரு சங்கல்பம் மற்றும் கர்மத்தைச் செய்வது மற்றும் ஒவ்வொருவரிடமும் விசேஷத்தையே பார்ப்பது, வர்ணனை செய்வது, அனைவரிடமும் விசேஷத்தை உருவாக்குவதற்கான சுப நன்மையின் விருப்பம் வைப்பது -இது தான் ஈஸ்வரிய ராயல்டி ஆகும். இராயல் ஆத்மாக்கள் மற்றவர்கள் விட்டுச் சென்ற பொருட்களைத் தனக்குள் தாரணை செய்ய மாட்டார்கள். எனவே சதா கவனம் வையுங்கள் -எவருடைய பலவீனம் அல்லது அவகுணத்தையும் பார்க்கிற கண் சதா மூடி இருக்கட்டும். ஒருவர்-மற்றவரின் குணத்தைப் பாடுங்கள். அன்பு, சகயோகத்தின் மலர்களின் கொடுக்கல்-வாங்கல் செய்யுங்கள் -அப்போது புண்ணிய ஆத்மா ஆகி விடுவீர்கள்.

**சுலோகன்: வரதானத்தின் சக்தி பரிஸ்திதி என்ற நெருப்பையும் கூட நீராக மாற்றி விடும்!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 18.02.1986 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# நிரந்தர சேவாதாரி மற்றும் நிரந்தர யோகி ஆகுங்கள்!

இன்று ஞானக் கடலான தந்தை தனது ஞான கங்கைகளைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். ஞானக் கடலிருந்து உருவான ஞான கங்கைகள் எப்படி மற்றும் எங்கெல்லாம் சென்று பாவனமாக்கி (தூய்மை) தற்பொழுது கடல் மற்றும் கங்கையின் சந்திப்பு செய்து கொண்டிருக்கிறீர்கள். இது கங்கை, கடலின் சந்திப்பாகும். இந்த மேளாவில் நாலாபுறங்களிலும் உள்ள கங்கைகள் வந்து சேர்ந்து விட்டீர்கள். பாப்தாதாவும் ஞான கங்கைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றார். ஒவ்வொரு கங்கையிடத்திலும் பதீத உலகை, பதீத மனிதர்களை பாவனமாக ஆக்கியே தீருவோம் என்ற திட நிச்சயம் மற்றும் போதை இருக்கிறது. இந்த நிச்சயம் மற்றும் போதையினால் ஒவ்வொரு வரும் சேவைக் களத்தில் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறீர்கள். விரைவாக மாற்றத்திற்கான காரியம் முடிவடைந்து விட வேண்டும் என்ற ஆர்வம் மனதில் இருக்கிறது. ஞான கங்கைகள் அனைவரும் ஞானக் கடலுக்குச் சமமாக விஷ்வ கல்யாணகாரி, வரதானி மற்றும் மகாதானி, கருணையுள்ளமுடைய ஆத்மாக்களாக இருக்கிறீர்கள். ஆகையால் ஆத்மாக்களின் துக்கம், அசாந்தி யின் ஓசைகளை அனுபவம் செய்து, அவர்களது துக்கம், அசாந்தியை மாற்றக் கூடிய சேவையை தீவிர வேகத்தில் செய்யக் கூடிய ஆர்வம் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. துக்க ஆத்மாக்களின் மனக் குமுறல் கேட்டு கருணை வருகிறது அல்லவா! அனைவரும் சுகமானவர்களாக ஆகி விட வேண்டும் என்ற அன்பு ஏற்படுகிறது. சுகத்தின் கிரணங்கள், அமைதியின் கிரணங்கள், சக்தியின் கிரணங்கள் உலகிற்குக் கொடுப்பதற்கு நிமித்த மாக ஆகியிருக்கிறீர்கள். ஆரம்பத்திலிருந்து இன்று வரை ஞான கங்கைகளின் சேவையானது எந்த அளவிற்கு மாற்றம் ஏற்படுத்துவதற்கு நிமித்தமாக இருக்கிறது என்பதைப் பார்த்துக் கொண்டி ருந்தார். இப்பொழுதும் குறுகிய காலத்தில் அநேக ஆத்மாக்களுக்கு சேவை செய்ய வேண்டும். 50 ஆண்டுகளுக்குள் உள்நாடு, அயல்நாட்டில் சேவைக் கான அஸ்திவாரம் மிக நன்றாகப்

போட்டிருக்கிறீர்கள். நாலா புறங்களிலும் சேவை நிலையங்களை உருவாக்கியிருக்கிறீர்கள். ஓசை பரப்பக் கூடிய சாதனங்களை வித விதமான ரூபத்தில் பயன்படுத்துகின்றீர்கள். இதுவும் சரியாகவே செய்திருக்கிறீர்கள். உள்நாடு, அயல்நாடுகளில் காணாமல் போன குழந்தைகளின் குழு உருவாகியிருக்கிறது மற்றும் உருவாகிக் கொண்டிருக்கும். இப்போது வேறு என்ன செய்ய வேண்டும்? ஏனெனில் இப்போது விதியையும் அறிந்து கொண்டீர்கள். அநேக சாதனங்களையும் சேர்த்துக் கொண்டிருக்கிறீர்கள் மற்றும் சேர்த்திருக்கிறீர்கள். சுய ஸ்திதி, சுய முன்னேற்றம் இதன் மீதும் கவனம் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் மற்றும் ஏற்படுத்து கிறீர்கள். இப்போது பாக்கி என்ன இருக்கிறது? ஆரம்பத்தில் ஆதி இரத்தினங்கள் ஆர்வம், உற்சாகத் துடன் உடல், மனம், பொருள், நேரம், சம்பந்தம், இரவுலிபகல் அனைத்தையும் தந்தைக்கு சமர்பணம் செய்தனர், அந்த ஆர்வம், உற்சாகம் நிறைந்த சமர்பணத்தின் பலனாக சேவையில் சக்திசாலி ஸ்திதியை கண் கூடாகப் பார்த்தீர்கள். சேவை ஆரம்பமான போது, சேவையின் ஆரம்பம் மற்றும் ஸ்தாபனையின் ஆரம்பம் இரண்டு கால கட்டத்திலும் இந்த விசேஷத்தைப் பார்த்தீர்கள். ஆதியில் பிரம்மாபாபாவை நடந்தாலும், காரியங்கள் செய்தாலும் சாதாரண ரூபத்தில் பார்த்தீர்களா அல்லது கிருஷ்ணர் ரூபத்தில் பார்த்தீர்களா? சாதாரண ரூபத்தில் பார்த்தாலும் தென்படவில்லை, இந்த அனுபவம் இருக்கிறது அல்லவா! இவர் தாதா என்று நினைத்திருப்பீர்களா? நடந்தாலும், காரியங்கள் செய்யும் போதும் கிருஷ்ணராக அனுபவம் செய்தீர்கள். இவ்வாறு செய்தீர்கள் அல்லவா! ஆரம்பத்தில் பிரம்மாபாபாவிடம் இந்த விசேஷத்தைப் பார்த்தீர்கள், அனுபவம் செய்தீர்கள். மேலும் சேவையின் ஆரம்பத்தில் எங்கு சென்றாலும் அனைவரும் தேவிகளாகத் தான் அனுபவம் செய்தனர். தேவிகள் வந்திருக்கின்றனர் என்ற வார்த்தை தான் அனைவரும் கூறினர். இவர்கள் ஆன்மீக மானவர்கள் என்ற வார்த்தை தான் அனைவரின் வாயிலிருந்தும் வெளிப்பட்டது. இவ்வாறு தான் அனுபவம் செய்தனர் அல்லவா? தேவிகள் என்ற இந்த பாவனை தான் அனைவரையும் ஈர்ப்பு செய்து சேவையை அதிகப் படுத்துவதற்கு நிமித்தமானது. ஆக ஆரம்பத்திலும் விடுபட்ட நிலையின் (நியாரா) விசேஷம் இருந்தது. சேவையின் ஆரம்பத்திலும் விடுபட்ட நிலை, தேவிகள் என்ற விசேஷம் இருந்தது. இப்போது கடைசியிலும் அதே ஒளி மற்றும் ஜொலிப்பின் ரூபத்தை அனுபவம் செய்வார்கள். அப்போது தான் பிரத்டசயதா என்ற முரசு ஒலிக்கும். இப்போது

பாக்கி இருக்கும் சிறிது காலத்தில் நிரந்தர யோகி, நிரந்தர சேவாதாரி, நிரந்தர சாட்சாத்கார சொரூபம், நிரந்தர சாட்சாத் பாபா என்ற விதியின் மூலம் வெற்றியைப் பலனாக அடைவார்கள். பொன்விழா கொண்டாடி யிருக்கிறீர்கள் எனில், கோல்டன் உலகின் சாட்சாத்கார சொரூபம் வரை சென்றடைந்திருக்கிறீர்கள். பொன்விழா கொண்டாடி யதில் அனைவரும் சாட்சாத் தேவியின் அனுபவம் செய்தனர், தேவியாக அமர்ந்தவர்களும், பார்ப்பவர் களும் அனுபவம் செய்தனர். நடந்தாலும், காரியங்கள் செய்தாலும் இப்போது இதே அனுபவத்தை சேவையில் செய்வித்துக் கொண்டிருக்க வேண்டும். இது தான் கோல்டன் ஜூபிலி கொண்டாடுவதாகும். அனைவரும் கோல்டன் ஜூபிலி கொண்டாடினீர்களா? அல்லது பார்த்தீர்களா? என்ன கூறுவீர்கள்? உங்கள் அனைவருக்கும் கோல்டன் ஜூபிலி அல்லவா! அல்லது சிலருக்கு வெள்ளி விழா, சிலருக்கு தாமிர விழாவாக இருக்கிறதா? அனைவருக்கும் கோல்டன் ஜூப்ளி ஆகும். கோல்டன் ஜூபிலி கொண்டாடுவது என்றால் நிரந்தரமாக கோல்டன் ஸ்திதியுடையவர் களாக ஆவதாகும். இப்போது நடந்தாலும், காரியங்கள் செய்தாலும் நான் பரிஸ்தா மற்றும் தேவதை என்ற அனுபவத்தில் செய்யுங்கள். உங்களது இந்த சக்திசாலியான நினைவின் மூலம் மற்றவர்களுக்கும் உங்களது பரிஸ்தா ரூபம் அல்லது தேவி தேவதா ரூபம் மட்டுமே தென்படும். கோல்டன் ஜூபிலி கொண்டாடி இருக்கிறீர்கள் எனில், இப்போது நேரம் மற்றும் சங்கல்பத்தை சேவையில் அர்ப்பணம் செய்யுங்கள். இப்போது இந்த சமர்ப்பண விழா கொண்டாடுங்கள். சுயத்தின் சிறிய சிறிய விசயங்களுக்காக அதாவது உடல், மனம், சாதனங்கள், சம்பந்தங்கள் போன்றவைகளுக்காக தனது நேரம் மற்றும் சங்கல்பத்தை பயன்படுத்தாதீர்கள். சேவையில் பயன்படுத்துவது என்றால் சுய முன்னேற்றத்திற்கான பரிசு தானாகவே பலனாக கிடைக்கும். இப்போது தனக்காக நேரத்தைப் பயன்படுத்துவதை மாற்றம் செய்யுங்கள். பக்தர்கள் சுவாசத்திற்கு சுவாசம் நாமம் ஜெபிப்பதற்கு முயற்சி செய்வது போல் சுவாசத்திற்கு சுவாசம் சேவையில் ஆர்வம் இருக்க வேண்டும். சேவையில் மூழ்கியிருக்க வேண்டும். விதாதா ஆகுங்கள், வரதாதா ஆகுங்கள். நிரந்தர மகாதானி ஆகுங்கள். 4 மணி நேரம், 6 மணி நேர சேவாதாரி அல்ல. இப்போது விஷ்வ கல்யாணகாரி என்ற மேடையில் இருக்கிறீர்கள். ஒவ்வொரு நேரமும் உலக நன்மைக்காக சமர்ப்பணம் செய்யுங்கள். உலக நன்மையில் சுய நன்மையும் தானாகவே அடங்கியிருக்கும். சங்கல்பம் மற்றும் விநாடி சேவையில் பிஸியாக வைத்துக் கொள்வீர்களோ, நேரம்

இல்லையோ, பிறகு மாயைக்கும் உங்களிடம் வருவதற்கு நேரம் இருக்காது. பிரச்சனைகள் சமாதான சொரூபமாக மாறிவிடும். சமாதான சொரூபமுடைய சிரேஷ்ட ஆத்மாக்களிடம் பிரச்சனைகள் வருவதற்கான தைரியம் இருக்காது. சேவையின் ஆரம்பத்தில் தேவியின் ரூபம், சக்தியின் ரூபத்தின் காரணத்தினால் பதீத திருஷ்டியுடன் வந்தவர்களும் மாறி பாவனம் ஆகக் கூடிய மனிதர்களாக ஆகி விட்டனர். எவ்வாறு பதீதமானவர்கள் உங்கள் முன் வந்து மாறி விட்டார்களோ, அவ்வாறு பிரச்சனைகளும் உங்கள் முன் வந்து சமாதான ரூபமாக மாறி விடும். இப்போது தனது சம்ஸ்கார மாற்றத்தில் நேரத்தைப் பயன்படுத்தாதீர்கள். உலக நன்மைக்கான சிரேஷ்ட பாவனையின் மூலம் சிரேஷ்ட விருப்பத்திற்கான சம்ஸ்காரத்தை வெளிப்படுத்துங்கள். இந்த சம்ஸ்கார மாற்றத்திற்கு சிரேஷ்ட நேரத்தை வீணாக்காதீர்கள். இந்த சிரேஷ்ட சம்ஸ்காரத்திற்கு முன் எல்லைக்குட்பட்ட சன்ஸ்காரம் தானாகவே அழிந்து விடும். இப்போது சண்டையிடுவதில் நேரத்தை வீணாக்காதீர்கள். வெற்றியாளருக்கான சம்ஸ்காரத்தை வெளிப்படுத்துங்கள். வெற்றி சம்ஸ்காரமுடையவர்கள் முன் எதிரி தானாகவே அழிந்து விடும், ஆகையால் உடல், மனம், பொருள் நிரந்தரமாக சேவையில் சமர்ப்பணம் செய்யுங்கள் என்று கூறப்படுகிறது. மனதினால் செய்தாலும், வார்த்தைகளினால் செய்தாலும், கர்மனா சேவை செய்தாலும் சரியே, ஆனால் சேவையின்றி வேறு எந்த பிரச்சனை களிலும் செல்லாதீர்கள். தானம், வரதானம் கொடுத்தால் தனது கிரஹச்சாரம் தானாகவே அழிந்து விடும். அழிவற்ற நங்கூரம் போடுங்கள், ஏனெனில் நேரம் குறைவாக இருக்கிறது, மேலும் ஆத்மாக்களின் சேவை, வாயுமண்டலம், இயற்கை, பூத ஆத்மாக்களின் போன்ற அனைத்திற்கும் சேவை செய்ய வேண்டும். அலையக் கூடிய அந்த ஆத்மாக்களுக்கும் அடைக்கலம் கொடுக்க வேண்டும். முக்திதாமத்திற்கு அனுப்பி வைப்பீர்கள் அல்லவா! அவர்களுக்கு வீடு கொடுப்பீர்கள் அல்லவா! ஆக இப்போது எவ்வளவு சேவை செய்ய வேண்டியிருக்கிறது! ஆத்மாக்களின் எண்ணிக்கை எவ்வளவு இருக்கிறது! ஒவ்வொரு ஆத்மாவிற்கும் முக்தி அல்லது ஜீவன்முக்தி கொடுத்தே ஆக வேண்டும். அனைத்தையும் சேவையில் பயன்படுத்தி சிரேஷ்ட பலனை அடையுங்கள். கடின உழைப்பின் பலனை அடைய வேண்டாம். சேவையின் பலன் கடின உழைப்பைப் போக்கி விடும்.

பாப்தாதா ரிசல்ட் பார்த்த பொழுது பலர் தனது சம்ஸ்காரங்களை மாற்றிக் கொள்வதிலேயே நேரம் கொடுக்கின்றனர். 50 ஆண்டு காலம் ஆகியிருந்தாலும், ஒரு மாதம் ஆகியிருந்தாலும் ஆரம்பத்திலிருந்து இன்று வரை பரிவர்த்தனை செய்யும் சம்ஸ்காரம் மூல ரூபமாக இருக்கிறது, மேலும் அதே மூல சம்ஸ்காரம் வித விதமான ரூபத்தில் பிரச்சனையாக வருகிறது. உதாரணத்திற்கு சிலருக்கு புத்திக்கான அபிமானத்தின் சம்ஸ்காரம் இருக்கும், சிலருக்கு வெறுப்பிற்கான சம்ஸ்காரம் இருக்கிறது அல்லது சிலருக்கு மனம் உடைந்து போகக் கூடிய சம்ஸ்காரம் இருக்கும். சம்ஸ்காரம் அது தான், ஆனால் ஆரம்பத்திலிருந்து இன்று வரை வித விதமான நேரத்தில் வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. 50 ஆண்டுகள் ஆகியிருந்தாலும், ஒரு மாதம் ஆகியிருந் தாலும்! இவ்வாறு வித விதமான ரூபத்தில் பிரச்சனையாக வரக் கூடிய அந்த மூல சம்ஸ்காரத்தில் அதிக நேரம் பயன்படுத்தியிருக்கிறீர்கள், சக்திகளையும் அதிகமாக பயன்படுத்தியிருக்கிறீர்கள். இப்போது தாதா, விதாதா, வரதாதா என்ற சக்திசாலியான சம்ஸ்காரத்தை வெளிப்படுத்துங்கள். ஆக இந்த உயர்ந்த சம்ஸ்காரம் பலவீன சம்ஸ்காரத்தை தானாகவே அழித்து விடும். இப்போது சம்ஸ்காரத்தை அழிப்பதில் நேரத்தைப் பயன்படுத்தாதீர்கள் ஆனால் சேவையின் பலன் மூலம், பலனின் சக்தியின் மூலம் தானாகவே அழிந்து விடும். நல்ல ஸ்திதியுடன் சேவையில் பிசியாக இருக்கும் போது சேவையின் குஷியினால் அந்த நேரத்தில் பிரச்சனைகள் தானாகவே மறைந்து விடுகிறது என்ற அனுபவமும் இருக்கிறது. ஏனெனில் பிரச்சனைகளைப் பற்றி சிந்திப்பதற்கு நேரமே இல்லை. ஒவ்வொரு விநாடி, ஒவ்வொரு சங்கல்பத்திலும் சேவையில் பிசியாக இருந்தால் பிரச்சனைகளின் நங்கூரம் துண்டிக்கப்பட்டு விடும், தூரமாகி விடும். நீங்கள் மற்றவர்களுக்கு வழி காட்டுவதில், தந்தையின் பொக்கிஷங்களைப் கொடுப்பதற்கு நிமித்த உதவியாளர் ஆகின்றபோது பலவீனங்கள் தானாகவே தூரமாகி விடும். இப்போது என்ன செய்ய வேண்டும்? என்பதைப் புரிந்து கொண்டீர் களா? இப்போது எல்லையற்று சிந்தியுங்கள், எல்லையற்ற காரியத்தைப் பற்றி சிந்தியுங்கள். திருஷ்டி மூலம் கொடுங்கள், விருத்தியின் மூலம் கொடுங்கள், வார்த்தைகளினால் கொடுங்கள், சகவாசத்தின் மூலம் கொடுங்கள், வைப்ரேஷன் மூலம் கொடுங்கள், ஆனால் கொடுத்தே ஆக வேண்டும். பக்தியிலும் இந்த நியமம் இருக்கிறது -எந்த ஒரு பொருளில் குறை யிருக்கிறதோ அதை தானம் செய்யுங்கள் என்று கூறுவார்கள். தானம் செய்வதன் மூலம் கொடுப்பது, அடைவது ஏற்பட்டு விடுகிறது. கோல்டன்

ஜூப்ளி என்றால் என்ன என்று புரிந்து கொண்டீர்களா? கொண்டாடி விட்டோம் என்று நினைக்காதீர்கள். 50-ஆண்டு கால சேவை முடிவடைந்து விட்டது, இப்போது புதிதாக செய்யுங்கள். சிறியவர்கள்லிபெரியவர்கள், ஒரு நாள் வந்தவர்கள் அல்லது 50-ஆண்டு காலமாக இருப்பவர்கள் அனைவரும் சமாதான சொரூபம் ஆகுங்கள். என்ன செய்ய வேண்டும் என்று புரிந்து கொண்டீர்களா? பொதுவாக 50-ஆண்டுகள் கழித்து வாழ்க்கையில் மாற்றம் ஏற்படும். கோல்டன் ஜூப்ளி என்றால், மாற்றத்திற்கான ஜூப்ளி, சம்பன்னம் (முழுமை) ஆகக் கூடிய ஜூப்ளி ஆகும்.

சதா விஷ்வ கல்யாணகாரியாகி சக்திசாலியாக இருக்கக் கூடியவர்களுக்கு, சதா வரதானி, மகாதானி ஸ்திதியில் நிலைத்திருக்கக் கூடியவர்களுக்கு, மற்றவர்களுக்கு சமாதான சொரூபமாகி தனது பிரச்சனைகளை எளிதாக அழிக்கக் கூடியவர்களுக்கு, ஒவ்வொரு நேரத்திலும் ஒவ்வொரு சங்கல்பத்தையும் சேவையில் சமர்பணம் செய்யக் கூடியவர்களுக்கு, இவ்வாறு உண்மையான கோல்ட் விசேஷ ஆத்மாக்களுக்கு, பாப்சமான் சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

**கோல்டன் ஜூப்ளி கொண்டாடும் ஆதி இரத்தினங்களுடன் பாப்தாதாவின் சந்திப்பு:** ஆரம்பத்திலிருந்து ஆத்மாக்களாகிய நாம் கூடவே இருக்கக் கூடிய மற்றும் துணையாக இருக்கக் கூடிய இரண்டு விசேஷ பாகமும் நமக்குத் கிடைத்திருக்கிறது என்ற விசேஷ குஷி சதா இருக்கிறது. கூடவே இருக்கிறீர்கள் மற்றும் உயிருடன் இருக்கும் வரை பாப்சமான் ஸ்திதியிலும் சதா துணையாக இருக்க வேண்டும். ஆக கூடவே இருக்க வேண்டும் மற்றும் துணையாக இருக்க வேண்டும் இந்த விசேஷ வரதானம் ஆரம்பத்திலிருந்து கடைசி வரை கிடைத்திருக்கிறது. அன்பின் மூலம் பிறப்பு ஏற்பட்டது, முன்பு ஞானம் இல்லையல்லவா! அன்பினால் தான் உருவாகியிருக்கிறீர்கள், எந்த அன்பினால் உருவானீர்களோ அதே அன்பு அனைவருக்கும் கொடுப்பதற்கு நிமித்தமாக இருக்கிறீர்கள். எதிரில் யார் வந்தாலும் அனைவரின் மூலம் விசேஷமாக உங்கள் தந்தையின் அன்பின் அனுபவம் செய்ய வேண்டும். உங்கள் மூலம் தந்தையின் சித்திரம் மற்றும் உங்களது நடத்தையின் மூலம் தந்தையின் சரித்திரம் தென்பட வேண்டும். ஒருவேளை யாராவது தந்தையின் சரித்திரம் என்ன? என்று கேட்டால் உங்களது நடத்தைகள் சரித்திரமாக காண்பிக்க வேண்டும், ஏனெனில் சுயம்

தந்தையின் சரித்திரத்தைப் பார்த்திருக்கிறீர்கள், கூடவே இருந்த ஆத்மாக்கள் நீங்கள். அது ஒரு தந்தையின் சரித்திரம் மட்டுமல்ல, கோபிகளின் நாயகன் மற்றும் கோபியர்களின் சரித்திரமாகும். தந்தை குழந்தைகளின் துணையுடன் தான் ஒவ்வொரு காரியமும் செய்திருக் கின்றார், தனியாக செய்யவில்லை. குழந்தைகளை சதா முன்னிறுத்தினார். ஆக முன்னிறுத்துவது இதுவும் சரித்திரம் அல்லவா! இப்படிப்பட்ட சரித்திரம் விசேஷ ஆத்மாக்களாகிய உங்கள் மூலம் தென்பட வேண்டும். ஒருபோதும் நான் முன்னால் இருக்க வேண்டும் என்ற சங்கல்பம் ஒருபோதும் தந்தை செய்தது கிடையாது. இதிலும் சதா தியாகியாக இருந்தார், மேலும் இந்த தியாகத்தின் பலனாக அவர் முன்னால் வந்தார். ஒவ்வொரு விசயத்திலும் பிரம்மாபாபா நம்பர் ஒன்னாக ஆனார். ஏன்? முன் வைப்பது என்றால் முன்னால் செல்வதாகும், இந்த தியாக உணர்வின் மூலம். சம்பந்தங் களின் தியாகம், பொருட்களின் தியாகம் இது ஒன்றும் பெரிய விசயமில்லை ஆனால் ஒவ்வொரு காரியத்திலும், சங்கல்பத்திலும் மற்றவர்களை முன்னால் வைப்பதற்கான பாவனை. இந்த தியாகம் சிரேஷ்ட தியாகமாக இருந்தது. இதைத் தான் சுய உணர்வை அழித்து விடுவது என்று கூறப்படுகிறது. நான் என்பதை அழித்து விடுவது. ஆக நேரடியாக பாலனை அடைந்தவர்களிடத்தில் விசேஷ சக்திகள் இருக்கிறது. நேரடிப் பாலனையின் சக்தி குறைந்தது கிடையாது. அதே பாலனையை இப்போது மற்றவர்களது பாலனையாக வெளிப் படுத்திக் கொண்டே செல்லுங்கள். விசேஷமானவர் களாகத் தான் இருக்கிறீர்கள். அநேக விசயங்களில் விசேஷ மானவர்களாக இருக்கிறீர்கள். ஆரம்பத்திலிருந்து தந்தையின் கூடவே நடிப்பு நடித்திருக்கிறீர்கள், இது ஒன்றும் குறைந்த விசேஷங்கள் கிடையாது. விசேஷங்கள் பல இருக்கின்றன, ஆனால் விசேஷ ஆத்மாக்களாகிய நீங்கள் தானமும் விசேஷமாக செய்ய வேண்டும். ஞான தானம் அனைவரும் செய்கின்றனர், ஆனால் நீங்கள் தங்களது விசேஷங்களை தானம் செய்ய வேண்டும். தந்தையின் விசேஷங்கள் தான் உங்களது விசேஷங்கள் ஆகும். எனவே அந்த விசேஷங்களைத் தானம் செய்யுங்கள். யார் விசேஷங்களை தானம் செய்வதில் மகாதானியாக இருக்கிறார்களோ அவர்கள் சதா காலத்திற்கும் மகானாக இருப்பார்கள். பூஜ்ய நிலையிலும் சரி, பூஜாரி நிலையிலும் சரி, முழு கல்பத்திலும் மகான்களாக இருப்பர். பிரம்மாபாபாவை பார்த்திருக்கின்றீர்கள் கடைசியிலும் கலியுகத்தின் கணக்கிலும் மகானாக இருந்தார் அல்லவா! ஆக ஆரம்பத்திலிருந்து கடைசி வரை இப்படிப்பட்ட மகாதானிகள்

மகான்களாக இருப்பார்கள். நல்லது, உங்களைப் பார்த்து அனைவரும் குஷியடைந் தனர் எனில் குஷி கொடுத்திருக்கிறீர்கள் அல்லவா! மிகவும் நன்றாகக் கொண்டாடினீ ர்கள். அனவைரையும் மகிழ்வித்தீர்கள். பாப்தாதா விசேஷ ஆத்மாக்களின் விசேஷ காரித்தைப் பார்த்து மகிழ்ச்சியடைகின்றார். அன்பு மாலை தயாராக இருக்கிறது அல்லவா! முயற்சியாளர்களின் மாலை, சம்பூர்ணமானவர்களின் மாலை இது சரியான நேரத்தில் வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது.

யார் எந்த அளவிற்கு சம்பூர்ண பரிஸ்தா என்று அனுபவம் செய்கிறார்களோ அவர்கள் மாலையில் மணியாக வருகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். அவர்கள் தகுந்த நேரத்தில் வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் ஆனால் அன்பு என்ற மாலை உறுதியாக இருக்கிறது அல்லவா! அன்பு மாலையின் மணிகள் சதா அமரர்களாக இருக்கின்றனர், அழிவற்றவர்களாக இருக்கின்றனர். அன்பு என்ற விசயத்தில் அனைவரும் பாஸ் மார்க் அடையக் கூடியவர்கள். மற்றபடி சமாதான சொரூபத்தின் மாலை தயாராக வேண்டும். சம்பூர்ணம் என்றால் சமாதான சொரூபம். பிரம்மாபாபாவிடம் பிரச்சனையை கொண்டு செல்பவர்களும் பிரச்சனையை மறந்து விடுவதை பார்த்திருக்கிறீர்கள். எதைக் கொண்டு வந்தோம், எதைக் கொண்டு செல்கின்றோம்! இந்த அனுபவம் செய்திருந்தனர் அல்லவா! பிரச்சனைகளுக்கான விசயங்கள் பேசுவதற்கான தைரியமின்றி இருந்தனர், ஏனெனில் சம்பூர்ண நிலைக்கு முன் பிரச்சனைகள் என்பது குழந்தைகள் விளை யாட்டாக அனுபவம் செய்தார்கள். அதனால் தான் அழிந்து விட்டது. இது தான் சமாதான சொரூபம் என்று கூறப்படுகிறது. ஒவ்வொருவரும் சமாதான சொரூபம் ஆகி விட்டால் பிறகு பிரச்சனைகள் எங்கு செல்லும்? அரை கல்பத்திற்கு விடை பெறும் விழா நடந்து விடும். இப்போது உலக பிரச்சனை களுக்கு சமாதானம் தான் பரிவர்த்தனை ஆகும். ஆக எந்த கோல்டன் ஜுப்ளி கொண்டாடினீர்கள்? வளைந்து கொடுக்கும் ஜுப்ளி கொண்டாடினீர்கள். எது வளைந்து கொடுக்கிறார்களோ அதை எந்த ரூபத்தில் கொண்டு வர விரும்பினாலும் அந்த ரூபத்தில் கொண்டு வர முடியும். வளைந்து கொடுப்பது என்றால் அனைவருக்கும் பிரியமானவர்களாக ஆவதாகும். இருப்பினும் அனைவரின் பார்வை நிமித்தமாக இருப்பவர்களின் மீது இருக்கிறது. நல்லது.

**வரதானம்: சிரேஷ்டதாவின் ஆதாரத்தில் அருகாமையின் மூலம் சிரேஷ்ட பிராப்தியை உருவாக்கக் கூடிய விசேஷ நடிப்பு நடிப்பவர் ஆகுக!**

இந்த மறுபிறவி வாழ்க்கையில் சிரேஷ்டதாவிற்கு ஆதாரம் இரண்டு விசயங்களாகும் 1) சதா பரோபகாரியாக இருப்பது, 2) பால பிரம்மச்சாரியாக இருப்பது. எந்த குழந்தைகள் இந்த இரண்டு விசயங்களிலும் ஆரம்பத்திலிருந்து கடைசி வரை உறுதியாக இருக்கிறார்களோ, எந்த வகையிலும் தூய்மை அடிக்கடி துண்டிக்கப்படவில்லையோ அதாவது உலகத்திற்கு மற்றும் பிராமண குடும்பத்தினருக்கும் சதா உபகாரிகளாக இருக்கிறார்களோ இப்படிப்பட்ட விசேஷ நடிப்பு நடிப்பவர்கள் சதா பாப்தாதாவின் அருகாமையில் இருப்பர். மேலும் அவர்களது பிராப்தியானது முழு கல்பத்திற்கும் சிரேஷ்டமானதாக ஆகி விடும்.

**சுலோகன்: எண்ணங்கள் வீணானதாக இருந்தால் மற்ற அனைத்து பொக்கிஷங்களும் வீணாகி விடும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 20.02.1986 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பறக்கும் கலை மூலம் அனைவருக்கும் நன்மை!

இன்று விசேஷமாக இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகளுக்கு வாழ்த்து சொல்வதற்காக வந்துள்ளோம். ஒன்று... தூர தேசத்தின் பலவித மதங்களில் சென்ற போதும் அருகில் பாரதத்தில் வசிக்கும் அநேக ஆத்மாக்களை விடவும் விரைவாகத் தந்தையை அறிந்து கொண்டு விட்டீர்கள். தந்தையை அறிந்து கொள்வது என்றால் தனது பாக்கியத்தை அடைந்ததற்கான வாழ்த்து மற்றும் இரண்டாவது எப்படி தீவிர வேகத்தில் அறிந்து கொண்டீர்களோ, அதே போல் தீவிர வேகத்தில் சேவையில் தங்களை ஈடுபடுத்தினீர்கள். ஆகவே சேவையில் தீவிர வேகத்தில் முன்னேறுவதற்கான இரண்டாவது வாழ்த்து. சேவையின் விருத்தியின் வேகம் தீவிரமாக இருந்து கொண்டுள்ளது. மேலும் இனி வருங்காலத்திலும் இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகள் விசேஷமான காரியத்திற்காக நிமித்தமாக ஆவார்கள். பாரதத்தின் நிமித்த ஆதிரத்தின ஆத்மாக்கள் ஸ்தாபனையின் காரியத்தில் மிகவும் பலமான அஸ்திவாரத்தை அமைத்து, காரியத்தின் ஸ்தாபனை செய்தனர் மற்றும் இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகள் நாலாபுறமும் செய்தியைப் பரப்புவதில் தீவிர வேகமான சேவை செய்துள்ளனர் மற்றும் செய்து கொண்டே இருப்பார்கள். ஆகவே பாப்தாதா அனைத்துக் குழந்தைகளுக்கும் வந்தவுடனே, ஜென்மம் எடுத்த உடனே மிக விரைவாக சேவையில் முன்னேறிச் செல்வதற்கான விசேஷ வாழ்த்தினைக் கொடுத்துக் கொண்டி ருக்கிறார். குறைந்த காலத்தில் வெவ்வேறு தேசங்களில் சேவை விஸ்தரிக்கப் பட்டுள்ளது. எனவே செய்தியைப் பரப்புவதற்கான காரியம் சகஜமாக விருத்தியடைந்து கொண்டிருக்கிறது. மேலும் சதா டபுள் லைட் ஆகி, இரட்டைக் கிரீடதாரி ஆவதற்கான முழுமையான அதிகாரத்தை அடைவதற்கான தீவிர புருஷர்த்தத்தை அவசியம் செய்வார்கள். இன்று விசேஷமாக சந்திப்பதற்காக வந்துள்ளோம். பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார், அனைவரின் மனதிலும் குஷியின் இசை ஒலித்துக் கொண்டிருக்கிறது.

குழந்தைகளின் குஷியின் இசை, குஷியின் பாடல் பாப்தாதாவுக்குக் கேட்கிறது. நினைவு மற்றும் சேவையில் ஈடுபாட்டுடன் முன்னேறிக் கொண்டிருக்கின்றனர். நினைவும் உள்ளது, சேவையும் உள்ளது ஆனால் இப்போது அதிகப்படியாக எது வரப்போகிறது? இரண்டுமே உள்ளது என்றாலும் சதா இரண்டினுடைய சமநிலை இருக்க வேண்டும். இந்த சமநிலை தன்னையும் மற்றும் சேவையில் பாபாவின் ஆசீர்வாதங்களை அனுபவம் செய்தவராக ஆக்குகிறது. சேவையின் ஊக்கம்-உற்சாகம் இருக்கிறது. இப்போது இன்னும் கூட சேவையில் நினைவு மற்றும் சேவையின் சமநிலை வைப்பதன் மூலம் அதிக சப்தம் உலகத்தில் கேட்கும். நன்கு விஸ்தாரம் செய்திருக்கிறீர்கள். விஸ்தாரத்திற்குப் பிறகு என்ன செய்யப்படுகிறது? விஸ்தாரத்தோடு கூடவே இப்போது இன்னும் கூட சேவையின் சாரம், அந்த மாதிரி ஆத்மாக்களை நிமித்தமாக ஆக்க வேண்டும் --அந்த விசேஷ ஆத்மாக்கள் பாரதத்தின் விசேஷ ஆத்மாக்களை எழுப்ப வேண்டும். இப்போது பாரதத்திலும் சேவையின் வடிவமைப்பு சமயத்தின் பிரமாணம் முன்னேறிச் சென்று கொண்டே இருக்கிறது. அரசியல் தலைவர்கள், தர்மத் தலைவர்கள் மற்றும் அதோடு கூடவே நடிகர்கள் கூட தொடர்பில் வந்து கொண்டிருக்கிறார்கள். மீதி யார் இருக்கிறார்கள்? தொடர்பிலோ வந்து கொண்டிருக்கிறார்கள். தலைவர்களும் வந்து கொண்டிருக்கிறார்கள் ஆனால் விசேஷமாக அரசியல் தலைவர்கள் வரை கூட சமீப-தொடர்பில் வருவதற்கான சங்கல்பம் உருவாகத் தான் வேண்டும்.

இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகள் அனைவரும் பறக்கும் கலையில் சென்று கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? ஏறும் கலையினரோ இல்லை தானே? பறக்கும் கலை உள்ளதா? பறக்கும் கலை உள்ளது என்றால் அனைவருக்கும் நன்மை ஏற்படுவதாகும். எப்போது அனைத்துக் குழந்தைகளுக்கும் ஒரே மாதிரி பறக்கும் கலை வந்து விடுகிறதோ, அப்போது அனைவருக்கும் நன்மை, அதாவது மாற்றத்தின் காரியம் முடிவடைந்து விடும். இப்போது பறக்கும் கலை உள்ளது ஆனால் பறப்பதோடு கூடவே பல நிலைகள் (ஸ்டேஜஸ்) உள்ளன. சில நேரம் மிக நல்ல ஸ்டேஜ் உள்ளது, இன்னும் சில நேரம் ஸ்டேஜுக்காகப் புருஷர்த்தம் செய்கிற ஸ்டேஜ் உள்ளது. சதா மற்றும் பெரும்பான்மையினருக்குப் பறக்கும் கலை ஏற்படுகிறது என்றால் முடிவு வந்து விட்டது என்று அர்த்தம். இப்போது குழந்தைகள் அனைவரும் அறிவார்கள், பறக்கும் கலை தான் சிரேஷ்ட ஸ்திதி ஆகும். பறக்கும் கலை தான் கர்மாதீத் ஸ்திதியை அடைவதற்கான

ஸ்திதியாகும். பறக்கும் கலை தான் தேகத்தில் இருந்தவாறே தேகத்திலிருந்து விலகியும், சதா பாபா மற்றும் சேவை மீது அன்பு கொண்ட ஸ்திதி யாகும். பறக்கும் கலை தான் பாக்கியத்தைத் தரும் வள்ளல் மற்றும் வரதானங்களை வழங்கும் வள்ளலின் ஸ்டேஜினுடைய ஸ்திதியாகும். பறக்கும் கலை தான் நடமாடும் போதும் சுற்றிவரும் போதும் ஃபரிஸ்தா மற்றும் தேவதை இரண்டு ரூபங்களின் சாட்சாத்காரம் செய்விப்பதற்கான ஸ்திதியாகும்.

பறக்கும் கலை சர்வ ஆத்மாக்களையும் பிச்சைக்கார நிலையில் இருந்து விடுவித்து, பாபாவின் ஆஸ்திக்கு அதிகாரி ஆக்குவதாகும். ஆத்மாக்கள் அனைவரும் அனுபவம் செய்வார்கள், ஆத்மாக்களாகிய நம் அனைவரின் இஷ்டதேவ் மற்றும் இஷ்டதேவிகள் மற்றும் நிமித்தமாக ஆகி யுள்ள அநேக தேவதைகள் அனைவரும் இந்த பூமியில் அவதரித்துள்ளனர். சத்யுகத்திலோ அனைவரும் சத்கதியில் இருப்பார்கள் ஆனால் இச்சமயம் உள்ள ஆத்மாக்கள் அனைவருக்கும் நீங்கள் சத்கதி அளிப்பவர்கள். எப்படி எந்த ஒரு டிராமாவும் முடிவடைகிறது என்றால் கடைசியில் நடிகர்கள் அனைவரும் முன்னால் மேடையில் வந்து விடுவார்கள். ஆக, இப்போது கல்பத்தின் டிராமா முடிவடையும் சமயம் வந்து கொண்டிருக்கிறது. முழு உலகத்தின் ஆத்மாக்களுக்கும், கனவில் அல்லது ஒரு விநாடியின் ஜொலிப்பில் அல்லது பிரத்தியட்சதாவிற்கான நாலாபுறமும் எழும் சப்தத்தின் மூலமாக இந்த சாட்சாத்காரம் அவசியம் நடைபெறும், அதாவது இந்த டிராமாவின் ஹீரோ பார்ட்தாரிகள் மேடையில் பிரத்யட்சம் ஆகி விட்டனர். பூமியின் நட்சத்திரங்கள், பூமியின் மீது பிரத்யட்சமாகி விட்டனர். அனைவரும் அவரவர் இஷ்டதேவர்களை அடைந்து மிகுந்த குஷியடைவார்கள். அவர்களிடமிருந்து உதவி கிடைக்கும். இரட்டை வெளிநாட்டினரும் கூட இஷ்டதேவ்-இஷ்டதேவிகளில் உள்ளனர் இல்லையா? அல்லது பொன் விழாக்காரர்களாக இருக்கிறீர்களா? நீங்களும் கூட அதில் இருக்கிறீர்களா அல்லது பார்ப்பவர் களாக இருக்கிறீர்களா? எப்படி இப்போது பொன்விழாவின் காட்சியைப் பார்த்தீர்கள். இதுவோ ஒரு ரமணீகரமான பாகத்தை நீங்கள் நடித்தீர்கள் ஆனால் எப்போது கடைசிக் காட்சி நடைபெறுமோ, அதிலோ நீங்கள் சாட்சாத்காரம் செய்விப்பவராக இருப்பீர்களா அல்லது பார்ப்பவர்களாக இருப்பீர்களா? என்னவாக இருப்பீர்கள்? ஹீரோ நடிகர் இல்லையா நீங்கள்? அந்தக் காட்சி எப்படி இருக்கும் என்று இப்போது வெளிப்படுத்துங்கள். இந்தக் கடைசிக்

காட்சிக்காக இப்போதிருந்தே திரிகாலதரிசி ஆகி ப் பாருங்கள், எத்தகைய அழகிய காட்சியாக இருக்கும் மற்றும் நாம் எவ்வளவு அழகாக இருப்போம்! அலங்கரிக்கப்பட்ட திவ்யகுண மூர்த்தி ஃபரிஸ்தாவிலிருந்து தேவதை. இதற்காக இப்போதிருந்தே தன்னை சதா ஃபரிஸ்தா சொரூப ஸ்திதியின் அப்பியாசத்தினால் முன்னேற்றத்தில் கொண்டு செல்லுங்கள். நான்கு விசேஷப் பாடங்களான ஞானமூர்த்தி, நிரந்தர நினைவு மூர்த்தி, சர்வ திவ்யகுண மூர்த்தி -ஒரு திவ்யகுணம் குறைவாக இருந்தாலும் 16 கலைகள் நிரம்பியவர் எனச் சொல்ல மாட்டார்கள். 16 கலைகள், சர்வம் மற்றும் சம்பூர்ணம் இந்த மூன்றுக்கும் மகிமை உள்ளது. சர்வகுண சம்பன்னம் எனச் சொல் கிறீர்கள். சம்பூர்ண நிர்விகாரி எனச் சொல்கிறீர்கள். மேலும் 16 கலை சம்பன்னம் எனச் சொல்கிறீர்கள். மூன்று சிறப்புகளும் வேண்டும். 16 கலை என்றால் சம்பன்னமாகவும் வேண்டும், சம்பூர்ணமாகவும் வேண்டும் மற்றும் அனைத்தும் இருக்க வேண்டும். ஆக, இதை சோதித்துப் பாருங்கள். கேட்டீர்கள் இல்லையா, இவ்வருடம் நீண்ட காலக் கணக்கின்படி சேமிப்பாவதற்கானது. பிறகு நீண்ட காலக் கணக்கு முடிவடைந்து விடும். பிறகு கொஞ்ச காலம் என்று சொல்ல வேண்டி வரும், நீண்ட காலம் இல்லை. நீண்ட காலப் புருஷர்த்தத்தின் லைனில் வந்து விடுங்கள். அப்போது தான் நீண்ட கால ராஜ்ய பாக்கியத்தை அடைவதற்கு அதிகாரி ஆவீர்கள். இரண்டு-நான்கு பிறவிகள் கூடக் குறைந்து விடுமானால் நீண்ட காலத்தின் எண்ணிக்கையில் வராது. (சத்யுக ஆரம்பத்தில்) முதல் பிறவி இருக்க வேண்டும் மற்றும் முதல் இயற்கையின் சிரேஷ்ட சுகம் இருக்க வேண்டும். 1-1-1 ஆக இருக்க வேண்டும் அனைத்திலும் ஒன்று என இருக்க வேண்டும். அதற்காக என்ன செய்ய வேண்டும்? சேவையும் நம்பர் ஒன், ஸ்திதியும் நம்பர் ஒன் --அப்போது தான் 1-1 இல் வருவீர்கள் இல்லையா? ஆக, சத்யுக ஆரம்பத்தில் வரக்கூடிய நம்பர் ஒன் ஆத்மாவுடன் கூட பார்ட் நடிப்பவர். ஆகவே சகாப்தத்தையும் நீங்கள் தாம் ஆரம்பித்து வைப்பீர்கள். முதல்-முதலில் பிறவி எடுத்தவர் தான் முதல் தேதி, முதல் மாதம், முதல் ஆண்டை ஆரம்பித்து வைப்பார். ஆக, இரட்டை வெளிநாட்டினர் நம்பர் ஒன்னில் வருவீர்கள் இல்லையா? நல்லது -ஃபரிஸ்தா ஆடையை அணிந்து கொள்வதற்காக வருகிறீர்கள் இல்லையா? இது ஜொலிக்கின்ற ஆடையாகும். இந்த ஸ்மிருதி மற்றும் சொரூபமாக ஆவது என்றால் ஃபரிஸ்தா ஆடையை அணிந்து கொள்வதாகும். ஜொலிக்கின்ற பொருள் தூரத்திலிருந்தே கவர்ந்திழுக்கும். ஆக, இந்த ஃபரிஸ்தா ஆடை என்றால்

ஃபரிஸ்தா சொரூபம் தூர-தூரம் வரைக்கும் கூட ஆத்மாக்களைக் கவர்ந்திழுக்கும்.

இன்று யூ.கே.இன் வாய்ப்பு. யூ.கே.காரர்களின் சிறப்பு என்ன? லண்டனை சத்யுகத்திலும் கூட இராஜதானி ஆக்குவீர்களா அல்லது வெறுமனே சுற்றுலா இடமாக ஆக்குவீர்களா? யுனைட்டெட் கிங்டம் இல்லையா? அங்கேயும் இராஜ்யத்தை (கிங்டம்) உருவாக்குவீர்களா அல்லது இராஜாக்கள் சென்று சுற்றி வருவீர்களா? பிறகும் பெயர் கிங்டம் என்று தான் சொல்கிறார்கள். ஆக, இச்சமயம் சேவையின் இராஜ்யமோ இருக்கவே செய்கிறது. வெளிநாடுகள் அனைத்தினுடைய சேவைக்கும் இராஜதானியோ நிமித்தமாக உள்ளது. கிங்டம் என்ற பெயரோ சரி தான் இல்லையா? அனைவரையும் யுனைட் செய்கிற (ஒற்றுமைப் படுத்துகிற) கிங்டம். ஆத்மாக்கள் அனைவரையும் பாபாவோடு சந்திக்க வைக்கிற இராஜதானி. யூ.கே.காரர்களுக்கு பாபா சொல்கிறார் --ஓ.கே.யாக இருப்பவர்கள். யூ.கே. என்றால் ஓ.கே. யாக இருப்பவர்கள். எப்போதாவது யாரிடமாவது கேட்பீர் களானால் ஓ.கே. அப்படித்தானே? ஆம், இருந்தால் சரி தான் என்று நீண்ட பெருமூச்சுடன் அந்த மாதிரி சொல்ல மாட்டீர்கள். ஆம். மேலும் எப்போது சரியாக இருக்கிறீர்களோ, அப்போது சொல்கிறீர்கள் -ஆம், ஓ.கே. ஓ.கே. சொல்வதில் வித்தியாசம் உள்ளது. ஆக, சங்கமயுக ராஜதானியில் இராஜ்ய அதிகாரிகள், அதாவது அரச குடும்பத்தின் ஆத்மாக்கள் தயாராவதற்கான பிரேரணை நாலாபுறமும் பரவ வேண்டும். ஆக, இராஜதானியில் இராஜ்ய அதிகாரிகளை உருவாக்குவதற்கான இராஜ்ய-ஸ்தானாகவோ ஆகிறது இல்லையா? பாப்தாதா ஒவ்வொரு தேசத்தின் சிறப்பை விசேஷ ரூபத்தில் நினைவு செய்கிறார். மேலும் சிறப்புகள் மூலம் சதா முன்னேறச் செய்கிறார். பாப்தாதா பலவீனங்களைப் பார்ப்பதில்லை. வெறுமனே சமிக்ஞை செய்கிறார். மிக நன்று எனச் சொல்லிச் சொல்லியே மிக நன்றாக ஆகி விடுகிறீர்கள். பலவீனமாக இருக்கிறீர்கள் --பலவீனமாக இருக்கிறீர்கள் என்று சொன்னால் பலவீனமாகி விடுவீர்கள். ஒன்று, முதலில் பலவீனமாக இருக்கின்றனர். வேறு யராவது ஏதாவது சொல்லி விட்டார்கள் என்றால் மூர்ச்சையாகி விடுகிறார்கள் ஆனால் அவர்களுக்கு சிரேஷ்ட ஸ்மிருதியின், சிறப்புகளின் ஸ்மிருதி என்ற சஞ்சீவி மூலிகை கொடுங்கள். அப்போது மூர்ச்சையிலிருந்து தெளிந்து சுய உணர்வு பெற்று விடுவார்கள். சஞ்சீவி மூலிகை அனைவரிடமும் உள்ளது இல்லையா? ஆக, சிறப்புகளின் சொரூபத்தின்

கண்ணாடியை அவர்களுக்கு முன்னால் வையுங்கள். ஏனென்றால் ஒவ்வொரு பிராமண ஆத்மாவும் விசேஷமானவர். கோடியில் ஒருவர் இல்லையா? ஆகவே விசேஷமானவர் இல்லையா? அந்தச் சமயத்தில் மட்டும் தங்களின் சிறப்பை மறந்து விடுகின்றனர். அவர்களுக்கு நினைவு படுத்துவதால் விசேஷஆத்மா ஆகி விடுவார்கள். மேலும் எவ்வளவு விசேஷத் தன்மையின் வர்ணனை செய்வீர்களோ, அவர்களுக்குத் தங்களின் பலவீனங்கள் தாமாகவே மிகத் தெளிவாக அனுபவமாகும். நீங்கள் சொல்ல வேண்டிய தேவை இருக்காது. நீங்கள் யாருக்காவது அவர்களது பலவீனத்தைச் சொல்வீர்களானால் அவர்கள் மறைப்பார்கள். நான் அந்த மாதிரி இல்லை என்று மறுப்பார்கள். நீங்கள் சிறப்புகளைச் சொல்லுங்கள். எது வரை பலவீனங்களைத் தாங்களாகவே அனுபவம் செய்யவில்லையோ, அது வரை மாற்றம் வராது. 50 ஆண்டுகளாக நீங்கள் முயற்சி செய்து கொண்டே இருந்தாலும் சரி. எனவே இந்த சஞ்சீவி மூலிகை மூலம் மூர்ச்சையடைந்தவர்களையும் உணர்வு பெற்றவர்களாக ஆக்கி, பறந்து கொண்டே செல்லுங்கள் மற்றும் மற்றவர்களையும் பறக்க வையுங்கள். இதைத் தான் யூ.கே. செய்கிறது இல்லையா? நல்லது.

லண்டனிலிருந்து வேறு-வேறு இடங்களுக்கு எவ்வளவு பேர் சென்றுள்ளனர்? பாரதத்திலிருந்தோ சென்றுள்ளனர். லண்டனிலிருந்து எவ்வளவு பேர் சென்றுள்ளனர்? ஆஸ்திரேலியாவிலிருந்து எவ்வளவு பேர் சென்றுள்ளனர்? ஆஸ்திரேலியாவும் கூட விருத்தியை ஏற்படுத்தியுள்ளது. மேலும் எங்கெங்கே சென்றனர்? ஞான கங்கைகள் எவ்வளவு தூரத்தில் பாய்ந்து செல்கின்றனரோ, அவ்வளவு நல்லது. யூ.கே., ஆஸ்திரேலியா, அமெரிக்கா, ஐரோப்பாவில் எவ்வளவு சென்டர்கள் உள்ளன? (அனைவரும் அவரவர் எண்ணிக்கையைச் சொன்னார்கள்)

அதாவது விருத்தியடைந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது ஏதாவது விசேஷ இடம் மிச்சமுள்ளதா? (நிறைய உள்ளன). நல்லது, அதற்கான திட்டமும் உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? வெளிநாடுகளுக்கு இந்த லிஃப்ட் உள்ளது -மிக சுலபமாக சென்டர்களைத்திறக்க முடியும். லௌகிக் சேவையும் செய்ய முடியும் மற்றும் அலௌகிக சேவைக்கும் நிமித்தமாக முடியும். பாரதத்தில் பிறகும் அழைப்பிற்கிணங்க சென்டர் ஸ்தாபனை ஆவதற்கான சிறப்பு உள்ளது ஆனால் வெளிநாடுகளில் தாங்களே தங்களுக்கு அழைப்புக் கொடுத்துக்

கொள்கின்றனர். அழைப்புக் கொடுப்பவரும் பெற்றுக் கொள்பவரும் தாங்களே. இதுவும் சேவையில் விருத்தி சுலபமாக ஏற்படுவதற்கான ஒரு லிஃப்ட் கிடைத்துள்ளது. எங்கே நீங்கள் சென்றாலும் இரண்டு-மூன்று பேர் சேர்ந்து அங்கே ஸ்தாபனைக்கு நிமித்தமாக முடியும் மற்றும் ஆகி க் கொண்டே இருப்பீர்கள். இது டிராமா அனுசாரம் கிஃப்ட் என்றாலும் சரி, லிஃப்ட் என்றாலும் சரி, கிடைத்துள்ளது. ஏனென்றால் கொஞ்ச சமயத்தில் சேவையை முடிக்க வேண்டும் என்றால், தீவிர வேகம் இருக்க வேண்டும். அப்போது தான் சமயத்தில் முடிவடையும். பாரதத்தின் விதி மற்றும் வெளிநாட்டின் விதிக்கிடையில் வேறுபாடு உள்ளது. எனவே வெளிநாட்டில் விரைவில் விருத்தி ஆகி க் கொண்டிருக்கிறது மற்றும் ஆகி க் கொண்டே இருக்கும். ஒரே நாளில் அநேக சென்டர்கள் திறக்கப் பட முடியும். நாலாபுறமும் வெளிநாடுகளில் நிமித்தமாக இருக்கும் வெளிநாட்டினருக்கு சேவை செய்வதற்கான வாய்ப்பு சுலபமாக உள்ளது. பாரதவாசிகளுக்குப் பாருங்கள், விசா கிடைப்பதும் கூட கஷ்டமாக உள்ளது. ஆகவே அங்கே இருப்பவர்களே அங்குள்ள சேவைக்கு நிமித்தமாகிறார்கள். அதனால் இது சேவைக்கான வாய்ப்பு. எப்படி கடைசியில் வந்தாலும் வேகமாகச் செல்வதற்கான வாய்ப்பு உள்ளதோ அது போல் சேவைக்கான வாய்ப்பும் வேகமாகக் கிடைத்துள்ளது. அதனால் புகார் இருக்காது --நாங்கள் பின்னால் வந்தோம் என்று. பின்னால் வருகிறவர்களுக்கு வேகமாகப் போவதற்கான வாய்ப்பும் கூட விசேஷமாக உள்ளது. எனவே ஒவ்வொருவரும் சேவாதாரி. அனைவரும் சேவாதாரிகளா அல்லது சென்டரில் இருக்கக் கூடிய சேவாதாரிகளா? எங்கே இருந்தாலும் சேவை இன்றி நிம்மதி இருக்காது. சேவை தான் நிம்மதியான தூக்கம். நிம்மதியாகத் தூங்குவது தான் வாழ்க்கை எனச் சொல்லப் படுகிறது. சேவை தான் நிம்மதியான நித்திரை என்றாலும் சரி, உறக்கம் என்றாலும் சரி. சேவை இல்லை என்றால் நிம்மதியான தூக்கம் இல்லை. கேட்டீர்கள் இல்லையா, சேவை என்பது வாய்மொழியினால் செய்வது மட்டுமில்லை. ஒவ்வொரு விநாடியும் சேவை. ஒவ்வொரு சங்கல்பத்திலும் சேவை. யாரும் இதைச் சொல்ல முடியாது --பாரதவாசியாக இருந்தாலும் சரி, வெளிநாட்டில் இருக்கும் பிராமணராயினும் சரி, சேவைக்கு வாய்ப்பில்லை என்று சொல்ல முடியாது. நோய்வாய்ப் பட்டிருந்தாலும் கூட மனதால் செய்யும் சேவை, வாயுமண்டலத்தை உருவாக்கும் சேவை, வைப்ரேஷன்களைப் பரப்புகின்ற சேவையோ செய்ய முடியும். ஏதாவதொரு சேவை செய்யுங்கள் ஆனால்

சேவையில் தான் இருக்க வேண்டும். சேவை தான் வாழ்க்கை. பிராமணர் என்பதன் அர்த்தமே சேவாதாரி என்பது தான். நல்லது.

சதா பறக்கும் கலை அனைவருக்குமான நன்மை என்ற ஸ்திதியில் நிலைத்திருக்கக் கூடிய, சதா தன்னை ஃபரிஸ்தாவாக அனுபவம் செய்யக்கூடிய, சதா உலகத்திற்கு முன்னால் இஷ்டதேவ் ரூபத்தில் பிரத்தியட்சமாகக் கூடிய, தேவ ஆத்மாக்கள் சதா தன்னை விசேஷ ஆத்மா எனப் புரிந்து கொண்டு மற்றவர்களுக்கும் கூட விசேஷத் தன்மையின் அனுபவம் செய்விக்கக் கூடிய விசேஷ ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்புநினைவு மற்றும் நமஸ்தே.

**பார்ட்டிகளுடன்**: சதா தன்னை கர்மயோகி என அனுபவம் செய்கிறீர்களா? கர்மயோகி என்றால் ஒவ்வொரு கர்மம் செய்யும் போதும் நினைவு யாத்திரையில் சதா இருப்பதாகும். இந்த சிரேஷ்ட காரியத்தை சிரேஷ்ட தந்தையின் குழந்தைகள் தாம் செய்கின்றனர் மற்றும் சதா வெற்றி கொள்கின்றனர். நீங்கள் அனைவரும் கர்மயோகி ஆத்மாக்கள் இல்லையா? கர்மத்தில் இருந்து கொண்டே விலகியும் அன்பானவராகவும் சதா இதே அப்பியாசத்தின் மூலம் தன்னை முன்னேற்றத்தில் கொண்டு செல்ல வேண்டும். சுயத்துடன் கூடவே உலகத்தின் பொறுப்பு அனைவர் மீதும் உள்ளது ஆனால் இவையனைத்தும் ஸ்தூல சாதனங்கள். கர்மயோகி வாழ்க்கை மூலம் முன்னேறிக் கொண்டே மற்றவர்களையும் முன்னேற வைத்துக் கொண்டே செல்லுங்கள். இந்த வாழ்க்கை தான் மிக அன்பான வாழ்க்கையாகும். சேவையும் இருக்க வேண்டும், குஷியும் இருக்க வேண்டும். இரண்டும் கூடவே இருக்கிறது, சரி தானே? பொன்விழாவோ அனைவருக்குமானது. பொன் என்றால் சதோப்ரதான ஸ்திதியில் நிலைத்திருப்பவர்கள். ஆக, சதா தன்னை இந்த சிரேஷ்ட ஸ்திதியின் மூலம் முன்னேற வைத்துக் கொண்டே செல்லுங்கள். அனைவரும் சேவையை நல்லபடியாகச் செய்திருக்கிறீர்கள் இல்லையா? சேவைக்கான வாய்ப்பும் கூட இப்போது தான் கிடைக்கிறது. பிறகு இந்த வாய்ப்பு முடிந்து போகும். ஆகவே சதா சேவையில் முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். நல்லது.

**வரதானம்: தந்தையின் குடைநிழலின் அனுபவத்தின் மூலம் விக்னவிநாசக் என்ற பட்டத்தைப் பெறக்கூடிய அனுபவி மூர்த்தி ஆகுக!**

எங்கே தந்தை உடன் இருக்கிறாரோ, அங்கே யாராலும் எதுவும் செய்ய இயலாது. இந்தத் துணையின் அனுபவம் தான் குடைநிழல் ஆகி விடுகிறது. பாப்தாதா எப்போதுமே குழந்தைகளைப் பாதுகாக்கவே செய்கிறார். உங்களை அனுபவி ஆக்குவதற்காகவே பேப்பர்கள் வருகின்றன. அதனால் புரிந்து கொள்ள வேண்டும் --இந்தப் பேப்பர்கள் அடுத்த வகுப்புக்கு முன்னேறச் செய்வதற்காக வந்து கொண்டிருக் கின்றன. இதன் மூலம் தான் சதா காலத்திற்கும் விக்னவிநாசக் என்ற டிகிரி மற்றும் அனுபவி மூர்த்தி ஆவதற்கான வரதானம் கிடைத்து விடும். இப்போது யாராவது கொஞ்சம் குழப்பம் விளைவிக்கிறார்கள் அல்லது விக்னத்தை ஏற்படுத்துகிறார்கள் என்றால் மெது-மெதுவாகக் குளிர்ந்து போவார்கள்.

**சுலோகன்: யார் சமயத்தில் சகயோகி ஆகிறார்களோ, அவர்களுக்கு ஒன்றுக்குப் பல மடங்காக பலன் கிடைத்து விடும்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 22.02.1986 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஆன்மீக சேவை -சுயநலமற்ற சேவை!

இன்று அனைத்து ஆத்மாக்களின் உலகத்திற்கு நன்மை செய்யக்கூடிய தந்தை தனது சேவாதாரி, சேவைக்கு துணையாக இருக்கக்கூடிய குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஆரம்பத்திலிருந்து பாப்தாதா வின் கூடவே சேவாதாரி குழந்தைகள் துணையாக இருக்கிறார்கள் மற்றும் கடைசி வரை பாப்தாதாவும் குப்தமான ரூபத்தில் மற்றும் வெளிப்படையான ரூபத்தில் குழந்தைகளுக்கு உலக சேவைக்கான சேவையில் நிமித்தமாக மாற்றியிருக்கிறார். ஆரம்பத்தில் பிரம்மாபாபா மற்றும் பிராமண குழந்தைகள் குப்தமான ரூபத்தில் சேவையில் நிமித்தமாக இருக்கிறார்கள். இப்பொழுது சேவாதாரி குழந்தைகள் சக்தி சேனையாகவும் பாண்டவ சேனையாகவும் உலகத்திற்கு முன்னால் வெளிப்படையான ரூபத்தில் காரியம் செய்து கொண்டிருக்கிறார்கள். சேவைக்கான ஊக்க-உற்சாகம் அதிகமாக குழந்தைகளிடத்தில் நன்றாகவே தென்படுகிறது. சேவைக்கான ஈடுபாடு ஆரம்பத்தில் இருந்தே இருக்கிறது, மேலும் இறுதி வரையும் இருக்கும். பிராமண வாழ்க்கையே சேவைக்கான வாழ்க்கை தான். பிராமண ஆத்மாக்கள் சேவை யில்லாமல் வாழவே முடியாது. மாயாவிடமிருந்து உயிர் பிழைத்திருப்பதற்கான சிரேஷ்ட சாதனம் -சேவை மட்டும் தான். சேவை யோகம் நிறைந்தவராகக் கூட மாற்றுகிறது ஆனால் எப்படிப்பட்ட சேவை? முதலாவதாக வார்த்தைகளின் சேவை, கேட்டவற்றை சொல்லக்கூடிய சேவை. இரண்டாவது மனதின் மூலம் வார்த்தைகளின் சேவை. கேட்கப்பட்ட இனிமையான வார்த்தைகளின் சொரூபம் ஆகி, சொரூபத்தின் மூலம் சேவை -சுயநலமற்ற சேவை. தியாகம், தபஸ்யா சொரூபத்தின் மூலம் சேவை. எல்லைக்குட் பட்ட விருப்பத்திலிருந்து விடுபட்டு சுயநலமற்ற சேவை. இதைத் தான் ஈஸ்வரிய சேவை, ஆன்மீக சேவை என்று சொல்லப்படுகிறது. யார் வாயின் மூலம் மட்டும் சேவை செய்கிறார்களோ, அதை தன்னை மகிழ்விப்பதற்கான சேவை என்று மட்டும் தான் சொல்லப்படுகிறது. அனைவரையும் மகிழ்விப்பதற்கான சேவை, மனம் மற்றும் வார்த்தைகளின் கூடவே

நடைபெறுகிறது. மனதின் மூலம் என்றாலே மன்மனா பவ என்ற மனநிலையில் வார்த்தைகளின் சேவை.

பாப்தாதா இன்று தன்னுடைய வலது கரமான சேவாதாரி மற்றும் இடது கரமான சேவாதாரி களையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். இருவருமே சேவாதாரிகள் தான், ஆனால் வலது கரம் மற்றும் இடது கரம் இரண்டிலும் வித்தியாசம் இருக்குமல்லவா! வலது கரம் எப்பொழுதுமே சுய நலமற்ற சேவாதாரிகளாக இருக்கிறார்கள். இடது கரம் ஏதாவதொரு எல்லைக்குட்பட்ட இந்த ஜென்மத்திற்காக சேவைக்கான பலனை பெறுவதற்கான ஆசையின் மூலம் சேவைக்கு நிமித்தம் ஆவது. அவர்கள் (வலதுகரம்) குப்த சேவாதாரி மற்றும் இவர்கள் (இடது கரம்) பெயருக்கான சேவாதாரி. அவ்வப்பொழுது சேவை செய்வது அப்பொழுதே பெயர் கிடைக்கிறது -மிகவும் நல்லது, மிகவும் நல்லது ஆனால் இப்பொழுதே செய்தோம், இப்பொழுதே அடைந்து விட்டோம். சேமிப்பு கணக்கு உருவாகவில்லை. குப்த சேவாதாரி என்றாலே பலனை எதிர்பார்க்காத சேவாதாரி. ஆகையால் குப்த சேவாதாரி வெற்றியின் குஷியில் சதா நிரம்பியிருப்பார்கள். பல குழந்தைகளுக்கு நாங்கள் செய்கிறோம், ஆனால் பெயர் வருவதில்லை என்ற எண்ணம் வருகிறது. மேலும் யார் வெளிதோற்றத்தில் பெயருக்காக சேவை செய்து காட்டுகிறார்கள், அவர்களுக்கு பெயர் அதிகமாக கிடைக்கிறது தான், ஆனால் அவ்வாறில்லை. யார் பலனை எதிர்பார்க்காமல் அழிவற்ற பெயரை சேமிக்கக் கூடியவர்களாக இருக்கிறார்களோ, அவர் களுடைய மனதின் ஒலி (வார்த்தை), மனதை சென்று அடைகிறது. மறைந்திருக்க முடியாது. அவர்களுடைய முகத்தில், மனதில் உண்மையான சேவாதாரியின் ஜொலிப்பு அவசியம் தென்படுகிறது. ஒருவேளை யாராவது பெயருக்கு சேவை செய்பவர்கள், இங்கேயே பெயர் சேமிக்கிறார்கள் என்றால், மேலும் செய்கிறார்கள், அடைகிறார்கள், முடித்து விட்டார்கள், எதிர்காலம் சிரேஷ்டமாகவும் இராது, நிலை யானதாகவும் இராது ஆகையால் பாப்தாதாவிடம் அனைத்து சேவாதாரிகளின் பதிவேடு இருக்கிறது. சேவை செய்து கொண்டே செல்லுங்கள், பெயர் கிடைக்க வேண்டுமென்ற எண்ணத்தை எண்ணாதீர்கள். சேமிப்பு ஆகிறதா என்பதை யோசியுங்கள். அழிவற்ற பலனின் அதிகாரி ஆகுங்கள். அழிவற்ற ஆஸ்திக்காக வந்திருக்கிறேன். சேவையினுடைய பலனை அல்பகாலத்திற்காக அடைகிறோம் என்றால், அழிவற்ற ஆஸ்தியின் அதிகாரம் குறைந்து விடும்.

ஆகையால் சதா அழியக்கூடிய விருப்பங்களிலிருந்து விடுபட்டு, பலனை எதிர்பார்க்காத சேவாதாரி, வலது கரமாகி சேவையில் முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். குப்த சேவைக்கு மகத்துவம் அதிகமாகும். அப்படிப்பட்ட ஆத்மா எப்பொழுதுமே தமக்குள் நிரம்பியிருப்பார்கள். கவலையற்ற இராஜாவாக இருப்பார்கள். பெயர்-புகழைப் பொருட் படுத்துவதில்லை. இதில் தான் கவலையற்ற இராஜாவாக ஆக முடியும். அதாவது சதா சுயமரியாதையின் அதிகாரியாக இருப்பார்கள். எல்லைக்குட்பட்ட மதிப்பின் சிம்மாசத்தில் அல்ல. சுயமரியாதையின் சிம்மாசனம், அழிவற்ற சிம்மாசனம். நிலையான, நெடுங்கால பிராப்தியின் சிம்மாசனமாகும். இதைத் தான் விஷ்வ கல்யாணக்காரி சேவாதாரி என்று சொல்லப்படுகிறது. ஒருபொழுதும் சாதாரண எண்ணங்களின் காரணத்தினால் உலக சேவைக்கான காரியத்தில் வெற்றியை அடைவதற்குப் பின்னால் செல்ல வேண்டாம். தியாகம் மற்றும் தபஸ்யாவின் மூலம் சதா வெற்றியை அடைந்து முன்னேறிக் கொண்டேயிருக்க வேண்டும். புரிந்ததா?

சேவாதாரி என்று யாரைச் சொல்லப்படுகிறது? அனைவரும் சேவாதாரிகள் தானே? சேவை மனநிலையை நிலைகுலையச் செய்ய வைக்கிறது என்றால், அது சேவை அல்ல. சேவையில் ஏற்ற தாழ்வுகள் நிறையவே வருகிறது, தடைகள் கூட சேவையில் தான் வருகிறது, மேலும் தடைகளற்றவர்களாகவும் கூட சேவை தான் மாற்றுகிறது என்று பலர் நினைக்கிறார்கள். எந்த சேவை தடை ரூபம் ஆகிறதோ, அது சேவையல்ல. அதை உண்மையான என்று சொல்ல முடியாது, பெயர் அடைக்கூடிய சேவாதாரி என்று தான் சொல்ல முடியும். உண்மையான சேவை என்பது உண்மையான வைரமாகும். எப்படி உண்மையான வைரம் ஒருபொழுதும் ஜொலிப்பதிலிருந்து மறைக்க முடியாது. அப்படி உண்மையான சேவாதாரி உண்மையான வைரமாக இருப்பார்கள். போலியான வைரத்தில் எவ்வளவு தான் ஜொலிப்பு நன்றாக இருந்தாலும், ஆனால் மகத்துவம் எதற்கு? உண்மையானதுக்குத்தான் மகத்துவம் இருக்கிறதல்லவா! போலியானதற்கு இல்லை அல்லவா! விலைமதிப்பிட முடியாத இரத்தினம் உண்மையான சேவாதாரி ஆவார்கள். பல ஜென்மங்களின் மகத்துவம் உண்மையான சேவாதாரிகளினுடையதாக இருக்கிறது. பெயருக்காக செய்யும் சேவை அல்பகாலத்தின் ஜொலிப்பாக இருக்கும். ஆகையால் சதா சேவாதாரி ஆகி, சேவையின் மூலம் உலகத்திற்கு நன்மை செய்து கொண்டே செல்லுங்கள்.

சேவையின் மகத்துவம் என்னவென்று! புரிந்தா! யாரும் குறைந்தவர் அல்ல, ஒவ்வொரு சேவாதாரியும் அவரவது விசேஷத்தன்மையின் மூலம் விசேஷ சேவாதாரி ஆவார்கள். தன்னை குறைந்தவர்களாகப் புரிந்து கொள்ளாதீர்கள், மேலும் செய்வதினால் பெயர் புகழுக்கான ஆசையையும் வைக்காதீர்கள். சேவையை உலக நன்மைக்காக அர்ப்பணம் செய்யுங்கள். அவ்வாறே பக்தியில் கூட யார் குப்தமாக (ரகசியமாக) தானம்-புண்ணியம் செய்கிறார் களோ, அவர்களின் எண்ணம் கூட அனைவருக்கும் நன்மை ஏற்படவேண்டுமென்று தான் இருக்கிறது. எனக்கு பலன் கிடைக்கிறதோ, இல்லையோ, அனைவருக்கும் நன்மை கிடைக்க வேண்டும், அனைவரின் சேவையில் அர்ப்பணம் ஆக வேண்டுமென்ற விருப்பம் தான் இருக்கிறது. ஒருபொழுதும் தனக்காக என்ற விருப்பம் வைக்காதீர்கள். அவ்வாறே அனைவருக்காகவும் சேவை செய்யுங்கள். அனைவரின் நன்மைக்கான வங்கியில் சேமிப்பு செய்து கொண்டே செல்லுங்கள். ஆகையால் அனைவரும் என்ன ஆக வேண்டும் -பலனை எதிர்பார்க்காத சேவாதாரி. இப்பொழுது யாரும் உங்களை கேட்கவில்லையென்றால் 2500 ஆண்டுகள் உங்களை கேட்பார்கள். ஒரு ஜென்மத்திற்கு யாராவது கேட்க வேண்டுமா? அல்லது 2500 ஆண்டுகள் யாராவது கேட்க வேண்டுமா, எது அதிகப்படியானது. அது அதிகமானது இல்லையா! எல்லைக்குட்பட்ட எண்ணங்களிலிருந்து விடுபட்டு எல்லைக்கு அப்பாற்பட்ட சேவாதாரி ஆகி பாபாவின் இதய சிம்மாசனதாரி, கவலையற்ற இராஜா ஆகி, சங்கமயுகத்தின் குஷியை, மகிழ்ச்சியை கொண்டாடிக் கொண்டேயிருங்கள். குழப்பத்தில் சலசலப்பில் வந்து விடுகிறீர்கள் என்றால் அது சேவை அல்ல. சேவை என்றாலே பறக்க (முன்னேற) வைக்கக் கூடியது. சேவை என்றாலே கவலையற்ற இராஜாவாக ஆக்கக் கூடியது. அப்படிப்பட்ட சேவாதாரிகள் அல்லவா? கவலையற்ற மகாராஜா, கவலையற்ற உலகத்தின் மகாராஜா. இவர்களுக்குப் பின்னால் வெற்றி தானாகவே வருகிறது. வெற்றிக்குப் பின்னால் அவர்கள் செல்வதில்லை. நல்லது -எல்லைக்கு அப்பாற்பட்ட சேவையின் திட்டத்தை உருவாக்குகிறீர்கள் அல்லவா! எல்லைக்கு அப்பாற்பட்ட மனநிலையின் மூலம் எல்லைக்கு அப்பாற் பட்ட சேவையின் திட்டம் எளிதாகவே வெற்றி அடைந்தே விடுகிறது. (இரட்டை அயல்நாட்டின் சகோதர, சகோதரிகள் கூட ஒரு திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள், இதற்கு அனைத்து ஆத்மாக்களிடமிருந்து ஒரு நிமிடம் தியானம் செய்வித்து அமைதியின் தானம் பெற வேண்டும்)

இது கூட உலகத்தை மகாதானியாக மாற்றுவதற்கான நல்ல திட்டம் உருவாக்கியிருக்கிறார்கள் அல்லவா! சிறிது நேரமாவது வலுகட்டாயமாகவோ, அன்பாகவோ அமைதியின் சன்ஸ்காரத்தை வெளிப் படுத்துவார்கள் அல்லவா! எப்பொழுது ஆத்மாவில் அமைதியின் சன்ஸ்காரம் வெளிப்படுகிறது என்றால், நிகழ்ச்சியின் படிதான் என்றாலும் அமைதி என்பது சுயதர்மம் அல்லவா அமைதி கடலின் குழந்தைகளாகவோ இருக்கிறோம். சாந்தி தாமத்தில் வசிக்கக்கூடியவர்களாகாகவும் இருக்கிறோம். ஆகையால் நிகழ்ச்சிப்படி கூட அது (அமைதியை) வெளிப்படுத்துவதின் மூலம் அந்த அமைதியின் சக்தி அவர்களை ஈர்த்துக் கொண்டேயிருக்கும். யார் ஒருமுறை இனிப்பை சுவைக்கிறார்கள் என்றால், அடுத்த முறை அது கிடைக்கிறதோ இல்லையோ, ஆனால் அந்த சுவையின் சுவையானது அவரை அடிக்கடி கவர்ந்திழுக்கிறது என்று சொல்லப்படுகிறது அல்லவா! ஆகவே இது கூட அமைதியின் சுவையாகும். ஆகையால் இந்த அமைதியின் சன்ஸ்காரம் தானாகவே நினைவூட்டிக் கொண்டேயிருக்கும். ஆகையால் மெது மெதுவாக ஆத்மாக்களிடத்தில் அமைதியின் விழிப்புணர்வு வந்துக் கொண்டேயிருப்பது கூட நீங்கள் அனைவரும் அமைதியின் தானம் கொடுப்பது, அவர்களையும் கூட தானம் செய்பவராக மாற்றுகிறீர்கள். ஏதாவதொரு முறையில் அனைத்து ஆத்மாக்களும் அமைதியின் அனுபவத்தை செய்யவேண்டும் என்ற உங்கள் அனைவரின் நல்ல எண்ணமாக இருக்கிறது. உலக அமைதி கூட ஆத்மீக அமைதியின் ஆதாரத்தில் மீது தான் இருக்கும் அல்லவா! இயற்கை கூட ஆத்மாவின் ஆதாரத்தின் மூலம் நடக்கிறது. ஆத்மாக்களிடத்தில் அமைதியின் நினைவு வரும்பொழுது தான் இந்த இயற்கையும் கூட அமைதி பெறும். ஏதாவதொரு முறையில் அசாந்தியிலிருந்து விடுப்பட்டு விடவேண்டுமல்லவா! மேலும் ஒரு நிமிடத்தின் அமைதி கூட அவர்களை பல காலத்திற்கு கவர்ந்திழுத்துக் கொண்டேயிருக்கும். அதனால் நல்ல திட்டத்தை உருவாக்கியிருக்கிறீர்கள். இது கூட யாருக்காவது கொஞ்சம் ஆக்ஸிஜன் கொடுத்து அமைதியான சுவாசத்தை செலுத்துவதற்கான சாதனமாகும். உண்மையின் மனித வாழ்க்கை அமைதியின் சுவாசத்தினால் தான் இருக்கிறது, அதைக் காட்டிலும் மயக்கத்தில் இருக்கிறார்கள் அல்லவா! அசாந்தியில் மயங்கியிருக்கிறார்கள். ஆகையால் இது ஆக்ஸிஜனை போன்ற சாதனமாகும். அதன் மூலம் கொஞ்சம் சுவாசிப்பது ஆரம்பமாகும். பலரின் சுவாசம் ஆக்ஸிஜன் மூலம் தான் செல்லவும் செய்கிறது. ஆகையால் அனைவரும் ஊக்கம் உற்சாகத்தோடு முதலாவதாக, தானே முழு நேரமும்

அமைதியின் இருப்பிடமாகி அமைதியாக உங்களின் அமைதியான எண்ணத்தின் மூலம் அவர்களுக்குக் கூட எண்ணங்கள் உதிக்கும், மேலும் எப்படியாவது செய்வார்கள், ஆனால் உங்களின் அமைதியின் வைப்ரேஷன் அவர்களை உன்மையான வழியில் இழுத்து கொண்டு வந்து விடும். இது கூட நம்பிக்கை யற்றவர்களையும் கூட நம்பிக்கை கொண்டு வருவதற்கான சாதனமாகும். நம்பிக்கையில்லாதவர் களிடத்தில் நம்பிக்கை உருவாக்குவதற்கான சாதனமாகும். யாரெல்லாம் தொடர்பில் வருகிறார்களோ, சம்மந்தத்தில் வருகிறார்களோ, அவர்களுக்கு இரண்டு வார்த்தைகளாவது ஆத்மீக அமைதி, மனதின் அமைதி அறிமுகத்தைக் கொடுப்பதற்காக எவ்வளவு முடியுமோ, எந்தளவு முடியுமோ முயற்சி அவசியம் செய்ய வேண்டும். ஏனெனில் ஒவ்வொருவரும் அவரவர்களின் பெயர் சேர்த்தே ஆக வேண்டும். எப்படியாவது கடிதத் தொடர்பின் மூலமாவது கூட தொடர்பில் வந்து விடுவார்கள். லிஸ்ட்டில் (பட்டியல்) வந்து விடுவாகள் அல்லவா! ஆகையால் எவ்வளவு முடியுமோ அமைதி என்றால் என்ன அதை இரண்டு வார்த்தையாவது தெளிவுப்படுத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும். ஒரு நிமிடத்தில் கூட ஆத்மாவில் விழிப்புணர்வு வந்து விடும். புரிந்ததா! இந்த திட்டம் உங்கள் அனைவருக்கும் பிடித்திருக் கிறது அல்லவா! மற்றவர்களோ காரியத்தை விட்டுவிடுகிறார்கள், நீங்கள் செய்கிறீர்கள். அமைதியின் தூதுவர்களாக இருப்பதாலேயே நாலா பக்கமும் அமைதி தூதுவர்களின் இந்த ஒலி எதிரொலிக்கும் மேலும் அமைதியின் ஃபரிஸ்தாக்கள் வெளிப்படுவார்கள். அமைதிக்கு முன்னால் உலகில் வேறு ஏதாவது கொஞ்சம் தனித்துவ வார்த்தைகள் உள்ளதா என்று தங்களுக்குள் மட்டும் ஆலோசனை செய்ய வேண்டும். அமைதி ஊர்வலம் மற்றும் அமைதி இந்த வார்த்தைகளை உலகத்தில் கூட பயன்படுத்துகிறார்கள். ஆகையால் அமைதி என்ற வார்த்தையின் கூடவே ஏதாவது விசேஷமான வார்த்தையாகவும் இருக்க வேண்டும், அது தனித்துவமாகவும் கேட்டவுடனேயே இது மிகவும் மாறுபட்டதாகவும் தோன்ற வேண்டும். ஆகையால் கண்டுபிடிக்க வேண்டும். மற்றபடி நல்ல விஷயம் தான். குறைந்ததிலும் குறைந்தது இந்த நிகழ்ச்சி நிரல் எவ்வளவு காலம் நடைபெறுமோ, அந்தளவு தானும் அசாந்தியில் இருக்க கூடாது, அசாந்தியைப் பரப்பக் கூடாது. அமைதியை விட்டு விட வேண்டாம். பிராமணர்களாகிய நீங்கள் முதலில் இந்த காப்பு (உறுதியை) கட்டிக் கொள்வீர்கள் அல்லவா! மற்றவர்களுக்கு கூட இந்த காப்பை அணிவிக்கிறீர்கள் என்றால், முதலில் பிராமணர்களாகிய நீங்கள் தனக்கு

காப்பு அணிவித்துக் கொள்ளும் பொழுது தான் மற்றவர்களுக்கும் கூட காப்பு அணிவிக்க முடியும். கோல்டன் ஜுப்லியில் அனைவரும் என்ன உறுதி எடுத்தீர்கள்? நாங்கள் பிரச்சனை சொரூபம் ஆக மாட்டோம், இந்த உறுதியை செய்தீர்கள் இல்லையா! இதை அடிக்கடி அண்டர்லயின் (அடிக்கோடிட்டு) கொள்ள வேண்டும். பிரச்சனை சொரூபம் ஆகி க் கொண்டு, பிறரை பிரச்சனை சொரூபம் ஆகாதீர்கள் என்று சொல்வது அப்படி அல்ல. ஆகையால் இந்த காப்பை அணிந்துக் கொள்வதற்கு பிடித்திருக்கிறதல்லவா! முதலில் நான், பிறகு தான் உலகம். சுயத்தின் தாக்கம் உலகத்தின் மீதும் ஏற்படும்.! நல்லது.

இன்று ஐரோப்பாவைச் சேர்ந்தவர்களின் டர்ன் (வாய்ப்பு). ஐரோப்பா கூட மிகப் பெரியதாக தான் இருக்கிறதல்லவா! எந்தளவு ஐரோப்பா பெரியதோ, அந்தளவு மிக பெரிய மனமுடையவர் அல்லவா! எப்படி யூரோப் பரந்து விரிந்து இருக்கிறது, எந்தளவு விரிந்துள்ளதோ, அந்தளவு சேவையில் சாராம்சம் இருக்கிறது. விநாசத்தின் தீப்பொறி எங்கிருந்து கிளம்பும்? ஐரோப்பாவிலிருந்து தான் அல்லவா! ஆகவே விநாசத்தின் சாதனம் எப்படி யூரோப்பிலிருந்து தோன்றியிருப்பதால், ஸ்தாபனையின் காரியத்தில் கூட விசேஷமாக ஐரோப்பாவிலிருந்து ஆத்மாக்களும் சிறந்தவர்களாகவே இருக்கிறார்கள். எப்படி முதலில் பாம்ஸ் (அனுகுண்டு) அண்டர்கிரவுண்டில் (மறைமுகமாக) இருந்தது, பிறகு தான் காரியத்தில் பயன்படுத்தினார்கள். அவ்வாறே ஆத்மாக்கள் கூட தயாராகி கொண்டேயிருக்கிறார்கள். இப்பொழுது குப்தமாக இருக்கிறார்கள், அண்டர்கிரவுண்டில் இருக்கிறார்கள், ஆனால் பிரபலம் கூட ஆகி க் கொண்டே யிருக்கிறார்கள், மேலும் ஆகி க் கொண்டேயிருப்பார்கள். எப்படி ஒவ்வொரு தேசத்திற்கும் தத்தமது விசேஷத்தன்மை இருக்கிறது அல்லவா, அதுபோன்று இங்கு கூட ஒவ்வொரு இடத்திற்கு தனிப்பட்ட விசேஷத்தன்மை இருக்கிறது. பெயர் பிரபலம் அடைவதற்காக ஐரோப்பாவின் சாதனம் காரியத்தில் பயன்படும். அமைதியின் சாதனம் காரியத்தில் வருவது போல, உரத்த குரல் ஒலிப்பதற்காகவும் ஐரோப்பா விலிருந்து கருவிகள் தயாரிக்கப்படும். புது உலகம் உருவாக்குவதற்காக ஐரோப்பா தான் நமக்கு உதவியாளராக இருக்கும். ஐரோப்பாவின் பொருட்கள் எப்பொழுதுமே உறுதியானதாகவே இருக்கும். ஜெர்மனியின் பொருட்களை அனைத்திற்கும் மகத்துவம் தருகிறார்கள். அவ்வாறே சேவைக்கு நிமித்தமாக மகத்துவமான ஆத்மாக்களின் பிரத்யக்ஷம் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கிறது. புரிந்ததா!

ஐரோப்பா கூட குறைந்தது அல்ல. இப்பொழுது பிரத்யக்ஷாத்தாவின் திரை திறந்து கொண்டேயிருக்கிறது. சமயத்தில் வெளிவந்து விடும். நல்லது, குறுகிய காலத்தில் நாலாபக்கமும் நன்றாக விரிவு படுத்தினீர்கள். நல்ல படைப்பை படைத்தீர்கள். இப்பொழுது இந்த படைப்பிற்கு பாலனை என்ற தண்ணீர் கொடுத்து உறுதி ஆக்கிக் கொண்டிருக்கிறீர்கள். ஐரோப்பாவின் ஸ்தூலமான பொருட்கள் எப்படி உறுதியாக இருக்கிறதோ, விசேஷமாக ஆத்மாக்கள் கூட ஆடாத-அசையாத உறுதியாதியாக மாறும். உழைப்பை (முயற்சி) அன்பாக செய்து கொண்டிருக்கிறீர்கள், எனவே உழைப்பு என்பது உழைப்பே அல்ல, ஆனால் சேவையில் ஈடுபாடு (விடா முயற்சி) நன்றாக இருக்க வேண்டும். விடா முயற்சி இருக்குமிடத்தில் தடைகள் வருவது கூட நின்றுவிடும். வெற்றி கிடைத்துக் கொண்டேயிருக்கும். அவ்வாறே ஒருவேளை ஒட்டுமொத்த ஐரோப்பாவின் தரத்ப்த பார்த்தால், மிகவும் நன்றாக இருக்கிறது. பிராமணர்கள் கூட ஐ.பி. யாக இருக்கிறார்கள், இல்லையென்றாலும் ஐ.பி. யாகத் தான் இருக்கிறார்கள். ஆகையால் ஐரோப்பாவின் நிமித்த சேவாதாரிகளுக்கு மேலும் கூட அன்பு நிறைந்த உயர்ந்த பாலனை மூலம் உறுதிபடுத்தி விசேஷ சேவை என்ற மைதானத்தில் கொண்டு வாருங்கள். அவ்வாறே பூமியும் பலனைத் தரக்கூடியதாக இருக்கிறது. நல்லது யார் பாபாவினுடையவர்களாக ஆனதுமே, மற்றவர்களையும் கூட உருவாக்குவதில் ஈடுபட்டு விடுவார்கள். தைரியம் நன்றாக வைக்கிறீர்கள், மேலும் தைரியத்தின் காரணத்தினால் தான் சேவை நிலையம் வளர்ச்சியடைந்துக் கொண்டேயிருக்கும் என்ற வெகுமதி கிடைத்திருகிறது. தரத்தையும் அதிகரியுங்கள், மேலும் வளர்ச்சியையும் அதிகரியுங்கள். இரண்டிலும் சமநிலை வையுங்கள். தரத்தின் அழகு நம்முடையது தான், வளர்சியின் அழகும் கூட நம்முடையது தான். இரண்டுமே தேவை. தரமானதாக இருக்கிறது, ஆனால் வளர்ச்சி இல்லையென்றால் கூட சேவை செய்யக்கூடியவர்கள் கூட சோர்வடைந்து விடுவார்கள். ஆகவே இரண்டிலுமே அதனுடைய விசேஷத்தன்மை காரியத்தில் பயன்படுகிறது. இரண்டினுடைய சேவை அவசியமாகும். ஏனெனில் 9-இலட்சம் உருவாக்க வேண்டு மல்லவா! 9-இலட்சத்தில் அயல் நாட்டிலிருந்து எத்தனை பேர் உள்ளீர்கள்? (5 ஆயிரம்) நல்லது -ஒரு கல்பத்தின் சக்கரத்தை முழுமை செய்து விட்டீர்கள். அயல் நாட்டினரைச் சேர்ந்தவருக்கு கடைசியில் வந்தாலும் கூட வேகமாகச் செல்வதற்கான வரதானம் கிடைத்திருப்பதால், பாரதத்தை விட வேகமாகச் செல்ல வேண்டும். ஏனெனில் பாரதவாசிகளுக்கு பூமியை உருவாக்குவதில்

உழைக்க வேண்டி யிருக்கிறது. அயல் நாட்டில் விளைச்சல் இல்லாத நிலம் என்பது இல்லை. இங்கோ முதலில் தீயவர்களை நல்லவர்களாக மாற்ற வேண்டியிருக்கிறது. அங்கோ தீயவர்கள் என்பதே அல்ல, தீய விஷயம், தலைகீழான விஷயங்களைப் கேட்டதே இல்லை, ஆகையால் தெளிவாக இருக்கிறார்கள். பாரதவாசி களின் புத்தி என்ற பலகையை சுத்தமாக்க வேண்டியிருக்கிறது, பிறகு தான் எழுத வேண்டியிருக்கிறது. அயல் நாட்டினருக்கு சமயத்திற்கு தகுந்தாற் போல் கடைசியில் வந்தாலும் வேகமாக செல்வதற்கான வரதானம் கிடைத்திருக்கிறது. எனவே ஐரோப்பியர்கள் எத்தனை இலட்சம் தயார் செய்வீர்கள்? எப்படி இந்த மில்லியன் மினிட் (நிமிடம்) என்ற நிகழ்ச்சியை உருவாக்கியிருக்கிறீர்கள், அப்படியே பிரஜை களையும் உருவாக்குங்கள். பிரஜைகளையாவது உருவாக்க இயலும் அல்லவா! மில்லியன் மினிட் என்ற நிகழ்ச்சியை உருவாக்க முடியும் என்றால் மில்லியன் பிரஜைகளை உருவாக்க முடியாதா என்ன? மேலும் ஒரு இலட்சம் என்பது குறைந்தது தான், 9-இலட்சம் தான் சொல்கிறார்கள். புரிந்ததா -ஐரோப்பியர்கள் என்ன செய்ய வேண்டும்! வேக வேகமாக தயார் செய்யுங்கள். நல்லது -இரட்டை அயல்நாட்டினருக்கு இரட்டை அதிர்ஷ்டம் கிடைத்திருக்கிறது. அனைவருக்கும் முரளி கேட்பதற்கான வாய்ப்பு கிடைத்திருக்கிறது, ஆனால் உங்களுக்கோ இரட்டிப்பாக கிடைக்கிறது. கான்ப்ரன்ஸ் (மாநாடு) பார்த்தீர்கள், கோல்டன் ஜீப்லியையும் பார்த்தீர்கள். பெரிய பெரிய தாதிகளையும் பார்த்தீர்கள். கங்மை, யமுனை, கோதாவரி, பிரம்மபுத்திரா அனைவரையும் பார்த்தீர்கள். அனைவரும் பெரிய பெரிய தாதிகளையும் பார்த்தீர்கள் அல்லவா! ஒவ்வொரு தாதியின் ஒவ்வொரு விசேஷத்தன்மையை வெகுமதியாக எடுத்துச் சென்றீர்கள் என்றால், அனைவருடைய விசேஷத்தன்மையும் காரியத்தில் பயன்படும். விசேஷத்தன்மை என்ற பையை (புத்தியை) நிரப்பிக் கொண்டு செல்ல வேண்டும். இதில் கஷ்டம்ஸ் (சுங்க வரி) அதிகாரி தடுக்க மாட்டார்கள். நல்லது.

சதா விஷ்வ கல்யாணகாரியாகி, உலக சேவைக்கு நிமித்தமான, உணமையான சேவாதாரி, சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு சதா வெற்றி எனது பிறப்புரிமை என்ற அதிகாரத்தை அடையக்கூடிய விசேஷ ஆத்மாக்களுக்கு, சதா சுயத்தின் சொரூபத்தின் மூலம் அனைவருக்கும் சொரூபத்தின் நினைவூட்டக்கூடிய அருகில் இருக்கும் ஆத்மாக்களுக்கு, சதா எல்லைக்கு அப்பாற்பட்ட பலனை எதிர்பார்க்காத சேவாதாரி ஆகி, பறக்கும் கலையில்

பறக்கக்கூடிய, டபுல் லைட் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**வரதானம்: தனது ஃபரிஸ்தா சொரூபத்தின் மூலம் கதி-சத்கதியின் (முக்தி-ஜீவன் முக்தி) பிரசாதத்தை பகிர்ந்தளிக்கக் கூடிய கதி-சத்கதியின் வள்ளல் ஆகுக!**

தற்சமயத்தில் உலகத்தின் அநேக ஆத்மாக்கள் பிரச்சனைகளில் அடிப்பட்டு அலறிக் கொண்டிருக்கிறார்கள். சிலர் பற்றாகுறையினால், சிலர் பசியினால், சிலர் உடலின் வியாதியினால், சிலர் மனதின் அசாந்தியினால்.... அனைவரின் பார்வை அமைதியின் கலங்கரை விளக்கின் பக்கம் சென்று கொண்டிருக்கிறது. ஐயோ ஐயோ என்ற கூக்குரலுக்குப் பிறகு வெற்றியின் முழக்கம் ஏற்படும் என்று அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இப்பொழுது தனது சாகார ஃபரிஸ்தா சொரூபத்தின் மூலம் உலகத்தின் துக்கத்தை நீக்குங்கள். மாஸ்டர் கதி-சத்கதி அளிக்கும் வள்ளலாகி கதி மற்றும் சத்கதியின் பிரசாதத்தைப் பகிர்ந்தளியுங்கள்.

## சுலோகன்: பாப்தாதாவின் ஒவ்வொரு கட்டளையையும் நடைமுறையில் கொண்டு வரக்கூடியவர்களே திருப்தியானவர்களாக ஆகிறார்கள்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 25.02.1986 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# இரட்டை அயல்நாட்டு சகோதர, சகோதரிகளின் சமர்ப்பண விழாவில்!

இன்று பாப்தாதா விசேஷஷமாக சிரேஷ்ட நாளிற்கான விசேஷமான அன்பு நிறைந்த வாழ்த்துக்கள் கொடுத்துக் கொண்டிருக்கின்றார். இன்று எந்த விழா கொண்டாடினீர்கள்? வெளிக் காட்சிகள் அழகாகவே இருந்தன ஆனால் அனைவரின் ஆர்வம், உற்சாகம் மற்றும் திட சங்கல்பம், உள்ளத்தின் ஓசைகள் திலாராம் தந்தை யிடம் சென்ற டைகிறது. ஆக இன்றைய நாள் விசேஷமாக ஆர்வம், உற்சாகம் நிறைந்த திட சங்கல்பத்திற் கான விழா என்று கூறலாம். எப்போதி-ருந்து பாபாவினுடையவர்களாக ஆனீர்களோ அப்பொழுதிலிருந்து சம்பந்தம் இருக்கிறது மற்றும் இருக்கும் ஆனால் இந்த விசேஷ நாளை விசேஷமான முறையில் கொண்டாடியிருக்கிறீர்கள். இது தான் திட சங்கல்பம் என்று கூறப்படுகிறது. எது நடந்தாலும், மாயையின் புயல்கள் வந்தாலும், மனிதர்களின் வித விதமான பிரச்சனைகள் வந்தாலும், இயற்கையின் ஏதாவது குழப்பங்களின் காட்சிகளாக இருக்கட்டும். லௌகீகம் அல்லது அலௌகீக சம்பந்தங்களில் எந்த ஒரு சூழ்நிலையாக இருக்கட்டும், மனதின் எண்ணங்களில் மிக வேகமான புயல்களாகவும் இருக்கட்டும், இருப்பினும் ஒரு பாபாவைத் தவிர வேறு யாருமில்லை. ஒரே பலம் ஒரே நம்பிக்கை என்ற திட சங்கல்பம் செய்திருக்கிறீர்களா அல்லது மேடையில் மட்டுமே அமர்ந்திருந் தீர்களா? டபுள் மேடையில் அமர்ந்திருந்தீர்களா? அல்லது ஒரு மேடையில் அமர்ந்திருந்தீர்களா? ஒன்று இந்த ஸ்தூல மேடை, இரண்டாவது திட சங்கல்பத்தின் மேடை, திட தன்மை என்ற மேடையாகும். ஆக இரட்டை மேடையில் அமர்ந்திருந்தீர்கள் தானே? மாலையும் மிக அழகானதாக அணிந்திருந்தீர்கள். இந்த மாலை மட்டுமே அணிந்திருந்தீர்களா? அல்லது வெற்றி மாலையும் அணிந்திருந்தீர்களா? வெற்றி கழுத்து மாலையாகும். இந்த திட தன்மை தான் வெற்றிக்கு ஆதாரமாகும். இந்த ஸ்துல மாலையின் கூடவே வெற்றிக்கான மாலையும் அணிந்திருந்தீர்கள் தானே? பாப்தாதா இரண்டுக் காட்சிகளை பார்க்கின்றார். சாகார ரூபத்தின் காட்சிகளை மட்டுமே பார்க்கவில்லை

ஆனால் சாகார காட்சிகளின் கூடவே ஆன்மீக மேடையில் மனதின் திட சங்கல்பம் மற்றும் வெற்றிக்கான சிரேஷ்ட மாலை இரண்டையும் பார்த்துக் கொண்டி ருந்தார். இரண்டு மாலை, இரண்டு மேடைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். அனைவரும் திட சங்கல்பம் செய்தீர்களா? மிகவும் நல்லது. என்ன நடந்தாலும் சம்பந்தத்திலேயே இருக்க வேண்டும். பரமாத்மாவின் அன்பான சம்பந்தத்தில் இருந்து கொண்டு சதா வெற்றி அடைய வேண்டும். வெற்றி என்பது கழுத்து மாலை என்று நிச்சயிக்கப்பட்டதாகும். ஒரு பாபாவைத் தவிர வேறு யாருமில்லை என்பது திட சங்கல்பமாகும். ஒரே ஒருவர் தான் எனில் பிறகு ஏக்ரஸ் ஸ்திதி தானாகவே மற்றும் எளிதாகவே உருவாகி விடும். அனைத்து சம்பந்தங்களின் அழிவற்ற தொடர்பு ஏற்படுத்தியிருக்கிறீர்கள் அல்லவா! ஒருவேளை ஒரே ஒரு சம்பந்தத்தில் குறையிருந்தால் குழப்பம் ஏற்படும். ஆகையால் சர்வ சம்பந்தங்களின் கயிறு கட்டியிருக்கிறீர்கள், தொடர்பு ஏற்படுத்தியிருக்கிறீர்கள். சங்கல்பம் செய்திருக்கிறீர்கள். சர்வ சம்பந்தம் வைத்திருக்கிறீர்களா? அல்லது முக்கியமான 3 சம்பந்தங்கள் மட்டும் வைத்திருக்கிறீர்களா? சர்வ சம்பந்தம் இருக்கிறது எனில் சர்வ பிராப்திகளும் இருக்கிறது. சர்வ சம்பந்தம் இல்லை யெனில் பிராப்திகளில் ஏதாவது குறை இருந்து விடுகிறது. அனைவருக்கும் சமர்ப்பண விழா கொண்டாடப் பட்டது அல்லவா! திட சங்கல்பம் செய்வதன் மூலம் முயற்சியில் முன்னேறுவதற்கு விசேஷ லிப்ட் கிடைத்து விட்டது. இந்த விதியும் விசேஷ ஆர்வம், உற்சாகத்தை அதிகப்படுத்துகிறது. பாப்தாதாவும் அனைத்து குழந்தை களுக்கும் திட சங்கல்பம் செய்வதற்கான விழாவிற்கு வாழ்த்துக்களை வழங்குகின்றார். மேலும் சதா அழிவற்றவர் களாக ஆகுங்கள், அமரர் ஆகுங்கள் என்ற வரதானம் கொடுக்கின்றார்.

இன்று ஆசிய குழுவினர் அமர்ந்திருக்கின்றனர். ஆசியாவின் விசேஷதா என்ன? அயல்நாட்டு சேவைக்கான முதல் குழு ஜப்பான் சென்றது. இது விசேஷமானதாக ஆகி விடுகிறது அல்லவா! சாகார பாபாவின் பிரேரணையின் படி விசேஷசமாக அயல்நாட்டு சேவைக்கான அழைப்பு மற்றும் சேவை ஜப்பானில் ஆரம்பமானது. ஆக ஆசியாவின் நம்பர் ஸ்தாபனையின் நம்பரில் முன்னேறி விட்டது அல்லவா! முதல் அயல்நாட்டு அழைப்பாகும். பிற தர்மத்தினரும் அழைப்பு கொடுத்தனர், அது ஆசியாவிலிருந்து தான் ஆரம்பமானது. ஆக ஆசியா எவ்வளவு அதிஷ்டசாலியாக இருக்கிறது! மேலும் இரண்டாவது விசேஷஷத் தன்மை

-ஆசியாவில் அனைத்திற்கும் நெருங்கிய தேசமாக பாரதம் இருக்கிறது. நெருக்கத்தில் இருப்பவர் களை செல்லவமானவர்கள் என்று கூறுவர். செல்லமான குழந்தைகள் மறைந்திருக்கின்றனர், ஒவ்வொரு ஸ்தானத்திலிருந்தும் எவ்வளவு நல்ல நல்ல இரத்தினங்கள் உருவாகியிருக்கின்றன! எண்ணிக்கை குறைவாக இருக்கலாம், ஆனால் தரமானமானவர்களாக இருக்கின்றனர். முயற்சிக்கான பலன் நன்றாக இருக்கிறது. இதே போன்று சிறிது சிறிதாக இப்போது எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருக்கிறது. அனைவரும் அன்பானவர்களாக இருக்கிறீர்கள். ஒவ்வொருவரும் ஒருவருக் கொருவரை விட மிக அன்பானவர்களாக இருக்கிறீர்கள். இதுவே பிராமண குடும்பத்தின் விசேஷமாகும்.. அனைவரையும் விட எனக்குத் தான் அதிக அன்பு இருக்கிறது என்றும், பாபாவிற்கும் என் மீது தான் அதிக அன்பு இருக்கிறது என்றும் ஒவ்வொருவரும் அன்பவம் செய்கிறீர்கள். என்னைத் தான் பாப்தாதா முன்னேற்று கின்றார், ஆகையால் பக்தி மார்க்கத்தினரும் ஒரு சித்திரத்தை மிக நன்றாக பொருள் நிறைந்ததாக உருவாக்கியிருக்கின்றனர். ஒவ்வொரு கோபிகையின் கூடவே கோபியனும் இருக்கின்றார். ஒரே ஒரு இராதையுடன் மட்டுமல்ல அல்லது 8-பட்டத்து ராணிகளுடன் மட்டுமல்ல. ஒவ்வொரு கோபிகையுடனும் கோபிவல்லப் இருக்கின்றார். தில்வாலா கோயிலுக்குச் சென்றால் இது என்னுடைய சித்திரம் அதாவது இது என்னுடைய குடில் என்று குறிப்பெடுக்கிறீர்கள் அல்லவா! ஆக இந்த ராச லீலையிலும் (நடனம்) உங்கள் அனைவரின் சித்திரம் இருக்கிறதா? இதைத் தான் மகா லீலை (ராஸ்) என்று கூறப்படுகிறது. இந்த மகா லீலைக்கு மிகுந்த மகிமை இருக்கிறது. பாப்தாதாவிற்கு ஒவ்வொருவர் மீதும் ஒருவரை விட மற்றொருவர் மீது அதிக அன்பு இருக்கிறது. பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் சிரேஷ்ட பாக்கியத்தைப் பார்த்து மகிழ்ச்சி யடைகின்றார். யாராக இருக்கட்டும், ஆனால் கோடியில் சிலராக இருக்கின்றார். பத்மாபதம் பாக்கிய வான்களாக இருக்கின்றனர். உலகீய கணக்கில் பார்க்கின்ற போது இவ்வளவு கோடியில் மிகச் சிலராக இருக்கிறீர்கள் அல்லவா! ஐப்பான் எவ்வளவு பெரியதாக இருக்கிறது! ஆனால் தந்தையின் குழந்தைகளாக எத்தனை பேர் இருக்கிறீர்கள்? ஆக கோடியில் சிலர்களாக ஆகி விடுகிறீர்கள் அல்லவா! பாப்தாதா ஒவ்வொருவரின் விசேஷத்தன்மை மற்றும் பாக்கியத்தைப் பார்க்கின்றார். கோடியில் சிலராக இருப்பவர்கள் செல்லமானவர்களாக இருக்கின்றனர். தந்தைக்கு அனைவரும் விசேஷமான ஆத்மாக்கள். தந்தை

சிலரை சாதாரணமானவர்களாக, சிலரை விசேஷமானவர்களாகப் பார்ப்பதில்லை. அனைவரும் விசேஷமானவர்கள். இந்த பக்கம் மேலும் அதிகரிக்கும், ஏனெனில் இந்த முழு பக்கமும் விசேஷமாக டபுள் சேவை நடைபெறுகிறது. ஒன்று பல விதமான தர்மங்கள் இருக்கின்றன. மேலும் இந்த பக்கம் சிந்தியிலிருந்து வந்த ஆத்மாக்கள் அதிகமாக இருக்கின்றனர். அவர்களுக்கும் சேவை நன்றாக செய்ய முடியும். அவர்களை நெருக்கத்தில் கொண்டு வந்தால் அவர்களது உதவியின் மூலம் மற்ற தர்மத்தினர்களை தொடர்பு கொள்வது எளிதாகி விடும். டபுள் சேவையின் மூலம் டபுள் விருத்தி செய்ய முடியும். அவர்களுக்கு ஏதாவது ஒரு முறையில் தலை கீழான முறையில் அல்லது நேர் மறையான முறையில் விதை தெளிக்கப்பட்டிருக்கிறது. அறிமுகம் இருக்கின்ற காரணத்தினால் எளிதாக சம்பந்தத்தில் கொண்டு வந்து விட முடியும். அதிக சேவை செய்ய முடியும். ஏனெனில் அனைத்து ஆத்மாக்களின் குடும்பமாகும். பிராமணர்கள் அனைத்து தர்மங்களிலும் பரவி சென்றிருக்கின்றனர். பிராமணர்கள் செல்லாத தர்மமே எதுவும் கிடையாது. இப்போது அனைத்து தர்மங்களிலிருந்தும் வெளிப்பட்டு வந்து கொண்டிருக்கின்றனர். மேலும் யார் பிராமண குடும்பத்தினர்களாக இருக்கின்றார்களோ, அவர்கள் தன்னுடையவர்கள் என்று தோன்றுகிறது அல்லவா! ஏதோ ஒரு கணக்கின் காரணத்தினால் சென்றிருக்கிறார்கள், மீண்டும் தன்னுடைய குடும்பத்திடம் வந்து சேர்ந்து விட்டார்கள். எங்கெங்கிருந்து வந்து தனது சேவைக்கான பாக்கியத்தை எடுத்துக் கொள்ள நிமித்தமானவர்களாக ஆகி விட்டார்கள்! இது ஒன்றும் குறைந்த பாக்கியம் கிடையாது. மிகவும் சிரேஷ்ட பாக்கியமாகும். உயர்ந்ததிலும் உயர்ந்த புண்ணிய ஆத்மாக்களாக ஆகி விடுகிறார்கள். மகாதானிகள், மகான் சேவாதாரிகள் என்ற பட்டியலில் வந்து விடுகிறார்கள். ஆக நிமித்தமாக ஆவதும் ஒரு விசேஷ பரிசாகும். இரட்டை அயல்நாட்டினருக்கு இந்த பரிசு கிடைத்திருக்கிறது. சிறிது அனுபவம் செய்ததும் சென்டர் திறப்பதற்கு நிமித்தமாக ஆகி விடுகிறார்கள். இதுவும் கடைசியில் வந்திருந்தாலும் வேகமாகச் செல்வதற்கான விசேஷ பரிசாகும். சேவை செய்வதால் அதிக மானவர்களுக்கு இந்த நினைவு இருக்கிறது -நான் நிமித்தமாகி என்ன செய்கிறேனோ என்னைப் பார்த்து மற்றவர்கள் செய்வார்கள். ஆக இது இரட்டை கவனமாக ஆகி விடுகிறது. இரட்டை கவனத்தின் காரணத்தினால் இரட்டை லிப்ட் ஆக ஆகி விடுகிறது. இரட்டை அயல்நாட்டினரின் இரட்டை லிப்டை புரிந்து கொண்டீர்களா! இப்போது அனைத்து இடங்களிலும் பூமி நன்றாக ஆகி விட்டது. குழப்பங்களுக்குப்

பிறகு பூமி சரியாகி விடும் அல்லவா! பிறகு பழங்களும் நல்லதாக மற்றும் எளிதாக உருவாகும். நல்லது, ஆசியாவின் பெரிய மைக்கின் ஓசை பாரதத்தில் விரைவாகவே வந்து சேர்ந்து விடும். ஆகையால் அப்படிப்பட்ட மைக் தயார் செய்யுங்கள். நல்லது.

**பெரிய தாதிகளுடன்**: உங்களுக்கு எப்படி மகிமை செய்வது! தந்தையைப் பற்றி கூறும் போது கடல் நீரை மையாக, பூமியை காகிதமாக இது போன்றே தாதிகளாகிய உங்கள் அனைவரின் மகிமையாகும். மகிமை பாட ஆரம்பித்தால் இரவு பகல் ஒரு வாரத்திற்கான பாடமாக ஆகி விடும். நன்றாக இருக்கிறீர்கள், அனைவரின் ராச லீலையும் நன்றாக இருக்கிறது. அனைவரின் ராசியும் சேர்கின்றது மற்றும் அனைவரும் நடனமாடுவதும் நன்றாக இருக்கிறது. கை மீது கை கோர்ப்பது என்றால் கருத்துக்களில் ஒத்துபோவது -இது தான் நடனமாகும். பாப்தாதா தாதிகளின் இந்த நடனத்தை பார்த்துக் கொண்டே இருக்கின்றார். அஷ்ட இரத்தினங்களின் நடனமே இது தான். தாதிகளாகிய நீங்கள் தான் குடும்பத்தின் விசேஷ அலங்காரங்களாக இருக்கிறீர்கள். அலங்காரம் இல்லை யெனில் அழகாக இருக்காது. எனவே அனைவரும் அதே அன்புடன் பார்க்கின்றனர்.

**பிரிஜேந்திரா தாதியுடன்**: குழந்தை பருவத்தி-ருந்தே லௌகீகம் மற்றும் அலௌகீகத்தில் அலங்காரத்துக் கொண்டே இருந்தார், அலங்கரித்து அலங்கரித்து அலங்காரமானவராக ஆகி விட்டார். அப்படித் தானே! பாப்தாதா மகா வீர், மகாரதி குழந்தைகளை சதா நினைவு செய்வதோடு மட்டுமின்றி அவர்கள் நினைவிலேயே கலந்து இருக்கின்றனர். யார் கலந்திருக்கின்றார்களோ அவர்களை நினைவு செய்ய வேண்டிய அவசியம் கிடையாது. பாப்தாதா சதா ஒவ்வொரு விசேஷ இரத்தினத்தையும் உலகிற்கு முன் பிரத்ட்சயம் செய்கின்றார். உலகிற்கு முன் பிரத்ட்சயம் ஆகக் கூடிய விசேஷ இரத்தினங்களாக இருக்கிறீர்கள். அனைவரின் குஷி என்ற அதிகப்படியான உதவியும் இருக்கிறது. உங்களது குஷியைப் பார்த்து அனைவருக்கும் குஷி என்ற சத்தான உணவு கிடைத்து விடுகிறது. அதனால் தான் உங்கள் அனைவரின் ஆயுளும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. ஏனெனில் அனைவரின் அன்பு என்ற ஆசீர்வாதம் கிடைத்துக் கொண்டே இருக்கிறது. இப்போது இன்னும் அதிக காரியம் செய்ய வேண்டும். ஆகையால் குடும்பத்தின் அலங்காரமாக இருக்கிறீர்கள். அனைவரும் எவ்வளவு அன்பாகப் பார்க்கின்றனர்! ஒருவரது குடை நீக்கப்பட்டு விட்டால்

அவரது தலை எப்படியிருக்கும்! குடையுடன் இருப்பவர் குடையற்றவராக ஆகி விட்டால் எப்படியிருக்கும்? ஆக நீங்கள் அனைவரும் குடும்பத்தில் குடை போன்றவர்கள்.

**நிர்மல் சாந்தா தாதியிடம்:** தனது நினைவுச்சின்னத்தை மதுவனத்தில் சதா பார்த்துக் கொண்டிருக்கின்றாய். நினைவுச்சின்னம் இருப்பது நினைவு செய்வதற்காகவே.! ஆனால் உன்னுடைய நினைவு நினைவுச் சின்னத்தை உருவாக்கி விடுகிறது. குடும்பத்திலுள்ள அனைவருக்கும் நடந்தாலும், காரியங்கள் செய்தாலும் நிமித்தமாக இருக்கும் ஆதாரமூர்த்தின் நினைவு வந்து கொண்டே இருக்கிறது. ஆக ஆதாரமூர்த்தியாக இருக்கின்றாய். ஸ்தாபனைக்கான காரியத்தில் ஆதாரமூர்த்தி உறுதியாக இருக்கின்ற காரணத்தினால் இந்த கட்டிடத்தின் முன்னேற்றம் எவ்வளவு உறுதியானதாக ஆகி க் கொண்டிருக்கிறது. காரணம்? ஆதாரம் உறுதியாக இருப்பதாகும். நல்லது.

**வரதானம்: ஒவ்வொரு விநாடியும் ஒவ்வொரு எண்ணத்தின் மகத்துவத்தை அறிந்து புண்ணிய கணக்கை சேமிக்கக் கூடிய பத்மாபதம்பதி (பலமடங்கு பாக்கியசாலி) ஆகுக!**

புண்ணிய ஆத்மாக்களாகிய உங்களது சங்கல்பத்திலும் விசேஷ சக்தி இருக்கிறது, இந்த சக்தியின் மூலம் அசம்பவத்தையும் கூட சம்பவம் ஆக்கி விட முடியும். இன்றைய நாட்களில் இயந்திரங்களின் மூலம் காய்ந்த நிலைத்தை செழிப்பானதாக ஆக்கி விடுகிறார்கள், மலைகளில் கூட மலர் பூக்கச் செய்கிறார்கள். அதே போன்று நீங்கள் தங்களது சிரேஷ்ட சங்கல்பத்தின் மூலம் நம்பிக்கையற்றவர்களைக் கூட நம்பிக்கையுடையவர்களாக ஆக்கி விட முடியும். ஒவ்வொரு விநாடி, ஒவ்வொரு சங்கல்பத்தின் மதிப்பை உணர்ந்து, சங்கல்பம் மற்றும் விநாடியைப் பயன்படுத்தி புண்ணிய கணக்கை சேமியுங்கள். உங்களது சங்கல்பத்தின் சக்தி அந்த அளவிற்கு உயர்ந்தது அதாவது ஒரே ஒரு சங்கல்பம் பத்மாபதம்பதி ஆக்கி விடும்.

**சுலோகன்: ஒவ்வொரு செயலும் அதிகாரத்தன்மையின் நம்ம்பிக்கை மற்றும் போதையுடன் செய்தால் கடின உழைப்பு முடிந்து விடும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 27.02.1986 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# கல்பகல்பம் வெற்றியடைந்த ஆன்மிக சேனை!

அனைத்து ஆன்மீக சக்தி சேனை, பாண்டவ சேனை, ஆன்மீக சேனை தனது வெற்றியினுடைய நம்பிக்கை மற்றும் போதையில் இருக்கின்றீர்கள் அல்லவா. வேறு எந்த ஒரு சேனையும் யுத்தம் செய்யும்பொழுது வெற்றி யானது உத்திரவாதம் கிடையாது. வெற்றி உறுதியானது என்று நம்ப முடியாது ஆனால், ஆன்மிக சேனை, சக்தி சேனையாகிய நீங்கள், இப்போதைய வெற்றியாளர்கள் மட்டும் அல்ல. கல்ப கல்பத்தின் வெற்றியாளர்கள் ஆவோம் என்ற இந்த நம்பிக்கையின் போதையில் சதா இருக்கின்றீர்கள். தங்களுடைய கல்பத்திற்கு முந்தைய வெற்றியினுடைய கதைகளைக் கூட பக்தி மார்க்கத்தில் கேட்டுள்ளீர்கள். பாண்டவர்களின் வெற்றியின் நினைவுச் சின்னமான கதையை இப்பொழுது கூட கேட்கின்றீர்கள். தங்களுடைய வெற்றியின் சித்திரத்தை இப்பொழுது கூட பார்த்துக் கொண்டு இருக்கின்றீர்கள். பக்தியில் அஹிம்சாவாதிக்குப் பதிலாக ஹிம்சை செய்பவராகக் காண்பித் துள்ளார்கள். ஆன்மிக சேனையை உலகாய சாதாரண சேனையாகக் காண்பித் துள்ளார்கள், தங்களுடைய வெற்றி யின் மகிமையை இப்பொழுது கூட பக்தர்கள் மூலமாகக் கேட்டு மகிழ்ச்சி யடைகின்றீர்கள். பிரபுவின் மீது அன்பான புத்தியுடையவர்கள் வெற்றியடைவார்கள், அன்பற்ற புத்தியுடையவர்கள் விநாசமடைவார்கள் என்று கூட கூறப்பட்டுள்ளது. ஆகவே, கல்பத்திற்கு முந்தைய உங்களுடைய மகிமை எவ்வளவு பிரசித்தமாக இருக்கிறது! வெற்றி நிச்சமிக்கப்பட்டு இருக்கும் காரணத்தினால் நிச்சயபுத்தியுடைய வெற்றியாளர்கள் ஆவீர்கள். எனவே, மாலையைக் கூட வெற்றி மாலை என்று கூறப்படுகிறது. ஆகவே, நம்பிக்கை மற்றும் போதை ஆகி ய இரண்டும் இருக்கிறதல்லவா. ஒருவேளை, யாராவது கேட்கின்றார்கள் என்றால் வெற்றியானது தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று நம்பிக்கையோடு கூறுவீர்கள். வெற்றி கிடைக்குமா அல்லது கிடைக்காதா தெரியவில்லை என்று கனலில் கூட சங்கல்பம் எழ முடியாது, தீர்மானிக்கப்பட்டுள்ளது.

போன கல் ம் மற்றும் எதிர்காலத்தையும் கூட தெரிந்துள்ளீர்கள். திரிகாலதரிசி ஆகி அதே போதையோடு கூறுகின்றீர்கள். அனைவரும் பக்காவாக இருக் கின்றீர்கள் அல்லவா! ஒருவேளை யாராவது சிந்தியுங்கள், பாருங்கள் என்று சொன்னாலும் கூட நீங்கள் என்ன கூறுவீர்கள்? அனேக முறை பார்த்திருக்கின்றோம். புதிய விசயமாக இருந்தால் யோசிக்கலாம், பார்க்கலாம். அனேக முறை நடந்த விசயமானது இப்பொழுது மீண்டும் நடந்து கொண்டு இருக்கின்றது. எனவே, அப்படிப் பட்ட நிச்சயபுத்தி ஞானம் நிறைந்த ஆத்பாக்கள், யோகம் நிறைந்த ஆத்மாக்கள் ஆவீர்கள் அல்லவா.

இன்று ஆப்பிரிக்கா குரூப்பிற்கான முறை. அனைவரும் இப்பொழுது மதுபன் நிவாசி ஆவீர்கள். நிரந்தர முகரி மதுபன் ஆகும் அல்லவா. அது சேவை ஸ்தானம் ஆகும். சேவை ஸ்தானம் அலுவலகம் ஆகும் ஆனால், வீடு மதுபன் ஆக இருக்கின்றது அல்லவா. சேவைக்காக ஆப்பிரிக்கா, இங்கிலாந்து ஆகி ய நால புறங்களுக்கும் சென்றுள்ளீர்கள். தர்மம் மாறி இருக்கலாம், தேசம் மாறியிருக்கலாம் ஆனால், சேவைக்காகவே சென்றுள்ளீர்கள். எந்த வீடு நினைவிற்கு வருகின்றது? மதுபனா அல்லது பரந்தாமமா? சேவை ஸ்தானத்தில் இருந்து சேவை செய்து கொண்டு இருந்தாலும் கூட சதா மதுபன் மற்றும் முரளி ஆகி ய இவை இரண்டும் நினைவு இருக்கின்றது அல்லவா? ஆப்பிரிக்காவிற்கு சேவைக்காக சென்றுள்ளீர்கள் அல்லவா. சேவை ஞான கங்கையாக ஆக்கியுள்ளது. ஞான கங்கைகளிடம் ஞான ஸ்நானம் செய்து இன்று எத்தனை பேர் பாவனம் ஆகி இருக்கின்றார்கள்! குழந்தைகள் வெவ்வேறு இடங்களில் சேவை செய்வதைப் பார்த்து, குழந்தைகள், எத்தகைய இடங்களில் சேவைக்காக பயமற்றவராகி மிகுந்த ஆர்வத்தோடு இருக்கின்றார்கள் என்பதை பாப்தாதா நினைக் கின்றார்கள். ஆப்பிரிக்கா மக்களின் வாயுமண்டலம், அவர்களுடைய உணவுப் பழக்கம், நடத்தை எப்படி இருந்தாலும் கூட சேவையின் காரணத்தினால் அங்கு இருந்துகொண்டு இருக்கின்றீர்கள். சேவைக்கான பலம் கிடைத்து கொண்டு இருக்கின்றது. சேவைக்கான உடனடி பலன் கிடைக்கின்றது, அந்த பலம் பயமற்றவராக ஆக்கி விடுகின்றது. ஒருபோதும் பயப் படுவதில்லை அல்லவா! மேலும், அதிகாரப்பூர்வமான அழைப்பு முதலில் இங்கிருந்து கிடைத்தது. வெளிநாட்டு சேவைக்கான அழைப்பு கிடைத்ததால் அத்தகைய தேசங்களுக்கு சென்றீர்கள். அழைப்பினுடைய சேவையின் அஸ்திவாரம் இங்கிருந்து தான் ஆரம்பமானது. சேவையினுடைய ஊக்கம். உற்சாகத்தின்

உடனடி பலன் இங்குள்ள குழந்தைகள் காண்பித்தார்கள். அந்த நிமித்தமான ஒருவருக்கே புகழ். அவர் மூவம் எத்தனை நல்ல நல்ல மறைந்திருந்த இரத்தினங்கள் வெளிப்பட்டு வந்துள்ளனர், இப்பொழுது நிறைய விருத்தி ஆகி விட்டது. அவர்கள் மறைந்து விட்டார்கள் மற்றும் நீங்கள் வெளிப்பட்டுவிட்டீர்கள். அழைப்பின் காரணத்தினால் நம்பர் முன்னால் வந்து விட்டது. எனவே, ஆப்பிரிக்காவைச் சேர்ந்தவர்கள் பரிசை அடையக்கூடியவர்கள் என்று பாப்தாதா கூறுகின்றார். பரிசு பெறக்கூடிய இடம் ஆகும். ஏனென்றால், சூழ்நிலை அசுத்தமாக இருக்கின்றது. அசுத்தமான சூழ்நிலைக்கு மத்தியில் விருத்தி ஆகி க் கொண்டிக்கின்றது. இதற்காகவே பரிசு என்று சொல்கின்றார்.

சக்தி சேனை மற்றும் பாண்டவ சேனை ஆகி ய இரண்டும் சக்திசாலியாக இருக்கின்றது. பெரும்பான்மை யானோர் இந்தியர்கள் ஆனால், இந்தியாவிலிருந்து தூரமாக ஆகி விட்டீர்கள், தூரமாக இருந்தாலும் தனது உரிணைமயை விடமுடியாது. அங்கேயும் பாபாவின் அறிமுகம் கிடைத்து விட்டது. பாபாவினுடை யவராக ஆகி விட்டீர்கள். நெய்ரோபியில் உழைப்பு ஏற்படவில்லை. பிரிந்தவர்கள் சகஜமாக வந்தடைந்து விட்டார்கள். மேலும், இது குஜராத்திகளுடைய விசேஷ சம்ஸ்காரமாக இருக்கின்றது. அவர்களிடம் இந்த பழக்கம் இருக்கின்றது -அனைவரும் ஒன்று சேர்ந்து கர்பா நடனம் ஆடுவார்கள், தனியாக ஆடுவதில்லை. சிறியவர்களோ, பெரிய வர்களோ அனைவரும் ஒன்று சேர்ந்து அவசியம் கம்பா நடனம் ஆடுவார்கள். இது குழுவின் அடையாளம் ஆகும். சேவையில் பார்த்தாலும் குஜராத்திகள் குழுவாக இருக்கின்றார்கள். ஒருவர் வருகின்றார் என்றால் 10 பேரை அவசியம் அழைத்து வருகின்றார். இந்தக் குழுவின் பழக்கம் அவர்களிடம் நன்றாக உள்ளது. எனவே, விரைவாக வளர்ச்சி ஏற்படுகின்றது. சேவையினுடைய விருத்தி மற்றும் விஸ்தாரம் ஆகி க் கொண்டு இருக்கிறது. அப்பேர்பட்ட இடங்களில் சாந்தியினுடைய சக்தியைக் கொடுப்ப பயத்திற்கு பதிலாக குஷியை ஏற்படுத்துவது என்பது சிரேஷ்ட சேவை ஆகும். அத்தகைய இடங்களில் அவசியமானதாக இருக்கின்றது. விஷ்வ கல்யாணகாரி ஆவீர்கள். எனவே. உலகத்தின் நாலாபுறங்களிலும் சேவையை அதிகப்படுத்த வேண்டும். மேலும், நிமித்தமாக ஆக வேண்டும். எந்த ஒரு மூலையும், ஒருவேளை விடுபட்டுவிட்டால் புகார் செய்வார்கள். நல்லது, தைரியம் குழந்தைகளுடையது உதவி தந்தையினுடையது. புஜங்கள் கூ அங்கிருந்துதான் வெளிப்பட்டு சேவை செய்து கொண்டு

இருக்கின்றார்கள். இது கூட சகயோகம் ஆகி விட்டதல்லவா. தான் விழிப்படைந்து இருக்கின்றீர்கள், இது மிகவும் நல்லது, ஆனால், விழிப்படைந்து பிறகு விழிப்படைய வைக்க நிமித்தம் ஆகி உள்ளீர்கள். இதில் இரட்டிப்பு இலாபம் உள்ளது. அதிகப்படியான புஜங்கள் அங்கே உள்ளவர்களே. இந்த விசேத்தன்மை நன்றாக இருக்கின்றது. வெளிநாட்டு சேவையில் பெரும்பான்மையானோர் அங்கிருந்து வெளிப்பட்டு அங்கேயே சேவைக்கு நிமித்தம் ஆகி விடுகின்றார்கள், வெளிநாடு பாரதத்திற்கு புஜங்கள் கொடுக்கவில்லை. பரதம்தான் வெளிநாட்டிற்கு கொடுத்துள்ளது. பாரதம் கூட மிக பெரியது ஆகும். தனித்தனி மண்டலமாக இருக்கின்றது. சொர்க்கமாக பாரதத்தைத் தான் ஆக்க வேண்டும். வெளிநாடு சுற்றுலா ஸ்தலமாக ஆகி விடும். எனவே, அனைவரும் எவரெடியாக இருக்கின்றீர்கள் அல்லவா. இன்று யாரை, எங்கு அனுப்பினாலும் எவரெடியாக (சதா தயார் நிலையில்) இருக்கின்றீர்கள் அல்லவா. எப்பொழுது தைரியம் வைக்கின்றீர்களோ, அப்பொழுது உதலி கூட கிடைக்கின்றது. எவரெடியாக அவசியம் இருக்க வேண்டும். மேலும், எப்பொழுது அப்படிப்பட்ட நேரம் வருமோ, அப்பொழுது கட்டளை கொடுக்க வேண்டியிருக்கும். பாபா மூலமாக கட்டளை பிறப்பிக்கப்பட்டே ஆகும். எப்பொழுது கட்டளை கொடுப்பார்கள் என்ற அந்த தேதியைக் கூறமாட்டார்கள். எந்த நாள் என்பதைக் கூறினால் பிறகு அனைவரும் நம்பர்-1 பாஸ் ஆகி விடுவீர்கள். இங்கு தேதியும் வினாத்தாளும் ஓரே நேரத்தில் திடீரென வரும், எவரெடியாக இருக்கின்ரர்கள் அல்லவா, இங்கேயே இருந்து விடுங்கள் என்று கூறினால், குழந்தைகள். வீடு நினைவிற்கு வருமா? சுகத்தின் சாதனங்கள் அங்கு இருக்கின்றன ஆனால், சொர்க்கமோ இங்கே உருவாக்க வேண்டும். எனவே, சதா எவரெடியாக இருப்பது பிராமண வாழ்க்கையினுடைய விசேத் தன்மை ஆகும். தனது புத்தியின் லைன் தெளிவாக இருக்க வேண்டும். சேவைக்காக நிரித்தமாத்திரம் அந்த இடத்தை தந்தை கொடுத்திருக்கின்றார். நிரித்தமாகி சேவைக்கு ஆஜராகியுள்ளீர்கள். பிறகு தந்தையிடமிருந்து சமிக்ஞை கிடைக்கும், அப்பொழுது எதையும் யோசிக்க வேண்டிய அவசியமே இருக்காது. கட்டளை அனுசாரம் சேவை நன்றாக செய்துகொண்டு இருக்கின்றீர்கள். எனவே பற்றற்றவர் மற்றும் தந்தைக்கு அன்பானவராக இருக்கின்றீர்கள். ஆப்பிரிக்காவின் விருத்தி நன்றாக இருக்கின்றது. வி.ஐ.பி.களுக்கான சேவை நன்றாக நடந்து கொண்டிருக் கின்றது. அரசாங்கத்துடன் சம்பந்தம் நன்றாக இருக்கிறது. அனைத்து விதமான வர்க்கத்தைச் சேர்ந்த ஆத்மாக்களை தொடர்பு கொண்டு ஏதாவது ஏதாவது

நேரத்தில் சமீபத்தில் அழைத்து வந்து விடும் இந்த விசேத்தன்மை இருக்கின்றது. இன்று தொடர்பில் வரக்கூடியவர்கள் நாளை சம்பந்தத்தில் வரக்கூடியவர் களாக ஆகி விடுவார்கள். அவர்களை விழிப்படையச் செய்து கொண்டே இருக்க வேண்டும். இல்லையென்றால், கொஞ்சம் கண்களைத்திறந்து விட்டு பிறகு துங்கி விடுகின்றார்கள். கும்பகர்ணனாக இருக்கின்றார்கள். தூக்கத்தின் போதை இருக் கின்றது என்றால் ஏதாவது சாப்பிட்டதையும், குடித்ததையும் கூட மறந்து விடுகின்றனர். கும்பகர்ணனும் அப்படித் தான். சரி, பிறகு வருகின்றேன், இதை செய்கின்றேன் என்று கூறுவார்கள் ஆனால், பிறகு கேட்டால் நினைவு இல்லை என்று சொல்வார்கள். எனவே, அடிக்கடி விழிப்படைய வைக்க வேண்டி உள்ளது. குஜராத்காரர்கள் தந்தையினுடையவர்கள் ஆவதில், உடல், மனம், பணத்தினால் தன்னை சேவையில் ஈடுபடுத்துவதில் நம்பர் நன்றாக எடுத்துள்ளார்கள். சகஜமாக சகயோகி ஆகி விடுகின்றார்கள். இது கூட பாக்கியம் ஆகும். குஜராத்காரர்களுடைய எண்ணிக்கை நன்றாக உள்ளது. தந்தையினுடையவராக ஆகின்ற லாட்டரி குறைந்தது கிடையாது. ஒவ்வொரு இடத்திலும் தந்தையைப் பிரிந்த இரத்தினம் யாராவது இருக்கின்றார்கள். எங்கு பாதம் பதித்தாலும் யாராவது வெளிப்பட்டு வருகின்றார்கள். கவலையற்றவராசி, பயமற்றவராகி சேலையில் ஆர்வத்தோடு முன்னேற்றத்தை அடைகின்றர்கள், ஆகையால், பல கோடி மடங்கு உதவியும் கிடைக்கிறது. அதிகாரப்பூர்வமான அழைப்போ இங்கிருந்துதான் ஆரம்பம் ஆனது. ஆனாலும் கூட சேவையினுடைய சேமிப்பு ஆனதல்லவா. அந்த சேமிப்புக் கணக்கு நேரப்படி அவசியம் ஈர்க்கும். எனவே, அனைவரும் நம்பர் ஒன் தீவிர முயற்சியாளர், பரிசு பெறக்கூடியவர்கள் ஆவீர்கள். சம்பந்தம் வைப்பதில் நம்பர்ஒன், சேவையில் நிரூபணம் காட்டுவதில் நம்பம்ஒன், அனைத்திலும் நம்பர்ஒன் ஆகி யே தீர வேண்டும், அப்பொழுதே பரிசு பெறுவீர்கள் அல்லவா. பரிசே பரிசாக பெற்றுக் கொண்டே இருக்க வேண்டும். அனைவருடைய தைரியத்தைப் பார்த்து பாப்தாதா குஷி அடைகின்றார்கள். அனேக ஆத்மாக்களுக்கு தந்தையை ஆதாரமாக ஆக்குவதற்கு நிமித்தம் ஆகி யுள்ளீர்கள். நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். குடும்பத்தை தந்தை மலர்ச்செண்டு என்று கூறுகின்றார். இந்த விசேத்தன்மை கூட நன்றாக உள்ளது. அனைத்து பிராமணர்களுக்கும் ஸ்தானம் இருக்கின்றது. ஒருவேளை யாராவது நெய்ரேயி சென்றாலும் அல்லது எங்கே சென்றாலும், இது நம்முடைய சென்டர். பாபாவினுடைய சென்டர், நம்முடைய குடும்பம் என்று கூறுவார்கள்.

எனில், எவ்வளவு அதிர்ஷ்டசாலி ஆகி விட்டீர்கள்! பாப்தாதா ஒவ்வொரு இரத்தினத்தையும் பார்த்து குஷி அடைகின்றார்கள். எந்த இடத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் தந்தையினுடையவர்கள் மற்றும் தந்தை குழந்தைகளுடையவர். எனவே, பிராமண ஆத்மாக்கள் அதிக பிரியமானவர்கள், விசேஷமானவர்கள், ஒருவரை விட ஒருவர் அதிக அன்பிற்குரியவர்கள் ஆவார்கள். நல்லது.

**வரதானம்: இணைந்த சொரூபத்தின் நினைவு மூலம் சிரேஷ்ட ஸ்திதி என்ற ஆசனத்தில் நிலைத்து இருக்கக்கூடிய சதா சம்பன்னமானவர் ஆகுக!**

சங்கமயுகத்தில் சிவசக்தி என்ற இணைந்த சொரூபத்தின் நினைவில் இருப்பதனால் ஒவ்வொரு அசம்பவ காரியமும் சம்பவம் ஆகி விடும். இதுவே சர்வ சிரேஷ்ட சொரூபம் ஆகும். இந்த சொரூபத்தில் நிலைத்திருப் பதனால் சம்பன்ன பவ என்ற வரதானம் கிடைத்து விடுகின்றது. பாப்தாதா அனைத்து குழந்தைகளுக்கும் சதா சுகம் நிறைந்த ஸ்திதி என்ற ஆசனம் கொடுத்திருக்கின்றர். சது இந்த ஆசனத்தில் நிலைத்து இருங்கள், அப்பொழுது அதீந்திரிய சுகம் என்ற ஊஞ்சலில் ஆடிக் கொண்டே இருப்பீர்கள். மறதி என்ற சம்ஸ்காரத்தை மட்டும் சமாப்தி செய்யுங்கள்.

**சுலோகன்: சக்திசாலியான உள்ளுணர்வு மூலமாக ஆத்மாக்களை யோக்கியமானவராக (தகுதியானவராக) மற்றும் யோகியாக ஆக்குங்கள்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 01.03.1986 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# புனித அன்னப்பறவை புத்தி, விருத்தி, திருஷ்டி மற்றும் வாய்!

இன்று பாப்தாதா சர்வ புனித அன்னப்பறவைகளின் சபையைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். இது சாதாரண சபையன்று ஆனால் ஆன்மிக புனித அன்னப்பறவைகளின் சபை. பாப்தாதா ஒவ்வொரு புனித அன்னப் பறவையையும் பார்த்துக் கொண்டிருக்கிறார்--அனைவரும் எது வரை புனித அன்னப்பறவையாக ஆகியிருக் கின்றனர்? அன்னப்பறவையின் விசேஷத்தை நல்லபடியாக அறிந்து கொண்டிருக்கிறீர்களா? அனைத்திலும் முதலாவதாக அன்னப்பறவை புத்தி, அதாவது சதா ஒவ்வோர் ஆத்மாவுக்காகவும் சிரேஷ்டமானதை, சுபமானதை யோசிப்பவர். புனித அன்னப்பறவை என்றால் கல் மற்றும் இரத்தினத்தை நல்லபடியாகப் பகுத்தறிபவர் மற்றும் பிறகு தாரணை செய்பவர். முதலில் ஒவ்வோர் ஆத்மாவின் உள்நோக்கத்தைக் கண்டறிபவர் மற்றும் தாரணை செய்பவர். ஒரு போதும் எந்த ஓர் ஆத்மாவுக்காகவும் சுபமல்லாத அல்லது சாதாரண நோக்கத்தை (பாவ் ) தாரணை செய்பவராக இருக்கக் கூடாது. சதா சுப பாவ் மற்றும் சுப பாவனையை தாரணை செய்ய வேண்டும். நோக்கத்தை (பாவ்) அறிந்து கொள்வதன் மூலம் ஒரு போதும் யாருக்கும் சாதாரண சுபாவம் அல்லது வீணான சுபாவம் ஏற்படாது. சுப நோக்கம், சுப பாவனை. அதாவது எதை பாவ-சுபாவம் எனச் சொல்கிறீர்களோ, அந்த வீணானதை மாற்ற வேண்டும். பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார் --அத்தகைய அன்னப்பறவை புத்தி உள்ளவராக எது வரை ஆகியிருக்கிறார்கள்? அதே போல் அன்ன விருத்தி (உள்ளுணர்வு) அதாவது சதா ஒவ்வோர் ஆத்மாவுக் காகவும் சிரேஷ்ட நன்மையின் விருத்தி. ஒவ்வோர் ஆத்மாவின் தீமை பற்றிய விˆயத்தைக் கேட்டாலும் பார்த்தாலும் தீமையை நன்மையின் விருத்தியால் மாற்றிவிட வேண்டும் --இது தான் புனித அன்னப்பறவையின் விருத்தி எனச் சொல்லப் படும். தன்னுடைய நன்மையின் விருத்தி மூலம் மற்றவர்களையும் கூட நீங்கள் மாற்ற முடியும். அவர்களது தீமையின் விருத்தியை உங்களது நன்மையின் விருத்தியால் மாற்றிவிட வேண்டும்.

இது தான் புனித அன்னப்பறவையின் கடமையாகும். இதே விதமாக திருஷ்டியில் சதா ஒவ்வோர் ஆத்மாவுக்காகவும் சிரேஷ்ட, சுத்த, அன்பின் திருஷ்டி இருக்க வேண்டும். எப்படிப் பட்டவராக இருந்தாலும் சரி, உங்களிடமிருந்து அனைவருக்காகவும் ஆன்மிகமான, ஆத்மிக அன்பின் திருஷ்டியை தாரணை செய்ய வேண்டும். இதைத் தான் புனித அன்னப்பறவையின் திருஷ்டி எனச் சொல்வார்கள். இதே விதமாக பேச்சிலும் கூட முன்பே சொல்லப் பட்டுள்ளது --தீய சொல் என்பது வேறு விˆயம். அதுவோ பிராமணர்களுக்கு மாறி விட்டது ஆனால் வீணான பேச்சையும் கூட புனித அன்னப்பறவையின் வாய் எனச் சொல்ல மாட்டார்கள். வாயும் கூட புனித அன்னப் பறவையின் வாயாக இருக்க வேண்டும். அவருடைய வாயிலிருந்து ஒரு போதும் வீணான சொற்கள் வெளிப் படாமல் இருக்க வேண்டும். இதைத் தான் அன்னப்பறவை வாயின் ஸ்திதி எனச் சொல்வார்கள். ஆக, புனித அன்னப்பறவை புத்தி, விருத்தி, திருஷ்டி மற்றும் வாய். எப்போது இவை பவித்திரமாக, அதாவது சிரேஷ்டமாக ஆகி விடுகிறதோ, அப்போது தானாகவே புனித அன்னப்பறவையின் ஸ்திதியின் பிரத்தியட்ச பிரபாவம் காணப்படும். எனவே அனைவரும் தங்களைப் பாருங்கள் --எது வரை சதா புனித அன்னப்பறவை ஆகி நடமாடுகிறோம், சுற்றி வருகிறோம்? ஏனென்றால் சுய முன்னேற்றத்திற்கான நேரம் அதிகம் இல்லை. எனவே தன்னைத் தான் சோதித்துப் பாருங்கள் மற்றும் மாற்றிக் கொள்ளுங்கள்.

இச்சமயத்தின் மாற்றம் நீண்ட கால மாற்றத்திற்குரிய பொன்னுலகின் அதிகாரி ஆக்கி விடும். இந்த சமிக்ஞையை பாப்தாதா முன்பே கொடுத்துள்ளார். சுயத்தின் பக்கம் இரட்டை அடிக்கோட்டின் மூலம் அனைவர்க்கும் கவனம் உள்ளதா? சிறிது காலத்தின் கவனம் என்பது நீண்ட காலத்தின் கவனத்திற்கான பலன் சொரூபமாகப் பெறக்கூடிய சிரேஷ்ட பிராப்தியின் பிராலப்தத்திற்குச் சமமானதாகும். எனவே இந்தக் கொஞ்ச காலம் என்பது மிக உயர்ந்ததும் அழகானதும் ஆகும். கடின உழைப்பும் இல்லை. பாபா என்ன சொன்னாரோ, அதை தாரணை செய்தீர்கள். அவ்வளவு தான். மேலும் தாரணை செய்வதால் நடைமுறையில் தானாகவே ஆகி விடும். புனித அன்னப்பறவை யின் காரியமே தாரணை செய்வதாகும். ஆக, இது அத்தகைய புனித அன்னப்பறவைகளின் சபை தான் இல்லையா? ஞானம் நிறைந்தவர்களாக ஆகி விட்டீர்கள். வீணானதையும் சாதாரணமானதையும் நல்லபடியாகப் புரிந்து கொண்டு விட்டீர்கள். ஆக,

புரிந்து கொண்ட பிறகு கர்மத்தில் தானாகவே வருகிறது. அது போல் சாதாரண பாபு ̂யில் இதைத் தான் சொல்கிறீர்கள் இல்லையா --இப்போது எனக்குப் புரிந்து விட்டது என்பதாக? பிறகு அதைச் செய்யாமல் இருக்க முடியாது. ஆகவே முதலில் இதைச் சோதித்துப் பாருங்கள் --செய்தது சாதாரண மானதா அல்லது வீணானதா? ஒரு போதும் சாதாரணமானதை சிரேஷ்டமானதாகப் புரிந்து கொள்வதில்லையே? எனவே முதல்-முதலில் முக்கியமானது புனித அன்னப்பறவை புத்தி. இதில் தானாகவே பகுத்தறியும் சக்தி வந்து விடுகிறது. ஏனென்றால் சரியா தவறா எனக் கண்டறிய முடியாத போது தான் வீண் சங்கல்பமும் வீண் சமயமும் செல்கிறது. மேலும் மற்றவர்களின் உழைப்பைப் பெறுவதற்கான சுமையும் ஏறுகிறது. காரணம்? ஏனென்றால் புனித அன்னப்பறவை புத்தி உள்ளவராக ஆகவில்லை. ஆகவே பாப்தாதா, புனித அன்னப்பறவைகள் அனைவருக்கும் இந்த சமிக்ஞையைத் தான் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர் --அதாவது தலைகீழானதைத் தலைகீழானதாக ஆக்காதீர்கள். இவர்கள் தலைகீழாகவே இருக்கிறார்கள் என்று யோசிக்காதீர்கள் ஆனால் தலைகீழானவர்களை எப்படி நேராக ஆக்குவது என்பது பற்றி யோசியுங்கள். இது தான் நன்மையின் பாவனை எனச் சொல்லப்படும். சிரேஷ்ட நோக்கம், சுப பாவனை மூலம் தங்களின் பாவ-சுபாவங்கள் மற்றும் மற்றவர் களின் பாவ-சுபாவங்களை மாற்றுவதில் வெற்றியாளர் ஆவீர்கள். புரிந்ததா? முதலில் தன் மீது வெற்றியாளர். பிறகு அனைவர் மீதும் வெற்றியாளர், பிறகு இயற்கை மீது வெற்றியாளர் ஆவீர்கள். இந்த மூன்று வெற்றிகளும் உங்களை விஜயமாலையின் மணியாக ஆக்கி விடும். இயற்கையில் வாயுமண்டலம் அல்லது ஸ்தூல இயற்கை யின் பிரச்சினைகள் அனைத்தும் வந்து விடுகின்றன. ஆக, மூன்றின் மீதும் வெற்றி பெற்றிருக்கிறீர்களா? இந்த ஆதாரத்தில் தான் விஜயமாலையில் தங்களின் நம்பரை உங்களால் பார்க்க முடியும். ஆகவே பெயரே வைஜயந்தி மாலை என வைக்கப் பட்டுள்ளது. ஆக, நீங்கள் அனைவரும் வெற்றியாளர்களா? நல்லது.

இன்று ஆஸ்திரேலியாக்காரர்களுக்கான வாய்ப்பு. ஆஸ்திரேலியாக்காரர்களுக்கு மதுபன் மூலமாகவும் கோல்டன் சான்சலர் ஆவதற்கான வாய்ப்பு கிடைக்கின்றது. ஏனென்றால் அனைவரையும் முன்னால் வைப்பதற்கான வாய்ப்புக் கொடுக்கிறீர்கள். இது விசேஷத் தன்மையாகும். மற்றவர்களை முன்னால் வைப்பது, இந்த வாய்ப்புக் கொடுப்பது என்பது சான்சலர் ஆவதாகும். சான்ஸ் (வாய்ப்பு) எடுத்துக்

கொள்பவர், சான்ஸ் கொடுப்பவர் இருவரையும் சான்சலர் எனச் சொல்கின்றனர். பாப்தாதா சதா ஒவ்வொரு குழந்தையின் விசேˆத் தன்மையைப் பார்க்கிறார் மற்றும் வர்ணனை செய்கிறார். ஆஸ்திரேலியாவில் பாண்டவர்களுக்கு சேவைக்கான வாய்ப்பு விசேஷமாகக் கிடைத்துள்ளது. அதிக சென்டர்களையும் பாண்டவர்கள் பராமரிக்கின்றனர். சக்திகள் பாண்டவர் களுக்கு வாய்ப்பளித்துள்ளனர். முன்னிலையில் வைப்பவர்கள் எப்போதுமே முன்னால் இருப்பார்கள். இதுவும் சக்திகளின் விசாலத் தன்மையாகும் ஆனால் பாண்டவர்கள் தங்களை சதா நிமித்தம் என உணர்ந்து சேவையில் முன்னேறிக் கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? சேவையில் நிமித்த உணர்வு தான் சேவையின் வெற்றிக்கான ஆதாரம். பாப்தாதா மூன்று வார்த்தைகள் சொல்கிறார் இல்லையா? அது சாகார் பிரம்மாபாபா மூலமாகவும் கடைசியில் சொல்லப் பட்டது. இந்த மூன்று விசேˆத் தன்மைகளும் நிமித்த உணர்வினால் தாமாகவே வருகின்றன. நிமித்த உணர்வு இல்லையென்றால் இந்த மூன்று விசேˆத் தன்மைகள் அனுபவம் ஆகாது. நிமித்த உணர்வு அநேக விதமான நான், எனது என்பதை சகஜமாகவே முடித்து விடும். நான் என்பது இல்லை, எனது என்பதும் இல்லை. ஸ்திதியில் குழப்பம் வருவது இந்த ஒரு குறைபாட்டின் காரணத்தினால் தான். சேவையிலும் முயற்சி செய்ய வேண்டி உள்ளது மற்றும் தனது பறக்கும் கலையின் ஸ்திதியிலும் கூட முயற்சி செய்ய வேண்டி உள்ளது. நிமித்தமாக இருக்கிறீர்கள் என்றால் நிமித்தமாக ஆக்குபவர் சதா நினைவிருக்க வேண்டும். ஆக, இதே விசேஷதா மூலம் சதா சேவையை விருத்தி செய்து கொண்டு முன்னேறிச் சென்று கொண்டே இருக்கிறீர்கள் இல்லையா? சேவையின் விஸ்தாரம் ஏற்படுவதும் கூட சேவையின் வெற்றிக்கான அடையாளமாகும். இப்போது ஆடாத அசையாத ஸ்திதியின் நல்ல அனுபவி ஆகி விட்டிருக்கிறீர்கள். புரிந்ததா --ஆஸ்திரேலியா என்றால் கொஞ்சம் அதிகப்படியாக உள்ளது, மற்றவர்களிடம் இல்லாதது. ஆஸ்திரேலியாவில் மற்ற பலவிதமான குஜராத்தி முதலானவர்கள் இல்லை. தர்மத்தை வீட்டிலிருந்து தொடங்குகிற காரியத்தை அதிகம் செய்திருக்கிறீர்கள். உங்களைப் போன்றவர்களை விழிப்படையச் செய்திருக்கிறீர்கள். குமார்-குமாரிகளுக்கு நல்ல நன்மை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த வாழ்க்கையில் தனது வாழ்க்கைக்கான உயர்ந்த தீர்வைக் காண வேண்டும். தனது வாழ்க்கையை அமைத்துக் கொள்வீர்களானால் சதா காலத்திற்கும் சிரேஷ்டமானவர்களாக ஆகி விட்டீர்கள். தலைகீழான ஏணியில் ஏறுவதில்

இருந்து தப்பி விட்டீர்கள். பாப்தாதா குஷியடைகிறார் --ஒருவர் மற்றவரை விட அதிகமாக அநேக தீபங்களை ஏற்றி தீபமாலையை உருவாக்கிக் கொண்டுள்ளனர். ஊக்கம்-உற்சாகம் நன்றாக உள்ளது. சேவையில் பிஸியாக இருப்பதன் மூலம் நன்றாக முன்னேறிக் கொண்டிருக்கிறீர்கள்.

ஒன்று, நிமித்த உணர்வு பற்றிய விஷயம் சொல்லப்பட்டது. இரண்டாவது யார் சேவைக்கு நிமித்தமாக ஆகின்றனரோ, அவர்களுக்காக சுய முன்னேற்றம் அல்லது சேவையின் முன்னேற்றத்திற்காக ஒரு விசேஷ சுலோகன் பாதுகாப்பிற்கான சாதனமாகும். நிமித்தமாக ஆகியிருக்கும் நாம் என்ன செய்கிறோமோ, நம்மைப் பார்த்து அனைவரும் செய்வார்கள். ஏனென்றால் சேவைக்கு நிமித்தமாக ஆவது என்றால் ஸ்டேஜ் மீது பார்ட் நடிப்பதாகும். ஸ்டேஜின் பக்கமாக அனைவரின் பார்வையும் இருக்கும். மேலும் ஒருவர் எந்த அளவு ஹீரோ நடிகராக இருக்கிறாரோ, அவர் மீது அதிகம் பார்வை இருக்கும். ஆக, இந்த ஸ்லோகன் பாதுகாப்பிற்கான சாதனமாகும். இதனால் தானாகவே பறக்கும் கலையின் அனுபவம் செய்வீர்கள். அதே போல் சென்டரில் இருந்தாலும் சரி, அல்லது எங்கே தங்கியிருந்து சேவை செய்தாலும் சரி. சேவாதாரியோ அனைவரும் தான். அநேகர் தங்களின் நிமித்த இருப்பிடங்களில் இருந்தவாறு சேவைக்கான வாய்ப்பை எடுத்துக் கொள்கின்றனர். அவர்களும் கூட சேவையின் ஸ்டேஜ் மீது உள்ளனர். சேவை தவிர தங்களின் சமயத்தை வீணாக்கக் கூடாது. சேவைக்கும் கூட கணக்கு அதிகமாக சேமிப்பாகின்றது. உண்மையான மனதோடு சேவை செய்பவர்கள் தங்களின் கணக்கை மிக நன்றாக சேமித்துக் கொண்டிருக்கின்றனர். பாப்தாதாவிடம் ஒவ்வொரு குழந்தையின் ஆரம்பத்திலிருந்து கடைசி வரையிலான சேவையின் கணக்கு உள்ளது. மேலும் தானாகவே அதில் சேமிப்பாகிக் கொண்டே இருக்கிறது. ஒவ்வொருக்காகவும் கணக்கு வைக்க வேண்டியதில்லை. கணக்கு வைப்பவர்களிடம் அதிகம் ஃபைல்கள் இருக்கும். பாபாவிடம் ஸ்தூல ஃபைல்கள் எதுவும் கிடையாது. ஒரு விநாடியில் ஒவ்வொரு வரின் ஆரம்பத்திலிருந்து இப்போது வரையிலான ரிஜிஸ்டர் ஒரு விநாடியில் வெளிப்பட்டு விடும். தானாகவே சேமிப்பாகிக் கொண்டே இருக்கும். நம்மையோ யாரும் பார்ப்பதில்லை, புரிந்து கொள்ளவில்லை என்று ஒரு போதும் நீங்கள் புரிந்து கொள்ளக் கூடாது. பாப்தாதாவிடமோ யார் எப்படிப் பட்டவர்கள், என்னென்ன செய்கிறார்கள், எந்த ஸ்டேஜில் இருந்தவாறு செய்கிறார்கள் என்ற அனைத்தும் சேமிப்பாகின்றது. ஃபைல் இல்லை,

ஆனால் ஃபைனல். ஆஸ்திரேலியாவில் சக்திகள் பாபாவுடையவர்களாக ஆவதில், பாபாவை அறிந்து கொண்டு பாபாவிடம் அன்பு வைப்பதில் மிக நல்ல தைரியம் காட்டியிருக்கிறார்கள். குழப்பத்தின் (மேலே-கீழே ஆவதின்) தவறு நடந்தாலும் அது இருப்பிடத்தின் அல்லது பூமியினுடையது அல்லது முந்தைய முழு வாழ்க்கை யின் (முன்பிறவி) சம்ஸ்காரங்களின் காரணமாகக் குழப்பங்கள் ஏற்படுகின்றன. அவற்றையும் கடந்து சென்று அன்பின் பந்தனத்தில் முன்னேறிக் கொண்டே இருக்கின்றனர். அதனால் பாப்தாதா சக்திகளின் தைரியத்திற்காக வாழ்த்துகிறார். ஒரே பலம், ஒரே நம்பிக்கையில் முன்னேற வைக்கிறார். ஆக, சக்திகளின் தைரியம் மற்றும் பாண்டவர்களின் சேவைக்கான ஊக்கம் என்ற இரண்டு இறக்கைகளும் உறுதியாகி விட்டன. சேவையின் சேத்திரத்தில் பாண்டவர்களும் கூட மகாவீர் ஆகி முன்னேறிக் கொண்டுள்ளனர். குழப்பங்களைக் கடந்து செல்வதில் திறமைசாலிகள். அனைவரின் சித்திரம் அதே தான். பாண்டவர்களுக்கு மிகப் பெரிய நீண்ட, அகலமான கிரீடங்களைக் காட்டுகின்றனர். ஏனென்றால் ஸ்திதி அவ்வளவு உயர்ந்ததும் உறுதியானதும் ஆகும். எனவே பாண்டவர்கள் உயரமாகவும் வீரம் நிறைந்தவர்களாகவும் காட்டப் படுகின்றனர். ஆஸ்திரேலியாக் காரர்கள் மிகவும் இரக்க மனம் உள்ளவர்களாகவும் இருக்கின்றனர். அலைந்து கொண்டிருக்கும் ஆத்மாக்கள் மீது இரக்க மனம் உள்ளவர்களாகி சேவையில் முன்னேறிக் கொண்டுள்ளனர். அவர்கள் ஒருபோதும் சேவை இல்லாமல் இருக்க முடியாது. பாப்தாதாவுக்கு குழந்தைகளின் முன்னேற்றத்தைப் பார்த்து சதா குஷி உள்ளது. விசேஷமான அதிர்ஷ்டசாலிகளாக இருக்கிறீர்கள். ஒவ்வொரு குழந்தையின் ஊக்கம்-உற்சாகத்தைப் பார்த்து பாப்தாதாவுக்கு மகிழ்ச்சி. எப்படி ஒவ்வொருவரும் சிரேஷ்ட லட்சியத்தின் மூலம் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள் மற்றும் முன்னேறிக் கொண்டே இருப்பார்கள். பாப்தாதா எப்போதுமே விசேˆத் தன்மையை மட்டுமே பார்க்கிறார். ஒவ்வொருவரும் ஒருவர்-மற்றவரை விடவும் அன்பானவராக இருக்கிறார். நீங்களும் கூட ஒருவர்-மற்றவரை இந்த விதியின் மூலம் பார்க்கிறீர்கள் இல்லையா? யாரைப் பார்த்தாலும் சரி, ஒருவர் மற்றவரை விடப் பிரியமானவராக இருக்க வேண்டும். ஏனென்றால் 5000 ஆண்டுகளுக்குப் பிறகு பிரிந்திருந்தவர்கள் தங்களுக்குள் சந்தித்திருக்கிறீர்கள் என்றால் எவ்வளவு அன்பானவர்கள் ஆகிறார்கள்! பாபாவிடம் அன்பின் அடையாளம் இது தான் -அதாவது பிராமண ஆத்மாக்கள் அனைவருமே

அன்பானவர்களாக உணரப் படுவார்கள். ஒவ்வொரு பிராமண ஆத்மாவும் அன்பான வராக இருக்கிறார் என்றால் பாபாவிடம் அன்பு இருப்பதாகப் பொருளாகும். மாலையில் ஒருவர் மற்றவரின் சம்மந்தத்திலோ பிராமணர்கள் தாம் வருவார்கள். பாபாவோ ரிடையராகி விட்டுப் பார்ப்பார். அதனால் பாபாவிடம் அன்பு உள்ளது என்பதற்கான அடையாளத்தை சதா அனுபவம் செய்யுங்கள். அனைவரும் பாபாவுக்குப் பிரியமானவர்கள் என்றால் நமக்கும் கூடப் பிரியமானவர்கள். நல்லது.

**பார்ட்டிகளுடன்**: 1. அனைவரும் தங்களை விசேஷஆத்மா எனப் புரிந்து கொண்டிருக்கிறீர்களா? விசேஷ ஆத்மாக்கள், விசேஷ காரியத்திற்கு நிமித்தமாக இருக்கிறோம் மற்றும் விசேˆங்களைக் காண்பிக்க வேண்டும் --இது போல் சதா ஸ்மிருதியில் இருக்க வேண்டும். விசேஷஸ்மிருதி சாதாரண ஸ்மிருதியையும் கூட சக்திசாலி ஆக்கி விடும். வீணானவற்றைக் கூட முடித்து விடும். ஆகவே சதா இந்த விசேஷம் என்ற வார்த்தையை நினைவில் வையுங்கள். பேசுவதும் விசேஷமாக, பார்ப்பதும் விசேஷமாாக, செய்வதும் விசேஷமாாக, யோசிப்பதும் கூட விசேஷமாக இருக்க வேண்டும். ஒவ்வொரு விஷயத்திலும் இந்த விசேஷம் என்ற வார்த்தையைக் கொண்டு வருவதால் தானாகவே மாறி விடும். மேலும் இந்த ஸ்மிருதி மூலம் சுய மாற்றம், உலக மாற்றம் சகஜமாகி விடும். ஒவ்வொரு விஷயத்திலும் விசேஷம் என்ற வார்த்தையை சேர்த்துக் கொண்டே செல்லுங்கள். இதன் மூலம் தான் சம்பூர்ண நிலையை அடைவதற்கான லட்சியம், குறிக்கோள் என்ன உள்ளதோ, அதை அடைவீர்கள்.

2. சதா பாபா மற்றும் ஆஸ்தியின் ஸ்மிருதியில் இருக்கிறீர்களா? சிரேஷ்ட ஸ்மிருதி மூலம் சிரேஷ்ட ஸ்திதியின் அனுபவம் ஆகிறதா? ஸ்திதியின் ஆதாரம் ஸ்மிருதி ஆகும். ஸ்மிருதி பலவீனமாக இருக்குமானால் ஸ்திதியும் கூட பலவீனமாகி விடும். ஸ்மிருதி சதா சக்திசாலியாக இருக்க வேண்டும். அந்த சக்திசாலி ஸ்மிருதி --நான் பாபாவுடையவன், பாபா என்னுடையவர். இந்த ஸ்மிருதி மூலம் ஸ்திதி சக்திசாலியாக இருக்கும் மற்றும் மற்றவர்களையும் சக்திசாலி ஆக்கி விடுவீர்கள். ஆகவே சதா ஸ்மிருதியின் மீது விசேஷ கவனம் இருக்கட்டும். சக்திசாலி ஸ்மிருதி, சக்திசாலி ஸ்திதி, சக்திசாலி சேவை தானாக நடைபெற்றுக் கொண்டிருக்கட்டும். ஸ்மிருதி, ஸ்திதி, சேவை மூன்றும் சக்திசாலியாக இருக்க வேண்டும். எப்படி ஸ்விட்ச் ஆன் செய்தால் ஒளிப் பிரகாசம் ஆகி விடுகிறது. ஆஃப் செய்தால் இருள்

சூழ்ந்து விடுகிறது. அது போலவே இந்த ஸ்மிருதியும் கூட ஒரு ஸ்விட்ச். ஸ்மிருதியின் ஸ்விட்ச் பலவீனமாக இருக்குமானால் ஸ்திதியும் பலவீனமாக இருக்கும். சதா ஸ்மிருதி என்ற ஸ்விட்ச் மீது கவனம் இருக்க வேண்டும். இதன் மூலம் தான் சுயம் மற்றும் அனைவர்க்கும் நன்மை. புதிய பிறவி ஏற்பட்டது என்றால் புதிய ஸ்மிருதி இருக்க வேண்டும். பழைய ஸ்மிருதிகள் அனைத்தும் முடிந்தன. ஆகவே இதே விதி மூலம் சித்தியை அடைந்து கொண்டே செல்லுங்கள்.

3. அனைவரும் தங்களை பாக்கியவான் என உணர்ந்திருக்கிறீர்களா? வரதான பூமிக்கு வருவது என்பது மகான் பாக்கியமாகும். வரதான பூமியில் வந்து சேர்வதற்கான ஒரு பாக்கியம் கிடைத்துள்ளது. இந்த பாக்கியத்தை எவ்வளவு சிரேஷ்டமானதாக ஆக்க விரும்புகிறீர்களோ, ஆக்கிக் கொள்ள முடியும். சிரேஷ்ட வழிமுறை தான் பாக்கியத்தின் ரேகையை வரைவதற்கான பேனாவாகும். இதில் எவ்வளவு தங்களின் சிரேஷ்ட ரேகையை அமைத்துக் கொண்டே செல்கிறீர்களோ, அவ்வளவு சிரேஷ்டமானவராக ஆகி விடுவீர்கள். முழுக் கல்பத்திலும் இந்த சிரேஷ்ட சமயம் தான் பாக்கியத்தின் ரேகையை அமைத்துக் கொள்வதற்கான சமயமாகும். அத்தகைய சமயத்தில் மற்றும் அத்தகைய இடத்திற்கு வந்து சேர்ந்திருக்கிறீர்கள். ஆகவே கொஞ்சத்திலேயே குஷி அடைபவர்கள் அல்லர். எப்போது கொடுக்கும் வள்ளல் கொடுத்துக் கொண்டிருக்கிறாரோ, அப்போது பெற்றுக் கொள்பவர்கள் ஏன் களைத்துப் போகிறார்கள்? பாபாவின் நினைவு தான் சிரேஷ்டமானவர்களாக ஆக்குகிறது. பாபாவை நினைவு செய்வது என்றால் சக்தியை (அதிகாரத்தை) அடைவதாகும். ஜென்ம-ஜென்மத்தின் சம்மந்தம் என்றால் நினைவு என்பது கஷ்டமா என்ன? அன்பு மற்றும் சம்மந்தத்தின் மூலம் நினைவு செய்தால் போதும். எங்கே அன்பு உள்ளதோ, அங்கே நினைவு வராது என்பது நடக்க இயலாததாகும். மறந்து போக முயன்றாலும் நினைவு வரும். நல்லது.

**வரதானம்: நெற்றியின் மூலம் திருப்தியின் ஜொலிப்பினுடைய பொலிவைக் காண்பிக்கக் கூடிய சாட்சாத்கார மூர்த்தி ஆகுக!**

யார் சதா திருப்பதியாக இருக்கின்றனரோ, அவர்களின் நெற்றியின் மூலம் திருப்தியின் பொலிவு சதா ஜொலித்துக் கொண்டிருக்கும். அவர்களை யாராவது கவலையில் இருக்கும் ஆத்மா பார்ப்பாரானால் அவரும்

குஷியடைவார். அவரது கவலை மறைந்து விடும். யாரிடம் திருப்தியின் குஷியினுடைய கஜானா உள்ளதோ, அவர்களுக்குப் பின்னால் தானாகவே அனைவரும் கவர்ந்திழுக்கப் படுவார்கள். அவர்களின் குஷியின் முகம் சைதன்ய போர்டாக ஆகி விடும். அது அநேக ஆத்மாக்களை உருவாக்குவதற்கான அறிமுகம் கொடுக்கும். ஆகவே அத்தகைய திருப்தியாக இருக்கக் கூடிய, அனைவரையும் திருப்திப் படுத்தக் கூடிய திருப்தியின் மணியாக ஆகுங்கள். அதன் மூலம் அநேகருக்கு சாட்சாத்காரம் கிடைக்கட்டும்.

**சுலோகன்: காயப்படுத்துகிறவர்களின் வேலை காயப்படுத்துவதாகும். உங்களது வேலை தங்களைப் பாதுகாத்துக் கொள்வதாகும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 04.03.1986 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சர்வ சிரேஷ்ட படைப்பின் அஸ்திவாரம் –அன்பு!

இன்று பாப்தாதா தனது சிரேஷ்ட ஆத்மாக்களின் படைப்புகளைப் பார்த்து மகிழ்ச்சியடைந்து கொண்டிருக்கின்றார். இந்த சிரேஷ்ட அல்லது புது படைப்பு முழு உலகிலேயே சர்வ சிரேஷ்டமானது மற்றும் மிகவும் பிரிய மானதாகும். ஏனெனில் தூய்மையான ஆத்மாக்களின் படைப்பாகும். தூய்மையான ஆத்மாக்களாக இருக்கின்ற காரணத்தினால் இப்போது பாப்தாதாவிற்கு பிரியமானவர்களாக இருக்கிறீர்கள், மேலும் தனது இராஜ்யத்தில் அனைவருக்கும் பிரியமானவர்களாக இருப்பீர்கள். துவாபரத்தில் பக்தர்களுக்கு பிரிய தேவாத்மாக்களாக இருப்பீர்கள். இந்த நேரத்தில் பரமாத்மாவிற்கு பிரிய பிராமண ஆத்மாக்களாக இருக்கிறீர்கள். மேலும் சத்யுகம், திரேதாவில் இராஜ்ய அதிகாரி பரம சிரேஷ்ட தேவ ஆத்மாக்களாக இருப்பீர்கள். பிறகு துவாபரம் மற்றும் க-யுகம் வரை பூஜ்ய ஆத்மாக்களாக இருப்பீர்கள். மூன்றிலும் சிரேஷ்டமானது இந்த நேரத்தில் பரமாத்மாவிற்கு பிரிய பிராமணன் மற்றும் பரிஸ்தா ஆத்மாக்கள். இந்த நேரத்தின் சிரேஷ்டதாவின் ஆதாரத்தில் முழு கல்பத்திலும் சிரேஷ்டமானவர் களாக ஆகிறீர்கள். இந்த கடைசி நேரம் வரையிலும் கூட சிரேஷ்ட ஆத்மாக்களாகிய உங்களை பக்த ஆத்மாக்கள் எவ்வளவு வரவேற்பு செய்கிறார்கள்! எவ்வளவு அன்பாக அழைத்துக் கொண்டிருக்கிறார்கள்! என்பதை பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். ஜடச் சித்திரம் (சிலை) என்பதை அறிந்திருந்தும் சிரேஷ்ட ஆத்மாக்களாகிய உங்களை எவ்வளவு பாவனையுடன் பூஜை செய்கின்றனர்! பிரசாதம் படைக்கின்றனர்! ஆரத்தி எடுக்கின்றனர்! நமது சிலைக்குத் தான் பூஜை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை இரட்டை அயல் நாட்டினர் நினைக்கிறீர்களா? பாரதத்தில் தந்தையின் காரியம் நடைபெற்றது, ஆகையால் தந்தையின் கூடவே உங்கள் அனைவரின் சிலைகளும் பாரதத்தில் மட்டுமே இருக்கிறது. அதிக கோயில்கள் பாரதத்தில் உருவாக்குகின்றனர். நாம் தான் பூஜைக்குரிய ஆத்மாக்கள் என்ற போதை இருக்கிறது தானே?

சேவைக்காகத் தான் உலகின் நாலாபுறமும் பரவி சென்றிருந்தீர்கள். சிலர் அமெரிக்காவிற்கு, சிலர் ஆப்பிரிக்காவிற்கு சென்றிருக்கிறீர்கள் ஆனால் எதற்காக சென்றீர்கள்? இந்த நேரத்தில் சேவைக்கான சன்ஸ்காரம், அன்பிற்கான சன்ஸ்காரம் இருக்கிறது. சேவையின் விசேஷதாவே அன்பு ஆகும். எதுவரை ஞான சேவையின் கூடவே ஆன்மீக அன்பின் அனுபவம் ஏற்பட வில்லையோ, அதுவரை யாரும் ஞானம் கேட்கமாட்டார்கள்.

இரட்டை அயல்நாட்டினர்களாகிய நீங்கள் அனைவரும் பாபாவின் குழந்தைகளாக ஆகியிருக்கிறீர்கள் எனில் அதற்கு அஸ்திவாரம் எது? தந்தையின் அன்பு, பரிவாரத்தின் அன்பு உள்ளப்பூர்வமான அன்பு, சுய நலமற்ற அன்பாகும். இது தான் சிரேஷ்ட ஆத்மாக்களாக ஆக்கியிருக்கிறது. ஆக சேவையின் முதல் வெற்றி சொரூபம் அன்பாகும். எப்போது அன்பினால் தந்தையினுடையவர்களாக ஆகி விடுவீர்களோ பிறகு ஞானத்தின் கருத்து எதுவானாலும் எளிதாக தெளிவாகிக் கொண்டே செல்லும். யார் அன்பில் வரவில்லையோ அவர்கள் நேரத்தை ஒதுக்கி ஞான தாரணை செய்து முன்னேறுவர், கடின உழைப்பும் செய்வர். ஏனெனில் அவர்களது மனதின் என்ண ஓட்டம் (உள்ளுணர்வில்) ஏன், எதற்கு, எப்படி, அப்படி என்பதில் அதிகம் சென்று விடுகிறது. மேலும் அன்பில் மூழ்கி விடும் பொழுது அன்பின் காரணத்தினால் தந்தையின் ஒவ்வொரு வார்த்தையும் பிரியமானதாக இருக்கும். கேள்விகள் சமாப்தி ஆகி விடும். தந்தையின் அன்பு ஈர்க்கக் கூடிய காரணத்தினால் கேள்விகள் கேட்டாலும் புரிந்து கொள்வதற்காக கேட்பார்கள். அனுபவிகளாக இருக்கிறீர்கள் அல்லவா! யார் அன்பில் மூழ்கி விடுகிறார்களோ, அந்த அன்பானவர்கள் என்ன பேசினாலும் அவர்களுக்கு அதில் அன்பு தான் தென்படும். ஆக சேவைக்கு மூல ஆதாரம் அன்பு ஆகும். தந்தையும் குழந்தைகளை சதா அன்பாக நினைவு செய்கின்றார். அன்பாக அழைக்கின்றார், அன்பின் மூலமாகவே அனைத்து பிரச்சனைகளையும் கடக்க வைக்கின்றார். ஆக ஈஸ்வரிய பிறப்பின், பிராமண பிறப்பின் அஸ்திவாரமே அன்பாகும். அன்பு என்ற அஸ்திவாரம் உடையவர்களுக்கு எந்த ஒரு விசயமும் கடினமானதாக இருக்காது. அன்பின் காரணத்தினால் ஆர்வம், உற்சாகம் இருக்கும். தந்தையின் ஸ்ரீமத் எதுவோ அதை நாம் செய்தே ஆக வேண்டும். பார்க்கலாம், செய்யலாம் -இது அன்பின் இலட்சணம் கிடையாது. தந்தை எனக்காக கூறியிருக்கின்றார், ஆகவே நான் செய்தே ஆக வேண்டும். இது அன்பான நாயகி ஆத்மாவின் கடமையாகும்.. அன்பானவர்கள் குழப்பமுடையவர்களாக இருக்கமாட்டார்கள். சதா பாபா

மற்றும் நான், மூன்றாம் நபர் யாருமில்லை. தந்தை எவ்வாறு உயர்ந்ததிலும் உயர்ந்தவராக இருக்கின்றாரோ, அதே போன்று அன்பான ஆத்மாக்களும் சதா பரந்த உள்ளத்துடன் இருப்பார்கள். குறுகிய உள்ளமுடையவர்கள் சிறிய சிறிய விசயங்களில் குழப்பமடைவார்கள். சிறிய விசயமும் பெரியதாக ஆகி விடும். பரந்த உள்ளமுடையவர்களுக்கு பெரிய விசயமும் சிறியதாக ஆகி விடும். இரட்டை அயல்நாட்டினர் அனைவரும் பரந்த உள்ளமுடையவர்கள் தானே! பாப்தாதா அனைத்து இரட்டை அயல்நாட்டு குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சியடைகின்றார். விட்டில் பூச்சிகளாகி விளக்கில் ப-யாவதற்கு எவ்வளவு தூரத்தி-ருந்து வந்து விடுகின்றனர்! பக்கா விட்டில் பூச்சிகளாக இருக்கின்றனர்!

இன்று அமெரிக்கர்களின் முறை ஆகும். அமெரிக்கர்களுக்கு தந்தை கூறுகின்றார் -ஆஹா என்னுடையவர் களே. அமெரிக்கர்களும் ஆஹா என்னுடையவர் என்று கூறுகின்றனர். இந்த விசேஷதா இருக்கிறது அல்லவா! கல்ப மரம் சித்திரத்தில் விசேஷ சக்தியின் ரூபத்தில் அமெரிக்கா காண்பிக்கப்பட்டிருக்கிறது. ஸ்தாபனை ஆனதி-ருந்து தந்தை அமெரிக்காவை நினைவு செய்தார். விசேஷ பாகம் இருக்கிறது அல்லவா! ஒன்று விநாசத்தின் சக்தி சிரேஷ்டமானது, மற்றொரு விசேஷதா எது? இடமே விசேஷமானதாகும். ஆனாலும் அமெரிக்காவின் விசேஷதா ஒருபுறம் விநாசத்திற்கான ஏற்பாடுகளும் அதிகமாக இருக்கிறது, மற்றொரு புறம் விநாசத்தை சமாப்தி செய்யக் கூடிய ஐக்கிய நாடுகள் சபையும் அங்கு தான் இருக்கிறது. ஒருபுறம் விநாச சக்தி, மற்றொரு புறம் அனைவரையும் இணைக்கும் சக்தி. ஆக இரட்டை சக்தி ஆகி விட்டது அல்லவா! அங்கு அனைவரையும் இணைப்பதற்கு முயற்சி செய்கின்றனர். பிறகு அங்கிருந்து தான் இந்த ஆன்மீக இணைப்பின் ஓசையும் வெளிப்படும். அவர்கள் தங்களது முறையில் அனைவரையும் இணைத்து அமைதிக்கான முயற்சி செய்கின்றனர் ஆனால் யதார்த்த முறையில் இணைப்பது உங்களது கடமை அல்லவா! அவர்கள் இணைப்பதற்கான முயற்சியும் செய்கின்றனர், ஆனால் செய்ய முடிவது கிடையாது. அனைத்து தர்ம ஆத்மாக்களையும் ஒரே குடும்பத்தில் கொண்டு வருவது உண்மையில் பிராமண ஆத்மாக்களாகிய உங்களது உண்மையான கடமையாகும். விசேஷமாக இதை செய்ய வேண்டும். எவ்வாறு விநாசத்திற்கான சக்தி அங்கு சிரேஷ்டமானதாக இருக்கிறதோ அதே போன்று ஸ்தாபனைக்கான சக்தியின் ஓசையும் வெளிப்பட வேண்டும். விநாசம் மற்றும் ஸ்தாபனை இரண்டின் கொடியும்

சேர்ந்து பறக்க வேண்டும். ஒன்று விஞ்ஞானத்தின் கொடி மற்றொன்று அமைதியின் கொடி. விஞ்ஞான சக்தியின் பிரபாவம் மற்றும் அமைதி சக்தியின் பிரபாவம் இரண்டும் வெளிப்படும் போது தான் பிரதட்சதா என்ற கொடியை பறக்க வைத்திருக்கிறார்கள் என்று கூற முடியும். ஒரு வி.ஐ.பி ஏதாவது ஒரு நாட்டிற்கு செல்கிறார் எனில் அவரை வரவேற்பதற்காக கொடி பறக்க வைக்கிறார்கள் அல்லவா! தனது நாட்டின் கொடியையும் பறக்க வைப்பார்கள், மேலும் யார் வருகிறார்களோ அவரது தேசக் கொடியையும் பறக்க வைப்பார்கள். ஆக பரமாத்ம அவதாரத்திற்கான கொடியையும் பறக்க வைக்க வேண்டும். பரமாத்ம காரியத்தையும் வரவேற்க வேண்டும். தந்தையின் கொடி ஒவ்வொரு மூலையிலும் பறக்க வேண்டும், அப்போது தான் விசேஷ சக்திகளை வெளிப்படுத்தியிருக்கிறீர்கள் என்று கூற முடியும். இது கோல்டன் ஜுப்ளி ஆண்டு அல்லவா! எனவே அனைவருக்கும் தங்க நட்சத்திரம் தென்பட வேண்டும். ஏதாவது விசேஷ நட்சத்திரம் ஆகாயத்தில் தென்படுகிறது எனில் அனைவரின் கவனம் அதன் பக்கம் செல்லும் அல்லவா! இந்த ஜொ-க்கக் கூடிய தங்க நட்சத்திரம் அனைவரின் கண்களில், புத்தியில் தென்பட வேண்டும். இது தான் கோல்டன் ஜுப்ளி கொண்டாடுவதாகும். இந்த நட்சத்திரங்கள் முத-ல் எங்கு ஜொ-க்கும்?

இப்போது அயல்நாடுகளில் நல்ல முறையில் விருத்தி(வளர்ச்சி) ஆகி க் கொண்டிருக்கிறது, மேலும் ஆகி யே தீர வேண்டும். காணாமல் போன தந்தையின் குழந்தைகள் ஒவ்வொரு மூலையிலும் மறைந்திருக்கின்றனர். அவர்கள் நேரத்தின் அநுசாரமாக நெருக்கத்தில் வந்து கொண்டிருக்கின்றனர். அனைவரும் ஒருவருக் கொருவர் சேவையில் ஆர்வம், உற்சாகத்துடன் முன்னேறிக் கொண்டிருக்கின்றனர். தைரியத்தின் காரணத்தினால் தந்தையின் உதவியும் கிடைத்து விடுகிறது. நம்பிக்கையற்றவர்களிடத்திலும் நம்பிக்கை என்ற தீபம் ஏற்றப்பட்டு விடுகிறது. இவ்வாறு நடப்பது முடியாத காரியமாகும், மிகவும் கடினம் என்று உலகத்தினர் நினைக்கின்றனர் ஆனால் ஆர்வமானது தடைகளற்றவர்களாக ஆக்கி பறக்கும் பறவை போன்று பறக்க வைத்து அந்த நிலை அடையச் செய்து விடுகிறது. இரண்டு விமானத்தின் மூலம் சென்றடைந்து விடுகிறீர்கள் அல்லவா! ஒன்று ஃபளான்திட்டம்) மற்றொன்று புத்தி என்ற விமானம். தைரியம் என்ற இறக்கை வந்து விடும் போது எங்கு பறக்க விரும்புகிறீர்களோ பறக்க முடியும். குழந்தைகளின் தைரியத்தைப் பற்றி பாப்தாதா சதா மகிமை செய்கின்றார். தைரியம் வைப்பதன் மூலம்

ஒருவரின் மூலம் மற்றொருவரின் தீபம் ஏற்றப்பட்டு மாலை ஆகி விடுகிறது அல்லவா! அன்பாக முயற்சி செய்யும் போது அதற்கான பலன் மிகவும் நல்லதாக வெளிப்படுகிறது. இது அனைவரின் சகயோகத்தின் விசேஷதா ஆகும். எந்த விசயமாக இருந்தாலும் முத-ல் உறுதியான நிலை, அன்பான குழு தேவை. அதன் மூலம் வெற்றியானது வெளிப்படையான ரூபத்தில் தென்படும். உறுதியான நிலை காய்ந்த நிலைத்திலும் பழங்களை உருவாக்கி விட முடியும். இன்றைய நாட்களில் விஞ்ஞானிகள் மணல் வெளிகளிலும் பழங்களை உருவாக்குவதற்கான முயற்சி செய்து கொண்டிருக்கின்றனர். ஆக அமைதி சக்தியினால் என்ன செய்ய முடியாது! எந்த நிலைத்திற்கு அன்பு என்ற நீர் கிடைக்கிறதோ அங்கு பழம் மிகவும் பெரியதாகவும் இருக்கும், மேலும் சுவையானதாகவும் இருக்கும். எவ்வாறு சொர்க்கத்தில் பெரிய பெரிய பழங்களாக இருக்கும், சுவையானதாகவும் இருப்பது போன்று! அயல் நாட்டில் பெரிய பழங்கள் கிடைக்கும், ஆனால் சுவையானதாக இருக்காது. பழம் பார்ப்பதற்கு மிகவும் நன்றாக இருக்கும், ஆனால் சுவை இருக்காது. பாரதத்தில் பழம் சிறியதாக இருக்கும், ஆனால் சுவை நன்றாக இருக்கும். அஸ்திவாரம் அனைத்தும் இங்கேயே போடப்படுகிறது. எந்த சென்டரில் அன்பு என்ற தண்ணீர் கிடைக்கிறதோ அந்த சென்டர் சதா வளமானதாக இருக்கும். சேவையிலும், கூட இருப்பவர்களும். சொர்க்கத்தில் சுத்தமான தண்ணீர், சுத்தமான நிலம் இருக்கும். அதனால் தான் அம்மாதிரியான பழம் கிடைக்கிறது. எங்கு அன்பு இருக்கிறதோ அங்கு வாயுமண்டலம் அதாவது நிலம் சிரேஷ்டமானதாக இருக்கும். யாராவது பாதிப்படை கிறார்கள் எனில் என்ன கூறுவார்கள்? எனக்கு வேறு எதுவும் வேண்டாம், அன்பு இருந்தால் போதும். ஆக பாதிப்பி-ருந்து தப்பிப்பதற்கான சாதனமும் அன்பு தான். பாப்தாதாவிற்கு அனைத்தையும் விட மிகவும் குஷியான விசயம் காணாமல் போன குழந்தைகள் மீண்டும் வந்து விட்டனர். நீங்கள் அங்கு செல்லவேயில்லை எனில் சேவை எப்படி ஏற்பட்டிருக்கும்? ஆகையால் பிரிந்து போவதும் நன்மை ஆகி விட்டது. மேலும் கல்யாணகாரியாக இருப்பதால் சந்தித்தே ஆக வேண்டும். அவரவர்களது இடத்தில் அனைவரும் மிகவும் உற்சாகத்துடன் முன்னேறிக் கொண்டிருக்கிறீர்கள். மேலும் அனைவரின் உள்ளத்திலும் ஒரே ஒரு இலட்சியம் இருக்கிறது, அதாவது பாப்தாதாவின் ஆசையாகிய அனைத்து ஆத்மாக்களையும் அநாதைகளி-ருந்து குழந்தைகளாக ஆக்க வேண்டும் என்ற ஆசையை நாம் நிறைவேற்றுவோம். அனைவரும் சேர்ந்து அமைதிக்கான செய்த விசேஷ நிகழ்ச்சி மிகவும் நன்றாக இருந்தது.

அனைவரையும் சிறிது நேரம் அமைதியாக இருப்பதற்கான பயிற்சி செய்விப்பதில் நிமித்தமானவர்களாக ஆகி விடுவீர்கள். யாராவது சரியான முறையில் ஒரு நிமிடம் அமைதியின் அனுபவம் செய்து விட்டால் அந்த ஒரு நிமிட அமைதியின் அனுபவம் அடிக்கடி அவரை ஈர்த்துக் கொண்டேயிருக்கும். ஏனெனில் அனைவருக்கும் அமைதி தேவை ஆனால் அதற்கான விதி தெரியவில்லை. சகவாசம் கிடைப்பதில்லை. அனைத்து ஆத்மாக்களும் அமைதிப் பிரியர்களாக இருக்கின்றனர், அப்படிப்பட்ட ஆத்மாக்களுக்கு அமைதியின் அனுபவம் ஏற்படுவதன் மூலம் தானாகவே ஈர்க்கப்பட்டுவார்கள். ஒவ்வொரு நிலையத்திலும் நல்ல விசேஷமான காரியம் செய்யக் கூடிய நிமித்தமான சிரேஷ்ட ஆத்மாக்கள் இருக்கின்றனர். எனவே அதிசயம் செய்வது ஒன்றும் பெரிய விசயமில்லை. ஓசை பரப்புவதற்கான விசேஷ சாதனம் இன்றைய நாட்களின் விசேஷ ஆத்மாக்கள் ஆவர். எந்த அளவிற்கு விசேஷ ஆத்மாக்கள் யாராவது சம்மந்தத்தில் வருகிறார்களோ அவர்களது சம்பந்தத்தின் மூலம் பல ஆத்மாக்களுக்கு நன்மை ஏற்படுகிறது. ஒரு வி.ஐ.பி மூலம் பல சாதாரண ஆத்மாக்களுக்கு நன்மை ஏற்பட்டு விடுகிறது. மற்றபடி நெருங்கிய தொடர்பில் வரமாட்டார்கள். அவர்களது தர்மத்தில், அவர்களது பாகத்தில் அவர்களுக்கு விசேஷதாவிற்கான பலன் ஏதாவது கிடைத்து விடுகிறது. தந்தைக்கு பிடித்தமானவர்கள் சாதாரணமானவர்கள் தான். அவர்களால் நேரமும் கொடுக்க முடியும். அவர்களுக்கு நேரமே கிடையாது ஆனால் அவர்கள் நிமித்தமாக ஆகின்ற போது பலருக்கு நன்மை ஏற்பட்டு விடுகிறது. நல்லது.

**பார்ட்டிகளுடன்**: சதா அமர்பவ என்ற வரதானத்தை அடைந்த ஆத்மா என்ற அனுபவம் செய்கிறீர்களா? சதா வரதானங் களினால் வளர்ந்து முன்னேறிக் கொண்டே செல்கிறீர்கள் அல்லவா! யாருக்கு தந்தையின் மீது உறுதியான அன்பு இருக்கிறதோ அவர்கள் அமர்பவ என்ற வரதானத்தை அடைகிறார்கள்., சதா கவலையற்ற சக்கரவர்த்திகளாக இருப்பார்கள். எந்த ஒரு காரியத்திற்கு நிமித்தமாக இருந்தாலும் கவலையற்று இருப்பதும் கூட விசேஷதா ஆகும். தந்தை நிமித்தமாக இருக்கின்றார் அல்லவா! நிமித்தமாக இருந்தாலும் விடுபட்டு இருக்கின்றார். ஆகையால் கவலையின்றி இருக்கின்றார். ஆக தந்தையை பின்பற்ற வேண்டும். சதா அன்பு என்ற பாதுகாப்பின் மூலம் முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். அன்பின் ஆதாரத்தில் தந்தை சதா பாதுகாப்பு கொடுத்து முன்னேற்றத்தில் பறக்க

வைத்து அழைத்துச் செல்கின்றார். இந்த ஒரு நம்பிக்கையும் உறுதியாக இருக்கிறது அல்லவா! அன்பான ஆன்மீக சம்பந்தம் ஏற்பட்டு விட்டது. இதே ஆன்மீக சம்பந்தத்தின் மூலம் ஒருவருக் கொருவர் எவ்வளவு பிரியமானவர்களாக ஆகி விட்டீர்கள்! பாப்தாதா தாய்மார்களுக்கு ஒரு சப்தத்தில் மிக எளிய விசயத்தை கூறியிருக்கின்றார், ஒரு சப்தத்தை நினைவு செய்யுங்கள் -என்னுடைய பாபா". அவ்வளவு தான். என்னுடைய பாபா என்று கூறுகிறீர்கள், அனைத்து பொக்கிஷங்களும் கிடைத்து விடுகிறது. இந்த பாபா என்ற சப்தம் தான் பொக்கிஷங்களுக்கான சாவியாகும். தாய்மார்களுக்கு சாவி பாதுகாப்பாக வைத்துக் கொள்ள நன்றாக வருகிறது அல்லவா! ஆக பாப்தாதா சாவி கொடுத்திருக்கின்றார். எந்த பொக்கிஷம் தேவையோ அதை அடைய முடியும். ஒரு பொக்கிஷத்திற்கான சாவி கிடையாது. அனைத்து பொக்கிஷங்களின் சாவியாகும். பாபா, பாபா என்று கூறிக் கொண்டே இருந்தால் இப்போதும் குழந்தை மற்றும் எஜமானாக இருக்கின்றோம், எதிர்காலத்திலும் எஜமானர்களாக இருப்போம். சதா இதே குஷியில் ஆடிக் கொண்டே இருங்கள். நல்லது.

**வரதானம்: நிச்சயம் என்ற அழியாத ரேகையின் மூலம் நம்பர் ஒன் பாக்கியத்தை உருவாக்கிக் கொள்ளக் கூடிய வெற்றித்திலகதாரி ஆகுக!**

எந்த குழந்தைகள் நிச்சயபுத்தியுடையவர்களாக இருக்கிறார்களோ அவர்கள் ஒருபோதும் எப்படி அல்லது அப்படி என்று விஸ்தாரத்தில் செல்லமாட்டார்கள். அவர்களது நிச்சயம் என்ற அழிவற்ற ரேகையானது மற்ற ஆத்மாக்களுக்கும் மிகத் தெளிவாக தென்படும். அவர்களது நிச்சயத்தின் ரேகை இடையிடையில் துண்டிக்கப் படாமல் இருக்கும். இப்படிப்பட்ட ரேகையுடையவர்களின் நெற்றியில் அதாவது நினைவில் சதா வெற்றித்திலகம் காணபடும். அவர்கள் பிறப்பு எடுத்தவுடனேயே சேவைக்கான பொறுப்பு கிரீடத்தை அணிந்து கொள்வார்கள். சதா ஞான இரத்தினங்களுடன் விளையாடக் கூடியவர்களாக இருப்பார்கள். சதா நினைவு மற்றும் குஷி என்ற ஊஞ்ச-ல் ஆடிக் கொண்டே வாழ்க்கையை கழிப்பவர்களாக இருப்பார்கள். இது தான் நம்பர் ஒன் பாக்கியத்தின் ரேகையாகும்.

**சுலோகன்: புத்தி என்ற கம்ப்யூட்டரில் முற்றுப் புள்ளியின் சின்னம் வருகிறது எனில் மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள் என்பதாகும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 07.03.1986 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# படிப்பின் நான்கு பாடங்களின் யதார்த்த நினைவுச்சின்னம் -மகா சிவராத்திரி!

இன்று ஞானம் கொடுக்கும் வள்ளல், பாக்கியவிதாதா, (பாக்கியத்தை உருவாக்குபவர்) சர்வசக்திகளின் வரதாதா, (வரங்களை அளிப்பவர்) அனைத்து பொக்கிஷங்களையும் நிரப்பக் கூடிய போலாநாத் (கள்ளம் கபடமற்றவர்) தந்தை தனது மிக அன்பான, சகயோகி, நெருங்கிய குழந்தைகளை சந்திப்பதற்கு வந்திருக்கின்றார். இந்த சந்திப்பானது சதா கால உற்சவம் கொண்டாடுவதற்கான நினைவுச் சின்னமாக ஆகி விடுகிறது. வித விதமான பெயர்களுடன் காலத்திற்கு ஏற்றாற் போல் கொண்டாடப்படும் உற்சவங்கள் அனைத்தும் இந்த நேரத்தில் தந்தை மற்றும் குழந்தைகளின் இனிய சந்திப்பு, உற்சாகம் நிறைந்த சந்திப்பு, எதிர்காலத்தில் உற்சவ ரூபமாக ஆகி விடுகிறது. இந்த நேரத்தில் சர்வ சிரேஷ்ட குழந்தைகளின் ஒவ்வொரு நாள், ஒவ்வொரு நேரம் சதா குஷியுடன் இருக்கக் கூடிய நாட்களாகும் அல்லது நேரமாகும். எனவே இந்த சிறிய சங்கமயுகத்தின் அலௌகீக வாழ்க்கை, அலௌகீக பிராப்திகள், அலௌகீக அனுபவங்களை துவாபர யுகத்தி-ருந்து பக்தர்கள் வித விதமான பெயரில் நினைவுச் சின்னங்களாக ஆக்கி விட்டார்கள். உங்களது இந்த ஒரு பிறவியின் வாழ்க்கை பக்தியின் 63 பிறவி களுக்கு நினைவிற்கான சாதனமாக ஆகி விடுகிறது. அந்த அளவிற்கு மகான் ஆத்மாக்களாக இருக்கிறீர்கள். இந்த நேரத்தில் மிகவும் ஆச்சரியமான விசயம் ஒன்றை பார்த்துக் கொண்டிருக்கின்றார், அதாவது நடைமுறையில் கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள் மற்றும் அந்த நினைவுச் சின்னத்தையும் கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். சைத்தன்யமாகவும் இருக்கிறீர்கள் மற்றும் அந்த சிலையும் கூடவே இருக்கிறது.

5-ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஒவ்வொருவரும் என்ன என்ன பிராப்திகளை அடைந்திருந்தீர்கள்? என்ன ஆகியிருந்தீர்கள்? எப்படி ஆனீர்கள்? என்ற இந்த 5 ஆயிரம் ஆண்டிற்கான தனது முழு

நினைவுச்சின்னம் மற்றும் ஜாதகத்தை அனைவரும் தெளிவான ரூபத்தில் அறிந்து கொண்டீர்கள். கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள் மற்றும் பார்த்து பார்த்து மகிழ்ச்சியடைந்து கொண்டிருக்கிறீர்கள் -இது நமக்கான மகிமை, பூஜையாகும், நமது வாழ்க்கைக் கதையை வர்ணித்துக் கொண்டிருக்கின்றனர். நமது ஒரிஜினல் சிலையை வடிவமைக்க முடியாது. எனவே பாவனையின் ஆதாரத்தில் எது டச் ஆகிறதோ அதை சிலையாக வடிவமைத்து விட்டனர். ஆக நடைமுறையில் தினமும் சிவஜெயந்தி கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். ஏனெனில் சங்கமயுகம் என்றாலே அவதார யுகமாகும், சிரேஷ்ட காரியம், சிரேஷ்ட சரித்திரத்திற்கான யுகமாகும் ஆனால் எல்லையற்ற யுகங்களின் இடையில் இந்த நினைவுச் சின்னத்தின் நாளை கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் அனைவரும் கொண்டாடுவது என்பது சந்திப்பு செய்வதாகும், அவர்கள் கொண்டாடுவது என்பது கடவுளை அழைப்பதாகும். அவர்களுடையது அழைப்பதாகும், உங்களுடையது அடைவதாகும். வாருங்கள் என்று அவர்கள் கூறுவார்கள் மற்றும் நீங்கள் வந்து விட்டார், அடைந்து விட்டோம் என்று கூறுவீர்கள். நினைவுச் சின்னத்திற்கும் நடை முறைக்கும் இரவு பகல் வித்தியாசம் இருக்கிறது. உண்மையில் இந்த நாள் போலாநாத் (கள்ளங் கபடமற்ற) தந்தையின் நாளாகும். போலாநாத் என்றால் கணக்கின்றி, அளவின்றி கொடுக்கக் கூடியவர். பொதுவாக் எவ்வளவு அவ்வளவு என்ற கணக்கு இருக்கும், யார் செய்வார்களோ அவர்கள் அடைவார்கள், அவ்வளவு தான் அடைவார்கள். இந்த கணக்கு இருக்கிறது ஆனால் போலாநாத் என்ன கூறுகின்றார்? ஏனெனில் இந்த நேரத்தில் கொடுப்பதில் எவ்வளவு, அவ்வளவு என்ற கணக்கு வைப்பது கிடையாது. ஒன்றுக்கு பல மடங்கு கணக்கு இருக்கிறது. ஆக அளவற்றதாக ஆகி விடுகிறது அல்லவா! ஒன்று எங்கு இருக்கிறது, பல மடங்கு எங்கு இருக்கிறது! பல மடங்கு என்பது கடைசி வார்த்தையாகும். அதனால் தான் பல மடங்கு என்று கூறுகின்றார். அளவிட முடியாத அளவிற்கு கொடுப்பவர் போலநாத்தின் நாளை நினைவுச் சின்னமாக கொண்டாடுகின்றனர். உங்களுக்கு அந்த அளவிற்கு கிடைக்கிறது, அதாவது இப்போதும் நிறைந்திருக்கிறீர்கள், மேலும் 21-பிறவிகள், 21-வம்சத்தினர்களும் நிறைந்து இருப்பீர்கள்.

இவ்வளவு பிறவிகளுக்கு வேறு யாரும் உத்திரவாதம் கொடுக்க முடியாது. ஒருவர் எவ்வளவு தான் மிகப் பெரிய வள்ளலாக இருந்தாலும் பல பிறவிகளுக்கு நிறைந்த களஞ்சியத்திற்கான உத்திரவாதம் யாரும்

கொடுக்க முடியாது. ஆக போலாநாத் ஆகி விடுகின்றார் அல்லவா! ஞானம் நிறைந்தவராக இருந்தாலும் கூட போலாநாத் ஆகின்றார். அதனால் தான் போலாநாத் என்று கூறப்படுகின்றார். கணக்கு பார்க்க வேண்டுமெனில் ஒவ்வொரு சங்கல்பத்திற்கான கணக்கையும் அறிந்து கொள்ள முடியும் ஆனால் அறிந்திருந்தாலும் கொடுப்பதில் போலாநாத் ஆகி விடுகின்றார். ஆக நீங்கள் அனைவரும் போலாநாத் தந்தையின் போலாநாத் குழந்தைகள் அல்லவா! ஒருபுறம் போலாநாத் என்றும் கூறுகின்றோம், மற்றொருபுறம் நிறைந்த களஞ்சியம் உடையவர்கள் என்று கூறுகின்றோம். நினைவுச் சின்னத்தையும் பாருங்கள் எவ்வளவு நன்றாக கொண்டாடுகின்றனர். கொண்டாடுபவர்களுக்கு தெரியாது, ஆனால் நீங்கள் அறிவீர்கள். இந்த சங்கமயுக படிப்பின் முக்கிய பாடங்கள் நான்கு, இந்த நான்கு பாடங்களும் நினைவுச் சின்னத்திற்கான நாளில் கொண்டாடி வருகின்றனர். எப்படி? முன்பும் கூறியிருந்தேன் -இந்த உற்சவ தினத்தில் பிந்து மற்றும் பூந்த் (துளி) மகத்துவம் இருக்கும். பிந்து என்றால் இந்த நேரத்திற்கான நினைவு அதானது யோகா பாடத்தின் அடையாளமாகும். நினைவின் பொழுத பிந்து ஸ்திதியில் தான் நிலைத்திருக்கிறீர்கள் அல்லவா! ஆக பிந்து என்பது நினைவின் அடையாளமாகும். மேலும் பூந்த் (துளி) என்றால் ஞானத்தின் வித விதமான துளிகளாகும். இது ஞான பாடத்தின் அடையாளமாக பூந்த் காண்பித்திருக்கின்றனர். தாரணையின் அடையாளமாக இதே நாளில் விசேஷ விரதம் இருப்பர். ஆக விரதத்தை தாரணை செய்கின்றனர். தாரணையிலும் நீங்கள் திட சங்கல்பம் செய்கிறீர்கள். பொறுமையாக அல்லது அந்தர்முகியாக அவசியம் இருந்து காண்பிப்பேன் என்று விரதம் கடைபிடிக்கிறீர்கள். ஆக இவ்வாறு விரதம் கடைபிடிக்கிறீர்கள் அல்லவா! இந்த விரதம் தாரணையின் அடையாளமாகும். மேலும் சேவையின் அடையாளம் விழித்திருப்பதாகும். சேவை செய்வதே யாரையாவது விழிப்படையச் செய்வதற்காக! அஞ்ஞான நித்திரையிலிருந்து விழிப்படையச் செய்வது, முழிப்படைய வைப்பது -இது உங்களது சேவையாகும். ஆக இவ்வாறு விழித்திருப்பது சேவையின் அடையாள மாகும். ஆக நான்கு பாடங்களும் வந்து விட்டது அல்லவா! ஆனால் அவர்கள் ரூபத்தை ஸ்தூல ரூபமாக மாற்றி விட்டனர். இருப்பினும் பக்தர்கள் பாவனையுடையவர்களாக இருப்பார்கள். மேலும் சத்திய பக்தனின் அடையாளம் இதுவாகத் தான் இருக்கும் அதாவது என்ன சங்கல்பம் செய்வார்களோ அதில் திடமாக இருப்பார்கள். அதனால் தான் பக்தர்களின் மீதும் தந்தைக்கு அன்பு இருக்கிறது. இருப்பினும் உங்களது

நினைவுச்சின்னம் துவாபர யுகத்தி-ருந்து பரம்பரையாக நடைபெற்று வந்து கொண்டிருக்கிறது. மேலும் இந்த நாளை விசேஷமாக எப்படி நீங்கள் இந்த சங்கமயுகத்தில் அடிக்கடி சமர்பண விழா கொண்டாடுகிறீர்களோ, தனித்தனி யாகவும் கொண்டாடுகிறீர்கள். அதே போன்று உங்களது இந்த நிகழ்ச்சி யையும் நினைவுச் சின்னமாக அவர்கள் தன்னை அர்ப்பணிப்பது கிடையாது, ஆனால் ஆடு பலி கொடுக்கின்றனர். பாப்தாதாவும் சிரிப்பாக கூறுகின்றார் -இந்த நான் நான் (மே மே) என்பதை பலி கொடுத்து சம்பூர்னம் அதாவது சமர்பணம் ஆகுங்கள். பிரம்மாபாபா முதல் அடியாக எது எடுத்து வைத்தார்? நான் மற்றும் எனது என்ற சமர்பண விழா என்றால் எந்த ஒரு விசயத்திற்கும் நான் என்பதற்குப் பதிலாக சதா இயற்கையாக, சாதாரணமாக பேசும் போதும் பாபா என்ற வார்த்தை தான் கேட்டிருக்கிறோம். நான் என்ற வார்த்தை அல்ல. பாபா செய்வித்துக் கொண்டிருக்கின்றார், நான் செய்து கொண்டிருக்கின்றேன், அல்ல. பாபா நடத்திக் கொண்டிருக்கின்றார், நான் கூறுகின்றேன் என்று கூறவில்லை. பாபா கூறுகின்றார். எல்லைக்குட்பட்ட எந்த மனிதன் அல்லது பொருளின் மீது பற்றுதல் -இது தான் எனது என்பதாகும். ஆக எனது மற்றும் நான் என்பதை சம்பர்ணம் செய்வது -இதைத் தான் பலி கொடுப்பது என்று கூறப்படுகிறது. பலி கொடுப்பது என்றால் மகா பலி ஆவதாகும். ஆக இது சம்பர்ணம் ஆவதன் அடையாளமாகும்.

பாப்தாதா பக்தர்களுக்கு ஒரு விசயத்தில் பெருமைப்படுகின்றார் -ஏதாவது ரூபத்தில் பாரதத்தில் அல்லது ஒவ்வொரு நாட்டில் உற்சாகத்தின் அலைகளை பரப்புவதற்காக உற்சவம் கொண்டாடுவது நல்லது அல்லவா! இரண்டு நாட்களாக இருந்தாலும் அல்லது ஒரு நாளாக இருந்தாலும் உற்சாகத்தின் அலை பரவி விடுகிறது அல்லவா! அதனால் தான் உற்சவம் என்று கூறப்படுகிறது. அல்ப காலத்திற்கு விசேஷ ருபத்தில் தந்தையின் பக்கம் அதிகபட்சம் கவனம் செல்கிறது அல்லவா! ஆக இந்த விசேஷ நாளில் விசேஷமாக என்ன செய்வீர்கள்? பக்தியில் சிலர் சதா காலத்திற்கு விரதம் இருக்கின்றனர், ஒரு மாதம் இருப்பதற்கு சிலர் தைரியமற்று இருப்பர், ஒரு நாள் அல்லது சில மணி நேரத்திற்கு விரதம் இருக்கின்றனர். பிறகு அந்த விரதத்தை நிறுத்தி விடுகின்றனர். நீங்கள் இவ்வாறு செய்வது கிடையாது தானே! மதுவனத்தில் பூமியின் மீது கால்கள் கிடையாது, பிறகு அயல்நாட்டிற்கு சென்ற பிறகு பூமிக்கு வந்து விடுவீர்களா அல்லது மேலேயே இருப்பீர்களா? சதா மே-ருந்து கீழே வந்து காரியங்கள்

செய்வீர்களா? அல்லது கீழேயே இருந்து கொண்டு காரியம் செய்வீர்களா? மேலே இருப்பது என்றால் மேலான (உயர்ந்த) ஸ்திதியில் இருப்பதாகும். மேலே என்றால் மாடிக்கு செல்ல வேண்டும் என்பது கிடையாது. உயர்ந்த ஸ்திதியில் நிலைத்திருந்து எந்த சாதாரண காரியம் செய்வது என்றால் கீழே வருவதாகும் ஆனால் சாதாரண காரியம் செய்தாலும் ஸ்திதி மேலே அதாவது உயர்ந்ததாக இருக்க வேண்டும். தந்தையும் சாதாரண சரீரத்தை எடுக்கின்றார் அல்லவா! காரியங்கள் சாதாரணமாகத் தான் செய்வீர்கள் அல்லவா! நீங்கள் எப்படி பேசுகிறீர்களோ அப்படித் தான் பேசுவார். அப்படித் தான் நடப்பார். ஆக காரியங்கள் சாதாரணமாக இருக்கிறது, உடலும் சாதாரணமாக இருக்கிறது, ஆனால் சாதாரண காரியங்கள் செய்தாலும் ஸ்திதி உயர்ந்ததாக இருக்கிறது. இவ்வாறு உங்களது ஸ்திதி சதா உயர்வாக இருக்க வேண்டும்.

இந்த நாளை அவதார நாள் என்று கூறுவது போன்று அமிர்தவேளையில் தூக்கத்தி-ருந்து அல்ல, சாந்திதாமத்தி-ருந்து காரியம் செய்வதற்காக அவதாரம் எடுத்திருக்கின்றேன் என்று நினையுங்கள். மேலும் இரவு காரியங்கள் செய்து முடித்து விட்டு சாந்திதாமத்திற்கு சென்று விடுங்கள். ஆக சிரேஷ்ட காரியங்கள் செய்வதற்காகத் தான் அவதாரங்கள் அவதாரம் எடுப்பர். அதை பிறப்பு என்று கூறுவது கிடையாது, அவதாரம் என்று கூறுவர். உயர்ந்த ஸ்திதியி-ருந்து கொண்டு கீழே வருவர் -இது தான் அவதாரம் ஆகும். ஆக இப்படிப்பட்ட ஸ்திதியில் இருந்து காரியங்கள் செய்வதன் மூலம் சாதாரண காரியங்களும் அலௌகீக காரியமாக மாறிவிடும். மற்றவர்களும் உணவு சாப்பிடுகின்றனர், பிரம்மா போஜனம் சாப்பிடுகின்றோம் என்று நீங்கள் கூறுகின்றீர்கள். வித்தியாசம் இருக்கிறது அல்லவா! நடக்கிறீர்கள், ஆனால் நீங்கள் பரிஸ்தாக்களைப் போன்று நடக்கிறீர்கள், டபுள லைட் ஸ்திதியில் இருந்து நடக்கிறீர்கள். ஆக அலௌகீக நடத்தை, அலௌகீக காரியமாக ஆகி விடுகிறது. எனவே இன்றைய நாள் மட்டும் அவதார நாள் கிடையாது, சங்கமயுகமே அவதார நாளாகும்.

இன்றைய நாள் நீங்கள் பாப்தாதாவிற்கு வாழ்த்துக்கள் கொடுக்கிறீர்கள் ஆனால் பாப்தாதா கூறுகின்றார் முதலில் நீங்கள். ஒருவேளை குழந்தைகள் இல்லையெனில் தந்தை என்று யார் கூறுவர்? குழந்தைகள் கேட்டால் ஆம் இறந்து கொண்டிருக்கின்றாய் என்ற ஒருபோதும் கூறமாட்டார். ஏனெனில் அந்த நேரத்தில் தைரியம் இருக்காது. ஒருவரது உள்ளம் பலவீனாக

இருக்கிறது எனில் நீங்கள் அவரிடம் ஏதாவது விசயம் கூறிவிட்டால் அவரது இருதயம் நின்று விடும், அதாவது முயற்சியில் மாற்றம் கொண்டு வருவதற்கான சக்தி வராது. ஆக சங்கமயுகம் என்றால் வாழ்த்துக்களின் மூலம் விருக்தியடையக் கூடிய யுகமாகும். இந்த வாழ்த்துக்கள் தான் சிரேஷ்ட பாலனையாகும். ஆகையால் உங்களது இந்த வாழ்த்துக்களின் பாலனையின் நினைவுச்சின்னம் எப்போதெல்லாம் ஏதாவது தேவி தேவதையின் நாள் கொண்டாடுகிறார்களோ அதை பெரிய (உயர்ந்த) நாள் என்று கூறிவிடுகின்றனர். தீபாவளியாக இருக்கட்டும், சிவராத்திரியாக இருக்கட்டும், இன்ற பெரிய (உயர்ந்த) நாள் என்று கூறுவர். எந்த உற்சவமாக இருந்தாலும், பெரிய நாள் என்று கூறுவர். ஏனெனில் உங்களது உள்ளம் பரந்த உள்ளமாக இருக்கிறது, ஆகையால் அவர்கள் பெரிய நாள் என்று கூறிவிட்டனர். ஆக ஒருவருக் கொருவர் வாழ்த்துக்கள் கொடுப்பது -இது பெரிய உள்ளமாகும். புரிந்ததா, தவறானவர்களுக்கு தவறு புரிய வைக்கக் கூடாது என்று கிடையாது ஆனால் சிறிது தைரியம் வையுங்கள், சைகை காண்பிக்க வேண்டும் ஆனால் நேரம் காலம் பார்க்க வேண்டும் அல்லவா! ஒருவர் இறந்து கொண்டிருக்கின்றார், நீங்கள் கூறுகிறீர்கள் -இறந்து விடு, இறந்து விடு.. ஆக நேரம் காலம் பார்க்க வேண்டும், அவரது தைரியத்தை பாருங்கள். மிகவும் நன்று, மிகவும் நன்று என்று கூறுவதன் மூலம் அவரிடத்தில் ப்திரியம் வந்து விடுகிறது ஆனால் மனதார கூற வேண்டும், உதட்டளவில் கூறக் கூடாது, இல்லையெனில் வாயளவில் கூறுவதாக அவரும் புரிந்து கொள்வார். இது பாவனைக்கான விசயமாகும். உள்ளத்தின் உணர்வுகளில் கருணையிருக்கும் போது அவரது உள்ளத்தில் கருணை உணர்வு ஏற்படும். ஆகையால் சதா வாழ்த்துக்களை கொடுத்துக் கொண்டே இருங்கள். வாழ்த்துக்கள் அடைந்து கொண்டே இருங்கள். இந்த வாழ்த்துக்கள் வரதானமாகும். இன்றைய நாளை -சிவனின் களஞ்சியம் நிறைந்திருக்கிறது என்று மகிமை பாடுகின்றனர். ஆக தந்தையின் மகிமை மட்:டும் கிடையாது, உங்களது மகிமையும் ஆகும். சதா களஞ்சியம் நிறைந்திருக்க வேண்டும். வள்ளலின் குழந்தைகள் வள்ளலாக ஆகி விடுங்கள். பக்தர்கள் பெறுபவர்கள் நீங்கள் கொடுக்கக் கூடிய தேவதைகள், ஆக வள்ளல் என்றால் கொடுக்கக் கூடியவர்கள். ஒருவருக்கு ஏதாவது கொடுத்து விட்டு பிறகு நீங்கள் அவரிடமிருந்து ஏதாவது எடுத்துக் கொண்டால் அவருக்கு பீ-ங்க் வராது. பிறகு அவரை எப்படி வேண்டுமென்றாலும் ஆக்கி விட முடியும் ஆனால் முத-ல் அவருக்கு கொடுக்க வேண்டும். தைரியம் கொடுங்கள், ஆர்வம் கொடுங்கள், குஷி

கொடுங்கள், பிறகு அவரை எப்படி மாற்ற விரும்புகிறீர்களோ மாற்றி விட முடியும். தினமும் உற்சவம் கொண்டாடிக் கொண்டே இருங்கள். தினமுத் தந்தையுடன் சந்திப்பு கொண்டாடுவது -இது தான் உற்சவம் கொண்டாடுவதாகும். ஆக தினமும் உற்சவமாகும். நல்லது.

நாலாபுறங்களிலும் உள்ள குழந்தைகளுக்கு, சங்கமயுகத்தின் ஒவ்வொரு நாளும் அவதரித்துள்ள நாளுக்கான அழிவற்ற வாழ்த்துக்கள் உரித்தாகுக. சதா பாப்சமான் வள்ளல் மற்றும் வரதாதா ஆகி ஒவ்வொரு ஆத்மாவையும் நிறைக்கக் கூடிய மாஸ்டர் போலாநாத் குழந்தைகளுக்கு சதா நினைவி-ருந்து ஒவ்வொரு காரியத்தையும் நினைவுச் சின்னமாக ஆக்கக் கூடிய குழந்தைகளுக்கு, சதா சுய முன்னேற்றம் மற்றும் சேவையில் முன்னேற்றத்தில் ஆர்வம், உற்சாகத்துடன் முன்னேறக் கூடிய சிரேஷ்ட குழந்தைகளுக்கு, விசேஷமாக இன்றைய நினைவுச் சின்ன நாளாகிய சிவஜெயந்தி மற்றும் பிராமண ஜெயந்தி -வைரத்திற்கு சமமான ஜெயந்தி, சதா அனைவரையும் சுகமானவர்களாக ஆக்கக் கூடிய, சம்பன்னம் ஆக்கக் கூடிய ஜெயந்தியின் வாழ்த்துக்கள் மற்றும் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

**வரதானம்: ஒவ்வொரு சக்தியையும் கட்டளைப்படி நடத்தக் கூடிய மாஸ்டர் படைப்பவர் ஆகுக!**

காரியம் ஆரம்பிக்கும் முன் காரியத்திற்குத் தகுந்தாற் போன்று சக்திகளை ஆவாஹனம் செய்யுங்கள். எஜமானர் களாகி கட்டளையிடுங்கள். ஏனெனில் இந்த சர்வசக்திகள் உங்களது புஜங்கள் போன்றது. உங்களது புஜங்கள் உங்களது கட்டளையின்றி ஒன்றும் செய்ய முடியாது. பொறுமை சக்தியே, காரியத்தை வெற்றியாக்கு என்று கட்டளையிடுங்கள். பிறகு பாருங்கள், வெற்றி கிடைத்திருக்கும் ஆனால் கட்டளையிடுவதற்குப் பதிலாக பயப்படுகிறீர்கள் -செய்ய முடியுமான? முடியாதா? இந்த மாதிரியான பயம் இருந்தால் கட்டளையிட முடியாது. ஆகையால் மாஸ்டர் படைப்பவராகி ஒவ்வொரு சக்தியையும் கட்டளைப்படி நடத்துவதற்கு பயமற்றவர்களாக ஆகுங்கள்.

**சுலோகன்: உதவி செய்யும் வள்ளலாகிய தந்தையை வெளிப்படுத்தி அனைவரையும் அக்கரைக்கு கொண்டு செல்லுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 10.03.1986 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# கவலையற்ற மகாராஜா ஆவதற்கான யுக்தி (வழிமுறை)!

இன்று பாப்தாதா கவலையற்ற மகாராஜாக்களின் சபையை பார்த்துக் கொண்டிருக்கிறார். இந்த இராஜ்ய சபை முழு கல்பத்திலும் விசித்திர(வித்தியாசமான) சபையாக இருக்கிறது. இராஜாக்கள் என்றாலே பலர் இருக்கிறார்கள் ஆனால் கவலையற்ற இராஜாக்கள், இந்த விசித்திரமான சபை (சட்ட சபை) இந்த சங்கமயுகத்தில் மட்டும் தான் நடைபெறும். இந்த கவலையற்ற இராஜாக்களின் சபையானது, சத்யுகத்தின் இராஜ்ய சபையை விடவும் உயர்வானது. ஏனெனில் அங்கு ஏழ்மை (கவலை) மற்றும் செல்வந்தன் (குஷி) -இந்த இரண்டிற்குமுள்ள வேறுபடுத்தும் ஞானம் வெளிப்படாது. ஏழ்மை (கவலை) என்ற தெரியவே தெரியாது ஆனால் இப்பொழுது முழு உலகமும் ஏதாவதொரு கவலையில் (ஏழ்மையில்) இருக்கிறார்கள் -காலை எழுவதிலிருந்து தன்னைப்பற்றி, குடும்பத்தைப் பற்றி, காரியங்களைப் பற்றி, உற்றார் உறவினர்களைப் பற்றி ஏதாவதொரு கவலை ஏற்படுகிறது, ஆனால் நீங்கள் அனைவரும் அமிர்தவேளையிலிருந்து கவலையற்ற மகாராஜாவாக இருந்து, அன்றைய நாளை ஆரம்பிக்கிறீர்கள், மற்றும் கவலையற்றவர் ஆகி ஒவ்வொரு காரியத்தையும் செய்கிறீர்கள். கவலையற்ற இராஜாவாகி ஓய்வாக உறக்கத்தை உறங்குகிறீர்கள். சுகத்தின் உறக்கத்தில் அமைதியான உறக்கத்தில் உறங்குகிறீர்கள். அப்படிப்பட்ட கவலையற்ற மகாராஜாவாக ஆகி விட்டீர்கள். அப்படி ஆகி விட்டீர்களா அல்லது ஏதாவது கவலை இருக்கிறதா? பாபாவின் மீது பொறுப்பை (சுமை) கொடுத்து விட்டால், கவலையற்றவர் ஆகி விடலாம். தன் மீது தான் பொறுப்பு இருக்கிறது என்று புரிந்து கொண்டால் கவலை ஏற்படுகிறது. பொறுப்பு பாபாவினுடையது மேலும் நான் நிமித்தமான சேவாதாரியாக இருக்கிறேன். நான் நிமித்தமான கர்மயோகி. செய்ய வைக்கக் கூடியவர் பாபா, நான் நிமித்தமாக இருந்து செய்கிறேன். ஒருவேளை, ஒவ்வொரு நேரமும் இந்த நினைவு தானாகவே இருக்கிற தென்றால் எப்பொழுதுமே கவலையற்ற மகாராஜாவாக

இருக்கலாம். ஒருவேளை தவறுதலாக (மறந்தும்) கூட ஏதாவது தேவையற்ற உணர்ச்சிகளை தனது மீது சுமையை எடுத்துக் கொண்டால் கீரிடத்திற்கு பதிலாக கவலை யின் பலவிதமான கூடைகள் தலை மீது வந்து விடுகிறது. இல்லையென்றால் சதா லயிட்டின் (லேசான, ஒளியான) கீரிடத்தை அணிந்து கவலையற்ற இராஜாவாக இருக்கிறீர்கள். நான் மற்றும் பாபா அவ்வளவு தான், மூன்றாவதாக வேறுயாரும் இல்லை. இந்த அனுபவம் தான் எளிதாகவே கவலையற்ற மகாராஜாவாக மாற்றுகிறது. எனவே கீரிடதாரியா அல்லது கூடையை சுமக்க கூடியவரா? கூடையை சுமப்பது மேலும் கீரிடத்தை அணிந்துக் கொள்வது -இதில் எந்தளவு வித்தியாசம் இருக்கிறது. கீரிடம் அணிந்த ஒருவரையும், மேலும் சுமையை சுமக்கக் கூடியவரை, கூடையை சுமக்கக்கூடியவரையும் முன்னால் நிறுத்தினீர்கள் என்றால் யாரை நீங்கள் விரும்புவீர்கள்! கீரிடத்தையா அல்லது பொதி சுமப்பவரையா? பல பிறவிகளின் பலவிதமான சுமைகள் என்ற கூடைகளை பாபா வந்து கீழே இறக்கி வைத்து இலேசாக ஆக்குகிறார். ஆகையால் கவலையற்ற இராஜா என்றாலே சதா டபுள் லயிட்டாக இருக்கக் கூடியவரை, எதுவரை இராஜ்வ்ய அதிகாரி ஆகவில்லையோ, அதுவரை இந்த கர்மேந்திரியங்கள் கூட தனது கட்டுபாட்டில் இருக்க முடியாது. இராஜ்ய அதிகாரியாக மாறினால் தான் மாயாஜீத், கர்மேந்திரியங்கள் மீது வெற்றி பெற்றவர், இயற்கையை வென்றவராக ஆகிறீர்கள். எனவே இராஜ்ய சபையில் அமர்ந்திருக்கிறீர்கள் அல்லவா! நல்லது.

இன்று யூரோப்பின் (ஐரோப்பியர்கள்) டர்ன் (முறை). ஐரோப்பா நல்ல முறையில் விரிவடைந்துள்ளது. ஐரோப்பியர்கள் தனது அண்டை நாட்டிற்கு நன்மை செய்வதற்கான திட்டத்தை நன்றாக உருவாக்கியிருக்கிறீர்கள். எவ்வாறு பாபா சதா நன்மை செய்பவராக இருக்கிறார், அவ்வாறே குழந்தைகள் நீங்களும் கூட பாபாவிற்குச் சமமாக நன்மை செய்வதற்கான பாவணை (உணர்வு) வைக்க வேண்டும். இப்பொழுது எவரை பார்த்தாலும், இவர் கூட பாபாவின் குழந்தை ஆகவேண்டும் என்ற கருணை (இரக்கம்) வருகிறதல்லவா! பாப்தாதா ஸ்தாபனை யின் சமயத்திலிருந்தே அயல் நாட்டிலுள்ள அனைத்து குழந்தைகளையும் ஏதாவதொரு முறையில் நினைவு செய்து கொண்டிருக்கிறார், பாருங்கள் (சிந்தியுங்கள்)! மேலும் பாப்தாதாவின் நினைவினால் நேரம் வரும்பொழுது நாலா பக்கத்திலுள்ள குழந்தைகள் வந்து சேர்ந்து விட்டனர் ஆனால் பாப்தாதா வெகுகாலமாகவே அழைத்து கொண்டிருக்கிறார். அழைப்பின் காரணத்தினால் தான் நீங்கள்

கூட காந்தத்தை போன்று கவர்ந்திழுக்கப்பட்டு வந்து சேர்ந்து விட்டீர்கள். நாம் எப்படி பாபாவினுடையவராக ஆனோம் என்பதே தெரியவில்லையே என்று தோன்றுகிறதல்லவா! பாபாவினுடையவராக ஆனது நன்றாக தான் இருக்கிறது அல்லவா! ஆனால் என்ன ஆனோம், எப்படி மாறினோம், இதை அமர்ந்து யோசித்து பார்த்தீர்கள் என்றால், எங்கிருந்து, எங்கு வந்து சேர்ந்து விட்டோம் என்று யோசிக்கும் பொழுது விசித்திரமாக தோன்றுகிறதல்லவா! நாடகத்தில் ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. நிச்சயிக்கப்பட்ட நாடகத்தில் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு மூலையிலிருந்து தேர்ந்தெடுத்து ஒரே குடும்பமாக வந்து சேர்ந்து விட்டோம். இப்பொழுது இந்த குடும்பம் தனது குடும்பமாக தோன்றும் காரணத்தினால் மிகவும் அன்பானதாக தோன்றுகிறது. தந்தை அன்பிலும் அன்பானவராக இருப்பதால் நீங்கள் அனைவரும் கூட அன்பானவர் ஆகி விட்டீர்கள். நீங்களும் கூட குறைந்தவர்கள் அல்ல. நீங்கள் அனைவரும் கூட பாப்தாதாவின் தொடர்பின் வண்ணத்தில் (சங் கா ரங்) மிகவும் அன்பானவராக ஆகி விட்டீர்கள். யாரை வேண்டுமானாலும் பாருங்கள், எனவே ஒவ்வொருவரும், ஒருவர் மற்றவரையும் நேசிக்கிறீர்கள். ஒவ்வொரு வரின் முகத்திலும் ஆன்மீகத் தன்மையின் தாக்கம் தென்படுகிறது. ஒப்பனை (மேக்கப்) செய்ய வெளிநாட்டினர் விரும்புகின்றனர். எனவே ஃபரிஸ்தாக்களை உருவாக்குவதற்கான இடம் இது தான். அந்த மாதிரி இந்த ஒப்பனை தேவதையாக மாற்றிவிடுகிறது. எப்படி ஒப்பனை (மேக்கப்) செய்த பிறகு யார் எப்படியிருந்தாலும் கூட (அழகாக) மாறி விடுகிறார்கள். மேக்கப் மூலம் மிகவும் அழகாக தோன்றுகிறது. அதனால் இங்கும் கூட அனைவரும் ஜொலித்துக் கொண்டிருக்கும் ஃபரிஸ்தாவாக தோன்றுகிறது. ஏனெனில் ஆன்மீக மேகப் செய்துள்ளீர்கள். அந்த (உலகிய) ஒப்பனையிலோ நஷ்டம் ஏற்படுகிறது ஆனால் இதில் எந்த நஷ்டமும் இல்லை. எனவே அனைவரும் ஜொலித்துக் கொண்டிருக்கக் கூடிய அனைவருக்கும் அன்பான ஆத்மாக்களாக இருக்கிறீர்கள் அல்லவா! அதனால் இங்கு அன்பை தவிர வேறு ஒன்றுமில்லை. எழுந்திருக்கிறீர்கள் என்றால் கூட அன்போடு காலை வணக்கம் செய்கிறீர்கள். உண்ணும் பொழுது கூட அன்போடு பிரம்மா போஜன் உண்ணுகிறீர்கள். நடக்கிறீர்கள் என்றால் கூட அன்போடு பாபாவுடன், கையோடு கை கோர்த்துக் கொண்டு நடக்கிறீர்கள். வெளிநாட்டினர் கைகோர்த்துக் கொண்டு நடக்க விரும்புகிறார்கள், அல்லவா! அதனால் பாப்தாதா கூட சதா பாபாவுடன் கைகோர்த்து கொண்டு நடங்கள் என்று சொல்கிறார். தனியாக செல்லாதீர்கள். தனியாகவே

இருந்தீர்கள் என்றால் சில நேரம் சலித்துக் (சலிப்பு) கொள்வீர்கள் சில நேரங்களில் மற்றவர்களின் (மாயாவின்) பார்வையிலும் வருவீர்கள். பாபாவுடன் சென்றீர்கள் என்றால், ஒன்று -ஒருபொழுதும் மாயாவின் பார்வை படாது. மேலும் கூடவே இருக்கும் காரணத்தினால் எப்பொழுதுமே குஷி -குஷியாக ஆனந்தத்துடன் சாப்பிட்டு கொண்டும், காரியங்கள் செய்து கொண்டும் மகிழ்ந்திருப்பீர்கள். ஆகையால் அனைவருக்கும் துணையை (பாபாவை) பிடித்திருக்கிறது அல்லவா! அல்லது வேறு யாராவது வேண்டுமா! வேறு எந்த நண்பர்களுடைய அவசியமில்லை அல்லவா! அவ்வப்பொழுது உங்களை மகிழ்விக்க வேறு யாராவது வேண்டுமா? ஏமாற்றம் தரும் உறவுகளிலிருந்தும் விடுபட்டு விட்டீர்கள். அதில் ஏமாற்றமும் இருக்கிறது, துக்கமும் கூட இருக்கிறது. இப்பொழுது ஏமாற்றமும் துக்கமும் இல்லாத தொடர்பில் வந்து விட்டீர்கள். தப்பித்து கொண்டீர்கள். சதா காலத்திற்கு பாதுகாப்பாக இருக்கிறீர்கள். அப்படி உறுதியாக இருக்கிறீர்களா -சில குழந்தைகள் உறுதியற்றவர்களாகவும் இருக்கிறார்கள். அங்கு (நம்முடைய இருப்பிடம்) சென்று என்ன செய்வது, எப்படி செய்வது, மாயை வந்து விட்டது என்று கடிதம் எழுதுகிறார்கள், அவ்வாறு அல்ல.

ஐரோப்பாவை சேர்ந்தவர்கள் விசேஷமாக என்ன அதிசயம் செய்கிறீர்கள்? ஒவ்வொரு வருடமும் தந்தையின் முன் ஒரு மலர்கொத்தைக் கொண்டு வருவதன் மூலம், பாபாவின் வார்த்தைகளை நடைமுறையில் கொண்டு வருவதில் அனைவரும் நல்ல கவனம் வைக்கிறீர்கள் என்பதை பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு வருடமும் புதியதாக காணாமல் போய் கண்டுடெடுக்கப்பட்ட பாபாவின் குழந்தைகள் தனது வீட்டிற்கு (மதுபன்), தனது குடும்பத்தில் வந்தடைகிறார்கள் என்ற ஊக்கம் எப்பொழுதுமே இருந்து கொண்டி ருக்கிறது, மேலும் இப்பொழுது கூட இருக்கிறது. ஐரோப்பாவை சேர்ந்தவர்கள் இந்த இலட்சியத்தை வைத்து நன்றாக வளர்ச்சியடைய செய்கிறார்கள் என்பதை பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார். எனவே பாபவின் மகா வாக்கியங்களை, கட்டளையை பின்பற்றக் கூடியவர்களை கட்டளைக்கு கீழ்படிந்தவர் என்று கூறபடுகிறது. மேலும் யார் கட்டளைக்கு கீழ்படிந்த குழந்தைகளாக இருக்கிறார்களோ, அவர்கள் மீது விசேஷமாக பாபாவின் ஆசீர்வாதம் எப்பொழுதுமே இருக்கிறது. கட்டளைக்கு கீழ்படிந்த குழந்தைகள் தானாகவே ஆசிர்வாதத்திற்கு தகுதியுடைய ஆத்மாகளுக்கு ஆகிறார்கள். புரிந்ததா! சில

வருடங்களுக்கு முன்பு எவ்வளவு குறைவாக (சென்டர்) இருந்தது, ஆனால் ஒவ்வொரு வருடமும் வளர்ச்சியடையச் செய்து, பெரியதிலும் பெரிய குடும்பமாக ஆகி விட்டது. அதனால் ஒன்றிலிருந்து இரண்டு, இரண்டிலிருந்து மூன்று, இப்பொழுது எத்தனை சென்டர்கள் ஆகி விட்டது. ஐக்கிய நாடோ வேறு விதத்தில் பெரியதாகத் தான் இருக்கிறது. தொடர்போ அனைவருக்கும் ஐக்கிய நாடுடன் தான். ஏனெனில் அயல்நாட்டின் அஸ்திவாரமே அது (இலண்டன்) தான். பல கிளை நிலையங்கள் உருவாகுகின்றன, மரமும் வளர்ச்சியை அடைந்துக் கொண்டே இருக்கிறது ஆனால் தொடர்போ அஸ்திவாரத்தில் தான் இருக்கிறது. ஒருவேளை அஸ்திவாரத்தோடு தொடர்பு இல்லையென்றால், பிறகு எப்படி வளர்ச்சியோ, விரிவாக்கமோ ஏற்படும்? லண்டனில் விசேஷமான தனித்துவம் நிறைந்த இரத்தினத்தை நிமித்தமாக நியமிக்கப்பட்டு இருக்கிறார், ஏனெனில் அஸ்திவாரம் அல்லவா! எனவே அனைவரின் தொடர், வழிகாட்டுதல் எளிதாகவே கிடைப்பதின் மூலம் முயற்சி மற்றும் சேவை இரண்டுமே எளிதாகி விடுகிறது. பாப்தாதா கூடவே இருக்கிறார். பாப்தாதா இல்லாமல் ஒரு நொடி கூட இருக்கக் கூடாது, அந்தளவு இணைந்து இருங்கள். ஆனாலும் கூட சாகார (ஸ்தூல) ரூபத்தில், சேவையின் சாதனங்களில், சேவையின் செயல் திட்டத்தில் மேலும் சுயமுன்னேற்றத்திற்காகவும் ஏதாவது வழி தேவைப்படுகிறது என்றால் தொடர்பு வைக்கப்பட்டிருக்கிறது. இது கூட நிமித்தமாக ஆவதற்கான சாதனம். இதன் மூலம் எளிதாகவே தீர்வு கிடைத்து விடுகிறது. சிலசமயம் புத்தியை தெளிவாக வைக்காத காரணத்தினால் பாப்தாதாவின் வழிமுறையை, சக்தியை உணர முடியவதில்லை. எனில் அவ்வமயம் மாயாவின் புயல் வருகிறது. அப்படிபட்ட நேரத்திற்காக சாகார நிமித்தத்தின் அவசியம் தேவைபடுகிறது. இவர்களை தாதிகள், தீதிகள் என்று நீங்கள் சொல்கிறீர்கள். இவர்கள் தான் நிமித்தமானவர்கள். இவர்கள் நேரம் வீணாகாது. மற்றபடி தைரியமானவர் என்று பாப்தாதாவிற்கு தெரியும். அங்கிருந்தே உருவாகி மேலும் அங்கேயே சேவைக்கு நிமித்தமாகியிருக்கிறார்கள் என்றால் அறம் (தொண்டு) என்பது வீட்டில் இருந்து தொடங்குகள் என்ற பாடத்தை நல்ல முறையில் உறுதி செய்துள்ளீர்கள், அங்கே இருக்கும் நிமித்தமானவரை வளர்ச்சியடைய செய்வது இது மிகவும் நல்லது. நன்மை செய்யும் உணர்வின் மூலம் முன்னேறிக் கொண்டே இருந்தீர்கள் என்றால், எங்கே திடமான எண்ணங்கள் இருக்கிறதோ, அங்கே வெற்றி தான். எது நடந்தாலும் சேவையில் வெற்றியடைய வேண்டும் -இந்த சிரேஷ்ட எண்ணத்தின் மூலம்

இன்று வரை வெளிப்படையான பலம் கிடைக்கிறது. இப்பொழுது சிரேஷ்ட குடும்பத்தை பார்த்து விசேஷமாக குஷி ஏற்படுகிறது, மேலும் விசேஷமாாக பாண்டவர்கள் (சகோதர்கள்) தான் டீச்சர் ஆகிறார்கள். சக்திகளும் சதா உதவியாளர்களாக இருக்கவே இருக்கிறார்கள். பாண்டவர்கள் மூலம் விசேஷமாக எப்பொழுதுமே விசேஷமான வளர்ச்சியின் வெளிப்படையான பலன் கிடைத்துக் கொண்டேயிருக்கிறது. மேலும் சேவையின் மூலம் கூட அதிகபடியான சேவை நிலையங்களின் வளர்ச்சி, சேவை நிலையத்தின் அழகு சக்திகளின் மூலம் ஏற்படுகிறது. சக்திகளுக்கென்று (மாதர்கள் மற்றும் குமாரிகள்) தனித்துவமான நடிப்பு இருக்கிறது பாண்டவர்களுகென்று (சகோதரர்கள்) தனித்துவமான நடிப்பு இருக்கிறது. எனவே இருவருமே அவசியமானவர்கள் தான். எந்த சென்டரில் சக்திகள் இல்லை, அல்லது பாண்டவர்கள் இல்லையென்றாலும் சக்திசாலியாக இருக்காது. ஆகையால் இருவருமே அவசியமானவர்கள். இப்பொழுது நீங்கள் அனைவரும் விழித்துக் கொண்டீர்கள் என்றால், ஒருவர் மற்றவர்களோடு எளிதாகவே அநேகர் விழித்துக் கொள்வார்கள். முயற்சி மற்றும் நேரமோ தேவைப்படுகிறது, ஆனால் இப்பொழுது நல்ல முறையில் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது. திட எண்ணத்தின் மூலம் வெற்றி கிடைக்கவில்லை என்பதே இல்லை. இந்த நடைமுறையில் நிரூபணத்தை பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஒருவேளை இங்கே இருக்க வேண்டிய அவசியமில்லை என்று சிறிதளவு மனமுடைந்து போனால், தனது சின்னஞ்சிறிய பலவீனமான எண்ணத்தால் சேவையில் கூட வித்தியாசத்தை கொண்டு வந்து விடுகிறது. திடத்தன்மை என்ற நீரினால் விரைவாகவே பலன் ஏற்படுகிறது. திடத்தன்மையின் மூலம் தான் வெற்றியைக் கொண்டு வருகிறது.

பரமாத்மாவின் ஆசிர்வாதங்களை பெற வேண்டுமென்றால் கட்டளைக்கு கீழ்படிந்தவர் ஆகுங்கள் (அவ்யக்த் முரளியிலிருந்து): என்ன பாபா சொல்கிறாரோ, அப்படியே செய்வது, பாபா சொல்கிறார் மேலும் குழந்தைகள் கடைபிடிப்பது -இதற்கு தான் நம்பர் ஒன் கட்டளைக்கு கீழ்படிந்தவர் என்று சொல்வது. பாபாவின் ஒவ்வொரு வழியையும், ஸ்ரீமத்தையும் யதார்த்தமாக புரிந்து கொண்டு கடைபிடிப்பது -இதை கட்டளைக்கு கீழ்படிந்தவர் என்று சொல்கிறார்கள். ஸ்ரீமத்தில் மன்மத் (மனதின் வழியையோ) அல்லது பரமத் (மற்றவர்களின் வழியையோ) எண்ணத்தின் அளவு கூட கலக்கக் கூடாது. பாபாவின் கட்டளை -என்னை

நினைவு செய்யுங்கள். ஒருவேளை இந்த கட்டளையை கடைபிடித்தீர்கள் என்றால், கட்டளைக்கு கீழ்படிந்து நடக்கக் கூடிய குழந்தைக்கு பாபாவின் ஆசீர்வாதங்கள் கிடைக்கிறது, மேலும் அனைத்தும் சகஜமாகி விடும்.

பாப்தாதா அமிர்தவேளையிலிருந்து இரவு தூக்கும் வரை மனம், சொல், செயல் மற்றும் சம்மந்தம் -தொடர்பில் எப்படி நடக்க வேண்டும் மற்றும் இருக்க வேண்டும் -அனைவருக்கும் ஸ்ரீமத் அதாவது கட்டளை கொடுக்கபட்டிருக்கிறது. ஒவ்வொரு காரியத்திலும் மனதில் நிலை எப்படியிருக்கிறது, அதற்கு கூட வழிமுறை அல்லது கட்டளை கிடைத்திருக்கிறது. அந்த கட்டளைப்படி நடந்துக் கொண்டேயிருங்கள். இது தான் பரமாத்மாவின் ஆசீர்வாதக்களை அடைவதற்கான ஆதாரம். இது போன்ற ஆசீர்வாதங்களின் காரணத்தினால் கட்டளைக்கு கீழ்படிந்துள்ள குழந்தைகள் சதா டபுள் லயிட் (இரட்டை ஒளி) பறக்கும் கலையின் அனுபவம் செய்கிறார்கள். பாப்தாதாவின் கட்டளை -எந்த ஆத்மாவிற்கும் துக்கத்தையும் தரக்கூடாது, துக்கத்தையும் எடுக்கக் கூடாது ஆனால் பல குழந்தைகள் துக்கத்தை தருவதில்லை, எடுக்கிறார்கள். இது கூட வீணான எண்ணங்கள் வருவதற்கான காரணமாகி விடுகிறது. ஏதாவது வீணான விஷயத்தைக் கேட்டு துக்கம் அடைகிறார்கள், சின்ன சின்ன கட்டளைகளை புறக்கணிப்பதால் கூட மனம் சுமையாகி விடுகிறது, மேலும் சுமை இருக்கும் காரணத்தினால் உயர்ந்த நிலையை அடைய பறக்க முடிவதில்லை.

பாப்தாதாவின் கட்டளை கிடைத்திருக்கிறது -குழந்தைகளே வீணானவற்றை யோசிக்காதீர்கள், வீணானவற்றை கேட்காதீர்கள், வீணானவற்றின் காரியத்தில் சமயத்தை வீணாக்காதீர்கள். நீங்கள் தீயவற்றிலிருந்து விடுபட்டு விட்டீர்கள். இப்பொழுது அப்படிபட்ட கட்டளைக்கு கீழ்படிந்த குணத்தை ஒவியமாக (சித்திரமாக) மாற்றினீர்கள் என்றால் பரமாத்மாவின் ஆசீர்வாதங்களின் அதிகாரி ஆகி விடலாம். குழந்தைகள் அமிர்தவேளையிலிருந்து விதிப்படி சக்திசாலி நினைவில் இருங்கள், ஒவ்வொரு காரியத்தையும் கர்மயோகி ஆகி, நிமித்த உணர்வோடு, பணிவாக இருந்து செய்யுங்கள். அவ்வாறு அனைவருக்கும் பார்வை -உள்ளுணர்விற்கான கட்டளை கிடைத்திருக்கிறது. ஒருவேளை அந்த கட்டளைகளை விதிப்படி பின்பற்றினால் எப்பொழுதுமே அதீந்திரிய சுகத்தின் மற்றும் குஷி நிறைந்தவர் அமைதியான மனநிலையை அனுபவம் செய்து கொண்டேயிருப்பீர்கள்.

குழந்தைகள் உடல், மனம், பொருள் மற்றும் வாழ்க்கை -இவை அனைத்தையும் பாபாவின் அடமான பொருள் என்று புரிந்து கொள்ளுங்கள். பாஸிட்வ்வான (நேர்மறையாக) எண்ணங்களை எண்ணுங்கள், நேர்மறையாக யோசியுங்கள், நல்ல உணர்வின் எண்ணங்களை எண்ணுங்கள். உடல் உணர்வின் நான் மற்றும் எனது என்பதிலிருந்து விலகியிருங்கள். இந்த இரண்டும் மாயாவின் நுழைவாயில். எண்ணம், சமயம் மற்றும் சுவாசம் தான் பிராமண வாழ்க்கையின் விலைமதிப்புடைய பொக்கிஷமாகும், இதை வீணாக இழாக்காதீர்கள். சேமியுங்கள். சக்திசாலியாக இருப்பதற்கான ஆதாரம் -சதா மற்றும் இயல்பாகவே கட்டளைக்கு கீழ்படிந்தவர் ஆகுங்கள். பாப்தாதாவின் முக்கிய முதன்மையான கட்டளை -தூய்மையாகுங்கள், காமத்தை வென்றவர் ஆகுங்கள். இந்த கட்டளையை பின்பற்றுவதில் பெரும்பான்மையோர் பாஸ் (தேர்ச்சி பெற்றுவிடுகிறார்கள் ஆனால் அதற்கான (காமம்) அடுத்த சகோதரன் கோபம் -அதில் அவ்வப்பொழுது பாதிபேர் (50 சதவீதம்) தோல்வி அடைந்து விடுகிறார்கள். பலர் சொல்கிறார்கள் கோபப்படவில்லை ஆனால் கொஞ்சம் வெறுப்பையோ காட்ட வேண்டியிருக் கிறது ஆனால் இது கூட கட்டளையை அவமதிப்பதாகும், இது குஷியின் அனுபவத்தை செய்யவிடுவதில்லை.

எந்த குழந்தை அமிர்தவேளையிலிருந்து இரவு வரை முழு நாளின் தினசரி நடவடிக்கைகளில் ஒவ்வொரு காரியத்திலும் கட்டளைப்படி நடக்கிறார்களோ, அவர்கள் ஒருபொழுதும் உழைப்பில் கடினத்தன்மையை அனுபவம் செய்வதில்லை. அவர்களுக்கு கட்டளைக்கு கீழ்படிந்து நடப்பதன் விசேஷமான பலனாக பாபாவின் ஆசீர்வாதத்தின் அனுபவம் ஆகிறது. அவர்களின் ஒவ்வொரு காரியமும் பலனளிக்கக் கூடியதாக இருக்கிறது. யார் கட்டளைக்கு கீழ்படிந்து நடக்கும் குழந்தைகளாக இருக்கிறார்களோ, அவர்கள் சதா திருப்தியை அனுபவம் செய்கிறார்கள். அவர்களுக்கு மூன்று விதமான திருப்தி இயல்பாகவே மேலும் சதா அனுபவமாகிறது. 1. அவர்கள் தன்மீதே திருப்தியாக இருக்கிறார்கள், 2. விதிப்படி காரியம் செய்யும் காரணத்தினால் வெற்றி என்ற பலனை அடைவதில் கூட திருப்தியாக இருக்கிறார்கள். 3. சம்மந்தம் மற்றும் தொடர்பில் கூட அவர்கள் மூலம் அனைவரும் திருப்தியாக இருக்கிறார்கள். கட்டளைக்கு கீழ்படிந்து நடக்கும் குழந்தைகளின் ஒவ்வொரு காரியமும் கட்டளைப்படி இருக்கும்

காரணத்தினால் சிரேஷ்டமானதாக இருக்கிறது, ஆகையால் எந்தவொரு செயலும் புத்தி அல்லது மனதின் தடுமாற்றத்தை, நிலையற்றதாக உணர்வதில்லை,, சரியா அல்லது தவறா என்ற எண்ணம் கூட வருவதில்லை. அவர்கள் கட்டளைப்படி நடக்கும் காரணத்தினால் சதா இலேசாக இருக்கிறார்கள். ஏனெனில் அவர்கள் கர்மபந்தனத்திற்கு வசமாகி எந்த காரியமும் செய்வதில்லை. ஒவ்வொரு காரியமும் கட்டளைபடி செய்யும் காரணத்தினால் பரமாத்மாவின் ஆசீர்வாதத்தை அடைவதற்கான பலன் சொரூபம் அவர்கள் எப்பொழுதுமே ஆத்மீக சக்தியின், அதீந்திரிய சுகத்தின் மேலும் நிறைந்த தன்மையை அனுபவம் செய்கிறார்கள். நல்லது.

**வரதானம்: உண்மையான துணைவரின் துணையை பெறக்கூடிய அனைவரிடமும் விடுபட்ட, அன்பான பற்றற்றவர் ஆகுக!**

தினமும் அமிர்தவேளையில் அனைத்து சம்மந்தங்களின் சுகத்தை பாப்தாதாவிடமிருந்து பெற்று மற்றவர்களுக்கும் தானம் கொடுங்கள். அனைத்து சுகத்தின் அதிகாரியாகி மற்றவர்களையும் ஆக்குங்கள். எப்படிப்பட்ட காரியமாக இருந்தாலும் கூட, அதில் சாகார துணையின் நினைவு வரக்கூடாது, முதலின் பாபாவின் நினைவு வர வேண்டும், ஏனெனில் உண்மையான நண்பன் பாபா தான். உண்மையான துணையின் துணையை (அடைந்து) பெற்றுக் கொண்டால் எளிதாகவே அனைத்திலிருந்தும் விடுபட்டவர் மற்றும் அன்பானவர் ஆகி விடுங்கள். யார் அனைத்து சம்மந்தத்தின் மூலம் ஒவ்வொரு காரியத்திலும் ஒரு பாபாவை நினைவு செய்கிறார்களோ அவர்கள் சகஜமாகவே பற்றற்றவர் ஆகி விடுவார்கள். அவர்களுக்கு எந்தவிதத்திலும் பற்றுதல் அதாவது தலைவணங்குவது இருக்காது. ஆகையால் மாயாவிடமிருந்து தோல்வி அடைவதில்லை.

**சுலோகன்: மாயாவை பார்ப்பது மற்றும் தெரிந்து கொள்வதற்காக திரிகாலதரிசி மற்றும் திரிநேத்திரி ஆகுங்கள் அப்பொழுது தான் வெற்றியடைவீர்கள்!**

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

# 13.03.1986 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சுலபமான மாற்றத்திற்கு ஆதாரம் -அனுபவத்தின் அதிகாரம்!

பாப்தாதா தன்னுடைய அனைத்து ஆதாரமூர்த்தி மற்றும் உத்தாரமூர்த்தி (அனைவரையும் முன்னேற்றுபவர்) குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். ஒவ்வொரு குழந்தையும் இன்றைய உலகத்தை உயர்வானதாக, நிறைந்ததாக ஆக்குவதற்கு ஆதாரமூர்த்தி ஆவார்கள். இன்று உலகத்தினர் தங்களுடைய ஆதாரமூர்த்தியான, உயர்வான ஆத்மாக்களை விதவிதமான ரூபத்தில், விதவிதமான விதிமுறைகளால் அழைத்துக் கொண்டு இருக் கின்றார்கள், நினைவு செய்து கொண்டு இருக்கின்றார்கள். எனவே, அப்படிப்பட்ட அனைத்து துக்கத்திலிருக்கும், அசாந்தியாக இருக்கும் ஆத்மாக்களுக்கு ஆதரவு கொடுக்கக்கூடிய, ஒரு துளி கொடுக்கக்கூடிய, சுகம், சாந்திக்கான வழி கூறக்கூடிய, ஞானம் என்ற கண் இழந்தவர்களுக்கு தெய்வீகக் கண் கொடுக்கக்கூடிய, அலைந்து கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கு புகலிடம் கொடுக்கக்கூடிய, அபிராப்தியான ஆத்மாக்களுக்கு பிராப்தியின் அனுபவம் செய்விக்கக்கூடிய, முன்னேற்றக்கூடிய நீங்கள் சிரேஷ்ட ஆத்மாக்கள் ஆவீர்கள். உலகத்தில் நாலா புறமும் ஏதாவது ஏதாவது விதமான குழப்பம் இருக்கின்றது. சில இடங்களில் செல்வத்தின் காரணத்தினால் குழப்பம் இருக்கின்றது, சில இடங்களில் மனதினுடைய அனேக டென்'னுடைய (மன இறுக்கம்) குழப்பம் இருக்கின்றது, சில இடங்களில் தன்னுடைய வாழ்க்கையினால் அதிருப்தியாக இருக்கும் காரணத்தினால் குழப்பம் இருக்கின்றது, சில இடங்களில் இயற்கையின் தமோபிரதான வாயுமண்டலத்தின் காரணமாக குழப்பம் இருக்கின்றது, நாலாபுறமும் குழப்பமான உலகமாக இருக்கின்றது. அப்படிப்பட்ட நேரத்தில் உலகத்தின் மூலையில் நீங்கள் ஆடாத, அசையாத ஆத்மாக்கள் இருக்கின்றீர்கள். உலகத்தில் பயத்திற்கு வசமாகி இருக்கின்றார்கள், மேலும், நீங்கள் பயமற்றவராகி சதா குஷியில் ஆடிக் கொண்டும், பாடிக் கொண்டும் இருக்கின்றீர்கள். உலகத்தில் அல்பகாலத்திற்காக குஷிக்கான சாதனமான

ஆட்டம், பாட்டு மற்றும் அனேக சாதனங்களைத் தன்னுடையதாக ஆக்குகின்றார்கள். எனவே, அந்த அல்பகால சாதனம் மேலும், கவலையின் சிதைக்கு அழைத்துச் சென்று கொண்டிருக்கின்றது. அப்பேற்பட்ட விஷ்வத்தின் ஆத்மாக்களுக்கு இப்பொழுது உயர்வான, அழிவற்ற பிராப்திகளின் அனுபவத்திற்கான ஆதாரம் தேவை. அனைத்து ஆதாரங்களையும் பார்த்தாகி விட்டது, அனைத்தையும் அனுபவம் செய்தாகி விட்டது, மேலும், இதைவிட வேறு ஏதேனும் வேண்டும் என்று அனைவரின் மனதிலும் இந்த சப்தமானது விரும்பாமலேயே வெளிப்படுகின்றது. இந்த சாதனம், இந்த விதிகள் வெற்றியை அனுபவம் செய்விக்கக்கூடியது கிடையாது. கொஞ்சம் புதுமை வேண்டும், வேறு ஏதேனும் வேண்டும். இது அனைவரின் மனதின் சப்தமாக இருக்கின்றது. என்னவெல்லாம் அல்பகால ஆதரவாக ஆகி இருக்கின்றதோ, அவை அனைத்தும் துரும்புக்கு சமமான ஆதரவாகும். உண்மையான ஆதரவைத் தேடிக் கொண்டு இருக்கின்றார்கள், அல்பகால ஆதாரத்தினால், அல்பகால பிராப்திகளினால், விதிமுறைகளினால் இப்பொழுது களைத்துப் போய்விட்டார்கள். இப்பொழுது அப்படிப்பட்ட ஆத்மாக்களுக்கு யதார்த்தமான ஆதரவு, உண்மையான ஆதரவு, அழிவற்ற ஆதரவைக் கூறக்கூடியவர்கள் யார்? நீங்கள் அனைவரும் தானே!

உலகத்திற்கு மத்தியில் நீங்கள் அனைவரும் சொர்ப்பமானவர்கள், மிகவும் குறைவானவர்கள், ஆனால், கல்பத்திற்கு முந்தைய நினைவுச்சின்னத்தில் கூட அக்ஷௌணி சேனைக்கு எதிரில் 5-பாண்டவர்களைத்தான் காண்பித்திருக்கின்றார்கள். அனைத்தைக்காட்டிலும் பெரியதிலும் பெரிய அதிகாரம் உங்களிடம் உள்ளது. அறிவியலின் அதிகாரம், சாஸ்திரங்களின் அதிகாரம், ராஜ்யசக்தியின் அதிகாரம், தர்மசக்தியின் அதிகாரம், அனேக அதிகாரம் உடையவர்கள் அவரவருடைய அதிகாரத்தின் அனுசாரமாக உலகத்தை மாற்றம் செய்வதற்கு முயற்சி செய்து விட்டனர். எத்தனை முயற்சி செய்திருக்கின்றார்கள், ஆனால், உங்கள் அனைவரிடம் எப்படிப்பட்ட அதிகாரம் உள்ளது? அனைத்தைக்காட்டிலும் பெரிய பரமாத்ம அனுபவத்தின் அதிகாரம் இருக்கின்றது. அனுபவத்தின் அதிகாரத்தினால் சிரேஷ்டமாக மற்றும் சகஜமாக யாரை வேண்டுமானாலும் மாற்ற முடியும். எனவே, உங்கள் அனைவரிடமும் விசேஷமாக அனுபவத்தின் அதிகாரம் உள்ளது. ஆகையினால், எளிமையான வழி, யதார்த்தமான வழி ஒன்று தான் உள்ளது என்று பெருமையோடு, நம்பிக்கையோடு, போதையோடு,

உறுதியான பாவனையோடு கூறுகின்றீர்கள் மற்றும் கூறுவீர்கள். ஒன்றின் மூலமாகத்தான் பிராப்தி கிடைக்கின்றது. மேலும், அனைவரையும் ஒன்றாக ஆக்குகின்றது. இந்த செய்தியை அனைவருக்கும் கூறுகின்றீர்கள் அல்லவா. எனவே, பாப்தாதா இன்று ஆதாரமூர்த்தி, விஷ்வ உத்தாரமூர்த்தி குழந்தைகளைப் பார்த்துக் கொண்டு இருக் கின்றார்கள். பாருங்கள், பாப்தாதா கூடவே நிமித்தமாக யார் ஆகியிருக்கின்றார்கள்? உலகத்திற்கே ஆதாரமாக இருக்கின்றீர்கள், ஆனால், ஆகியிருப்பது யார்? சாதாரணமானவர்கள். யார் உலக மக்களின் பார்வையில் இருக்கின்றார்களோ, அவர்கள் பாபாவின் பார்வையில் இல்லை மேலும், யார் பாபாவின் பார்வையில் இருக்கின்றார்களோ, அவர்கள் உலகத்திலுள்ளவர்களின் பார்வையில் கிடையாது. உங்களைப் பார்த்து முதலில் இவர்களா என்று புன்னகைப்பார்கள் ஆனால், உலகத்திலுள்ளவர்கள் செய்வதை பாபா செய்வதில்லை. அவர்களுக்கு பெயர், புகழ் வேண்டும், ஆனால் தந்தையோ, யாருடைய பெயர் அடையாளம் அழிந்து விட்டதோ, அவர்களுடைய பெயரை புகழடையச் செய்கின்றார். அசம்பவத்தை சம்பவம் ஆக்குவது, சாதாரணமானவர்களை மஹான் ஆக்குவது, பலமற்றவர்களை மஹான் பலவான் ஆக்குவது, உலகத்தின் கணக்குப்படி யார் படிக்காதவர்களோ, அவர்களை ஞானம் நிறைந்தவர் ஆக்குவது -இது தான் தந்தையினுடைய நடிப்பாகும். எனவே, பாப்தாதா குழந்தைகளின் சபையைப் பார்த்து, அனைவரைக் காட்டிலும் உயர்வான பாக்கியத்தை பிராப்தியாக அடையக்கூடிய இந்த தேடிக்கண்டெடுக்கப்பட்ட குழந்தைகள் நிமித்தம் ஆகி இருக்கின்றார்கள் என்று புன்முறுவலும் கூட செய்கின்றார். இப்பொழுது உலகத்திலுள்ளவர்களின் பார்வை கொஞ்சம் கொஞ்சமாக எல்லாப் பக்கங்களிலிருந்தும் விடுபட்டு ஒன்றின் பக்கம் வந்து கொண்டிருக்கின்றது. எதை நாம் செய்ய முடியவில்லையோ, அதை தந்தை மறைமுகமான ரூபத்தில் செய்வித்துக் கொண்டிருக்கின்றார் என்பதை இப்பொழுது புரிந்திருக்கின்றீர்கள். இப்பொழுது கும்ப மேளாவில் என்ன பார்த்தீர்கள்? இதையே பார்த்தீர்கள் அல்லவா. எப்படி அனைவரும் அன்பான பார்வையோடு பார்க்கின்றார்கள். இது கொஞ்சம் கொஞ்சமாக பிரத்யட்சமாகியே தீர வேண்டும். தர்மத் தலைவர், இராஜ்யத் தலைவர், மற்றும் விஞ்ஞானி ஆகி ய இந்த மூன்று விசேஷ அதிகாரிகள் உள்ளனர். இப்பொழுது மூன்று பேருமே சாதாரண ரூபத்தில் பரமாத்ம பொலிவைப் பார்ப்பதற்கான சிரேஷ்ட ஆசையோடு சமீபத்தில் வந்து கொண்டிருக்கின்றார்கள். இப்பொழுது கூட திரைக்குள் இருந்து பார்த்துக்

கொண்டிருக்கின்றார்கள், திரையை விலக்கவில்லை. திரைக்குள் இருந்து பார்ப்பதற்கு காரணம் இப்பொழுது மனக் குழப்பத்தில் இருக்கின்றனர். மனக் குழப்பம் திரையாக இருக்கின்றது. இது தானா அல்லது வேறு ஏதேனும் உள்ளதா என்ற குழப்பம் உள்ளது. ஆனாலும், பார்வையானது செல்கிறது. இப்பொழுது திரை கூட விலகி விடும். அனேகவிதமான திரைகள் இருக்கின்றன. தலைமைப் பதவி, சிம்மாசனம் அல்லது நாற்காலியின் திரை கூட மிகப் பெரியதாக இருக்கின்றது. இந்தத்திரையை விலக்குவதற்கு சிறிது காலம் ஆகும் ஆனால், கண்கள் திறந்து விட்டன அல்லவா. கும்பகர்ணர்கள் இப்பொழுது கொஞ்சம் விழித்திருக்கின்றார்கள்.

பாப்தாதா விஷ்வத்திலுள்ள அனைத்து ஆத்மாக்களை அதாவது குழந்தைகளை தந்தையினுடைய ஆஸ்தியைப் பிராப்தம் செய்விக்கும் அதிகாரியாக அவசியம் ஆக்குவார். எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும் சரி ஆனால், அவர்கள் குழந்தைகளே. குழந்தைகளுக்கு முக்தி மற்றும் ஜீவன்முக்தி ஆகி ய இரண்டு ஆஸ்திகள் உள்ளன. ஆஸ்தி கொடுப்பதற்காகத்தான் தந்தை வந்திருக்கின்றார். அறியாமல் இருக்கின்றார்கள் அல்லவா. அவர்களுடைய குற்றமில்லை, ஆகவே, உங்கள் அனைவருக்கும் இரக்கம் வருகின்றது அல்லவா! இரக்கமும் வருகின்றது, எப்படியாவது ஆஸ்தியின் அதிகாரத்தை அனைத்து ஆத்மாக்களும் அடைந்து விட வேண்டும் என்ற ஊக்கமும் வருகின்றது. நல்லது. இன்று, கரீபியன் நாட்டினுடைய முறையாகும். அனைவரும் பாப்தாதாவிற்கு மிகவும் செல்லமானவர்கள். ஒவ்வொரு இடத்தினுடைய விசேஷத்தன்மை பாப்தாதாவிற்கு முன்னால் சதா பிரத்யட்சமாக இருக்கின்றது. பாப்தாதாவிடம் ஒவ்வொரு குழந்தையின் முழுமையான கணக்கு வழக்கு இருக்கின்றது ஆனால், பாப்தாதாவிற்கு அனைத்து குழந்தைகளைப் பார்த்து குஷி இருக்கின்றது. எந்த விசயத்தில்? அனைத்துக் குழந்தைகளும் அவரவர் சக்தியின் அனுசாரம் சேவையின் ஊக்கத்தோடு சதா இருக்கின்றார்கள். சேவை, பிராமண வாழ்க்கையின் விசேஷ தொழில் ஆகி விட்டது. சேவை இல்லையென்றால் இந்த பிராமண வாழ்க்கை காலியாக (வெற்றிடமாக) தோன்றும். சேவை இல்லையென்றால் ஃப்ரியாக (ஓய்வாக) இருப்பதாகும். சேவையில் சுறுசுறுப்பாக இருக்கும் ஆர்வத்தைப் பார்த்து பாப்தாதா விசேஷமாக குஷி அடைகின்றார்கள். கரீபியன் குழந்தைகளுடைய விசேஷத்தன்மை என்ன? சதா அருகாமையில் இருக்கக்கூடியவர்கள். பாப்தாதா ஸ்தூலத்தைப் பார்க்கவில்லை,

சரீரத்தினால் எவ்வளவு தூரமாக இருந்தாலும் மனதினால் அருகாமையில் இருக்கின்றீர்கள் அல்லவா. எந்தளவு சரீரத்தினால் தூரமாக இருக்கின்றார்களோ, அந்தளவு விசேஷமாக தந்தையின் துணையின் அனுபவம் செய்வதற்கான லிப்ட் கிடைக்கின்றது. ஏனென்றால், நாலாபுறமும் இருக்கும் குழந்தைகள் பக்கம் தந்தையின் பார்வை இருக்கின்றது. கண்களில் கலந்து இருக்கின்றார்கள். கண்களில் கலந்து இருப்பவர்கள் என்னவாக இருப்பார்கள்? தூரத்தில் இருப்பார்களா? அல்லது அருகாமையில் இருப்பார்களா? அனைவரும் நெருக்கமான இரத்தினங்கள் ஆவீர்கள். யாரும் தூரமாக இல்லை. அருகாமையிலும் மேலும், அன்பானவராகவும் இருக்கின்றீர்கள். ஒருவேளை, அருகாமையில் இல்லையென்றால் ஊக்கம், உற்சாகத்தில் வர முடியாது. சதா தந்தையின் துணையானது சக்திசாலி ஆக்கி முன்னேற்றிக் கொண்டே இருக்கின்றது.

எவ்வளவு தைரியம் வைத்து சேவையில் விருத்தியைப் பிராப்தமாக அடைந்து கொண்டிருக்கின்றீர்கள் என்று உங்கள் அனைவரையும் பார்த்து அனைவரும் குஷி அடைந்து கொண்டிருக்கின்றார்கள். அனைத்தைக் காட்டிலும் பெரியதிலும் பெரிய மாலையை நாம் தயார் செய்ய வேண்டும் என்று அனைவருக்கும் ஒரே சங்கல்பம் உள்ளதை பாப்தாதா தெரிந்திருக்கின்றார்கள். மேலும், மாலையின் மணிகள், யாரெல்லாம், எங்கெல்லாம் சிதறிக் கிடக்கின்றார்களோ, அந்த மணிகளை ஒன்று சேர்த்து மாலையாக்கி தந்தைக்கு எதிரில் அழைத்து வருகின்றீர்கள். இப்பொழுது இந்த மலர்ச்செண்டு அல்லது மாலையை தந்தைக்கு முன்னால் அழைத்துச் செல்ல வேண்டும் என்ற இந்த ஆர்வம் முழு ஆண்டும் இருக்கின்றது. ஒரு வருடம் முழுவதும் தயார் செய்து கொண்டே இருக்கின்றீர்கள். இந்த வருடம் பாப்தாதா அனைத்து வெளிநாட்டு சேவைக் கேந்திரங்களினுடைய வளர்ச்சியின் ரிசல்ட் (பலன்) நன்றாக இருப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். ஒவ்வொருவரும் ஏதாவது ஏதாவது, அது சிறிய மலர்ச்செண்டோ அல்லது பெரிய மலர்ச்செண்டோ, ஆனால், பிரத்யட்ச பலன் ரூபத்தில் கொண்டு வந்திருக்கின்றார்கள். எனவே, பாப்தாதாவும் தங்களுடைய கல்பத்திற்கு முந்தைய சிநேகி குழந்தைகளைப் பார்த்து குஷி அடைகின்றார்கள். அன்பாக உழைத்தீர்கள். அன்பான உழைப்பு, உழைப்பாக தெரியாது. ஒவ்வொரு பக்கத்திலிருந்தும் நல்ல குழு வந்துள்ளது. சதா சேவையில் களைப்பற்றவராகி முன்னேறிக் கொண்டிருக்கின்றீர்கள் என்பதுவே பாப்தாதாவிற்கு அனைத்தைக் காட்டிலும் நல்ல விசயமாகத்

தெரிகின்றது. ஒருபொழுதும் மனச்சோர்வு அடையாமல் இருப்பதுவே சேவையில் வெற்றி அடைவதற்கான விசேஷத்தன்மை ஆகும். இன்று குறைவாக இருக்கின்றோம், நாளை அதிகமாகி விடுவோம் என்ற இந்த நம்பிக்கை இருக்கின்றது. எனவே, எங்கெல்லாம் தந்தையின் அறிமுகம் கிடைத்திருக்கின்றதோ, தந்தையினுடைய குழந்தைகள் நிமித்தமாகி இருக்கின்றார்களோ, அங்கெல்லாம் அவசியம் தந்தையினுடைய குழந்தைகள் மறைந்து இருக்கின்றார்கள். அவர்கள் நேரத்தின் அனுசாரம் தன்னுடைய உரிமையை அடைவதற்காக வந்தடைந்து கொண்டிருக்கின்றார்கள், மேலும், வந்தடைந்து கொண்டேயிருப்பார்கள். ஆகவே, அனைவரும் குஷியில் நடனம் ஆடக்கூடியவர்கள். சதா குஷியாக இருக்கக்கூடியவர்கள். தந்தை அழிவற்றவர், குழந்தைகள் அழிவற்றவர்கள், எனில், பிராப்தியும் கூட அழிவற்றதாக இருக்கும். குஷி கூட அழிவற்றதாக இருக்கின்றது. எனவே, நீங்கள் சதா குஷியாக இருப்பவர்கள், எப்பொழுதும் மிக நல்லதிலும் நல்லவர்களாக இருப்பவர்கள் ஆவீர்கள். வீணானது அழிந்து விட்டதென்றால் மீதம் நல்லதிலும் நல்லது தான் மீதம் இருக்கும். பாபாவினுடையவர் ஆகுவது என்றால் சதா காலத்திற்காக அழிவற்ற பொக்கிஷத்திற்கு அதிகாரி ஆகுவது என்று அர்த்தம். ஆகையினால், அதிகாரி வாழ்க்கை சிறப்பான வாழ்க்கையாக இருக்கின்றதல்லவா.

கரீபிய நாட்டில் சேவைக்கு அஸ்திவாரமாக விசேஷ விசேஷமான ஆத்மாக்கள் இருந்தார்கள். அரசாங்க சேவைக்கான அஸ்திவாரம் கயானாவில் தான் போடப்பட்டது அல்லவா. மேலும், அரசாங்கம் வரைக்கும் இராஜயோகத்தின் விசேஷத்தன்மையின் சப்தத்தைப் பரப்புவது என்பது கூட விசேஷத்தன்மை ஆகும். அரசாங்கம் கூட மூன்று நிமிடங்கள் அமைதியாக இருப்பதற்கான முயற்சி செய்து கொண்டிருந்தது அல்லவா. அரசாங்கத்தை சமீபத்தில் கொண்டு வருவதற்கான வாய்ப்பு இங்கிருந்து தான் ஆரம்பம் ஆனது, மேலும், ரிசல்ட் கூட நன்றாக வெளிப்பட்டிருக்கின்றது மற்றும் இப்பொழுது கூட வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றது. கரீபியன் குழந்தைகள் சேவையில் விசேஷமாக வி.ஐ.பி.-க்களையும் (முக்கியஸ்தர்கள்) தயார் செய்திருக்கின்றீர்கள். அந்த ஒருவர் மூலம் அநேகருடைய சேவை நடந்துக் கொண்டிருக்கின்றது. இது கூட விசேஷத்தன்மை ஆகும் அல்லவா. அழைப்பு கூட விதிப்பூர்வமாக வி.ஐ.பி. ரூபத்தில் கிடைத்திருக்கின்றது, இதற்கு முதலில் நிமித்தமாக கரீபியன் தான் ஆகி யுள்ளது. இன்று நாலாபுறமும் முன்னுதாரணம் ஆகி

அனேகருக்கு ஊக்கத்தின் தூண்டுதல் கொடுக்கும் சேவையில் ஈடுபட்டுள்ளீர்கள். இதன் பலன் கூட அனைவருக்கும் கிடைக்கும் அல்லவா. இப்பொழுது கூட அரசாங்கத்தின் தொடர்பில் இருக்கின்றார்கள். இது கூட சமீபமான தொடர்பில் வருவதற்கான ஒரு விதியாகும். இன்னும் கொஞ்சம் ஞானயுக்த்தாகி தொடர்பில் வந்து கொண்டியிருந்தாலும் விடுபட்டு இருக்கும் தன்மையினுடைய சேவையை அனுபவம் செய்விக்க முடியும். எந்த ஒரு கூட்டத்திலும் எந்த நேரத்திலும் சேவைக்கு நிமித்தம் ஆகலாம், அது லௌகீக விசயங்களானாலும் சரி, ஆனால், லௌகீக விசயங்களில் கூட அப்படிப்பட்ட தன்மையுடன் வார்த்தைகளைப் பேச வேண்டும், அதன்மூலம் விடுபட்ட நிலையின் அனுபவமும் ஏற்பட வேண்டும் மற்றும் அன்பான நிலையின் அனுபவமும் ஏற்பட வேண்டும். எனவே, அனைவரின் கூடவே இருந்தாலும் தனது விடுபட்ட மற்றும் அன்பான தன்மையை காண்பிக்க முடிவதற்கான ஒரு வாய்ப்பாக இது இருக்கின்றது. எனவே, இந்த விதியை இன்னும் கொஞ்சம் கவனம் கொடுத்து சேவை யினுடைய சாதனத்தை சிரேஷ்டமானதாக ஆக்க முடியும். இது கூட கயானாவைச் சேர்ந்தவர்களுக்கு வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. ஆரம்பத்திலிருந்தே சேவையினுடைய வாய்ப்பிற்கான லாட்டரி (பரிசுச் சீட்டு) கிடைத்து உள்ளது. அனைத்து இடத்தினுடைய வளர்ச்சி நன்றாக இருக்கின்றது. இப்பொழுது இன்னும் ஒரு விசேஷத்தன்மையை கொண்டு வாருங்கள் -அங்கு புகழ் வாய்ந்த பண்டிதர்கள் யார் இருக்கின்றார்களோ, அவர்களிலிருந்து சிலரைத் தயார் ஆக்குங்கள். ட்ரினிடாடு, கயானாவில் பண்டிதர்கள் நிறைய இருக்கின்றார்கள். அவர்கள் பிறகு நெருக்கமானவர்கள் ஆகி விட்டனர். பாரதத்தின் தத்துவங்களை ஏற்றுக் கொள்ளக்கூடியவர்களாக இருக்கின்றார்கள் அல்லவா. எனவே, இப்பொழுது பண்டிதர்களின் குழுவைத் தயார் செய்யுங்கள். எவ்வாறு இப்பொழுது ஹரித்துவாரில் சாதுக்களின் குழு தயார் ஆகி க் கொண்டு இருக்கின்றதோ, அவ்வாறு இங்கிருந்து பண்டிதர்களின் குழுவைத் தயார் செய்யுங்கள். அன்பினால் அவர்களை தன்னுடையவராக ஆக்க முடியும். முதலில் அன்பினால் அவர்களை சமீபத்தில் கொண்டு வாருங்கள். ஹரித்துவாரில் கூட அன்பினுடைய பலன் தான் கிடைத்துள்ளது. சினேகம் மதுபன் வரை வரவழைத்து விட்டது. ஆகவே, மதுபன் வரை வந்து விட்டார்கள் என்றால் ஞானம் வரைக்கும் வந்து விடுவார்கள். எங்கே செல்வார்கள்? எனவே, இப்பொழுது இதை செய்து காண்பியுங்கள். நல்லது.

ஐரோப்பியர்கள் என்ன செய்யப் போகின்றீர்கள்? எண்ணிக்கையினால் சிறியது என்று சொல்லிவிட முடியாது. எண்ணிக்கை என்னவாக இருந்தாலும், தரம் நன்றாக இருக்கின்றது. எனவே, முதல் எண்ணில் உள்ளீர்கள். யார் எதைக் கொண்டு வரவில்லையோ, அதை நீங்கள் கொண்டு வர முடியும். ஒன்றும் பெரிய விசயம் அல்ல, தைரியம் உள்ள குழந்தைகளுக்கு தந்தையின் உதவி கிடைக்கும். குழந்தைகளுக்கு தைரியம் இருக்கிறது என்றால் முழு பரிவாரத்தினுடைய, பாப்தாதாவினுடைய உதவி இருக்கின்றது, எனவே, ஒன்றும் பெரிய விசயம் அல்ல. என்ன விரும்புகின்றீர்களோ, அதை செய்ய முடியும். இறுதியில் அனைவரும் வர வேண்டியதோ ஒரே ஒரு புகலிடத்திற்குத் தான். சிலர் இப்பொழுது வருவார்கள், சிலர் கொஞ்சம் தாமதமாக வருவார்கள். வரவே செய்வார்கள். எவ்வளவு தான் குஷியாக இருந்தாலும் பிறகும் ஏதாவது ஏதாவது பிராப்தியின் இச்சை இருக்கின்ற தல்லவா. சூழ்நிலை நன்றாக இருக்கின்றது, ஆகையால், குழப்பம் இல்லை. ஆனாலும் கூட எதுவரை ஞானம் இல்லையோ, அதுவரை அழியக்கூடிய இச்சைகள் ஒருபோதும் பூர்த்தி ஆகாது. ஒரு ஆசைக்குப் பின்னால் மற்றொரு ஆசை உருவாகிக் கொண்டிருக்கிறது. எனவே, ஆசையானது சதா திருப்தியை அனுபவம் செய்யவிடாது. ஆகவே, யாருக்கு துக்கம் இல்லையோ, அவர்களுக்கு ஈஸ்வரிய சுயநலமற்ற அன்பு என்பது என்ன, அன்பான வாழ்க்கை என்றால் என்ன? ஆத்ம சினேகம், பரமாத்ம சினேகம் என்பதன் அனுபவம் இருக்காது. எவ்வளவு தான் அன்பு இருந்தாலும் சரி, ஆனால், சுயநலமற்ற அன்பு எங்கேயும் இல்லை. உண்மையான அன்பு இல்லவே இல்லை. ஆகவே, உண்மையான உள்ளத்தின், அன்பான பரிவாரத்தின் அன்பு அனைவருக்கும் தேவைப்படுகிறது. அப்படிப்பட்ட பரிவாரம் எங்கே கிடைக்க முடியும்? எந்த விசயத்தினுடைய அபிராப்தியின் அனுபவம் இருக்கிறதோ, அந்த பிராப்தியின் மீது கவர்ச்சி ஏற்படும்படி அவர்களுக்கு புரிய வையுங்கள். நல்லது.

அனைவரும் விசேஷ ஆத்மாக்கள் ஆவீர்கள். ஒருவேளை விசேஷத்தன்மை இல்லையென்றால் பிராமண ஆத்மா ஆகி இருக்க முடியாது. விசேஷத்தன்மை தான் பிராமண வாழ்க்கையைக் கொடுத்துள்ளது. எல்லாவற்றையும் விட பெரிய விசேஷத்தன்மை என்னவென்றால் கோடியிலும் ஒரு சிலர் அந்த ஒரு சிலரிலும் ஒருவர் நீங்கள் என்பதாகும். ஆகையினால், ஒவ்வொருவருக்கும் தனித்தனியான விசேஷத்தன்மை

உள்ளது. முழுநாளும் தந்தை மற்றும் சேவையின் மீது ஈடுபாடு உள்ளது அல்லவா. லௌகீக காரியத்தை நிமித்த மாத்திரம் செய்ய வேண்டி இருக்கின்றது ஆனால், உள்ளத்தின் ஈடுபாடு நினைவு மற்றும் சேவையில் இருக்க வேண்டும். நல்லது.

**வரதானம்: சதா உண்மையான வீடு மற்றும் உண்மையான சொரூபத்தின் நினைவிலிருந்து உபராம் (கடந்து இருப்பவர்), விடுபட்டவர், அன்பானவர் ஆகுக!**

நிராகாரி உலகம் மற்றும் நிராகாரி உருவத்தின் நினைவு தான் சதா நியாரா மற்றும் பியாரா (விடுபட்ட மற்றும் அன்பானவர்) ஆக்குகின்றது. நாம் நிராகார உலகத்தின் நிவாசிகள், இங்கு சேவைக்காக அவதாரம் செய்திருக்கின்றோம். நாம் இந்த மரண உலகத்தைச் சார்ந்தவர்கள் அல்ல ஆனால், அவதரித்து இருப்பவர்கள் ஆவோம். இந்த சிறிய விசயம் மட்டும் நினைவு இருந்தது என்றால் உபராம் ஆகி விடுவீர்கள். யார் அவதாரம் என்று புரிந்து கொள்ளாமல் கிரகஸ்தி -குடும்பஸ்தன் என புரிந்திருக்கிறார்களோ, அவர்களுடைய குடும்பம் என்ற வண்டி சகதியில் மாட்டி இருக்கின்றது. குடும்பஸ்தன் என்பது சுமையான நிலை மற்றும் அவதாரம் என்பது முற்றிலும் லேசான நிலையாகும். அவதாரம் என்று புரிந்து கொள்வதால் தன்னுடைய உண்மையான வீடு, உண்மையான சொரூபம் நினைவில் இருக்கும், மேலும், உபராம் ஆகி விடுவீர்கள்.

**சுலோகன்: யார் சுத்தம் மற்றும் விதிப்பூர்வமாக ஒவ்வொரு காரியமும் செய்கின்றார்களோ, அவர்களே பிராமணன் ஆவார்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 16.03.1986 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஆன்மிக டிரில்!

பாப்தாதா அனைத்து குழந்தைகளின் இனிமையான அமைதி நிலையைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒரு விநாடியில் அமைதி நிலையில் உறுதியாக நிற்கும் பயிற்சி எது வரை வந்திருக்கிறது? இந்த நிலையில் எப்போது இருக்க விரும்புகிறீர்களோ, அப்போது அதில் உறுதியாக இருக்க முடிகிறதா? அல்லது நேரம் பிடிக்கிறதா? ஏனென்றால் இனிமையான அமைதி நிலை உங்கள் அநாதி சொரூபமாக உள்ளது. ஆதி சொரூபம் சப்தத்தில் வருவது ஆனால் அமைதியே அனாதி அவிநாசி சமஸ்காரமாக உள்ளது. ஆக, தன்னுடைய அநாதி சமஸ்கார, அநாதி சொரூபத்தை, அனாதி சுபாவத்தை அறிந்து கொண்டு எப்போது விரும்புகிறீர்களோ, அப்போது அந்த சொரூபத்தில் நிலைத்து விட முடிகிறதா? 84 பிறவிகள் சப்தத்தில் வர வேண்டி உள்ளது, அதனால் சதா சப்தத்தில் வரும் பழக்கம் உள்ளது ஆனால் அநாதி சொரூபம் அமைதியாக இருப்பதாலும், இச்சமயம் சக்கரம் முடிவடை வதாலும் அமைதியான வீட்டுக்குத்திரும்பிச் செல்ல வேண்டும். இப்போது வீட்டுக்குச் செல்லும் நேரம் அருகில் உள்ளது. இப்போது முதல்-இடை-கடையின் மூன்று கால பாகத்தை முடித்து விட்டு தனது அனாதி சொரூபத்திலும் அநாதி நிலையிலும் நிலைத்து இருக்கும் நேரமாக இருக்கிறது. அதனால் இந்தச் சமயம் இந்தப் பயிற்சி அதிக அவசியமாக உள்ளது. நான் கர்மேந்திரியங்களை வென்றுவிட்டேனா? என தன்னைத்தான் சோதித்துப் பாருங்கள். சப்தத்தில் வர விரும்பாதபோது இந்த வாயின் சப்தம் தன் பக்கம் இழுப்பதில்லையே? இதைத்தான் ஆன்மீக டிரில் என்று சொல்லப்படுகிறது.

தற்காலத்தில் நேரத்திற்குத் தக்கபடி சரீரத்தின் அனைத்து வியாதிகளையும் போக்க எக்ஸர்சைஸ் கற்பிக் கின்றனர். அதேபோல இச்சமயம் ஆத்மாவை சக்திசாலியாக மாற்ற இந்த ஆன்மிக எக்ஸ்ர்சைஸ் செய்யும் பயிற்சி வேண்டும். நாலாபுறமும் எத்தகைய சூழ்நிலை இருந்தாலும், குழப்பமாக இருந்தாலும் சப்தத்தின் நடுவே இருந்த போதும் சப்தத்தில் இருந்து விலகி

இருக்கும் நீண்ட கால பயிற்சி இப்போது தேவைப்படுகிறது. அமைதியான சூழ்நிலையில் அமைதியை உருவாக்குவது ஒன்றும் பெரிய விசயமில்லை. அமைதியற்ற சூழ் நிலைக்கு நடுவில் நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும். இந்தப் பயிற்சியே தேவைப்படுகிறது. அந்த மாதிரி யான பயிற்சியை அறிந்திருக்கிறீர்களா? தன்னுடைய பலவீனங்களின் குழப்பமாக இருந்தாலும், சமஸ்காரங்களின் காரணத்தால் எழும் வீண் எண்ணங்களுடைய குழப்பமாக இருந்தாலும் அத்தகைய குழப்பம் நிறைந்த சமயத்தில் தன்னை அசையாதவராக மாற்ற முடிகிறதா அல்லது நேரம் பிடிக்கிறதா? ஏனென்றால் நேரம் பிடிக்கும் பழக்கம் எப்போது வேண்டுமானாலும் ஏமாற்றக் கூடும். கடைசி நேரத்தில் அதிக நேரம் கிடைக்காது. கடைசி முடிவைத் தீர்மானிக்கும் பரீட்சைப் பேப்பர் சில விநாடிகள் அல்லது நிமிடங்களே இருக்கும் ஆனால் நாலாபுறமும் குழப்பம் நிறைந்திருக்கும் சூழ்நிலையில் அசையாதவராக இருப்பதில் தான் நம்பர் கிடைக்கும். ஒருவேளை நீண்ட காலமாக குழப்ப நிலையை அசையாத நிலையாக மாற்ற நேரம் பிடிக்கும் பழக்கம் இருந்தால்; கடைசி சமயத்தில் என்ன முடிவு வரும்? அதனால் இந்த ஆன்மிக எக்ஸர்சைஸை பயிற்சி செய்யுங்கள். மனதை எங்கே எவ்வளவு நேரம் நிற்க வைக்க விரும்புகிறீர்களோ, அவ்வளவு நேரம் அங்கே நிற்க வைக்க முடிய வேண்டும். கடைசிப் பேப்பர் மிகவும் சுலபமானது. இந்தப் பேப்பர் தான் வரப்போகிறது என முன்கூட்டியே சொல்லப்படுகிறது ஆனால் மிகக் குறைந்த நேரத்தில் நம்பர் கிடைக்கும். அப்போது மனநிலையும் சக்திசாலியாக இருக்க வேண்டும்.

தேகம், தேக-சம்மந்தம், தேக-சமஸ்காரம், மனிதர்கள் மற்றும் உடைமைகள், வைப்ரேஷன் (உணர்வலைகள்) வாயு மண்டலம் அனைத்தும் இருந்தாலும் அவை உங்களைக் கவர்ச்சி செய்யக் கூடாது. இதைத்தான் மோகமற்ற சக்திசாலி சொரூபம் என்று சொல்லப்படுகிறது. ஆக, அந்த மாதிரி பயிற்சி உள்ளதா? மக்கள் கதறிக் கொண்டு இருக்கும்போது நீங்கள் அசையாதவராக இருக்கவேண்டும். இயற்கையும், மாயாவும் அனைத்தும் தங்கள் கடைசி வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள எவ்வளவு தான் முயற்சி செய்தாலும் நீங்கள் விலகியும் பாபாவுக்கு அன்பாகவும் இருக்கும் நிலையில் மூழ்கி இருக்க வேண்டும். இதைத்தான் பார்த்தும் பாராதிருப்பது, கேட்டும் கேளாதிருப்பது எனச் சொல்லப்படுகிறது. அந்த மாதிரி பயிற்சி இருக்க வேண்டும். இதைத்தான் இனிமையான அமைதி சொரூப நிலை

எனச் சொல்லப்படுகிறது. இருப்பினும் பாப்தாதா நேரத்தைக் கொடுக்கிறார் ஒருவேளை ஏதேனும் குறையிருந்தால் இப்போதுகூட நிரப்ப முடியும். ஏனென்றால் நீண்ட காலக் கணக்கைப் பற்றி சொல்லப் பட்டது. எனவே, இப்போது கொஞ்சம் வாய்ப்பு உள்ளது. எனவே இந்தப் பயிற்சியின்மீது முழு கவனம் வையுங்கள். இந்தப் பயிற்சியின் ஆதாரத்தில்தான் பாஸ் வித் ஆனர் ஆவதோ அல்லது வெறுமனே பாஸ் ஆவதோ உள்ளது. அப்படிப்பட்ட பயிற்சி இருக்கிறதா? சமயத்தின் மணி அடிக்கும்போது தயாராக இருப்பீர்களா அல்லது இப்போது தயாராக வேண்டும் என யோசிப்பீர்களா? இந்தப் பயிற்சியின் காரணத்தால் எட்டு ரத்தினங்களின் மாலை மிகச்சிறியதாக உருவாக்கப்பட்டுள்ளது. (தேர்வு) மிகக் குறைந்த நேரத்திற்கானது. விநாடியில் முக்தி அல்லது ஜீவன் முக்தியின் ஆஸ்தி பெற அனைவருக்கும் அதிகாரம் இருக்கிறது என நீங்கள் சொல்கிறீர்கள் இல்லையா? அதேபோல கடைசி நேரத்திலும் நம்பர் கிடைப்பது கொஞ்ச நேரத்தின் விஷயமாக இருக்கிறது ஆனால் கொஞ்சம்கூட குழப்பம் இருக்கக் கூடாது. புள்ளி என்று சொன்னவுடன் புள்ளியில் நின்றுவிட வேண்டும், அவ்வளவுதான். புள்ளி ஆடக் கூடாது. அதற்காக அந்த நேரம் நான் ஆத்மா, நான் ஆத்மா என்ற பயிற்சியை ஆரம்பிக்கக்கூடாது. அது செல்லாது. ஏனென்றால் யுத்தம் நாலா பக்கமும் நடக்கும் என்று சொல்லப் பட்டுள்ளது. அனைத்தும் கடைசி முயற்சி செய்து பார்க்கும். இயற்கையிடம் எவ்வளவு சக்தி இருக்கிறது, மாயாவிடம் எவ்வளவு சக்தி இருக்கிறது அவை அனைத்தும் முயற்சி செய்யும். அவை கடைசி முயற்சி செய்யும் மற்றும் உங்களுக்கு கடைசி கர்மாதீத், கர்மபந்தனங்களில் இருந்து விடுபட்ட நிலை வரும். இரண்டு பக்கங்களின் மிக சக்தி வாய்ந்த காட்சியாக இருக்கும். அதுவும் முழு வேகத்தில் இருக்கும், இதுவும் முழு வேகத்தில் இருக்கும் ஆனால் ஒரு விநாடியின் வெற்றி, வெற்றிமுரசை ஒலிக்கச் செய்யும். கடைசிப் பேப்பரை என்ன வென்று புரிந்து கொண்டீர்களா? நம்பர் ஒன்னில் வந்தேயாக வேண்டும் என அனைவரும் சுப எண்ணம் வைக்கிறீர்கள் மேலும் வைக்கவும் வேண்டும். எனவே எப்போது நாலாபுறமும் உள்ள விஷயங்களில் வெற்றி பெறுகிறீர்களோ, அப்போது ஒன்றில் வருவீர்கள். ஒருவேளை ஒரு விஷயத்தில் கொஞ்சம் வீண் எண்ணங்கள் வந்தாலோ அல்லது நேரம் வீணாகப் போனாலோ நம்பர் பின்னால் சென்று விடும். அதனால் அனைத்தையும் சோதனை செய்யுங்கள். நாலா பக்கமும் சோதனை செய்யுங்கள். இரட்டை வெளிநாட்டினர் அனைத்திலும் தீவிரமாகச் செல்ல விரும்புகிறீர்கள் இல்லையா? அதனால் தீவிர முயற்சி அல்லது முழுக்

கவனத்தை இந்தப் பயிற்சியில் இப்போதிருந்தே கொடுத்துச் செல்லுங்கள். புரிந்ததா? கேள்வியையும் அறிந்திருக்கிறீர்கள் மற்றும் நேரத்தைப் பற்றியும் அறிந்திருக்கிறீர்கள். அப்போது அனைவரும் தேர்ச்சி பெற வேண்டும். ஒருவேளை முன்பாகவே கேள்வி தெரிந்து விட்டால் அதற்குத் தயார் செய்து விடுகிறார்கள். பிறகு தேர்ச்சி பெற்றுவிடுகிறார்கள். நீங்கள் அனைவரும் தேர்ச்சி பெறுபவர்கள் தானே! நல்லது.

இந்த சீசனில் பாப்தாதா ஒவ்வொருவரும் சந்திக்க (பூட்டப்படாத) திறந்த கஜானாவைத்திறந்து வைத்துள்ளார் இனிமேல் என்ன நடக்கப்போகிறது என்பதைப் பிறகு சொல்வோம். இப்போது திறந்த கஜானாவிலிருந்து எடுத்துக் கொள்ள யாரெல்லாம் வந்திருக்கிறீர்களோ, அவர்கள் எடுத்துக் கொள்ளவே செய்வீர்கள். டிராமாவின் காட்சி சதா மாறிக் கொண்டே இருக்கிறது ஆனால் இந்த சீசனில் பாரதவாசிகளாக இருந்தாலும் சரி, வெளி நாட்டினராக இருந்தாலும் சரி அனைவருக்கும் விசேஷ வரதானம் கிடைத்து இருக்கிறது. பாப்தாதா என்ன உறதிமொழி கொடுத்திருக்கிறாரோ, அதை நிறைவேற்றுவார். இந்த சீசனின் பழத்தைச் சாப்பிடுங்கள். பழம் என்பது சந்திப்பு மற்றும் வரதானம். அனைவரும் சீசனின் பழத்தைச் சாப்பிட வந்திருக்கிறீர்கள் தானே? பாப்தாதாவுக்கும் குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சி ஏற்படுகிறது. இருந்தும் சாகார உலகில் அனைத்தையும் பார்க்க வேண்டி உள்ளது. இப்போது மகிழ்ச்சியைக் கொண்டாடுங்கள். மற்றதை சீசனின் கடைசியில் சொல்வோம்.

சேவை செய்யும் இடங்கள் தனித்தனியாக இருக்கின்றன, ஆனால் சேவையின் லட்சியம் ஒன்றுதான். ஊக்கம்-உற்சாகம் ஒன்று தான். ஆகவே பாப்தாதா அனைத்து இடங்களுக்கும் விசேஷ மகத்துவம் கொடுக்கிறார். ஒரு இடம் மகத்துவமானது மற்றது குறைந்தது என்பது கிடையாது. எந்த இடத்திற்கு குழந்தைகள் சென்றாலும் அங்கிருந்து ஏதாவது நல்ல பலன் அவசியம் வெளிப்படும். சிலருக்கு விரைவாக வெளிப்படுகிறது, சிலருக்கு நேரம் வரும் போது வெளிப்படுகிறது ஆனால் எல்லாப் பக்கமும் விசேசம் இருக்கிறது. எவ்வளவு நல்ல-நல்ல ரத்தினங்கள் வெளிப்பட்டிருக்கிறார்கள்! நாம் சாதாரணமானவர்கள் எனப் புரிந்து கொள்ள வேண்டாம். அனைவரும் விசேஷமானவர்களே. ஒருவர் விசேஷமானவர் இல்லை என்றால் பாபாவிடம் வந்திருக்க மாட்டார். விசேசம் உள்ளது, ஆனால் சிலர் விசேசத்தைச் சேவையில் ஈடுபடுத்துகின்றனர். சிலர் சேவையில் ஈடுபடுத்த

இப்போது தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். மற்றபடி அனைவரும் விசேச ஆத்மாக்களே. அனைவரும் மகாரதிகளாக மகாவீரர்களாக இருக்கிறீர்கள். ஒவ்வொருவரின் மகிமையைச் சொல்லத் தொடங்கினால் மிகப் பெரிய மாலை ஆகி விடும். சக்திகளைப் பார்த்தால் ஒவ்வொரு சக்தியும் மகான் ஆத்மாவாக, விஷ்வ கல்யாணகாரி ஆத்மாவாகத் தெரிகிறார். அப்படித்தானே இருக்கிறீர்கள்? அல்லது அவரவர் இடத்திற்கு கல்யாணகாரியா? நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 19.03.1986 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அமிர்தவேளை -சிரேஷ்ட பிராப்திகளின் வேளை!

இன்று ஆன்மிகத் தோட்டத்துக்குச் சொந்தக்காரர் தம்முடைய ஆன்மிக ரோஜா மலர்களின் தோட்டத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அத்தகைய ஆன்மிக ரோஜா மலர்களின் தோட்டம் இப்போது இந்த சங்கம யுகத்தில் மட்டுமே பாப்தாதா மூலமாக உருவாகிறது. பாப்தாதா ஒவ்வொரு ஆன்மீக ரோஜா மலரின் ஆன்மிக நறுமணத் தையும் ஆன்மீகத்தால் மலர்ந்துள்ள மலர்களின் வனப்பையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். அனைவரும் மணமுள்ள மலர்களாக இருக்கிறீர்கள் ஆனால் ஒருவருடைய நறுமணம் சதா காலத்திற்கும், ஒருவருடைய நறுமணம் கொஞ்ச நேரத்திற்கும் இருக்கிறது. சில ரோஜா மலர்கள் சதா மலர்ந்த நிலையில் உள்ளன. மற்ற சில மலர்கள் சில நேரம் மலர்ந்திருக்கின்றன, சிலநேரம் கொஞ்சம் வெயில் அல்லது பருவ நிலையின் காரணத்தல் வாடிப்போகவும் செய்கின்றன ஆனால் அனைவரும் ஆன்மிகத் தோட்டக்காரருடைய தோட்டத்தின் ஆன்மீக ரோஜா மலர்களாகவே இருக்கின்றனர். சில ஆன்மிக ரோஜாக்களிடம் ஞானத்தின் நறுமணம் விசேஷமாக உள்ளது. சிலரிடம் நினைவின் நறுமணம் விசேஷமாக உள்ளது. இன்னும் சிலரிடம் தாரணையின் நறுமணம், சிலரிடம் சேவையின் நறுமணம் விசேஷமாக உள்ளது. சிலர் அனைத்து நறுமணங்களும் நிறைந்தவர்களாக உள்ளனர். ஆக, தோட்டத்தில் முதல்-முதலில் யார் மீது பார்வை செல்லும்? யாரைத் தூரத்திலிருந்தே நறுமணம் கவர்ந்து இழுக்குமோ, அவர்மீது அனைவரின் பார்வையும் முதலில் செல்லும். எனவே, ஆன்மிகத் தோட்டக்காரர்; எப்போதும் அனைத்து ஆன்மிக ரோஜா மலர்களைப் பார்க்கிறார் ஆனால் நம்பர்வார் இருக்கிறீர்கள். அன்பும் அனைவர் மீதும் உள்ளது. ஏனென்றால் ஒவ்வொரு ரோஜா மலருக்குள்ளும் தோட்டக்காரர் மீது மிகுந்த அன்பு உள்ளது. எஜமானர் மீது மலர்களுக்கு அன்பு உள்ளது. மேலும் எஜமானருக்கு மலர்கள் மீது அன்பு உள்ளது. எனினும் யார் சதா அனைத்து நறுமணங்களாலும் நிரம்பி இருக்கிறாரோ, மற்றும் சதா

மலர்ந்திருக்கிறாரோ, ஒருபோதும் வாடிப்போவதில்லையோ அவரே சோகேஸில் சதா வைக்கக் கூடிய ஆன்மிக ரோஜாவாக இருக்கிறார். தினமும் அமிர்தவேளையில் பாப்தாதா அன்பு மற்றும் சக்தியின் விசேஷ பாலனை மூலம் அனைத்து ஆன்மிக ரோஜா மலர்களோடு சந்திப்பைக் கொண்டாடுகிறார்.

அமிர்தவேளை விசேஷ பிரபு பாலனையின் வேளையாகும். அமிர்தவேளை விசேஷ பரமாத்ம சந்திப்பின் வேளையாகும். ஆன்மிக உரையாடல் செய்யும் வேளையாகும். அமிர்தவேளை போலா பண்டாரியின் வரதானங் களுடைய கஜானாவிலிருந்து சகஜமாக வரதானங்களைப் பெறும் வேளையாகும். மனம் விரும்பிய பலனைப் பெறுவது என்ற பாடல் இச்சமய அமிர்தவேளை நேரத்தின் பாடலாகும். கடின உழைப்பில்லாமல் திறந்த கஜானாக்களைப் பெறும் வேளையாகும். அத்தகைய இனிய சமயத்தை அனுபவத்தால் அறிந்திருக்கிறீர்கள் இல்லையா? இந்த சிரேஷ்ட சுகத்தை, சிரேஷ்ட பிராப்திகளை அனுபவசாலிகளே அறிவார்கள். பாப்தாதா ஆன்மீக ரோஜா மலர்களைப் பார்த்துப் பார்த்து மகிழ்ச்சியடைந்து கொண்டிருக்கிறார். ஆஹா என்னுடைய ஆன்மிக ரோஜா மலர்களே! எனப் பாப்தாதாவும் சொல்கிறார். நீங்கள் ஆஹா ஆஹா என்ற பாடலைப் பாடும்போது பாப்தாதாவும் அதே பாடலைப் பாடுகிறார். புரிந்ததா?

முரளிகளை நிறையக் கேட்டு விட்டீர்கள். கேட்டுக் கேட்டு நிறைந்து விட்டீர்கள். இப்போது மகாதானியாகி பகிர்ந்தளிப்பதற்கான திட்டத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். இந்த ஊக்கம் மிக நன்றாக உள்ளது. இன்று. யூ.கே. அதாவது ஓ.கே.யாக இருப்பவர்கள் சந்திக்கும் முறையாகும். இரட்டை வெளிநாட்டினரின் ஒரு வார்த்தையைக் கேட்டு பாப்தாதா சதா புன்சிரித்துக் கொண்டே இருக்கிறார். என்ன வார்த்தை? தேங்க் யூ தேங்க் யூ என்று சொல்லிக் கொண்டே பாபாவையும் நினைத்துக் கொண்டே இருக்கின்றனர். ஏனென்றால் எல்லோரையும்விட முதலில் பாபாவுக்குத்தான் மனதார நன்றி சொல்கின்றனர். ஆக, யாருக்காவது நன்றி சொல்லும் போது, முதலில் பாபாதான் நினைவிற்கு வருவார் இல்லையா? பிராமண வாழ்க்கையில் முதல் நன்றி தானாகவே பாபாவுக்காக வெளிப்படுகின்றது. அமரும் போதும் எழுந்திருக்கும் போதும் அநேக தடவை தேங்க் யூ சொல்கிறீர்கள். இதுவும் பாபாவை நினைவு செய்வதற்கான ஒரு விதியாக இருக்கிறது. யூ.கே.காரர்கள் அனைத்து

விதவிதமான எல்லைக்குட்பட்ட சக்திகள் உள்ளவர்களை ஒன்று சேர்ப்பதற்கு நிமித்தமாக ஆகியிருக்கிறீர்கள் இல்லையா? அநேக விதமான ஞானத்தின் சக்திகள் உள்ளன. பலவித சக்தி உடையவர்கள், பலவித வர்க்கத்தினர், பலவித தர்மத்தினர், பலவித மொழி பேசுபவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து ஒரே பிராமண வர்க்கத்தில் கொண்டு வர வேண்டும். பிராமண தர்மத்தில், பிராமண மொழியில் அனைவரும் வர வேண்டும். பிராமணர்களின் மொழியும் தனிப்பட்டது. இவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதைப் புதியவர்கள் புரிந்து கொள்ளவும் முடியாது. ஆக, பிராமணர்களின் மொழியும், பிராமணர்களின் டிக்ஸனரியும் தனிப்பட்டது. ஆக, யூ.கே.காரர்கள் அனைவரையும் ஒன்று சேர்ப்பதில் பிஸியாக இருக்கிறீர்கள் இல்லையா? எண்ணிக்கையும் நன்றாக உள்ளது மற்றும் அன்பும் நன்றாக உள்ளது. ஒவ்வோர் இடத்திற்கும் அதனதனுடைய விசேஷதா உள்ளது ஆனால் இன்று யூகே.வைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். யக்ஞ சிநேகி, யக்ஞ சகயோகி என்ற இந்த விசேஷதா நன்கு காணப்படுகிறது. ஒவ்வோர் அடியிலும் முதலில் யக்ஞம், அதாவது மதுபனின் பங்கை எடுத்து வைப்பதில் நல்ல நம்பரில் சென்று கொண்டிருக்கிறீர்கள். நேரடி மதுபனின் நினைவு என்பது ஒரு சிறந்த லிஃப்ட் ஆகி விடுகிறது. ஒவ்வொரு காரியத்திலும், ஒவ்வோர் அடியிலும் மதுபன் என்றால் பாபாவின் நினைவு உள்ளது, பாபாவின் படிப்பு உள்ளது அல்லது பாபாவின் பிரம்மா போஜன் உள்ளது அல்லது பாபாவுடன் சந்திப்பு உள்ளது. மதுபன் தானாகவே பாபாவை நினைவு படுத்துகிறது. எங்கே இருந்தாலும் மதுவனத்தின் நினைவு வருவது என்றால் விசேஷ அன்பு, லிஃப்ட் ஆகி விடுகின்றது. ஏறுகின்ற முயற்சியிலிருந்து விடுபட்டு விடுகின்றனர். ஒரு விநாடியில் ஸ்விட்ச் ஆன் செய்த உடனேயே சென்று சேர்ந்து விடுகிறீர்கள்.

பாப்தாதாவுக்கு வேறு எந்த வைரமோ முத்தோ தேவையில்லை. தந்தைக்கு, அன்பான சிறிய பொருள் கூட வைரமாக, ரத்தினமாக இருக்கிறது. எனவே, சுதாமாவின் குறைந்த அளவு அவல் பாடப்பட்டுள்ளது. அதாவது அன்பான சிறிய ஊசியில் கூட மதுவனத்தின் நினைவு வருகிறது என்பது இதன் அர்த்தமாக இருக்கிறது. ஆக, அதுவும் மிகப் பெரிய விலைமதிக்க முடியாத ரத்தினமாக இருக்கிறது, ஏனென்றால் அன்பின் விலையாக உள்ளது. மதிப்பு அன்புக்குத் தான். பொருளுக்கு இல்லை. அப்படியே யாராவது எவ்வளவு தான் கொடுத்தாலும் அன்பு இல்லை என்றால் அவருடையது சேமிப்பாகாது.

அன்பினால் கொஞ்சம் கொடுத்தாலும் அது பல கோடி மடங்கு சேமிப்பாகி விடுகிறது. ஆகவே பாபாவுக்கு அன்பு பிடித்திருக்கிறது. ஆக, யூ.கே.காரர்களின் விசேஷதா, யக்ஞ சிநேகி, யக்ஞ சகயோகியாக இருப்பது ஆரம்பத்தில் இருந்தே உள்ளது. இது சகஜயோகமாகவும் உள்ளது. ஒத்துழைப்பு, சகஜயோகமாக உள்ளது. ஒத்துழைப்பின் எண்ணம் எழும்போதே தந்தையின் நினைவு தானே இருக்கிறது. ஆக, ஒத்துழைப்பவராக, சகஜயோகியாக தானாகவே ஆகி விடுகிறார். யோகம் பாபாவுடன் ஏற்படுகிறது, மதுபன் என்றால் பாப்தாதாவுடன் ஏற்படுகிறது. ஆகவே ஒத்துழைப்பவர்களும் சகஜயோகப் பாடத்தில் நல்ல நம்பர் பெற்று விடுகிறார்கள். மனதார செய்யப்படும் ஒத்துழைப்பு பாபாவுக்குப் பிடித்திருக்கிறது. அதனால் இங்கே நினைவுச் சின்னமாக தில்வாலா கோயில் உருவாகியுள்ளது. ஆகவே தில்வாலா பாபாவுக்கு இதய பூர்வமான சகயோகம் பிரியமாக உள்ளது. சிறிய மனம் உள்ளவர்கள் சிறிய வியாபாரம் செய்து குஷியடைந்து விடுகிறார்கள். பெரிய மனம் உள்ளவர்கள் எல்லையற்ற வியாபாரம் செய்கின்றனர். அஸ்திவாரம் பெரிய மனமாக இருந்தால் வளர்ச்சியும் அதிகமாகிக் கொண்டு இருக்கிறது. எப்படி பல இடங்களில் மரத்தைப் பார்த்திருப்பீர்கள், அதில் மரத்தின் கிளைகளும் அடிமரமாக மாறி விடுகின்றன. ஆக, யூ.கே.யின் அஸ்திவாரத்திலிருந்து அடிமரம் வெளிப்பட்டது, கிளைகளும் வெளிப்பட்டன. இப்போது இந்தக் கிளைகளும் அடிமரமாகி விட்டன. அந்த அடிமரத்தில் இருந்தும் கிளைகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. ஆஸ்திரேலியா வெளிப்பட்டது, அமெரிக்கா, ஐரோப்பா, ஆஃப்ரிக்கா வெளிப்பட்டன. அனைத்தும் அடிமரமாகி விட்டன. மேலும் ஒவ்வொரு அடிமரத்தில் இருந்தும் கிளைகள் நல்லபடியாக விருத்தியடைந்து கொண்டிருக்கின்றன. ஏனென்றால் அஸ்திவாரம் அன்பு மற்றும் ஒத்துழைப்பின் நீரினால் வலிமையாக உள்ளது. அதனால் வளர்ச்சியும் நன்றாக உள்ளது. பழங்களும் (பலன்) நன்றாக உள்ளன. நல்லது.

**வரதானம்: தேக உணர்வைத்தியாகம் செய்து கோபமற்றவர் ஆகும் பணிவுள்ளவர் ஆகுக!**

எந்தக் குழந்தைகள் தேக உணர்வைத்தியாகம் செய்கிறார்களோ, அவர்களுக்கு ஒரு போதும் கோபம் வராது. ஏனென்றால் கோபம் வருவதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று -ஒருவர் பொய்யான விஷயத்தைச்

சொல்வது, இரண்டாவது -யாராவது நிந்தனை செய்யும்போது. இந்த இரண்டு விஷயங்களே கோபத்தை உருவாக்குகின்றன. அத்தகைய சூழ்நிலையில் பணிவுள்ளவர் ஆகுக என்ற வரதானத்தின் மூலம் அபகாரிக்கும் உபகாரம் செய்யுங்கள். நிந்தனை செய்பவரைத் தழுவிக் கொள்ளுங்கள். குறை சொல்பவர்களை உண்மையான நண்பராக ஏற்றுக் கொள்ளுங்கள் --அப்போது அற்புதம் என்று சொல்வார்கள். எப்போது அத்தகைய மாற்றத்தைச் செய்து காட்டுவீர்களோ, அப்போது உலகின் முன்னால் புகழ் பெற்றவர் ஆவீர்கள்.

**சுலோகன்: மகிழ்ச்சியை அனுபவம் செய்வதற்கு மாயாவின் அடிமைத்தனத்தை விடுத்து சுதந்திரமாகுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 22.03.1986 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சுகம், சாந்தி மற்றும் குஷிக்கான ஆதாரம் தூய்மை!

இன்று பாப்தாதா தன்னுடைய நாலாபுறங்களிலும் உள்ள அனைத்து புனிதமான மற்றும் மகிழ்ச்சியான குழந்தைகளை பார்த்துக் கொண்டிருக்கிறார். இவ்வளவு பெரிய குழுவின் ரூபத்தில் அந்த மாதிரி தூய்மை மற்றும் மகிழ்ச்சி இரண்டு விசேஷங்களையும் உடையவர்கள் இந்த முழு நாடகத்திலும் இவ்வளவு பெரிய சபை அல்லது இவ்வளவு பெரிய கூட்டம் வேறு எங்கும் இருக்க முடியாது. இன்றைய காலத்தில் சிலருக்கு உயர்ந்தவர்கள் (ஹைனெஸ்) மற்றும் புனிதமானவர்கள் என்ற டைட்டில் கொடுக்கிறார்கள் ஆனால் நடைமுறை ரூபத்தில் பார்க்கும்போது அவர்களிடம் தூய்மை, மகான் தன்மை தென்படுவதில்லை. இந்தளவு மகான் தூய்மையான ஆத்மாக்களின் குழு எங்கு இருக்க முடியும்? என்று பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார். ஒவ்வொரு குழந்தைகளிடமும் கர்மத்தில் மட்டுமல்லாமல் மனம், சொல், செயல் மூன்றிலும் தூய்மை ஆகி யே தீர வேண்டும் என்ற திட சங்கல்பம் இருக்கிறது. எனவே, இவ்வாறு தூய்மையாக வேண்டும் என்ற உயர்ந்த திட சங்கல்பம் வேறு எங்கும் இருக்க முடியாது. அழியாததாகவும் இருக்க முடியாது, சகஜமானதாகவும் இருக்க முடியாது. நீங்கள் அனைவரும் தூய்மையை தாரணை செய்வதை எவ்வளவு சகஜமாக புரிந்திருக்கிறீர்கள். ஏனென்றால் பாப்தாதா மூலமாக ஞானம் கிடைத்திருக்கிறது மற்றும் ஞான சக்தியின் மூலமாக ஆத்மா-தன்னுடைய அனாதி மற்றும் ஆதி சொரூபமே தூய்மை என்று தெரிந்து கொண்டீர்கள். எப்பொழுது ஆதி, அனாதி சொரூபத்தின் நினைவு வந்து விட்டதோ, அப்பொழுது இந்த நினைவே சக்திசாலியாக்கி சகஜமாக அனுபவம் செய்ய வைக்கிறது. நம்முடைய உண்மையான சொரூபமே தூய்மை என்று தெரிந்து கொண்டீர்கள். சங்கதோஷத்தின் சொரூபம் அபவித்ரமாகும். எனவே உண்மையானதை தன்னுடையதாக்கிக் கொள்வது சகஜமாகி விட்டதல்லவா!

சுய தர்மம், சுய தேசம், சுயத்தின் தந்தை மற்றும் சுய சொரூபம், சுய கர்மம் அனைத்தின் ஞானமும் கிடைத்திருக்கிறது. எனவே ஞான சக்தியின் மூலம் கடினமானது மிகவும் சகஜமாகி விட்டது. எந்த விசயத்தை இந்தக்கால மகான் ஆத்மா என அழைக்கப்படுபவர்களும் முடியாதது, இயற்கைக்கு மாறானது என புரிந்திருக்கிறார்களோ அதை தூய்மையான ஆத்மாக்கள் நீங்கள் முடியும் என எவ்வளவு சகஜமாக அனுபவம் செய்து விட்டீர்கள். தூய்மையை தன்னுடையதாக்கிக் கொள்வது சகஜமா? அல்லது கடினமா? முழு உலகத்திற்கு முன்னால் தூய்மை எங்களுடைய சுய சொரூபம் என்று சவால் விட்டு கூற முடியும். தூய்மை சக்தியின் காரணத்தினால் எங்கு தூய்மை இருக்கிறதோ அங்கு சுகம் மற்றும் சாந்தி தானாகவே இருக்கிறது. தூய்மை அடித்தளமாக இருக்கிறது. தூய்மையை தாய் என்று சொல்கிறார்கள் சுகம், சாந்தி அதன் குழந்தைகள். எனவே எங்கு தூய்மை இருக்கிறதோ அங்கு சுகம், சாந்தி தானாகவே இருக்கிறது, அதனால் குஷியும் இருக்கிறது. அப்படிப்பட்டவர் ஒருபொழுதும் சோர்வடைய முடியாது. சதா குஷியாக இருப்பார்கள். எங்கு புனிதம் இருக்கிறதோ அங்கு மகிழ்ச்சி கண்டிப்பாக இருக்கும். தூய்மையான ஆத்மக்களின் அடையாளம் சதா குஷியாக இருப்பது. எனவே எவ்வளவு நிச்சயபுத்தியுடைய தூய்மையான ஆத்மக்கள் அமர்ந்திருக்கிறார்கள் என்று பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார். உலகத்தில் இருப்பவர்கள் சுகம் சாந்திக்கு பின்னால் ஓடிக் கொண்டிருக்கிறார்கள் ஆனால் சுகம் சாந்திக்கு அடித்தளமே தூய்மையாகும். அந்த அடித்தளத்தை தெரிந்திருக்க வில்லை. அதனால் தூய்மையின் அடித்தளம் உறுதியாக இல்லாத காரணத்தினால் அல்பகாலத்திற்கு சுகம் சாந்தி பிராப்தி ஆகின்றது ஆனால் ஒருநேரம் இருக்கிறது. அடுத்த நேரம் இருப்பதில்லை. தூய்மை இல்லாமல் சதா கால சுகம்-சாந்தி பெறுவது சாத்தியமில்லாதது. நீங்கள் அடித்தளத்தை தன்னுடையதாக்கி விட்டீர்கள். அதனால் சுகம் சாந்திக்காக ஓட வேண்டிய அவசியமில்லை. தூய்மையுள்ள ஆத்மாக்களிடம் சுகம், சாந்தி தானாகவே வருகிறது. குழந்தைகள் அம்மாவிடம் தானாகவே செல்கிறார்கள் அல்லவா! எவ்வளவு தான் பிரித்து வைத்தாலும் அம்மாவிடம் கண்டிப்பாக செல்வார்கள். எனவே, தூய்மையானது சுகம், சாந்தியின் தாயாக இருக்கிறது. எங்கு தூய்மை இருக்கிறதோ அங்கு சுகம், சாந்தி, குஷி தானாகவே வருகிறது. எனவே என்னவாகி விட்டீர்கள்? கவலையற்ற நாட்டின் மகாராஜா. இந்த பழைய உலகத்தின் மகாராஜா அல்ல, ஆனால் கவலையற்ற நாட்டின் மகாராஜா. இந்த பிராமண குடும்பம் கவலையற்ற

நாடாக அதாவது சுகமான உலகமாக இருக்கிறது. ஆகவே இந்த சுகமான உலகின், கவலையற்ற நாட்டின் மகாராஜா ஆகி விடீர்கள். புனித ராஜாவாகவும் ஆகி விட்டீர்கள். கிரீடமும் இருக்கிறது. சிம்மாசனமும் இருக்கிறது. வேறு என்ன குறையிருக்கிறது! எவ்வளவு பெரிய கிரீடமாக இருக்கிறது! ஒளியின் கிரீடம் தூய்மையின் அடையாளம். மற்றும் பாப்தாதாவின் இதய சிம்மாசனதாரியாகவும் இருக்கிறீர்கள். எனவே கவலையற்ற நாட்டின் மகாராஜா கிரீடமும் தனிப்பட்டது, சிம்மாசனமும் தனிப்பட்டது. இராஜ்யமும் தனித்தன்மையுடன் இருப்பதால் மகாராஜாவும் தனித் தன்மையுள்ளவராக இருக்கிறார்.

இன்றைய காலத்தில் மனித ஆத்மாக்கள் இவ்வளவு அலைவதைப் பார்த்து பாப்தாதாவிற்கு குழந்தைகள் மீது கருணை ஏற்படுகிறது. எவ்வளவு முயற்சி செய்து கொண்டேயிருக்கிறார்கள். முயற்சி என்றால் அலைவது, உழைப்பும் அதிகமாக செய்கிறார்கள் ஆனால் என்ன கிடைக்கிறது? சுகம் கிடைக்கிறது, ஆனால் சுகத்தின் கூட கூடவே ஏதாவது துக்கமும் கிடைத்து விடுகிறது. மற்ற எதுவும் இல்லையென்றாலும் அல்பகால சுகத்தின் கூடவே கவலை மற்றும் பயம் இரண்டும் இருக்கவே செய்கிறது. எனவே எங்கு கவலை இருக்கிறதோ அங்கு நிம்மதி இருக்க முடியாது. எங்கு பயம் இருக்கிறதோ அங்கு சாந்தி இருக்க முடியாது. ஆகவே சுகத்தின் கூடவே இந்த துக்க அசாந்திக்கான காரணமும் இருக்கிறது ஆனால் உங்கள் அனைவருக்கும் துக்கத்தின் காரணம் மற்றும் நிவாரணம் கிடைத்து விட்டது. இப்பொழுது நீங்கள் பிரச்சனைகளுக்கு சமாதானம் கொடுக்கக்கூடிய சமாதான சொரூபம் ஆகி விட்டீர்கள் அல்லவா? பிரச்சனைகள் உங்களிடம் விளையாடுவதற்கு பொம்மைகளாக வருகிறது. விளையாடுவதற்காக வருகிறது பயமுறுத்த வருவதில்லை. பயப்படுபவர்கள் இல்லைதானே? எங்கு சர்வ சக்திகளின் கஜானா பிறப்புரிமையாகி விட்டதோ அங்கு வேறு என்ன குறை இருக்க முடியும், நிறைவாக இருக்கிறீர்கள் தானே? மாஸ்டர் சர்வசக்திவானுக்கு முன்னால் பிரச்சனைகள் ஒன்றுமே இல்லை. ஒருவேளை யானையின் பாதங்களுக்கு கீழே எறும்பு வந்தால் கண்களுக்குத் தென்படுமா? எனவே இந்த பிரச்சனைகளும் மகராதிகள் உங்களுக்கு முன்னால் எறும்புக்கு சமமானது. விளையாட்டு என புரிந்து கொள்வதின் மூலம் குஷியிருக்கும். எவ்வளவு பெரிய விசயமும் சிறியதாகி விடுகிறது. இன்றைய காலத்தில் குழந்தைகளுக்கு புத்தியின் எந்த விளையாட்டு; விளையாட வைக்கிறார்கள்? குழந்தைகளை கணக்கு போடச் சொன்னால்

கஷ்டப்படுகிறார்கள் ஆனால் விளையாட்டு வடிவில் சந்தோஷமாக கணக்கு செய்வார்கள். எனவே உங்கள் அனைவருக்கும் பிரச்சனைகள் எறும்புக்கு சமம் தானே? எங்கு தூய்மை, சுகம், சாந்தியின் சக்தியிருக்கிறதோ அங்கு கனவிலும் கூட துக்கம், அசாந்தியின் அலைகள் வரமுடியாது. சக்திசாலி ஆத்மாக்களுக்கு முன்னால் வருவதற்கு இந்த துக்கம், அசாந்திக்கு தைரியம் இருக்க முடியாது. தூய்மையான ஆத்மாக்கள் சதா மலர்ந்த முகமுடைய ஆத்மாக்கள். இதை சதா நினைவில் வையுங்கள். அனேக விதமான குழப்பங்கள், அலைச்சல், துக்கம் அசாந்தியின் வலையில் இருந்து விடுபட்டு வந்திருக்கிறீர்கள். ஏனென்றால் ஒரு துக்கம் மட்டும் வருவ தில்லை ஆனால் ஒரு துக்கம் அதன் வம்சாவளியுடன் வருகிறது. எனவே அந்த வலையிலிருந்து விடுபட்டு விட்டீர்கள். அந்த மாதிரி தன்னை பாக்கியவான் என்று புரிந்திருக்கிறீர்கள் தானே?

இன்று ஆஸ்திரேலியர்கள் அமர்ந்திருக்கிறார்கள். ஆஸ்திரேலியர்களை பாப்தாதா எப்போதும் தபஸ்யாவின், மகாதானியின் விசேஷம் நிறைந்தவர்கள் என்று வர்ணனை செய்கிறார். சதா சேவை செய்ய வேண்டும் என்ற ஈடுபாட்டின் தபஸ்யா, அனேக ஆத்மாக்களுக்கும் தபஸ்வி ஆத்மாக்களாகிய உங்களுக்கும் பலனை கொடுத்துக் கொண்டிருக்கிறது. பூமிக்கு தகுந்தாற்போல் விதி மற்றும் வளர்ச்சி இரண்டையும் பார்த்து பாப்தாதா அதிக மகிழ்ச்சி அடைகின்றார் ஆஸ்திரேலியா என்றாலே மிகுந்த சிறப்புத் தன்மை உடையது. சேவைக்காக அனைவரிடத்திலும் தியாக பாவனை உடனடியாக வருகின்றது. அதனால் தான் இத்தனை சென்டர்களைத்திறந்துள்ளீர்கள். நமக்கு எப்படி பாக்கியம் கிடைத்துள்ளதோ அதேபோல மற்றவர்களுக்கும் பாக்கியத்தை உருவாக்க வேண்டும். திட சங்கல்பம் செய்வது தான் தபஸ்யா ஆகும். எனவே தியாகம் மற்றும் தபஸ்யாவின் விதி மூலமாக வளர்ச்சியை பெறுகிறீர்கள். சேவையின் பாவனை அனேக எல்லைக்குட்பட்ட பாவனைகளை முடித்து விடுகிறது. இந்த தியாகம் மற்றும் தபஸ்யாவே வெற்றிக்கு ஆதாரமாக இருக்கிறது. புரிந்ததா? குழுவிற்கு சக்தி இருக்கின்றது. ஒருவர் சொன்னார்; மற்றவர் செய்தார்; ஒருவர் சொன்னார் மற்றவர் இது நடக்க முடியாது எனச் சொன்னார் என்று இருக்கக்கூடாது. இதில் குழு உடைகிறது. ஒருவர் சொல்ல மற்றவர் உற்சாகத்தோடு ஒத்துழைப்பவராகி நடைமுறையில் கொண்டு வருவதுதான் குழுவின் சக்தியாகும். பாண்டவர்களுக்கும் குழு இருக்கின்றது. ஒரு போதும் நீ நான் என்பது கூடாது. பாபா! பாபா! என்று

கூறினால் அனைத்து விசயங்களும் முடிந்து விடும் அவ்வளவு தான். நீ, நான், என்னுடையது, உன்னுடையது என்பதில் தான் மோதல் ஏற்படுகிறது. தந்தையை முன்னால் வைத்தால் எந்த ஒரு பிரச்சினையும் வரமுடியாது. மேலும் சதா தடையற்ற ஆத்மாக்கள் தீவிர முயற்சியின் மூலம் பறக்கும் கலையை அனுபவம் செய்கின்றார்கள். நீண்ட கால தடையில்லாத நிலை, உறுதியான நிலையாக மாறி விடுகிறது. அடிக்கடி யார் தடைகளுக்கு வசமாகிறார்களோ அவர்களுடைய அடித்தளம் பலவீனமாகி விடுகிறது. நீண்ட கால தடையற்ற ஆத்மாக்களின் அடித்தளம் சக்திசாலியாக இருக்கும் காரணத்தினால் தாமும் சக்திசாலியாகி மற்றவர்களையும் சக்திசாலியாக மாற்றுகிறார்கள். ஏதாவதொரு பொருள் உடைந்து விட்டால் பிறகு ஒட்ட வைத்தாலும் அது பலகீனமாவே இருக்கிறது. நீண்ட கால சக்திசாலி ஆத்மா, தடையற்ற ஆத்மா கடைசி நேரத்திலும் தடையற்றவராகி பாஸ்வித் ஹானர் ஆகி விடுகிறார்கள், அல்லது பர்ஸ்ட் டிவிஷனில் வந்து விடுகிறார்கள். எனவே நீண்ட காலம் தடையற்ற நிலையை அவசியம் அனுபவம் செய்ய வேண்டும் என்று சதா லட்சியம் வையுங்கள். தடை வந்தது, சென்று விட்டது என்று நினைக்காதீர்கள். அதனால் பரவாயில்லை ஆனால் அடிக்கடி தடை வந்து அதை அழித்துக் கொண்டு இருந்தால் நேரம் வீணாகிறது. சக்தியும் வீணாகிறது. அந்த நேரம் மற்றும் சக்தியை சேவையில் ஈடுபடுத்தினால் ஒன்றிற்கு கோடி மடங்கு சேமிப்பாகும். அதனால் நீண்ட கால தடையற்ற ஆத்மாக்கள் விக்னவிநாசகர் ரூபத்தில் பூஜிக்கப்படுகிறார்கள். விக்னவிநாசக் பட்டம் பூஜைக்குரிய ஆத்மாக்களுடையது. நான் விக்ன விநாசக் பூஜ்ஜிய ஆத்மாவாக இருக்கிறேன். இந்த நினைவின் மூலம் சதா தடையற்றவராகி பறக்கும் கலையின் மூலம் முன்னால் பறந்து செல்லுங்கள், மற்றவரையும் பறக்க வையுங்கள், புரிந்ததா? தன்னுடைய தடைகளை அழித்தீர்கள் ஆனால், மற்றவர்களுடைய தடைகளையும் அழிப்பவர் ஆக வேண்டும். பாருங்கள், உங்களுக்கு நிமித்த ஆத்மாவாக (டாக்டர் நிர்மலா அவர்கள்) அந்த மாதிரி கிடைத்திருக்கின்றார். அவர் ஆரம்பத்திலிருந்து எந்த ஒரு தடைக்கும் ஆளாகவில்லை. சதா விடுபட்டவராகவும் அன்பானவராகவும் இருக்கிறார். கொஞ்சம் கண்டிப்புடன் இருக்கிறார். இதுவும் அவசியம் தான். ஒருவேளை அந்த மாதிரி கண்டிப்பான ஆசிரியர் கிடைக்கவில்லை என்றால், இவ்வளவு வளர்ச்சி ஏற்பட்டி ருக்காது. இது அவசியமுமாகும். எப்படி நோய்தீர கசப்பான மருந்து இருக்கிறதுதானே? எனவே நாடகப்படி நிமித்த ஆத்மாக்களுடைய சகவாசத்தின் தாக்கமும் ஏற்படுகிறது. மேலும் தான் வந்தவுடனேயே

சேவைக்கு நிமித்தமாகி விட்டார். எனவே ஆஸ்திரேலியாவிலும் ஆத்மாக்கள் வந்தவுடனேயே சென்டர் திறக்கும் சேவையில் இறங்கி விடுகிறார்கள். இந்த தியாக பாவனையின் வைப்ரேசன் முழு ஆஸ்திரேலியாவிலும் அதோடு தொடர்புள்ள மற்ற இடங்களிலும் அதே ரூபத்தில் வளர்ச்சி ஆகி க் கொண்டிருக்கிறது. யாரிடம் தபஸ்யா மற்றும் தியாகம் இருக்கின்றதோ அவர்களே சிரேஷ்ட ஆத்மா. அனைத்து ஆத்மாக்களும் தீவிர முயற்சி செய்பவர் தாம் ஆனால், முயற்சியின் கூடவே தனது விசேஷங்கள் தமது பிரபாவத்தை கண்டிப்பாக ஏற்படுத்துகிறது. இப்பொழுது அனைவரும் நிறைந்தவராகிக் கொண்டு இருக்கிறீர்கள்தானே? நிறைந்து விட்டீர்கள் என்ற சான்றிதழ் யாருக்கும் கிடைக்கவில்லை ஆனால், நிறைவு நிலைக்கு அருகில் வந்து விட்டீர்கள். இதில் வரிசைக்கிரமமாக உள்ளீர்கள். சிலர் மிகவும் அருகில் வந்து விட்டீர்கள், சிலர் வரிசைக்கிரமமாக முன்-பின்னாக உள்ளீர்கள். ஆஸ்திரேலியர்கள் அதிர்ஷ்டசாலிகள். தியாகத்தின் விதை பாக்கியத்தை பெற வைக்கிறது. சக்தி சேனையும் பாப்தாதாவிற்கு மிகவும் பிரியமானவர்கள். ஏனென்றால், தைரியம் உடையவர்கள். எங்கு தைரியம் உள்ளதோ அங்கு பாப்தாதாவின் உதவி சதா கூடவே இருக்கிறது. சதா திருப்தியாக இருப்பவர்கள்தானே? திருப்தி வெற்றிக்கு ஆதாரமாகும். நீங்கள் அனைவரும் திருப்தியான ஆத்மாக்கள், எனவே வெற்றி உங்களது பிறப்புரிமையாக இருக்கிறது. புரிந்ததா? எனவே, ஆஸ்திரேலியர்கள் அருகிலும் அன்பாகவும் இருப்பதால் அவர்களுக்கு கூடுதல் உரிமை இருக்கிறது. நல்லது.

**வரதானம்: கோபத்தின் அம்சத்தையும் தியாகம் செய்யக்கூடிய சுயமரியாதையில் இருக்கும் புண்ணிய ஆத்மா ஆகுக!**

சுயமரியாதையில் இருக்கும் குழந்தைகள் அனைவருக்கும் மரியாதை கொடுக்கும் வள்ளலாக இருப்பார்கள். வள்ளல் என்றால் இரக்கமனமுடையவர். அவர்களுக்கு ஒரு பொழுதும் எந்த ஆத்மாவின் மீதும் எண்ணத்தில்கூட கோபம் இருக்காது. இவர் ஏன் இப்படி இருக்கிறார்? அப்படிச் செய்யக்கூடாதே, நடக்கக்கூடாதே, ஞானம் இதைச் சொல்கிறதா என்ன? என்பதெல்லாம் சுட்சும கோபத்தின் அம்சமாகும் ஆனால் சுயமரியாதையில் இருக்கும் புண்ணிய ஆத்மாக்கள் விழுந்தவர்களை தூக்கி விடுவார்கள். சகயோகி ஆக்குவார்கள். அவர்கள் ஒரு பொழுதும் இவர் அவருடைய கர்மத்தின் பலனை அனுபவிக்கிறார், செய்தார் அதனால்

கண்டிப்பாக அடைவார், இவர் விழத்தானே வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்க மாட்டார்கள். அந்த மாதிரி எண்ணங்கள் குழந்தைகள் உங்களிடம் இருக்க முடியாது.

**சுலோகன்: திருப்தி மற்றும் மகிழ்ச்சியின் விசேஷமே பறக்கும் கலையின் அனுபவத்தை செய்ய வைக்கிறது!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 25.03.1986 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சங்கமயுகம் ஹோலி வாழ்க்கைக்கான யுகமாகும்!

இன்று பாப்தாதா சுயராஜ்ய அதிகாரி அலௌகீக இராஜ்ய சபையை பார்த்துக் கொண்டிருக்கின்றார். ஒவ்வொரு சிரேஷ்ட ஆத்மாவின் மீதும் ஒளிக் கிரீடம் ஜொலிப்பதை பார்த்துக் கொண்டிருக்கின்றார். ஒவ்வொரு பரம பாவன பூஜ்ய ஆத்மாக்கள் இந்த ஒரு பிறவிக்கு மட்டும் பாவனம் அதாவது ஹோலி (தூய்மை) ஆகவில்லை ஆனால் பாவனம் என்றால் ஹோலி ஆவதற்கான ரேகை பல பிறவிகளுக்கான நீளமாக ரேகையாக இருக்கிறது. முழு கல்பத்தில் மற்ற ஆத்மாக்களும் பாவன ஹோலியாக ஆகின்றனர். பாவன ஆத்மாக்கள் தர்மபிதா ரூபத்தில் தர்ம ஸ்தாபனை செய்வதற்கு நிமித்தமாக ஆகின்றனர். மேலும் மகான் ஆத்மாக்கள் என்று கூறப்படக் கூடிய சிலரும் பாவனம் ஆகின்றனர் ஆனால் அவர்கள் பாவனம் ஆவதற்கும், பாவன ஆத்மாக்களாகிய உங்களுக்கும் வித்தியாசம் இருக்கிறது. நீங்கள் பாவனம் ஆவதற்கான சாதனம் மிகவும் எளிதாகும். எந்த கடின உழைப்பும் கிடையாது. ஏனெனில் தந்தையிடமிருந்து ஆத்மாக்களாகிய உங்களுக்கு சுகம், சாந்தி, தூய்மையின் ஆஸ்தி எளிதாக கிடைக்கிறது. இந்த நினைவின் மூலம் எளிதாக மற்றும் தானாகவே அழிவற்றதாக ஆகி விடுகிறது. உலகத்தினர் பாவனம் ஆகின்றனர், ஆனால் கடின உழைப்பினால். மேலும் அவர்களுக்கு 21-பிறவிகளுக்கு ஆஸ்தியின் ரூபத்தில் தூய்மை பிராப்தியாக கிடைப்பது கிடையாது. இன்று உலகாய கணக்கில் ஹோலி நாள் என்று கூறுகின்றனர். அவர்கள் ஹோலி கொண்டாடுகின்றனர், ஆனால் சுயம் நீங்களே பரமாத்மாவின் வர்ணத்தில் கலந்து ஹோலி ஆத்மாக்களாக ஆகி விடுகிறீர்கள். கொண்டாடுவது சிறிது நேரத்திற்கு மட்டுமே, ஆவது வாழ்க்கைக்காக ஆகும். அவர்கள் நாளை கொண்டாடுகின்றனர், ஆனால் நீங்கள் வாழ்க்கையை ஹோலி ஆக்குகிறீர்கள். இந்த சங்கமயுகம் ஹோலி வாழ்க்கையின் யுகமாகும். ஆக வர்ணங்களில் கலந்து விட்டீர்கள் என்றால் அழிவற்ற வர்ணம் பூசப்பட்டு விட்டது. அதை அழிக்க வேண்டிய அவசியமில்லை. சதா காலத்திற்கு

பாப்சமான் ஆகி விட்டீர்கள். சங்கமயுகத்தில் நிராகார தந்தைக்குச் சமமாக கர்மாதீத ஸ்திதி, நிராகார ஸ்திதியின் அனுபவம் செய்கிறீர்கள், மேலும் 21-பிறவிகளுக்கு பிரம்மாபாபாவிற்கு சமமாக சர்வ குணங்கள் நிறைந்தவர்களாக, சம்பூர்ண நிர்விகாரி சிரேஷ்ட வாழ்க்கையின் அனுபவம் செய்கிறீர்கள். ஆக உங்களது ஹோலி என்றால் தந்தையின் சகவாசம் என்ற வர்ணத்தினால் தந்தைக்கு சமம் ஆவதாகும். அந்த அளவிற்கு உறுதியான வர்ணமாக இருக்க வேண்டும், அதாவது சமமாக ஆக்கி விடுங்கள். இவ்வாறு ஹோலி உலகில் யாராவது விளையாடுகிறார்களா? தந்தைக்கு சமமாக ஆக்குவதற்கான ஹோலி விளையாட வந்திருக்கின்றார். எத்தனை விதமாக வர்ணங்கள் தந்தையின் மூலம் ஒவ்வொரு ஆத்மாவிற்கும் அழிவற்றதாக பூசப்பட்டு விடுகிறது. ஞானத்தின் வர்ணம், நினைவின் வர்ணம், பல சக்திகளின் வர்ணம், குணங்களின் வர்ணம், சிரேஷ்ட திருஷ்டி, சிரேஷ்ட விருத்தி, சிரேஷ்ட பாவனை, சிரேஷ்ட விருப்பங்கள் தானாக சதா காலத்திற்கும் ஆகி விட வேண்டும். இந்த ஆன்மீக வர்ணம் எவ்வளவு எளிதாக பூசப்பட்டு விடுகிறது! தூய்மை ஆகி விட்டீர்கள் என்றால் ஹோலி ஆகி விட்டீர்கள். அவர்கள் ஹோலி கொண்டாடுகிறார்கள், குணம் எப்படியோ அவ்வாறு ரூபமாக ஆகி விடுகிறார்கள். அந்த நேரத்தில் யாராவது அவர்களை போட்டோ எடுத்தால் எப்படி இருக்கும்? அவர்கள் ஹோலி கொண்டாடி என்ன ஆகி விடுகின்றனர்? மேலும் நீங்கள் ஹோலி கெண்டாடி பரிஸ்தாவிலிருந்து தேவதைகளாக ஆகி விடுகிறீர்கள். அனைத்தும் உங்களது நினைவுச் சின்னங்கள் தான் ஆனால் ஆன்மீக சக்தியில்லாத காரணத்தினால் ஆன்மீக ரூபத்தில் கொண்டாட முடியாது. வெளிநோக்கு முகத்துடன் இருக்கின்ற காரணத்தினால் வெளி முகமாக கொண்டாடிக் கொண்டிருக் கின்றனர். உங்களுடையது யதார்த்த ரூபத்தில் மங்கள சந்திப்பு கொண்டாடுவதாகும்.

ஹோலியின் விசேˆதா எரிப்பது, பிறகு கொண்டாடுவது மேலும் மங்களகரமான சந்திப்பு செய்வதாகும். இந்த மூன்று விசேசதாவின் மூலம் நினைவுச்சின்னம் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில் நீங்கள் அனைவரும் ஹோலி ஆவதற்காக முதலில் பழைய சம்ஸ்காரங்கள், பழைய நினைவுகள் அனைத்தையும் யோக அக்னியில் எரித்து விட்டீர்கள், அதனால் தான் சகவாசம் என்ற வர்ணங்களின் ஹோலி கொண்டாடி யிருக்கிறீர்கள். அதாவது பாப்சமான் சகவாசத்தின் வர்ணம் பூசப்பட்டிருக்கிறது. எப்போது தந்தையின் சகவாசம் என்ற வர்ணம் பூசப்பட்டு விடுகிறதோ, அப்போது

உலகிலுள்ள அனைத்து ஆத்மாக்களும் பரமாத்மாவின் குடும்பமாக ஆகி விடுகிறது. பரமாத்மாவின் குடும்பமாக இருக்கின்ற காரணத்தினால் ஒவ்வொரு ஆத்மாவின் மீதும் சுபமான விருப்பம் இயற்கையான சன்ஸ்காரமாக தானாகவே ஏற்பட்டு விடுகிறது. ஆகையால் ஒருவரையொருவர் மங்களகரமான சந்திப்பு செய்து கொண்டிருக்கிறீர்கள். சிலர் எதிரியாகவும் இருக்கலாம், அசுர சன்ஸ்காரம் உடையவராகவும் இருக்கலாம், ஆனால் இந்த ஆன்மீக மங்களகரமாக சந்திப்பின் மூலம் அவர்களுக்கும் பரமாத்மாவின் வர்ணப் பொடியை அவசியம் பூசுகிறீர்கள். உங்களிடம் யாராவது வந்தால் என்ன செய்வீர்கள்? அனைவரையும் ஆலிங்கணம் செய்வது அதாவது சிரேஷ்ட ஆத்மா என்று புரிந்து கொண்டு ஆலிங்கணம் செய்ய வேண்டும். இவர் தந்தையின் குழந்தை ஆவார். இந்த அன்பான சந்திப்பு, சுப பாவணையின் சந்திப்பு அந்த ஆத்மாக்களையும் பழைய விசயங்களை மறக்க வைத்து விடும். அவர்களும் உற்சாகத்தில் வந்து விடுவார்கள். ஆகையால் உற்சவத்தின் ரூபத்தில் நினைவுச் சின்னமாக ஆக்கி விட்டனர். ஆக தந்தையிடம் ஹோலி கொண்டாடுவது என்றால் அழிவற்ற ஆன்மீக வர்ணங்களினால் தந்தைக்கு சமம் ஆவதாகும். அவர்கள் கவலையாக இருக்கின்றனர், ஆகையால் குஷியாக இருக்க வேண்டுமென்பதற்காக இந்த நாளை வைத்திருக்கின்றனர் ஆனால் நீங்கள் சதா குஷியில் ஆடிக் கொண்டு, பாடிக் கொண்டு, மகிழ்ச்சியை கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். என்ன நடந்தது? ஏன் நடந்தது? எப்படி நடந்தது? என்று யார் அதிகம் குழப்பம் அடைகிறார்களோ அவர்களால் மகிழ்ச்சியாக இருக்க முடியாது. நீங்கள் திரிகாலதர்சிகளாக ஆகி விட்டீர்கள், ஆகையால் ஏன், எதற்கு, எப்படி என்ற சங்கல்பம் வரவே முடியாது. ஏனெனில் மூன்று காலங்களையும் அறிவீர்கள். ஏன் நடந்தது? முன்னேறுவதற்கான பேப்பர் என்பதை அறிவீர்கள். ஏன் நடந்தது? எதுவும் புதிதல்ல. ஆக ஏன் நடந்தது? என்ற கேள்வியே கிடையாது. எப்படி நடந்தது? மாயை மேலும் உறுதியானவர்களாக ஆக்குவதற்காக வந்தது பிறகு சென்று விட்டது. ஆக திரிகாலதர்சி ஸ்திதி யுடையவர்கள் இதில் குழப்ப மடையமாட்டார்கள். கேள்விக்கு முன்பே பதில் வந்து விடுகிறது. ஏனெனில் திரிகாலதர்சிகளாக இருக்கிறீர்கள். பெயர் திரிகாலதர்சி, ஆனால் நிகழ்காலத்தை கூட அறிந்து கொள்ள முடியவில்லை, ஏன்? எப்படி நடந்தது? என்றால் அவர்களை திரிகாலதர்சி என்று கூற முடியுமா? பல முறை வெற்றியடைந்திருக்கிறீர்கள், மேலும் ஆகக் கூடியவர்களாகவும் இருக்கிறீர்கள். கடந்த காலம் மற்றும் எதிர்காலத்தையும் அறிவீர்கள் பிராமணர்களாகிய நாம் பரிஸ்தாக்கள்,

பரிஸ்தாவிலிருந்து பிறகு தேவதைகளாக ஆகக் கூடியவர்கள். இன்று மற்றும் நாளைய விசயமாகும். கேள்விகள் அழிந்து முற்றுப்புள்ளி வந்து விடுகிறது.

ஹோலி என்றால் ஹோ லி, கடந்தது கடந்து விட்டது. இவ்வாறு புள்ளி வைப்பதற்கு வருகிறதா! அல்லவா! இதுவும் ஹோலியின் பொருளாகும். எரிக்கும் ஹோலியும் செய்கிறீர்கள், வர்ணங்களினால் பூசப்படும் ஹோலியும் செய்கிறீர்கள் மற்றும் புள்ளி வைக்கும் ஹோலியும் செய்கிறீர்கள். மங்களகரமான சந்திப்பிற்கான ஹோலியும் செய்கிறீர்கள். நான்கு வகையான ஹோலியும் செய்கிறீர்கள் அல்லவா! ஒருவேளை இதில் ஒன்று குறைந்தாலும் ஒளிக் கிரீடம் நிலைத்திருக்காது. கீழே விழுந்து கொண்டே இருக்கும். கிரீடம் இறுக்கமாக இல்லையெனில் கிழே விழுந்து கொண்டே இருக்கும் அல்லவா! நான்கு வகையான ஹோலியும் கொண்டாடுவதில் பாஸ் ஆகியிருக்கிறீர்களா? பாப்சமான் ஆக வேண்டுமென்றால் பாபாவிற்கு சமமாகவும் ஆக வேண்டும், மேலும் சம்பூர்னமாகவும் ஆக வேண்டும். இன்னும் எவ்வளவு காலம் சதவிகிதம் இருக்கும்? யார் மீது அன்பு இருக்கிறதோ, அந்த அன்பானவர்களைப் போன்று (சமமாக) ஆவதற்கு கடினமாக இருக்காது. பாபாவின் மீது சதா அன்பானவர் களாக இருக்கிறீர்கள், ஆக சதா ஏன் சமம் ஆகக் கூடாது? எளிது தானே! நல்லது.

சதா ஹோலி மற்றும் மகிழ்ச்சியாக இருக்கக் கூடிய தூய அன்னப்பறவைகள் அனைவருக்கும் உயர்ந்ததிலும் உயர்ந்த பாப்சமான் ஹோலி ஆவதற்கான அழிவற்ற வாழ்த்துக்களை கொடுத்துக் கொண்டிருக்கின்றார். சதா பாப்சமான் ஆவதற்கான, சதா ஹோலி யுகத்தில் மகிழ்ச்சி கொண்டாடுவதற்கான வாழ்த்துக்கள் கொடுத்துக் கொண்டிருக்கின்றார். சதா தூய அன்னப்பறவையாகி ஞான இரத்தினங்களினால் நிறைந்தவர்களாக ஆவதற்கான வாழ்த்துக்களை கொடுத்துக் கொண்டிருக்கின்றார். அனைத்து வர்ணங்களினால் பூசப்பட்டு பூஜைக்குரிய ஆத்மா ஆவதற்கான வாழ்த்துக்கள் கொடுத்துக் கொண்டிருக்கின்றார். வாழ்த்துக்களும் கொடுக்கின்றார், அன்பு சதா நினைவுகளும் கொடுக்கின்றார். மேலும் சேவாதாரியான தந்தை எஜமானர்களாகிய குழந்தைகளுக்கு சதா நமஸ்தேயும் கூறுகின்றார். ஆக அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

இன்று மலேசியாக குழு இருக்கிறது. தென் கிழக்கு. நாம் எங்கெங்கேயோ காணாமல் போயிருந்தவர்கள் என்பதை அனைவரும் புரிந்திருக்கிறீர்களா? பரமாத்ம படகிலிருந்து இறங்கி எங்கெங்கேயோ சென்று விட்டோம். உலகம் என்ற கடலில் மூழ்கி விட்டோம். ஏனெனில் துவாபர யுகத்தில் ஆன்மீக அணுகுண்டிற்குப் பதிலாக சரீர உணர்வு என்ற அணுகுண்டு போடப்பட்டது. இராவணன் அணுகுண்டு போட்டு விட்டான் படகு உடைந்து விட்டது. பரமாத்ம குடும்பம் என்ற படகு உடைந்து விட்டது மற்றும் எங்கெங்கேயோ சென்று விட்டீர்கள், எங்கெல்லாம் உதவி கிடைத்ததோ சென்று விட்டீர்கள். மூழ்குபவருக்கு என்ன உதவி கிடைத்தாலும் பற்றிக் கொள்வார் அல்லவா! உங்கள் அனைவருக்கும் எந்த தர்மம், எந்த தேசம் என்ற சிறிது உதவி கிடைத்ததும் அங்கு சென்றடைந்து விட்டீர்கள் ஆனால் சன்ஸ்காரம் அதுவாகத் தான் இருக்கிறது அல்லவா! ஆகையால் வேறு தர்மத்தில் சென்றிருந்தாலும் தனது உண்மையான தர்மத்தின் அறிமுகம் கிடைத்ததும் வந்து விட்டீர்கள். முழு உலகிலும் சிதறியிருந்தீர்கள். இவ்வாறு காணாமல் போனதும் நன்மையானதாக இருக்கிறது. பல ஆத்மாக்களை ஒருவர் விடுவிக்கும் காரியம் செய்திருக்கின்றார். உலகில் பரமாத்ம குடும்பத்தின் அறிமுகம் கொடுப்பதற்காக கல்யாணகாரிகளாக ஆகி விட்டீர்கள். ஒருவேளை அனைவரும் பாரதத்திலேயே இருந்தீர்கள் எனில் உலக சேவை எப்படி நடைபெறும்? அதனால் தான் வெவ்வேறு நாடுகளுக்கு சென்றிருக்கிறீர்கள். அனைத்து முக்கிய தர்மங்களிலும் யாராவது ஒருவர் சென்றடைந்திருக்கிறீர்கள். ஒருவர் வெளிப்பட்டாலும் அருகில் இருப்பவர்களையும் அவசியம் விழிப்படையச் செய்கின்றார். பாப்தாதாவிற்கும் 5-ஆயிரம் ஆண்டிற்குப் பிறகு காணாமல் போன குழந்தைகளைப் பார்க்கின்ற போது குஷி ஏற்படுகிறது. உங்கள் அனைவருக்கும் குஷி ஏற்படுகிறது அல்லவா! வந்து சேர்ந்து விட்டீர்கள், அடைந்து விட்டீர்கள்.

மலேசியாவிலிருந்து எந்த வி.ஐ.பி யும் இதுவரை வரவில்லை. சேவையின் இலட்சியத்திற்காக அவர்களை நிமித்தமாக ஆக்க வேண்டியிருக்கிறது. சேவையின் தீவிர வேகத்திற்கு நிமித்தமாக ஆகி விடுகிறார்கள். ஆகையால் அவர்களை முன் நிறுத்த வேண்டியிருக்கிறது. தந்தைக்கு நீங்கள் தான் சிரேஷ்ட ஆத்மாக்கள் ஆவீர்கள். ஆன்மீக போதையில் சிரேஷ்ட ஆத்மாக்களாகிய நீங்கள் இருக்கிறீர்கள் தானே! பூஜைக்குரிய

ஆத்மாக்களாகிய நீங்கள் எங்கே! மாயாவிடம் மாட்டியிருக்கும் அவர்கள் எங்கே! அறியாத ஆத்மாக்களுக்கும் அறிமுகம் கொடுக்க வேண்டும் அல்லவா! சிங்கபூரிலும் இப்போது விருத்தியாகிக் கொண்டிருக்கிறது. எங்கு தந்தையின் ஒப்பற்ற குழந்தைகள் சென்றடைகிறார்களோ, இரத்தினம் இரத்தினத்தை தான் உருவாக்குவார்கள். தைரியம் வைத்து சேவையில் ஆர்வத்துடன் முன்னேறிக் கொண்டிருக்கிறீர்கள். ஆக முயற்சியின் பலன் உயர்ந்ததாகத் தான் இருக்கும். தனது குடும்பத்தை ஒன்றிணைக்க வேண்டும். குடும்பத்தை விட்டு காணாமல் போனவர்கள் குடும்பத்தில் வந்து சேர்ந்து விட்டார்கள் எனில் எவ்வளவு குஷி அடைவார்கள்! மேலும் மனதில் நன்றி கூறுவார்கள். ஆக இவர்களும் குடும்பத்தில் வந்து எவ்வளவு நன்றி கூறிக் கொண்டு இருப்பார்கள். நிமித்தமாகி தந்தையினுடையவர்களாக ஆக்கி விட்டார்கள். சங்கமத்தில் நன்றிக்கான மாலை மிகவும் பெரியதாகும். நல்லது.

**வரதானம்: சக்திசாலியான விருத்தி மூலம் மன சேவை செய்யக் கூடிய விஷ்வ கல்யாணகாரி ஆகுக!**

உலகில் அலையக் கூடிய ஆத்மாக்களுக்கு வழி கூறுவதற்காக சாட்சாத் பாப்சமான் லைட் ஹவுஸ், மைட் ஹவுஸ் ஆகுங்கள். ஒவ்வொரு ஆத்மாவிற்கும் ஏதாவது கொடுக்க வேண்டும் என்ற இலட்சியம் வையுங்கள். முக்தி கொடுத்தாலும் சரி அல்லது ஜீவன்முக்தி. அனைவருக்கும் மகாதானி மற்றும் வரதானி ஆகுங்கள். இப்போது அவரவர்களது இடங்களில் சேவை செய்து வருகிறீர்கள் ஆனால் ஒரு இடத்தில் இருந்து கொண்டு மன சக்தியின் மூலம் வாயுமண்டலம், வைபிரேசன் மூலம் உலக சேவை செய்யுங்கள். சக்திசாலியான விருத்தி உருவாக்குங்கள், அதன் முலம் வாயுமண்டலம் உருவாக வேண்டும் -அப்போது தான் விஷ்வ கல்யாணகாரி ஆத்மா என்று கூற முடியும்.

**சுலோகன்: அசரீரிக்கான பயிற்சி மற்றும் வீண் எண்ணங்கள் என்ற உணவில் பத்தியத்தின் மூலம் தன்னை ஆரோக்கியமானவர்களாக ஆக்குங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 27.03.1986 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சதா அன்பானவராக ஆகுங்கள்!

இன்று அன்புக்கடல் தந்தை தன்னுடைய அன்பான குழந்தைகளை சந்திப்பதற்காக வந்திருக்கின்றார். இந்த ஆன்மிக அன்பு ஒவ்வொரு குழந்தையையும் சகஜயோகியாக ஆக்குகின்றது. இந்த அன்பு முழு பழைய உலகத் தையும் எளிதாக மறப்பதற்கான சாதனமாக இருக்கின்றது. இந்த அன்பு ஒவ்வொரு ஆத்மாவையும் தந்தையினுடையவராக ஆக்குவதில் ஒரே ஒரு சக்திசாலியான சாதனமாக இருக்கின்றது. அன்பானது பிராமண வாழ்க்கையினுடைய அஸ்திவாரம் ஆகும். அன்பானது சக்திசாலியான வாழ்க்கையை உருவாக்குவதற்கான மற்றும் பாலனைக்கான ஆதாரம் ஆகும். அனைத்து சிரேஷ்ட ஆத்மாக்களாகிய நீங்கள் தந்தைக்கு முன் வந்து சேர்ந்து விட்டீர்கள். அனைவரும் வந்து சேர்வதற்குக் கூட ஆதாரம் அன்பு ஆகும். அன்பினுடைய இறக்கைகளால் பறந்து வந்து மதுபன் நிவாசியாக ஆகி விட்டீர்கள். பாப்தாதா அனைத்து அன்பான குழந்தைகளையும் பார்த்துக் கொண்டு இருந்தார்கள். அனைவரும் அன்பான குழந்தைகள் தான், ஆனால், வித்தியாசம் என்ன உள்ளது என்பதை பார்த்துக் கொண்டு இருந்தார்கள். வரிசைக்கிரமம் ஏன் உருவாகின்றது? காரணம் என்ன? அனைவருமே அன்பானவர்கள் தான், ஆனால், சிலர் சதா அன்பானவர்களாகவும், சிலர் அன்பானவர்களாகவும் இருக்கின்றார்கள். மேலும், நேரத்தின் அனுசாரமாக அன்பு செலுத்தக்கூடிய மூன்றாமவர்களும் இருக்கின்றார்கள். பாப்தாதா மூன்று விதமான அன்பான குழந்தைகளை பார்த்தார்கள்.

யார் சதா அன்பானவராக இருக்கின்றார்களோ, அவர்கள் அன்பில் மூழ்கி இருக்கக்கூடிய காரணத்தினால் முயற்சி மற்றும் கடினத்தில் இருந்து சதா மேலே இருக்கின்றார்கள். அவர்கள் முயற்சியும் செய்ய வேண்டியதில்லை, கடினத்தினுடைய அனுபவமும் செய்வது இல்லை. ஏனெனில், சதா அன்பானவராக இருக்கக்கூடிய காரணத்தினால் அவர்களுக்கு முன்பாக இயற்கை மற்றும் மாயை இரண்டுமே இப்பொழுதிலிருந்து தாசியாக

(வேலைக்காரனாக) ஆகி விடுகின்றது. அதாவது, சதா அன்பான ஆத்மா மாலிக்காக (எஜமானாக) இருப்பதினால் இயற்கை, மாயை தானாகவே வேலைக்காரன் ரூபமாகி விடுகின்றது. சதா அன்பானவர்களுடைய நேரம் மற்றும் எண்ணத்தினை தன் பக்கம் ஈடுபடுத்துவதற்கு இயற்கை மற்றும் மாயைக்கு தைரியம் கிடையாது. சதா அன்பான ஆத்மாக்களுடைய ஒவ்வொரு நேரமும், ஒவ்வொரு எண்ணமும் தந்தையினுடைய நினைவு மற்றும் சேவைக்காகத்தான் இருக்கும். எனவே, இயற்கை மற்றும் மாயை கூட சதா அன்பான குழந்தைகளாகிய இவர்கள் எண்ணத்திலும் கூட ஒருபொழுதும் நம்மிடம் அடிமையாக முடியாது என்பதை தெரிந்து இருக்கின்றது. சர்வ சக்திகளுடைய அதிகாரி ஆத்மாக்களாக இருக்கின்றார்கள். சதா சிநேகி ஆத்மாக்களுடைய ஸ்திதிக்கு தான் புகழ் இருக்கின்றது. ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் கிடையாது. தந்தை தான் உலகமாக இருக்கின்றார்.

இரண்டாம் நம்பர் -அன்பான ஆத்மாக்கள் அவசியம் அன்பானவராக இருப்பார்கள் ஆனால், சதா இல்லாத காரணத்தினால் அவ்வப்பொழுது மனதினுடைய எண்ணத்தின் மூலமாகக் கூட வேறு எங்காவது அன்பு சென்று விடுகின்றது. இடை இடையில் தன்னை கொஞ்சம் மாற்றம் செய்யக்கூடிய காரணத்தினால் அவ்வப் பொழுது முயற்சி, அவ்வப்பொழுது கடினத்தினுடைய அனுபவம் செய்கின்றனர் ஆனால், மிகவும் குறைவாக உள்ளது. எப்பொழுது ஏதாவது இயற்கை அல்லது மாயையினுடைய சூட்சும யுத்தம் நடைபெறுகின்றதோ, அந்த நேரம் அன்பினுடைய காரணத்தினால் நினைவானது சீக்கிரம் வந்து விடுகின்றது. மேலும், நினைவினுடைய சக்தியினால் தன்னை மிகவும் சீக்கிரமாக மாற்றம் செய்து விடுகின்றனர் ஆனால், கொஞ்ச நேரத்திலேயே மீண்டும் சங்கல்பம் கடினமானதாக மற்றும் உழைக்க வேண்டியதாக ஆகி விடுகிறது. அவ்வப்பொழுது அன்பு சாதாரணமாக ஆகி விடுகிறது. அவ்வப்பொழுது அன்பில் கலந்து இருக்கின்றனர். மனோநிலையில் வித்தியாசம் ஏற்பட்டுவிடுகின்றது. ஆனாலும், அதிகமான நேரம் மற்றும் எண்ணங்களை விரயம் ஆக்கவில்லை. எனவே, அன்பானவராக இருக்கின்றார்கள் ஆனால், சதா அன்பானவராக இல்லாத காரணத்தினால் இரண்டாம் நம்பருக்கு சென்றுவிடுகின்றனர்.

மூன்றாமவர்கள் -நேரத்தின் அனுசாரம் அன்பு செலுத்தக்கூடியவர்கள். உண்மையான அன்பு தந்தையைத் தவிர வேறு யாரிடமும் இருந்து கிடைக்க முடியாது மற்றும் இந்த ஆன்மிக அன்பானது சதா காலத்திற்கும் சிரேஷ்டமாக ஆக்கக்கூடியது என்று அந்த ஆத்மாக்கள் புரிந்து இருப்பார்கள். ஞானம் அதாவது அறிவு முழுமையாக உள்ளது. இந்த அன்பான வாழ்க்கை பிரியமானதாகவும் இருக்கிறது ஆனால், சிலர் தனது தேகத்தினுடைய பற்றின் சம்ஸ்காரம் அல்லது ஏதாவது விசேஷமான பழைய சம்ஸ்காரம் அல்லது மனிதன் மற்றும் பொருளினுடைய சம்ஸ்காரம் மற்றும் வீணான எண்ணங்களுடைய சமஸ்காரத்திற்கு அடிமையாகி, கட்டுப்படுத்தும் சக்தி இல்லாத காரணத்தினால் வீணான எண்ணங்களின் சுமையானது இருக்கின்றது. குழுவின் சக்தியினுடைய குறை இருக்கும் காரணத்தினால் குழுவில் வெற்றி பெற முடிவதில்லை. குழுவினுடைய சூழ்நிலை, அன்பினை அழித்து விட்டு தன் பக்கம் இழுத்து விடுகின்றது. இன்னும் சிலரோ எப்பொழுதுமே சீக்கிரத்தில் உள்ளச்சோர்வு அடைந்து விடுகின்றார்கள். அவ்வப்பொழுது மிகவும் நன்றாக பறந்து கொண்டு இருப்பார்கள் மற்றும் சில நேரம் பார்த்தால் தனக்குத் தானே உள்ளம் சோர்வடைந்து இருப்பார்கள். தனக்குத் தானே உள்ளம் சோர்வடையக் கூடிய சமஸ்காரம் கூட சதா அன்பானவராக ஆக விடுவதில்லை. ஏதாவது சமஸ்காரம் சூழ்நிலையின் பக்கம், இயற்கை யின் பக்கம் கவர்ச்சித்து விடுகின்றது. மேலும், எப்பொழுது குழப்பத்தில் வருகின்றார்களோ, அப்பொழுது அன்பினுடைய அனுபவம் இருக்கக் கூடிய காரணத்தினால், அன்பான வாழ்க்கை பிரியமானதாக இருக்கக்கூடிய காரணத்தினால் பிறகு தந்தையினுடைய நினைவு வருகின்றது. இப்பொழுது மறுபடியும் தந்தையினுடைய அன்பில் மூழ்க வேண்டும் என்று முயற்சி செய்கின்றார்கள். ஆகையினால், நேரத்தின் அனுசாரம், சூழ்நிலையின் அனுசாரம் குழப்பத்தில் வரக்கூடிய காரணத்தினால் சில நேரம் நினைவு செய்கின்றனர், சில நேரம் யுத்தம் செய்கின்றனர். யுத்தத்தின் வாழ்க்கை அதிகமாக இருக்கின்றது மற்றும் அன்பில் கலந்திருக்கக் கூடிய வாழ்க்கை அதனுடன் ஒப்பிடும்பொழுது குறைவாக இருக்கின்றது. எனவே, மூன்றாம் நம்பரில் வந்து விடுகின்றனர். ஆனாலும் கூட உலகத்தினுடைய அனைத்து ஆத்மாக்களை விட மூன்றாம் நம்பரில் உள்ளவர்கள் கூட மிகவும் உயர்ந்தவர்கள் என்று தான் சொல்லப்படுகின்றது. ஏனெனில், தந்தையை தெரிந்து கொண்டனர், தந்தையினுடையவராக ஆகி விட்டனர், பிராமண பரிவாரத்தினுடையவராக ஆகி விட்டனர். உயர்ந்ததிலும் உயர்ந்த பிராமண

ஆத்மாக்கள் பிரம்மா குமார், பிரம்மா குமாரி என்று அழைக்கப்படுகின்றார்கள். எனவே, உலகத்தோடு ஒப்பிடும்பொழுது அவர்களும் கூட சிரேஷ்ட ஆத்மாக்களே ஆவார்கள் ஆனால், சம்பூரணத்தன்மையின் கணக்குப்படி மூன்றாம் நம்பரில் இருக்கின்றனர். அனைவரும் அன்பானவர்கள் தான் ஆனால், வரிசைக்கிரமமாக உள்ளனர். முதல் நம்பர் சதா சிநேகி ஆத்மாக்கள், சதா தாமரை மலருக்கு சமமாக விடுபட்டவர்களாகவும் மற்றும் தந்தைக்கு மிகவும் பிரியமானவர்களாகவும் இருக்கின்றார்கள். அன்பான ஆத்மாக்கள் விடுபட்டவர்களாகவும் இருக்கின்றனர், அன்பானவர்களாகவும் கூட இருக்கின்றனர் ஆனால், தந்தைக்கு சமமாக, சக்திசாலியாக, வெற்றியாளராக இல்லை. அன்பில் மூழ்கிய நிலை இல்லை ஆனால், அன்பானவராக இருக்கின்றனர். அவர்களுடைய விசேசமான ஸ்லோகன் -உங்களுடையவராக இருக்கின்றோம், உங்களுடைய வராகவே இருப்போம். சதா இந்தப் பாடலை பாடிக் கொண்டே இருப்பார்கள். ஆனாலும் கூட அன்பு உள்ளது. எனவே, 80-சதவிகிதம் பாதுகாப்பாக இருக்கின்றார்கள். ஆனாலும் அவ்வப்பொழுது என்ற வார்த்தை வந்து விடுகின்றது. சதா என்ற வார்த்தை வருவது இல்லை. மேலும், மூன்றாம் நம்பர் ஆத்மாக்கள் அடிக்கடி அன்பினுடைய காரணத்தினால் உறுதிமொழிகளும் கூட அன்புடன் செய்கின்றனர். இப்பொழுதிலிருந்து அவ்வாறு ஆக வேண்டும், இப்பொழுதிலிருந்து இதைச் செய்வேன் என்று உறுதிமொழி செய்கின்றனர். வித்தியாசத்தை தெரிந்து இருக் கின்றீர்கள் அல்லவா. உறுதிமொழியும் கூட செய்கின்றார்கள், முயற்சியும் கூட செய்கின்றார்கள், ஆனால், ஏதாவது விசேசமான பழைய சமஸ்காரம் அன்பில் மூழ்கியிருக்க விடுவதில்லை. தடைகளானது அன்பில் மூழ்கிய நிலையிலிருந்து கீழே கொண்டு வந்து விடுகிறது. எனவே, சதா என்ற வார்த்தை வர முடியாது ஆனால், சில நேரம் ஒரு நிலை, சில நேரம் வேறொரு நிலையில் இருக்கும் காரணத்தினால் ஏதாவது பலவீனமானது விசேசமாக தங்கி விடுகின்றது. அத்தகைய ஆத்மாக்கள் பாப்தாதாவிற்கு முன்பு ஆன்மிக உரையாடல் கூட மிகவும் இனிமையாக செய்கின்றனர். வாதம், விவாதம் கூட நிறைய செய்கின்றனர். கட்டளையோ உங்களுடையது, ஆனால், எங்களுக்காக நீங்களே செய்யுங்கள், பலன் மட்டும் நாங்கள் அடைய வேண்டும் என்று சொல்கின்றனர். நீங்கள் தன்னுடையவராக ஆக்கியிருக்கிறீர்கள் எனில், நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் என்று விவாதத்தின் கூடவே அன்பாக சொல்கின்றனர். தந்தை பார்த்துக் கொள்வார், ஆனால், குழந்தைகள் ஏற்றுக் கொண்டால்

தானே நல்லது என்று தந்தை கூறுகின்றார் ஆனால், நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோமோ, இல்லையோ ஆனால், நீங்கள் பார்த்துக் கொள்ளத் தான் வேண்டும் என்று குழந்தைகள் வாதம் செய்கின்றனர். ஆனாலும் பிராமண குழந்தைகள் ஆயிற்றே என்று தந்தைக்குக் குழந்தைகள் மீது கருணை வருகின்றது. ஆகையினால், சுயம் தந்தையும் கூட நிமித்தம் ஆகியிருக்கும் ஆத்மாக்கள் மூலமாக சக்தியும் கொடுக்கின்றார் ஆனால், ஏதாவது சக்தியைப் பெற்று மாற்றம் கூட செய்து விடுகின்றனர். மேலும், ஏதாவது சக்தி கிடைக்கும்போதிலும் தன்னுடைய சமஸ்காரங்களின் போதையில் இருக்கக்கூடிய காரணத்தினால் சக்தியை தாரணை செய்ய முடிவது இல்லை. எவ்வாறு ஏதாவது சக்தி நிறைந்த பொருள் பரிமாறப்படுகின்றது, ஆனால், அதனை சாப்பிடவில்லை என்றால் என்ன செய்வது!

தந்தை விசேசமாக சக்தியும் கொடுக்கின்றார். மேலும், சிலர் கொஞ்சம் கொஞ்சமாக சக்திசாலியாகி ஆகி  மூன்றாம் நம்பரிலிருந்து இரண்டாம் நம்பரில் வந்து விடுகின்றனர் ஆனால், சிலர் மிகவும் சோம்பேறித்தனமாக இருக்கக்கூடிய காரணத்தினால் எவ்வளவு எடுக்க வேண்டுமோ அவ்வளவு எடுக்க முடிவதில்லை. மூன்று விதமான அன்பான குழந்தைகள் இருக்கின்றனர். அன்பான குழந்தைகள் என்ற பட்டம் (டைட்டில்) அனைவருக்கும் கிடைத்து இருக்கின்றது ஆனால், வரிசைக்கிரமமாக உள்ளனர்.

இன்று ஜெர்மனியை சேர்ந்தவர்களுக்கான முறை ஆகும். முழு குழுவுமே நம்பர் ஒன் ஆவீர்கள் அல்லவா. நம்பர் ஒன் சமீப இரத்தினமாக இருக்கின்றீர்கள். ஏனெனில், யார் சமமாக இருக்கின்றார்களோ, அவர்கள் தான் சமீபமாக இருக்கின்றார்கள். சரீரத்தினால் எவ்வளவு தான் தூரமாக இருந்தாலும் உள்ளத்தால் அந்தளவு அருகாமையில் இருக்கின்றீர்கள், அதாவது, இருப்பதே உள்ளத்தில் தான். சுயம் தந்தையினுடைய இதய சிம்மாசனத்தில் இருக்கின்றீர்கள். அவர்களுடைய உள்ளத்தில் தானாகவே தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை. ஏனெனில் பிராமண வாழ்க்கையில் தந்தை உள்ளத்தினுடைய வியாபாரமே செய்திருக்கின்றார். உள்ளத்தினை பெறுவதும் தருவதுமாக உள்ளத்தினுடைய வியாபாரம் செய்யப்பட்டுவிட்டது அல்லவா. உள்ளத்தினால் தந்தையுடன் சேர்ந்து இருக்கின்றீர்கள். சரீரத்தால் சிலர் எங்கேயோ, சிலர் எங்கேயோ

இருக்கின்றீர்கள். அனைவரையும் இங்கே வைத்துக் கொண்டால், இங்கே இருந்துகொண்டு என்ன செய்வீர்கள்! சேவைக்காக மதுபனில், உடனிருப்பவர்களையும் கூட வெளியே அனுப்ப வேண்டியதாக இருந்தது. இல்லையெனில், உலகத்தினுடைய சேவை எவ்வாறு நடக்கும்? தந்தையிடமும் அன்பு இருக்கின்றது, எனவே, சேவையின் மீதும் கூட அன்பு இருக்கின்றது. எனவே, நாடக அனுசாரமாக வெவ்வேறு இடங்களுக்கு சென்று இருக்கின்றீர்கள், மேலும், அங்குள்ள சேவைக்கு நிமித்தமாகி விட்டீர்கள். இதுவும் கூட நாடகத்தினுடைய நடிப்பில் அடங்கியிருக்கின்றது. தனக்கு சமமானவர்களுக்கு சேவை செய்வதற்கு நிமித்தமாகி விட்டீர்கள். ஜெர்மனியை சேர்ந்தவர்கள் சதா மகிழ்ச்சியாக இருக்கக்கூடியவர்கள் அல்லவா. தந்தையிடமிருந்து சதா என்பதற்கான ஆஸ்தி இந்தளவு சகஜமாக கிடைத்து கொண்டு இருக்கின்றது, எனில், சதா என்பதை விட்டுவிட்டு சிறிது அல்லது அவ்வப்பொழுது என்று ஏன் பெற வேண்டும். வள்ளல் கொடுத்துக் கொண்டே இருக்கின்றார். எடுக்கக்கூடியவர்கள் ஏன் குறைவாக எடுக்கின்றீர்கள்? எனவே, சதா மகிழ்ச்சியினுடைய ஊஞ்சலில் ஆடிக் கொண்டே இருங்கள். சதா மாயையை வென்றவராகி, இயற்கையின் மீது வெற்றி அடைந்தவராகி வெற்றியினுடைய முரசொலியை உலகத்திற்கு முன்பு உரக்க ஒலிக்கச் செய்யுங்கள்.

தற்காலத்தில் ஆத்மாக்கள் அழியக்கூடிய சாதனங்கள் அல்லது அதிக போதையில் மூழ்கி இருக்கின்றனர் மற்றும் துக்கம், அசாந்தியினால் களைப்படைந்து, சின்ன சப்தம் கூட கேட்காத அளவிற்கு ஆழ்ந்த நித்திரையில் தூங்கிக் கொண்டு இருக்கின்றனர். போதையில் யார் மூழ்கி இருக்கின்றார்களோ, அவர்களை அசைக்க வேண்டியதாக இருக்கின்றது. ஆழமான தூக்கத்தில் இருப்பவர்களையும் கூட அசைத்து எழுப்ப வேண்டியதாக இருக்கின்றது. ஆகையால், ஹம்பர்க் என்ற நகரத்தில் இருப்பவர்கள் என்ன செய்து கொண்டு இருக்கின்றீர்கள்? இது நல்ல சக்திசாலியான குழு. அனைவருக்கும் தந்தை மற்றும் படிப்பின் மீது அன்பு நன்றாக இருக்கின்றது. யாருக்கு படிப்பின் மீது அன்பு இருக்கின்றதோ, அவர்கள் சதா சக்திசாலியாக இருக்கின்றார்கள். தந்தை அதாவது முரளிதரன் மீது அன்பு இருப்பது என்றால் முரளி மீது அன்பு உள்ளது என்று அர்த்தம். முரளி மீது அன்பு இல்லையெனில் முரளிதரர் மீதும் அன்பு இல்லை என்பதாகும். எனக்கு தந்தை மீது அன்பு இருக்கின்றது, ஆனால், படிப்பதற்கு நேரம் இல்லை என்று எவ்வளவு தான் ஒருவர் சொன்னாலும் தந்தை அதை

ஏற்றுக் கொள்வதில்லை. எங்கே ஈடுபாடு இருக்கின்றதோ, அங்கே எந்தவிதமான தடையும் நிற்க முடியாது. தானாகவே தடைகள் அழிந்து விடும். படிப்பின் மீது அன்பு, முரளி மீது அன்பு கொண்டவர்கள் தடைகளை சகஜமாகக் கடந்து சென்றுவிடுவார்கள். பறக்கும் கலை மூலமாக சுயம் உயர்ந்தவராக ஆகி விடுவார்கள். தடைகளானது கீழே தங்கி விடும். பறக்கும் கலை உடையவர்களுக்கு மலையும் கூட ஒரு கல்லுக்கு சமமாக இருக்கின்றது. படிப்பின் மீது அன்பு இருக்கக்கூடியவர்கள் எந்த சாக்குபோக்கும் சொல்லமாட்டார்கள். அன்பானது கடினத்தை எளிதானதாக ஆக்கி விடுகிறது. ஒன்று முரளியின் மீது அன்பு, படிப்பின் மீது அன்பு மற்றும் பரிவாரத்தினுடைய அன்பானது கோட்டை போல் ஆகி விடுகின்றது. கோட்டையில் இருக்கக்கூடியவர்கள் பாதுகாப்பாக இருப்பார்கள். இந்தக் குழு இந்த இரண்டு விசேஷத்தன்மைகளால் முன்னேறிக் கொண்டே இருக்கின்றது. படிப்பு மற்றும் பரிவாரத்தினுடைய அன்பின் காரணத்தினால் ஒருவர் மற்றவர்களை அன்பினுடைய பிரபாவத்தினால் நெருக்கமானவர்களாக ஆக்கி விடுகின்றீர்கள். மேலும், நிமித்த ஆத்மாவும் அன்பானவராகக் கிடைத்து இருக்கின்றார். அன்பானது மொழியைக் கூட பார்ப்பது இல்லை. அன்பினுடைய மொழியானது அனைத்து மொழிகளையும் விட உயர்ந்தது. அனைவரும் அவரை நினைவு செய்து கொண்டு இருக்கின்றார்கள். பாப்தாதாவிற்கும் கூட நினைவு உள்ளது. சான்றை நல்லவிதமாக (பாப்தாதா) பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள். சேவையினுடைய வளர்ச்சியும் ஏற்பட்டுக் கொண்டு இருக்கின்றது. எந்தளவு வளர்ச்சி செய்து கொண்டு இருக்கின்றீர்களோ, அந்தளவு மகான் புண்ணிய ஆத்மா ஆகியிருப்பதற்கான பலனாக அனைவருடைய ஆசிர்வாதமும் கிடைத்துக் கொண்டே இருக்கும். புண்ணிய ஆத்மா தான் பூஜைக்குரிய ஆத்மாவாக ஆகின்றார்கள். இப்பொழுது புண்ணிய ஆத்மாவாக இல்லையெனில் எதிர்காலத்தில் பூஜைக்குரிய ஆத்மாவாக ஆக முடியாது. புண்ணிய ஆத்மா ஆகுவது கூட அவசியமானது ஆகும். நல்லது.

**வரதானம்: ஒவ்வொரு ஆத்மாவிற்கும் தைரியம், உற்சாகத்தினைக் கொடுக்கக்கூடிய கருணையுள்ளம் உடையவராக, உலகத்திற்கு நன்மை செய்யக்கூடியவராக ஆகுக!**

ஒருபொழுதும் பிராமண பரிவாரத்தில் எந்தவொரு பலவீனமான ஆத்மாவையும் நீங்கள் பலவீனமானவர்கள் என்று சொல்லக்கூடாது.

கருணையுள்ளம் கொண்ட விஷ்வ கல்யாணகாரி குழந்தைகளாகிய உங்களுடைய வாயிலிருந்து சதா ஒவ்வொரு ஆத்மாவிற்கும் சுபமான வார்த்தை வெளிப்பட வேண்டும், மனச்சோர்வு அடையச் செய்யக்கூடிய வார்த்தை வெளிப்படக்கூடாது. ஒருவர் எவ்வளவு தான் பலவீனமாக இருந்தாலும், அவர்களுக்கு சமிக்ஞை அல்லது படிப்பினைக் கொடுக்க வேண்டுமென்றால் முதலில் அவர்களை சக்திசாலியாக ஆக்கி, பிறகு படிப்பினை கொடுங்கள். முதலில் பூமியில் தைரியம் மற்றும் உற்சாகத்தினுடைய கலப்பையைக் கொண்டு உழ வேண்டும், பிறகு, விதை போடுங்கள். அப்பொழுது எளிதாகவே ஒவ்வொரு விதைக்கான பலன் வெளிப்படும். இதன் மூலமாக உலக நன்மைக்கான சேவை தீவிரமானதாகி விடும்.

**சுலோகன்: தந்தையினுடைய ஆசிர்வாதங்களை பெற்றுக் கொண்டு சதா பரிபூரண தன்மையின் அனுபவம் செய்யுங்கள்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 29.03.1986 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகளுடன் பாப்தாதாவின் உரையாடல்!

இன்று பாப்தாதா நாலாபுறத்தின் இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகளை வதனத்தில் இமர்ஜ் செய்து, குழந்தைகள் அனைவரின் விசேஷதாக்களைப் பார்த்துக் கொண்டிருந்தார். ஏனென்றால் விசேஷ ஆத்மாக்கள், அதனால் தான் பாபாவுடையவர்களாக ஆகியிருக்கிறார்கள், அதாவது சிரேஷ்ட பாக்கிய வான் ஆகியிருக்கிறார்கள். அனைவருமே விசேஷ மானவர்கள் தாம் என்றாலும் பிறகும் கூட நம்பர்வார் என்று தான் சொல்வார்கள்.ஆக, இன்று பாப்தாதா இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகளை விசேஷ ரூபத்தில் பார்த்துக் கொண்டிருந்தார். கொஞ்ச காலத்தில் நாலாபுரமும் உள்ள பலவிதமான பழக்க-வழக்கங்கள் மற்றும் நம்பிக்கைகள் இருந்த போதும் ஒரு நம்பிக்கையின் ஒரே வழிமுறையைப் பின்பற்று பவர்களாக ஆகியிருக்கின்றனர். பாப்தாதா விசேஷமாாக இரண்டு விசேஷதாக்களை பெரும்பான்மையினரிடம் பார்த்துக் கொண்டிருந்தார். ஒன்று, சிநேகத்தின் சம்மந்தத்தில் மிக விரைவாகக் கட்டுண்டு விட்டனர். சிநேகத்தின் சம்மந்தத்தில், எஸ்ரிய பரிவரத்தவரமக ஆவதில், பயாவுடைய வராக ஆவதில் நல்ல சகயோகம் கொடுத்துள்ளனர். ஆக, ஒன்று சிநேகத்தில் வருவதின் விசேஷதா. இரண்டாவது சிநேகத்தின் காரணத்தால் பரிவர்த்தன்-சக்தியை சகஜமாக நடைமுறையில் கொண்டு வந்தனர். சுய மாற்றம் மற்றும் தன்னைச் சேர்ந்தவர்களின் மாற்றத்தில் நல்ல ஈடுபாட்டுடன் முன்னேறிக் கொண்டுள்ளனர். ஆக, சிநேகத்தின் சக்தி மற்றும் மாற்றுவதற்கான சக்தி என்ற இரண்டு விசேகாக்களையும் தைரியமாக தாரணை செய்து நன்றாகவே நிரூபணம் காட்டிக் கொண்டுள்ளனர்.

இன்று வதனத்தில் பாப்தாதா தங்களுக்குள் குழந்தைகளின் விசேஷதாவைப் பற்றி ஆன்மிக உரையாடல் செய்து கொண்டிருந்தனர். இப்போது இந்த ஆண்டிற்கான வீபக்கத்தில் அவ்க்தத்தைச் சந்திப்பதற்கான சீசன் என்றாலும் சரி, சந்திப்பின் திருவிழா என்றாலும் சரி. அது

முடிவடைந்து கொண்டிருக்கிறது. ஆகவே பாப்தாதா அனைவரின் ரிஸல்ட்டைப் பார்த்துக் கொண்டிருந்தனர். பொதுவாக அவ்யக்த ஸ்திதியின் மூலம் அவ்யக்த ரூபத்துடனான சந்திப்பு சதா காலத்திற்கும் இருக்கவே செய்கிறது, இனியும் இருக்கும் ஆனால் சாகார ரூபத்தின் மூலம் சந்திப்பதற்கான சமயத்தை நிச்சயம் செய்ய வேண்டி உள்ளது. மேலும் இதில் சாயத்தின் வரையறை வைக்க வேண்டி உள்ளது. அவ்பக்க ரூபத்தின் சந்திப்பில் சமயத்தின் வரையறை கிடையாது. யார் எந்த அளவுக்கு சந்திக்க விரும்புகிறாரோ. அவ்வளவு சந்திக்க முடியும். அவ்யக்த சக்தியின் அனுபவத்தை அடைந்து தன்னையும் சேவையையும் சதா முன்னேற்றத்தில் கொண்டு செல்ல முடியும். பிறகும் கூட நிச்சயிக்கப்பட்ட சமயத்தின் பிரகாரம் இந்த ஆண்டின் இந்த சீசன் முடிந்து கொண்டிருக்கிறது ஆனால் முடியவில்லை, நிறைவு செய்து கொண்டிருக்கிறோம். சந்திப்பது என்றால் சமமாக ஆவது. சமமாக ஆகியிருக்கிறீர்கள் இல்லையா? ஆக, இது முடிவு இல்லை. சீசன் சமயமோ முடிந்து கொண்டிருக்கலாம் ஆனால் சுயம் சமமாகவும் சம்பன்ன மாகவும் ஆகி விட்டீர்கள். எனவே பாப்தாதா நாலாபுறமும் உள்ள இரட்டை வெளிநாட்டுக் குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சியடைந்து கொண்டிருக்கிறார். ஏனென்றால் சாகாரத்திலோ யாராவது வர முடியும், சிவர் வர முடியாமலும் போகலாம். ஆகவே தங்களின் படம் அல்லது கடிதத்தை அனுப்பி வைக்கின்றனர் ஆனால் அவ்யக்க ரூபத்தில் பாப்தாதா நாலாபுறத்தின் குழுக்களை சகஜமாக வெளிப்படுத்த முடியும். இங்கே அனைவரையும் அழைத்தால் பிறகு அவர்கள் தங்குவதற்கான சாதனங்கள் தேவைப்படும். அவ்யக்த வதனத்திலோ இந்த ஸ்தூல சாதனங்கள் எதுவும் தேவையில்லை. அங்கோ இரட்டை வெளிநாட்டினர் மட்டுமென்ன. முழு பாரதத்தின் குழந்தைகளும் ஒன்று சேர்ந்தாலும் கூட அது எல்லையற்ற அன்பக்த வதனமாகத் தோன்றும். அங்கே எத்தனை லட்சம் பேர் இருந்தாலும் பிறகும் கூட அது சிறிய குழுவாகக் காணப்படும். ஆக. இன்று வதனத்தில் இரட்டை வெளிநாட்டினரை மட்டும் வெளிப்படுத்தியிருந்தார்.

பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார் வெவ்வேறு பழக்க-வழக்கங்கள் இருந்த போதிலும் திட சங்கல்பத்தின் மூலம் நன்கு முன்னேறியிருக்கிறீர்கள். பெரும்பாலானோர் ஊக்கம்-உற்சாகத்தில் சென்று கொண்டிருக்கின்றனர். சிலர் விளையாட்டுக் காட்டுபவர்களாகவும் உள்ளனர் ஆனால் முடிவில் (ரிசல்ட் இந்த வித்தியாசத்தைப் பார்த்தோம்,

அதாவது முந்தைய வருடம் வரையிலும் அதிகமாகக் குழப்பாடைந்திருந்தனர் ஆனால் இந்த வருடத்தின் முடிவில் அநேகக் குழந்தைகளிடம் முதலிலிருந்தே உறுதியாக இருப்பதைப் பார்த்தோம். சிலர் பாப்தாதாவுக்கு விளையாட்டுக் காட்டும் குழந்தைகளாகவும் இருந்தனர். குழப்பமடைவதாகவும் விளையாட்டுக் காட்டுகின்றனர் இல்லையா? அந்தச் சமயத்தின் வீடியோவை வெளிப்படுத்தி அமர்ந்து பார்ப்பீர்களானால் உங்களுக்கு முற்றிலும் டிராமாவாகவே இருக்கும் ஆனால் முதலில் இருந்ததற்கு இப்போது வேறுபாடு உள்ளது. இப்போது அனுபவி ஆகி விட்ட, கம்பீரமானவர்களாகவும் ஆகி க் கொண்டுள்ளனர். ஆக, இந்த ரிசல்ட்டைப் பார்த்தோம், அதாவது படிப்பின் மீது அன்பு மற்றும் நினைவில் இருப்பதற்கான ஊக்கம் வெவ்வேறு பழக்க-வழக்கங்களின் நம்பிக்கையை சுலபமாக மாற்றி விட்டுள்ளது. பாரதவாசிகளுக்கு மாறுவதில் சுலபம். தேவதைகளைப் பற்றி அறிவார்கள். சாஸ்திரங்களின் கலப்பட ஞானத்தை அறிந்துள்ளனர் என்பதால் நம்பிக்கைகள் பாரதவாசி களுக்கு அவ்வளவு புதுமையாக இருப்பதில்லை, பிறகும் கூட மொத்தத்தில் நாலாபுறமும் உள்ள குழந்தைகளிடம் அந்த மாதிரி நிச்சயபுத்தி உள்ளவர்களாக, ஆடாத, அசையாத ஆத்மாக்களைப் பார்த்தோம். அந்த மாதிரி நிச்சயபுத்தி உள்ளவர்கள் மற்றவர்களையும் கூட நிச்சயபுத்தி உள்ளவர்களாக ஆக்குவதில் உதாரணமாக ஆகியிருக்கிறார்கள். இல்லறத்தில் இருந்தாலும் சக்திசாலி சங்கல்பத்தின் மூலம் திருஷ்டி, விருத்தியை மாற்றி விடுகின்றனர். அத்தகைய விசேஷ ரத்தினங்களையும் பார்த்தோம். அநேகம் அந்த மாதிரி குழந்தைகளும் உள்ளனர் -எவ்வளவு தான் தங்களின் வழக்கப்படி அல்பகால சாதனங்களில், அல்பகால சுகங்களில் மூழ்கியவர் களாக இருந்திருந்தாலும், அந்த மாதிரி இரவு-பகலாக மாற்றமடைவதில் நல்ல தீவிர புரு கர்த்தத்தின் வரிசையில் சென்று கொண்டுள்ளனர். அதிக எண்ணிக்கை இல்லையென்றாலும் கூட இது நன்றாக உள்ளது. எப்படி பாப்தாதா பலி கொடுப்பது பற்றிய உதாரணம் சொல்கிறார். அது போல் மனதால் தியாகத்திற்கான சங்கல்பம் செய்த பிறகு கண்களின் பார்வை கூட சென்று விடக் கூடாது. இன்று மொத்தமாக ரிசல்ட்டைப் பார்த்துக் கொண்டிருந்தோம். சக்திசாலி ஆத்மாக்களைப் பார்த்து பாப்தாதா புன்சிரிப்புடன் ஆன்மிக உரையாடல் செய்து கொண்டிருந்தனர் -பிரம்மாவின் படைப்பு இரண்டு விதம் எனப் பாடப்பட்டுள்ளது. ஒரு பிரம்மாவின் முகத்தின் மூலம் பிராமணர்கள் வெளிப்பட்டனர். மற்றும் இரண்டாவது படைப்பு -பிரம்மா சங்கல்பத்தின் மூலம் சிருஷ்டியைப்

படைத்தார். ஆக, பிரம்மா எவ்வளவு காலமாக சிரேஷ்ட சக்திசாலி சங்கல்பம் செய்தார்! பாப்தாதா இருவருமே உள்ளனர் என்றாலும் படைப்பை சிவபாபாவின் படைப்பு எனச் சொல்ல மாட்டார்கள். சிவவம்சி எனச் சொல்வார்கள். சிவகுமார் சிவகுமாரி எனச் சொல்ல மாட்டார்கள். பிரம்மாகுமார் பிரம்மாகுமாரி எனச் சொல்வார்கள். ஆக, பிரம்மா விசேஷ சிரேஷ்ட சங்கல்பத்தின் மூலம் ஆவாஹனம் செய்தார், அதாவது படைப்பைப் படைத்தார். ஆக, இந்த பிரம்மாவின் சக்திசாலி சங்கல்பத்தின் மூலம், ஆவாஹனத்தின் மூலம் சாகாரத்தில் வந்து சேர்ந்திருக்கிறீர்கள்.

சங்கல்பத்தின் படைப்பும் கூட குறைவானதில்லை. எப்படி சங்கல்பம் சக்திசாலியாக இருந்தால் தூரத்திலிருந்தே பலவிதமான திரைகளின் உள்ளேயிருந்து குழந்தைகளைத் தங்களின் பரிவாரத்தில் கொண்டு வர வேண்டி இருந்தது, பிரேஷ் சக்திசாவி சங்கள்பத்தின் தூண்டுதலால் சுத்தில் கொண்டு வந்தீர்கள். அதனால் இந்த சக்திசாலி சங்கல்பத்தின் படைப்பும் கூட சக்திசாலி தான். அநேகருக்கு அனுபவமும் உள்ளது -புத்தியை விசேஷமாக யாரோ தூண்டி சமீபத்தில் கொண்டு வருகிறார்கள். பிரம்மாவின் சக்திசாலி சங்கல்பத்தினால் பிரம்மாவின் சித்திரத்தைப் பார்த்ததுமே சைதன்யத்தின் அனுபவம் ஏற்படுகிறது. சைதன்ய சம்மந்தத்தின் அனுபவத்தின் மூலம் முன்னேறிக் கொண்டிருக்கிறீர்கள். ஆக, பாப்தாதா இந்தப் படைப்பினைப் பார்த்து மகிழ்ச்சியடைகிறார். இனிமேலும் கூட இன்னும் சக்திசாலி படைப்பின் பிரத்தியட்ச நிரூபணத்தைக் கொடுத்துக் கொண்டி ருப்பீர்கள். இரட்டை வெளிநாட்டினரின் சேவை சமயத்தின் கணக்கின்படி இப்போது குழந்தைப் பருவத்தின் சமயம் முடிவடைந்தது. இப்போது அனுபவி ஆகி, மற்றவர்களையும் கூட ஆடாத. அசையாதவராக ஆக்குவதற்கான அனுபவம் செய்வதற்கான சமயமளகும். இப்போது விளையாடு வதற்கான சமயம் முடிந்து விட்டது, இப்போது சதா சக்திசாலி ஆகி, பலமற்ற ஆத்மாக்களை சக்திசாலி ஆக்கிக் கொண்டே செல்லுங்கள். உங்களிடம் பலமற்ற தன்மையின் சம்ஸ்காரம் இருக்குமானால் மற்றவர்களையும் கூட பலமற்றவராக ஆக்குவீர்கள். சமயம் குறைவாக உள்ளது. படைப்புகள் இன்னும் அதிகத்திலும் அதிகமாக வரப் போகிறார்கள். இவ்வளவு எண்ணிக்கையிலேயே நிறைய பேர் வந்து விட்டார்கள் என்று குஷியடைந்து விடக் கூடாது. இப்போதோ எண்ணிக்கை அதிகமாகத் தான் போகிறது, ஆனால் எப்படி நீங்கள் இவ்வளவு காலமாகப் பாலனை பெற்றீர்களோ, அது

இப்போது மாற்றமடைந்து கொண்டே போகும். எப்படி 50-ஆண்டுகளின் பாலனை பெற்றதின் பொன்விழாவுக்கும் வெள்ளி விழாவுக்கும் வித்தியாசம் உள்ளது இல்லையா? அது போல் பின்னால் வருபவர்களிடம் வித்தியாசம் இருந்து கொண்டே போகும். ஆக, குறைந்த சமயத்தில் அவர்களை சக்திசாவி ஆக்க வேண்டும். சுயம் அவர்களுக்கு சிரேஷ் பாவனை இருக்கவே செய்யும் ஆனால் உங்களனைவருக்கும் கூட அந்த மாதிரி குறைந்த சமயத்தில் முன்னேறக் கூடிய குழந்தை களுக்குத் தங்களின் சம்மந்தம் தொடர்பின் சகயோகம் கொடுக்கத் தான் வேண்டும். இதன் மூலம் அவர்களுக்கு சகஜமாக முன்னேறுவதற்கான ஊக்கம் மற்றும் தைரியம் வரும். இப்போது இந்த சேவை அதிகம் நடைபெற வேண்டும். தனக்காக மட்டும் சக்தி களைச் சேமிப்பதற்கான சமயம் இல்லை ஆனால் தனக்காக மட்டுமல்லாமல் மற்றவர்களுக்காகவும் கூட சக்திகளை அவ்வளவு சேமிக்க வேண்டும் -இதன் மூலம் மற்றவர்களுக்கும் கூட சகயோகம் கொடுக்க முடிய வேண்டும். சகயோகம் பெறுபவர்களாக மட்டும் இல்லாமல் கொடுப்பவர்களாகவும் ஆக வேண்டும். யாருக்கு இரண்டு ஆண்டுகள் முடிந்துள்ளனவோ, அவர்களுக்கு இரண்டு ஆண்டுகள் கூட குறைவானதில்லை. குறைந்த சமயத்தில் அதிக அனுபவம் பெற வேண்டும். எப்படி கல்ப விருட்சத்தில் காட்டுகிறீர்கள் இல்லையா -கடைசியில் வரும் ஆத்மாக்களும் கூட நான்கு நிலைகளை அவசியம் கடந்தாக வேண்டும். பிறகு 10-12 பிறவிகள் இருந்தாலும் சரி, எத்தனை இருந்தாலும் சரி. ஆக, பின்னால் வருபவர்களும் குறைந்த சமயத்தில் சர்வ சக்திகளின் அனுபவம் செய்யத் தான் வேண்டும். மாணவ வாழ்க்கையினுடைய மற்றும் அதனுடன் சேவாதாரியின் அனுபவமும் கூடப் பெற வேண்டும். சேவாதாழி என்றுள் வெறுபனே கோர்ஸ் கொடுப்பது அல்லது சொற்பொழிவு செய்வது மட்டுமில்லை. சேவாதாரி என்றால் சதா ஊக்கம்-உற்சாகத்தின் சகயோகம் கொடுக்க வேண்டும். குறைந்த சமயத்தில் அனைத்துப் பாடங் களிலும் பாஸ் ஆக வேண்டும். அவ்வளவு தீவிர வேகத்தில் செய்தால் தான் சென்று சேர்வார்கள் இல்லையா? ஆகவே ஒருவர் மற்றவரின் சகயோகி ஆக வேண்டும். ஒருவர் மற்றவரின் போகி ஆகக் கூடாது. ஒருவர் மற்றவர் மீது போசா வைப்பதற்கு ஆரம்பிக்கக் கூடாது. சகயோகி ஆத்மா சதா சகயோகத்தின் மூலம் பாபாவுக்கு சமீபபாகவும் சமமாகவும் ஆக்கி விடுகின்றனர். தங்களுக்கு சமமாக இல்லை, ஆனால் பாபாவுக்கு சமமாக ஆக்க வேண்டும். உங்களுக்குள் இருக்கும் பலவீனங்கள் அனைத்தையும் இங்கேயே விட்டுச் செல்ல வேண்டும். வெளிநாட்டுக்குக் கொண்டு செல்ல

வேண்டாம். சக்திசாலி ஆத்மா ஆகி, மற்றவர்களையும் சக்திசாலி ஆக்க வேண்டும். இந்த விசேஷமான திடசங்கல்பம் சது ஸ்மிருதியில் இருக்க வேண்டும். நல்லது.

நாலாபுறமும் உள்ள குழந்தைகள் அனைவர்க்கும் விசேஷ சிநேகம் நிறைந்த அன்பு நினைவுகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். சதா சிநேகி, சதா சகயோகி மற்றும் சக்திசாலி அத்தகைய சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் நமஸ்தே.

அனைருக்கும் இந்தக் குஷி உள்ளது இல்லையா? பலவிதமாக இருந்த போதும் ஒருவருடையவர்களாக ஆகி  விட்டோம், இப்போது தனித்தனி வழிமுறை கிடையாது. ஒரே ஈஸ்வரிய வழிமுறைப்படி நடக்கும் சிரேஷ்ட ஆத்மாக்கள். பிராமணர்களின் மொழியும் ஒன்று தான். ஒரு தந்தையுடையவர்கள் மற்றும் தந்தையின் ஞானத்தை மற்றவர்களுக்கும் கொடுத்து அனைவரையும் ஒரு தந்தையுடையவர் களாக ஆக்க வேண்டும். எவ்வளவு பெரிய சிரேஷ்ட பரிவாரம்! எங்கே சென்றாலும், எந்த தேசத்திற்குச் சென்றாலும் இந்த ந6 உள்ளது இது நம்முடைய சொந்த வீடு, சேவாஸ்தானம்.. வது நம் வீடு. இத்தனை வீடுகளை ஊ ையவர்கள் வேறு யாரும் இருக்க முடியாது. உங்களிடம் யாராவது உங்களுக்குத் தெரிந்தவர்கள் எங்கெங்கே இருக்கிறார்கள் எனக் கேட்டால், உலகம் முழுவதிலும் இருக்கிறார்கள் என்று நீங்கள் சொல்வீர்கள். எங்கே சென்றாலும் நம்முடைய பரிவாரம். எவ்வளவு எல்லையற்ற அதிகாரி ஆகி விட்டீர்கள்! சேவாதாரி ஆவது என்றால் அதிகாரி ஆவதாகும். இது எல்லையற்ற ஆன்மிகக் குஷி. இப்போது ஒவ்வோர் இடமும் தனது சக்திசாலி ஸ்திதி மூலம் விஸ்தாரத்தை அடைந்து கொண்டிருக்கிறது. முதலில் கொஞ்சம் முயற்சி செய்ய வேண்டி உள்ளது. பிறகு சிலர் உதாரணமாக ஆகி  விட்டனர் என்றால் அவர்களைப் பார்த்து மற்றவர்களும் சகஜமாக முன்னேறிக் கொண்டே செல்வார்கள்.

பாப்தாதா குழந்தைகள் அனைவருக்கும் இந்த சிரேஷ்ட சங்கல்பத்தைத் தான் நினைவு படுத்துகிறார் -சதா தானும் நினைவு மற்றும் சேவையின் ஊக்கம்-உற்சாகத்தில் இருங்கள். குஷி-குஷியோடு தீவிர வேகத்தில் முன்னேறிச் சென்று கொண்டே இருங்கள் மற்றும் மற்றவர்களையும் இதே போல் ஊக்கம்-உற்சாகத்துடன் முன்னேறச் செய்து கொண்டே இருங்கள்.

மேலும் நாலாபுறமும் சாகாரத்தில் (மதுபன்) வந்து சேராதவர்களிடம் இருந்தும் கூட சித்திரங்கள் மற்றும் கடிதங்கள் வந்து சேர்ந்துள்ளன. அதற்கு பதிலாக பாப்தாதா அனைவருக்கும் பல கோடி மடங்கு மனதார அன்பு நினைவுகளையும் கொடுத்துக் கொண்டிருக்கிறார். இப்போது எவ்வளவு ஊக்கம்-உற்சாகம், குஷி உள்ளதோ, அதை விடவும் பல மடங்கு அதிகப் படுத்துங்கள். சிலர் தங்களின் பலவீனங்கள் பற்றிய தகவலையும் எழுதியுள்ளனர். அவர்களுக்கு பாப்தாதா சொல்கிறார் -எழுதி விட்டீர்கள் என்றாள் பாபாவுக்குக் கொடுத்து விட்டீர்கள். கொடுத்து விட்ட பொருளைப் பிறகு தன்னிடம் எடுத்து வைத்துக் கொள்ள முடியாது. பலவீனங்களைக் கொடுத்தாயிற்று என்றால் அதைப் பிறகு சங்கல்பத்தில் கூடக் கொண்டு வரக் கூடாது. மூன்றாவது வீரியம், ஒரு போதும் தனது எந்த ஒரு சம்ஸ்காரம் அல்லது குழுவின் சங்கல்பங்கள் அல்லது வாயுமண்டலத்தின் குழப்பத்தால் மனச்சோர்வடையக் கூடாது. சதா பாயாவை இணைந்த ரூபத்தில் அனுவம் செய்து, மனச்சோர்விலிருந்து விடுபட்டு சக்திசாலியாகி முன்னேரிக் கொண்டே செல்லுங்கள். கணக்கு-வழக்கு முடிந்து விட்டது -அதாவது சுமையை இறக்கி வைத்து விட்டீர்கள். குஷி-குஷியோடு பழைய சுமையை பஸ்பம் செய்து கொண்டே செல்லுங்கள். பாப்தாதா சதா குழந்தைகளின் சகயோகியாகவே இருக்கிறார். அதிகம் யோசிக்கவும் வேண்டாம். வீணான சிந்தனையும் கூட பலவீனமாக ஆக்கி விடும். யாருக்காவது வீண் சிந்தனைகள் ஓடிக் கொண்டிருந் தாள் இரண்டு-நான்கு முரை முபுளியைப் படியுங்கள். படித்ததைச் சிந்தனை செய்யுங்கள். படித்துக் கொண்டே செல்லுங்கள். ஏதாவதொரு பாயின்ட் புத்தியில் பதிந்து விடும். சுத்த சங்கல்பங்களின் சக்தியைச் சேமித்துக் கொண்டே செல்வீர்களானால் வீணானவை முடிந்து போகும். புரிந்ததா?

**வரதானம்: ஆன்மிகத்தின் சிரேஷ்ட ஸ்திதி (மனநிலை) மூலம் சூழ்நிலையை ஆன்மிகமாக ஆக்கக்கூடிய சகஜ புருஷார்த்தி ஆகுக!**

ஆன்மிகத்தின் ஸ்திதி மூலம் தனது சேவா கேந்திரத்தின் சூழ்நிலையை அந்த மாதிரி ஆன்மிகத் தன்மையுள்ளதாக ஆக்குங்கள் -அதன் மூவம் தன்னுடைய மற்றும் வரக்கூடிய ஆத்மாக்களின் சகஜ முன்னேற்றம் ஏற்பட வேண்டும். ஏனென்றால் வெளியிலுள்ள சூழ்நிலையால் களைத்துப் போயிருப்பவர்கள் யார் வந்தாலும் அவர்களுக்கு அதிகப்படியான சகயோகத்தின் அவசியம் து. எனவே அவர்களுக்கு ஆன்மிக வாயு

மண்டலத்தின் சகயோகம் கொடுங்கள். சகஜ புரு பர்த்தி ஆகுங்கள் மற்றும் ஆக்குங்கள். இந்த இடம் சகஜமாகவே முன்னேற்றத்தை அடைய வைக்கிறது என்பதை வரக்கூடிய ஒவ்வோர் ஆத்மாவும் அனுபவம் செய்ய வேண்டும்.

**சுலோகன்: வரதானி ஆகி சுபபாவனை மற்றும் சுப விருப்பத்தின் வரதானத்தைக் கொடுத்துக் கொண்டே இருங்கள்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 31.03.1986 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சர்வ சக்திகளிலும் சம்பன்னமாக வரதானம் பெறும் வருடம்!

இன்று அனைத்து பொக்கிஷங்களின் மாலிக் தனது மாஸ்டர் குழந்தைகளை பார்த்துக் கொண்டிருக்கின்றார். குழந்தைகள் எந்த அளவிற்கு பாலக் சோ மாலிக் ஆகி உள்ளார்கள் என்பதை பார்த்துக் கொண்டிருக்கின்றார். இந்த சமயத்தில் யாரொருவர் சிரேஷ்ட ஆத்மாக்கள் சர்வ சக்திகளின் சர்வ பொக்கிஷங்களுக்கும் மாலிக் ஆகின்றார் றகளோ அவர்கள் அந்த எஜமானருக்குரிய சம்ஸ்காரங்களால் நாளையும் விஷ்வத்திற்கே எஜமானா கின்றார்கள் ஆக எதை பார்த்தார்? எல்லோரும் குழந்தைகள் தான், பாபாவும் நானும் என்ற ஈடுபாடு அனைவரிடமும் நன்றாகவே உள்ளது. நான் குழந்தை என்ற எண்ணம் போதை எல்லோரிடமும் உள்ளது ஆனால் பாலக் சோமாலிக் அதாவது பாப்சமான் முழுமை யாக வேண்டும். ஆக பாலகன் என்ற மனோ நிலைக்கும் மாலிக் எஜமான் என்ற மனோ நிலைக்கும் இடையே உள்ள வேறு பாட்டை பார்க்கின்றார். மாலிக் என்பது ஒவ்வொரு அடியிலும் இயல்பாகவே முழுமைத் தன்மையில் தனக்காகவும் பிறருக்காகவும் நிரம்பி யிருப்பார்கள். இதனையே மாஸ்டர் அதாவது பாலக் சோ மாலிக் என சொல்லப்படுகிறது. மாலிக் என்ற உணர்வின் விசேஷத் தன்மையே என்னவென்றால் எந்த அளவிற்கு நான் எஜமான் என்ற பெருமிதம் உள்ளதோ அந்த அளவிற்கு விஷ்வ சேவாதாரி என்ற சம்ஸ்காரம் சதா வெளிப்படும். எந்தளவிற்கு மாலிக் என்ற எண்ணமோ அந்தளவிற்கு விஷ்வ சேவாதாரி என்ற பெருமிதமும் இருக்கும். இரண்டிலும் சமநிலை இருக்கும். இதுவே பாப்சமான் மாலிக் ஆவதாகும். பாலக் மற்றும் மாலிக் இரண்டு சொரூபமும் சதா நடை முறை செயலில் வருகிறதா அல்லது புரிந்து கொண்டு ஞானம் மட்டும் உள்ளதா? ஆனால் ஞானத்திற்கும் செயலுக்கும் இடையே வேறுபாடு உள்ளது. சில குழந்தைகள் இந்த சம நிலையில் பாப்சமான் நடைமுறை செயலில் தென்படுகிறார்கள். சிலர் அவ்வப்போது பாலகன் என்ற நிலையில் இருந்தாலும் மாலிக் என்ற ஆன்மீக போதையில்

பாப்சமான் ஆவதற்கான சக்திசாலி மனோநிலையில் சில சமயம் இருக்கிறார்கள். சில சமயம் முயற்ச்சியிலேயே நேரம் சென்று விடுகிறது.

லட்சியம் என்னவோ அனைவர் மனதிலும் பாப்சமான் ஆகி யே தீர வேண்டும் என்ற உயர்ந்த எண்ணமே உள்ளது. லட்சியம் சக்திசாலியாக உள்ளது. இப்போது லட்சியத்தை எண்ணம், சொல், செயல், சம்மந்தம், உறவுகளில் கொண்டு வர வேண்டும். இதில் தான் வித்தியாசம் தென்படுகிறது. சிலர் எண்ணம் வரையிலும் சமான் நிலையில் நிலைத்துள்ளார்கள். சிலர் எண்ணத்துடன் சொல்லளவில் சில சில சமயமே செயல் வரையிலும் வருகின்றார்கள் ஆனால் சம்மந்தம், தொடர்பில், சேவையில், குடும்ப உறவுகளில் வரும் பொழுது சதவீதம் குறைந்து விடுகிறது. பாப்சமான் ஆவதென்றால் ஒரே நேரத்தில் எண்ணம், சொல், செயல், உறவுகள் அனைத்திலும் பாப்சமான் நிலையில் இருப்பதாகும். சிலர் இரண்டிலும் சிலர் மூன்றிலும் உள்ளார்கள். பாபா சொன்ன மாதிரி நான்கிலும் இருப்பது அவ்வப்போது நிலை மாறுகிறது. பாப்தாதா அனைத்து குழந்தைகள் மீதும் சதா அதிக சினேகத்துடனே இருக்கின்றார். சினேக சொரூபம் என்பது மானசீகமாகவோ, மனித ரூபத்திலோ சந்திருப்பது மட்டுமல்ல ஆனால் சினேக சொரூபத்தில் சமநிலை பெறுவதாகும். சிலர் நினைக்கின்றார்கள் பாப்தாதா நம்மை பற்றற்றவராக மாற்றுகின்றார் என்று, ஆனால் இது பற்றற்ற (நிர்மோஹி) நிலை அவ்ல. இதுவே விசேஷமான அன்பின் சொரூபம் ஆகும்.

பாப்தாதா முன்பே சொல்லிவிட்டார் வெகுகாலத்திற்கான பிராப்திகளை அடைவ தற்கான நேரம் குறைவாகவே உள்ளது. ஆகவே பாப்தாதா குழந்தைகளுக்கு சதா நீண்ட காலத்திற்காக உறுதித் தன்மையெனும் தபஸ்யா மூலம் தன்னை உறுதிப்படுத்துவதற்காக பரிபக்குவமாக்குவதற்காக விசேஷ நேரம் கொடுத்துள்ளார். கோல்டன்ஜீப்லி கொண்டாடும் பொழுதே அனைவரும் சமான நிலை பெறுவோம், விக்ன வினாசக் ஆவோம், சமாதான சொரூபம் ஆவோம் என்றெல்லாம் சங்கல்பம் வைத்தீர்கள். இந்த அனைத்து வாக்குறுதிக் கும் பாபாவிடம் சித்திரகுப்தன் வடிவத்தில் கணக்கு பதிவேட்டில் பதிவாகியுள்ளது. இன்னும் கூட அனேக குழந்தைகள் திட சங்கல்பம் செய்தார்கள். சமர்ப்பணம் ஆவது என்றாலே சர்வ பிராப்திகளும் பரிபக்குவம் ஆவதாகும். சமர்ப்பணம் அர்த்தமே எண்ணம், சொல், செயல்,

சம்மந்தம் இந்த நான்கிலும் பாப்சமான் ஆவதாகும். நீங்கள் எழுதிக் கொடுத்த கடிதம் எண்ணம் யாவும் சூட்சும வதனத்தில் பாப்தாதாவிடம் பதிவேட்டில் உள்ளது. அனைவருடைய ஃபைலும் (கோப்புகள்) அங்கு வதனத்தில் உள்ளது. ஒவ்வொருவருடைய எண்ணமும் அவினாசியாகி விட்டது.

இந்த ஆண்டு குழந்தைகளின் உறுதியெனும் தபஸ்யா மூலம் ஒவ்வொரு எண்ணத் தையும் அமரத்துவம் மற்றும் அவினாசியாக்குவதற்காக தன்னிடமே மீண்டும் மீண்டும் உறுதித்தன்மையின் மூலம் ஆன்மீக உரையாடல் செய்வதற்காக, உணரச் செய்வதற்காக அவதாரமாகி கர்மத்தில் ஈடுபட சதா காலத்திற்காக உறுதியாக்க பாப்தாதா இன்னும் நேரம் தருகின்றார். அதோடு மட்டுமல்லாமல் விசேஷமாக சுத்த சங்கல்பங்களின் சக்தியை சேமிக்க வும் அதிகரிக்கவும் வேண்டும். சுத்த சங்கல்ப சக்தி மற்றும் அந்தர்முகி (அகநோக்கு) பயிற்சி அனுபவம் செய்வது அவசியமாகும். சுத்த சங்கல்பங்களின் சக்தி சுலபமாகவே வீண் எண்ணங்களை அழித்து பிறருக்காக சுபபாவனை சுப காமனாவாக மாற்றம் செய்கிறது. இப்போது இந்த சுத்த சங்கல்ப சக்தியின் அனுபவம் சுலப மாகவே வீண் எண்ணங்களை அழித்து விடும். தனது வீண் எண்ணத்தை மட்டுமல்லாமல் பிறருக்கும் வீணானதை மாற்றி விடும்.

இந்த சுத்த சங்கல்ப சக்தியை ஸ்டாக் வைப்பது அவசியமாகும். முரளியை மிக பிரியமாக கேட்பது நல்லது தான். முரளி என்றாலே கஜானா, முரளியின் ஒவ்வொரு கருத்தையும் சக்தி ரூபமாக சேமிக்க வேண்டும் இப்போது இதன் மீது மிக முக்கிய கவனம் தர வேண்டும். இதுவே சுத்த சங்கல்ப சக்தியை சேமிப்பதாகும். சக்தியின் வடிவத்தில் ஒவ்வொரு நேரமும் காரியத்தில் பயன்படுத்தவும். இப்போது இதன் மீது விசேஷ கவனம் வையுங்கள். சுத்த சங்கல்ப சக்தியின் மகத்துவத்தை இப்போது எந்தள விற்கு அனுபவம் செய்து கொண்டே செல்வீர்களோ அந்தளவு மன சேவைக்கான அனுபவமும் சுலபமாக ஆகும். முதலில் தனக்காக சுத்த சங்கல்ப சக்தி சேமிப்பாக வேண்டும். பிறகு நீங்கள் அனைவரும் பாபாவுடன் விஷ்வ கல்யாணகாரி உலக மாற்றத்திற்கு நிமித்த ஆத்மாக்கள் இப்போது உலகிற்காக சுத்த சங்கல்பத்தால் மாற்றத்திறக்ன செயல் மீதமுள்ளது. இப்போது பிரம்மாபாபா அவ்யக்த ரூபத்தில் சுத்த சங்கல்பத்தினால் சக்தி வாய்ந்ததாக பாலனை செய்து கொண்டிருக்கின்றார். பிரம்மாபாபாவைப் போல குழந்தை

களும் விசேஷமாக தன்னை மேன்மை செய்வதில் பயிற்சி செய்ய வேண்டும். தபஸ்யா என்பது உறுதியுடன் கலந்த முழுமைக்கும் செய்யும் பயிற்சியாகும்.. சாதாரணத்தன்மையை தபஸ்யா என்று சொல்வதில்லை. இப்போது தபஸ்யாவிற்காக நேரம் தரப்படுகிறது. இப்போதே ஏன் தரப்படுகிறது? ஏனெனில் இப்போது செய்யும் முயற்சி வெகு நீண்ட காலத்திற்காக சேமிப்பாகி விடும் பாப்தாதா அனைவருக்கும் நீண்ட காலத்திற்கான பிராப்தி தருவதில் நிமித்தமாக உள்ளார். பாப்தாதா அனைத்து குழந்தைகளையும் நீண்ட கால இராஜ்ய பாக்கியத்தின் அதிகாரியாக வேண்டும் என்று விரும்புகின்றார். நேரம் குறைவாக இருந்தாலும் ஒவ்வொரு பயிற்சியையும் தபஸ்யா ரூபத்தில் செய்வதற்காக விசேஷமான நேரம் தரப்படுகிறது. ஏனெனில் இனி வரும் காலத்தில் நீங்கள் அனைவரும் வரம் வழங்கும் வள்ளலாகி குறைந்த நேரத்தில் அனேகருக்கு தர வேண்டும். ஆகவே அனைத்து பொக்கிஷங்களில் சேமிப்பு கணக்காக முழுமையாக சேமிக்க நேரம் தரப்படுகிறது.

இரண்டாவது: விக்ன வினாசக் மற்றும் சமாதான சொரூபமாவதற்காக உறுதிமொழி செய்தீர்கள் தனக்கும் பிறருக்கும் விக்ன வினாசகர் ஆவதில் திடமான சொரூபம் உள்ளதா? எண்ணத்தில் மட்டுமல்லாமல் சொரூபத்திலும் வேண்டும். இந்த ஆண்டு பாப்தாதா அதிகப் படியாகவே வாய்ப்பு தருகிறார். யாரெல்லாம் விக்ன வினாசக் என்ற பாக்யம் பெற விரும்பு வீர்களோ அவர்களுக்கு இந்த ஆண்டு விசேஷ வரதானமாக தரப்படுகிறது. யாருக்கு விக்ன வினாசக் ஆவதற்கு விசேஷ பாக்யம் பெற வேண்டுமோ அவர்கள் இந்த ஆண்டு பெற முடியும். இந்த ஆண்டிற்காக விசேஷ வரதானம் உள்ளது, வரதானம் பெற விசேஷமாக இரண்டு விசயத்தில் கவனம் தர வேண்டும். சதா பாப்சமான் தருபவர்கள், பெறும் எண்ணம் இல்லாதவர்கள். மதிப்பு கிடைத்தால் அன்பு கிடைத்தால் அன்பு கொடுப்போம் மரியாதை தருவோம் என்ற பாவனை கூடாது. உயர்ந்த செயலின் பலன் உயர்வாகவே இருக்கும். இந்த ஞானம் உங்களுக்குத் தெரியும் ஆனால் செய்யும்பொழுது இந்த பாவனை கூடாது. வரதானம் பெற பாத்திரமாக சதா தாதா வள்ளல் ஆகி இருங்கள், விக்ன வினாசக் ஆகுங்கள். அதற்காக எதிர்கொள்ளும் சக்தியின் மீது கவனம் தர வேண்டும். தனக்காகவும் எதிர் கொள்ளும் சக்தி தேவை. கடலின் குழந்தைகள் கடலின் விசேஷ குணமே உள்ளடக்கிக் கொள்வதாகும். யாரிடம் உள்ளடக்கும் சக்தியிருக்குமோ அவரே சுப பாவனை, நன்மை செய்யும் விருப்பம் வைக்க

முடியும். ஆகவே வள்ளல் ஆகுக, உள்ளடக்கும் சக்தியின் சொரூபத்தில் கடல் ஆகுக! இவ்விரு விசேஷ குணங்களையும் சதா செயல் வடிவத்தில் கொண்டுவாருங்கள். சிலர் சொல்வார்கள் நினைத்தேன் இப்படித்தான் செய்ய வேண்டும் என்று ஆனால் செய்யும்பொழுது மாறிவிட்டது,. இந்த ஆண்டு நான்கு விசயங்களிலும் ஒரே நேரத்தில் சமநிலைக்கான விசேஷ பயிற்சி செய்யவும். புரிந்ததா? ஒன்று கஜானாக்கள் சேமிப் பதற்காக வள்ளலாகி வழங்கும் சம்ஸ்காரத்தை இயல்பாக தாரணை செய்வதற்காக நேரம் தரப்படுகிறது. விக்ன வினாசக் ஆவது, ஆக்குவது இதில் சதா காலத்திற்கும் தனது நம்பரை நிச்சயம் செய்து கொள்ள வாய்ப்பு தருகிறார். எது நடந்தாலும் தான் முதலில் தபஸ்யா செய்க பிறருக்கும் தடையை நீக்க சகயோகி ஆகுக. அதற்காக எவ்வளவு தான் குனிய நேரிட்டாலும் சரி, இந்த குனிவது என்பது சதா காலமும் ஊஞ்சலில் ஆடுவதாகும். ஸ்ரீகிருஷ்ணரை எவ்வளவு அன்பாக ஊஞ்சலில் ஆட்டுகிறார்கள். ஞான இரத்தினங்களால் ஆன ஊஞ்சல் ஆட்டுவீர்கள் பிறகு பக்தியில் பூஜைக்குரியவராக உஞ்சலில் ஆட்டுவீர்கள். இப்படி தலைகுனிவது என்பது மகான் தன்மையாகும். நான் ஏன் வணங்க வேண்டும், இவர் வணங்கட்டுமே, இதில் தன்னை குறைவாக நினைக்காதீர்கள் இப்படி வணங்குவது மகான் தன்மையாகும். இப்படி இறப்பது இறப்பதல்ல. அழிவற்ற பிராப்திகளில் வாழ்வதாகும். ஆகவே விக்ன வினாசக் ஆகுங்கள், ஆக்குங்கள். இதில் முதல் வரவிரும்புபவர்கள் வாய்ப்பு களை பெறலாம். இது விசேஷமாக வாய்ப்பு பெறும் நேரம் பாப்தாதா மகிமையை புரிய வைக்கின்றார். ஆகவே நேரத்தின் மதிப்பை புரிந்து கொண்டு தபஸ்யா செய்யுங்கள்.

மூன்றாவது: சமயத்திற்கேற்ப எந்த அளவு வாயு மண்டலம் அமைதியிழந்து ஆரவாரத்துடன் அதிகரித்துக் கொண்டே செல்கிறதோ அதற்கேற்ப புத்தி லைன் மிகத் தெளிவாக இருக்கவேண்டும். ஏனெனில் நேரத்திற்கேற்ப டச்சிங், கேச்சிங் இந்த இரு சக்திகளும் அவசியமாகும். ஒன்று பாப்தாதாவின் அறிவுரையை புத்தி மூலமாக புரிந்து கொள்ள வேண்டும். மாறாக புத்தி லைன் தெளிவில்லாதபோது பாபாவின் அறிவுரையுடன் தன் மன வழியில் கருத்துக்கள் கலந்து விடுகிறது. அப்படி கலப்படம் ஏற்படும்போது தக்க சமயத்தில் ஏமாற்றம் அடைய நேரிடும் புத்தி எந்த அளவிற்கு தெளிவாக இருக்குமோ அந்தளவிற்கே பாபாவின் அறிவுரைகளை தெளிவாக புரிந்து கொள்ள முடியும். மேலும் புத்தி எந்த அளவு தெளிவாக இருக்குமோ அந்தளவு சுய முன்னேற்றம் சேவையில்

முன்னேற்றம் மேலும் அனேக ஆத்மாக்களுக்கு வள்ளலாகி வழங்கும் சக்தியும் சுலபமாகவே வளரும். இந்த சமயத்தில் இந்த ஆத்மாவிற்கு சகஜசேவைக்கான சாதனம் மற்றும் சுய முன்னேற்றத்திற்கான சாதனம் இதுவே ஆகும்.

நிகழ்காலத்தில் இந்த இரு சக்திகளும் அவசியமாகும். இதனை அதிகரிக்க ஏக்னாமி, எக்கனாமி ஆகுக! ஒரு பாபா தவிர வேறு யாருமில்லை. ஈர்ப்பு என்பது மற்றொன்று, அது தவறு தான் ஆனால் பிறரின் சுபாவம் நம்மை மனதளவில் அலைகழிக்கச் செய்கிறது. புத்தியை தாக்குகிறது, அப்போது புத்தியில் தாக்கம் ஏற்படுகிறது. அப்போது பாபாவா சம்ஸ்காரமா என்ற நிலை? எந்த வகையில் புத்தி ஆக்கிரமிக்கப்பட்டாலும் புத்தியின் லைன் சதா தெளிவாக இருக்க வேண்டும். இதுவே ஒரு பாபா தவிர வேறுயாருமில்லை என்பதாகும். இதுவே ஏக்னாமி, எகானமி ஆகும். ஸ்தூலமான பணத்தை மட்டும் சிக்கனமாக செலவு செய்வது கிடையாது. சமயம், சங்கல்பம், சக்திகள் எதுவுமே வீணாகாமல் சேமிக்க வேண்டும். சிக்கனம் என்பது சேமிப்பை அபிவிருத்தி செய்வதாகும். ஏக்னாமி, எகானமி இருந்தால் தந்தையின் அறிவுரையை டச்சிங், கேச்சிங் செய்ய முடியும். இதனை வினாச நேரத்தில் செய்ய முடியாது. இப்போதிலிருந்தே நீண்ட கால பயிற்சி செய்தாக வேண்டும். அப்போது தான் இறதி காலத்தில் நல்ல உயர் நிலை அடைய முடியும். வினாசத்திற்கு இனி 10 ஆண்டுகள் இருப்பதாகவே வைத்துக் கொள்ளுங்கள் 10 ஆண்டுக் கழித்து இந்த முயற்சி செய்ய முடியாது. எவ்வளவு முயன்றாலும் முடியாது. பலவீனம் அடைவீர்கள். முடிவு யுத்தத்தில் தான் முடியும். வெற்றி பெற இயலாது. திரேதாயுகத்திலும் வர இயலாது. முயற்சி என்பது கூரிய அம்பாகும். சதா அன்பாக, குஷியாக இருப்பது முரளீதர் ஆவது, சூர்யவம்சி ஆவதாகும். முரளி ஆட வைக்கிறது கூரிய அம்பு சேருமிடத்தை குறியட வைக்கிறது. ஆகவே அம்பெய்துபவர் அல்ல குழல் இசைப்பவராகுக, பின்னால் வருபவர்கள் இன்னும் சிறிது நேரம் இருந்தால் நன்றாக இருக்கும் என புகார் செய்ய கூடாது. வாய்ப்பு வழங்குங்கள், தயவு காட்டுங்கள், எனவே தான் முன்பிருந்தே சொல்லிக் கொண்டிருக்கின்றார். முன்னால் வந்தாலும் பின்னால் வந்தாலும் இது எல்லோருக்கும் இறுதி நிலையை அடையும் நேரமாகும். ஆகவே அதற்கேற்ப வேகமாக செல்ல வேண்டும் புரிந்ததா! நல்லது.

**வரதானம்: 5-விகாரமெனும் எதிரிகளை மாற்றி சகயோகியாக்கி மாயாஜீத் ஜகத் ஜீத் ஆகுக!**

வெற்றி, எதிரியின் ரூபத்தை மாற்றுகிறது. விகாரமெனும் எதிரியை மாற்றி சகயோகி ரூபமாக்கி விடுங்கள் என்றும் உங்களுக்கு வணக்கம் செலுத்தி கொண்டேயிருக்கும். காம விகாரத்தை சுபகாமனாவாக, கோபத்தை ஆன்மீக மகிழ்ச்சியாக, லோபத்தை ஆசைகளற்ற ரீதியில், மோகத்தை சினேகமாக தேகாபிமானத்தை சுப அபிமானமாக (ஆத்மாபிமானம்) மாற்றி விட்டால் மாயை யினையும், உலகையும் வென்றவர் ஆவீர்கள்.

**சுலோகன்: சுத்த தங்கத்தில் எனது என்பது அழுக்கை சேர்க்கும், மதிப்பை குறைக்கும் எனவே எனது என்பதை அழித்து விடுங்கள்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

## 07.04.1986 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தபஸ்வி மூர்த்தி, தியாக மூர்த்தி மற்றும் விதாதாவாக (உலகத்தை உருவாக்குபவர்) இருப்பவரே விஷ்வ இராஜ்ய அதிகாரி!

இன்று ஆன்மிக விளக்கு, தன்னுடைய ஆன்மிக விட்டில் பூச்சிகளை பார்த்துக் கொண்டு இருக்கின்றார். அனைத்து ஆன்மிக விட்டில் பூச்சிகள், விளக்குடன் சந்திப்பை கொண்டாடுவதற்காக நாலாபுறங்களிலிருந்தும் வந்தடைந்து விட்டீர்கள். ஆன்மிக விட்டில் பூச்சிகளின் அன்பை ஆன்மிக விளக்கு அறியும் மற்றும் ஆன்மிக விட்டில் பூச்சிகள் அறிவார்கள். அனைத்து குழந்தைகளுடைய உள்ளத்தின் அன்பானது கவர்ச்சி செய்து இந்த அலௌகீக சந்திப்பிற்கு அனைவரையும் அழைத்து வந்து விட்டது என்று பாப்தாதா அறிந்து இருக்கின்றார்கள். இந்த அலௌகீக சந்திப்பை அலௌகீக குழந்தைகள் அறிவார்கள் மற்றும் தந்தை அறிவார். உலகத்தினர் இந்த சந்திப்பை அறியாத வண்ணம் குப்தமாக நடைபெறுகிறது. ஆன்மிக சந்திப்பிற்காக சென்று கொண்டு இருக்கின்றோம் என்று ஒருவேளை யாரிடமாவது கூறினீர்கள் என்றால் அவர்கள் என்ன புரிந்து கொள்வார்கள்? இந்த சந்திப்பானது எப்பொழுதும் செல்வந்தர் ஆக்கக்கூடிய சந்திப்பு ஆகும். இந்த பரமாத்ம சந்திப்பானது சர்வ பிராப்தி சொரூப மானவராக ஆக்கக்கூடியது. பாப்தாதா அனைத்து குழந்தைகளுடைய உள்ளத்தின் ஊக்கம்,, உற்சாகத்தைப் பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள். ஒவ்வொருவருடைய மனமும் அன்புக் கடலின் அலைகளில் ஆடிக் கொண்டு இருக்கிறது. அன்பானது தடைகளை அழிக்கக்கூடியவராக ஆக்கி மதுபன் நிவாசியாக ஆக்கி விட்டது என்பதை பாப்தாதா பார்த்துக் கொண்டும் இருக்கின்றார்கள் மற்றும் அறிந்தும் இருக்கின்றார்கள். அனைவருடைய அனைத்து விசயங்களும் அன்பில் முடிவடைந்து விட்டது. எவர் ரெடியினுடைய (எப்பொழுதும் தயார் நிலையில்

இருக்கின்ற) ஒத்திகை செய்து காண்பிக்கப்பட்டது. எவர்ரெடி ஆகி விட்டீர்கள் அல்லவா! இந்த இனிமை யான நாடகத்தில் இனிமையான நடிப்பைப் பார்த்து பாப்தாதா மற்றும் பிராமண குழந்தைகள் மகிழ்ச்சி அடைந்து கொண்டு இருக்கின்றார்கள். அன்பு இருக்கிறது என்றால் அனைத்து விசயங்களும் சுலபமான தாகவும் தோன்றும் மற்றும் அன்பானதாகவும் தோன்றும். என்ன நாடகம் உருவாகியுள்ளதோ, அது, ஆஹா டிராமா ஆஹா! எத்தனை முறை இவ்வாறு ஓடி ஓடி வந்திருக்கின்றீர்கள். இரயிலில் வந்திருக்கின்றீர்களா அல்லது சிறகுகளால் பறந்து வந்திருக்கின்றீர்களா? எங்கு உள்ளம் உள்ளதோ, அங்கு சாத்தியமாக முடியாதது கூட சாத்தியம் ஆகி விடுகிறது என்று இதையே சொல்லப் படுகிறது. அன்பு சொரூபம் காண்பிக்கப்பட்டது, இப்பொழுது அடுத்து என்ன செய்ய வேண்டும், இதுவரை என்ன நடந்ததோ, அது சிரேஷ்டமானதாக இருக்கிறது மற்றும் சிரேஷ்டமானதாக இருக்கும்.

இப்பொழுது சமயத்தின் அனுசாரம் சர்வ சினேகி, சர்வ சிரேஷ்ட குழந்தைகளிடமிருந்து பாப்தாதா விசேடமாக வேறு என்ன விரும்புகின்றார்? முழு சீசனிலும் அவ்வப்போது சமிக்ஞை கொடுக்கின்றார்கள். இப்பொழுது அந்த சமிக்ஞைகளை பிரத்யட்ச ரூபத்தில் பார்ப்பதற்கான சமயம் வந்து கொண்டிருக் கிறது. நீங்கள் அன்பான ஆத்மாக்கள் ஆவீர்கள், சகயோகி ஆத்மாக்கள் ஆவீர்கள், சேவாதாரி ஆத்மாக்களும் ஆவீர்கள். இப்பொழுது மகா தபஸ்வி ஆத்மாக்கள் ஆகுங்கள். தங்களுடைய குழு சொரூபத்தின் தபஸ்யாவின் ஆன்மிக ஜூவாலையினால் அனைத்து ஆத்மாக்களையும் துக்கம் அசாந்தியிலிருந்து விடுவிக்கும் மகான் காரியத்தை செய்யும் சமயம் இதுவாகும். ஒருபுறம் இரத்த ஆறு ஓடும் விளையாட்டின் அலை அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. அனைத்து ஆத்மாக்களும் தங்களை ஆதரவற்றவர்களாக அனுபவம் செய்து கொண்டு இருக்கின்றனர், இத்தகைய சமயத்தில் ஆதரவின் அனுபவத்தை செய்விக்க நிமித்தமானவர்கள் மகா தபஸ்வி ஆத்மாக்களாகிய நீங்கள் ஆவீர்கள். நாலாபுறங்களிலும் இந்த தபஸ்வி சொரூபம் மூலம் ஆத்மாக்களுக்கு ஆன்மிக அமைதி யின் அனுபவத்தை செய்விக்க வேண்டும். முழு விஷ்வத்தின் ஆத்மாக்கள் இயற்கையினால், வாயு மண்டலத்தால், மனித ஆத்மாக்களால், தங்களது மனதின் பலவீனங்களால், உடலால் நிம்மதியற்று உள்ளனர். அத்தகைய ஆத்மாக்களுக்கு சுகமான அமைதியான ஸ்திதியை ஒரு வினாடி அனுபவம் செய்வித்தீர்களானால் கூட உங்களுக்கு

உள்ளத்திலிருந்து அடிக்கடி நன்றி சொல்வார்கள். நிகழ்கால சமயத்தில் குழுவாக ஒருமித்த ரூபத்தில் ஜூவாலா சொரூபத்தின் அவசியம் உள்ளது. இப்பொழுது விதாதாவின் குழந்தைகள் விதாதா சொரூபத்தில் நிலைத்திருந்து, ஒவ்வொரு நேரமும் கொடுத்துக் கொண்டே செல்லுங்கள். துண்டிக்கப்படாத மகான் நங்கூரம் போடுங்கள். ஏனெனில், இராயல் பிச்சைக்காரர்கள் அனேகர் உள்ளனர். பணம் கேட்டு யாசிப்பவர்கள் மட்டும் யாசகர்கள் அல்ல ஆனால், மனதால் யாசிப்பவர்கள் அனேக விதமாக உள்ளனர். அபிராப்தியான ஆத்மாக்கள், ஒரு துளி பிராப்தியின் தாகத்துடன் அனேகர் உள்ளனர். ஆகையால், இப்பொழுது குழுவாக ஒருமித்த ரூபத்தில் விதாதா நிலையின் அலையைப் பரப்புங்கள். எந்த பொக்கிஷத்தை சேமிப்பு செய்து இருக்கின்றீர்களோ, அதை மாஸ்டர் விதாதாவாகி எந்தளவு கொடுத்து கொண்டே செல்வீர்களோ, அந்தளவு நிறைந்து கொண்டே போகும். எவ்வளவு கேட்டு இருக்கின்றீர்கள்! இப்பொழுது செய்வதற்கான சமயம் ஆகும். தபஸ்வி மூர்த்தி என்றால் தபஸ்யா மூலம் சாந்தி, சக்தியின் கிரணங்களை நாலாபுறங்களிலும் பரவி கொண்டிருப்பதாக அனுபவம் செய்வது என்று அர்த்தம். சுயம் தான் மட்டும் நினைவு சொரூபமாகி சக்தி சேணையுடன் சந்திப்பு செய்வது என்பது வேறு ஆனால், தபஸ்வி சொரூபமானது பிறருக்குக் கொடுக்க கூடிய சொரூபமாகும். எவ்வாறு சூரியன் உலகிற்கு வெளிச்சத்தினுடைய மற்றும் அநேக அழியக்கூடிய பிராப்திகளின் அனுபவத்தை செய்விக் கின்றதோ, அதுபோன்று மகான் தபஸ்வி ரூபத்தின் மூலம் பிராப்தியின் கிரணங்களுடைய அனுபவத்தை செய்வித்திடுங்கள். இதற்காக முதலில் சேமிப்பு கணக்கை அதிகரித்திடுங்கள். நினைவின் மூலம் மற்றும் ஞான சிந்தனை மூலம் தன்னை சிரேஷ்டமாக ஆக்கி விட்டேன், மாயையை வென்றவராக, வெற்றியாளராக தன்னை ஆக்கி விட்டேன் என்று நினைக்காதீர்கள். இதில் குஷி அடைந்து விட வேண்டாம் ஆனால், அனைத்து பொக்கிஷங்களையும் முழு நாளும் எத்தனை பேருக்கு விதாதாவாகி அளித்தீர்கள்? அனைத்து பொக்கிஷங்களையும் ஒவ்வொரு நாளும் காரியத்தில் ஈடுபடுத்தினீர்களா? அல்லது சேமிப்பை மட்டும் பார்த்து குஷி அடைந்து கொண்டு இருக்கின்றீர்களா? குஷி என்ற பொக்கிஷம், சாந்தி என்ற பொக்கிஷம், சக்திகள் என்ற பொக்கிஷம், ஞானம் என்ற பொக்கிஷம், குணங்கள் என்ற பொக்கிஷம், சகயோகம் கொடுக்கும் பொக்கிஷம் ஆகி யவற்றை எவ்வளவு பிறருக்குக் கொடுத்து இருக்கின்றேன் அதாவது எவ்வளவு அதிகரித்து இருக்கின்றேன் என்ற சார்ட் இப்பொழுது வைத்திடுங்கள். இதன் மூலம்

தினமும் எழுதும் பொதுவான சார்ட் தானாகவே சிரேஷ்டமானதாக ஆகி விடும். இப்பொழுது என்ன சார்ட் வைக்க வேண்டும் என்பது புரிந்ததா? விஷ்வ கல்யாணகாரி ஆகுவது தபஸ்வி சொரூபத்தின் சார்ட் ஆகும். எனவே, எத்தனை பேருக்கு நன்மை செய்தீர்கள்? சுயத்திற்கு நன்மை செய்வதிலேயே சமயம் கடந்து கொண்டு இருக்கிறதா? சுயத்திற்கு நன்மை செய்வதற்கான சமயம் அதிகம் கடந்து விட்டது. இப்பொழுது விதாதா ஆகுவதற்கான சமயம் வந்து விட்டது. ஆகையினால், பாப்தாதா மீண்டும் சமயத்தின் சமிக்ஞை கொடுத்து கொண்டிருக்கிறார்கள். ஒருவேளை, இப்பொழுதுவரை கூட விதாதா நிலையின் அனுபவம் செய்யவில்லை என்றால் அநேக பிறவிகள் விஷ்வ இராஜ்ய அதிகாரி ஆவதற்கான பத்மாபதம் பாக்கியத்தை அடைய முடியாது, ஏனென்றால், விஷ்வ இராஜன் விஷ்வத்தின் தாய், தந்தை விதாதாவாக இருப்பார்கள். இப்போதைய விதாதா நிலையின் சமஸ்காரம் அநேக பிறவிகளுக்குப் பிராப்தியை அடைய வைத்து கொண்டே இருக்கும். ஒருவேளை, இப்போது வரை பெறக் கூடிய சமஸ்காரம் ஏதாவது ஒரு ரூபத்தில் இருந்தால் கூட அதாவது பெயர் பெற வேண்டும், மதிப்பு அடைய வேண்டும் அல்லது ஏதாவதொரு விதமான பெறக்கூடிய சமஸ்காரம் இருந்தால் கூட அது விதாதா ஆகவிடாது.

தபஸ்யா சொரூபம் என்றால் பெறக்கூடிய சமஸ்காரத்தின் தியாக மூர்த்தி நிலையாகும். இந்த எல்லைக்குப்பட்ட பெறக்கூடிய நிலையினாது தியாக மூர்த்தி, தபஸ்வி மூர்த்தி ஆக விடாது. ஆகையினால், தபஸ்வி மூர்த்தி என்றால் எல்லைக்குப்பட்ட ஆசை என்றால் என்ன வென்று அறியாத ரூபம் ஆகும். யார் பெறுவதற்கான சங்கல்பம் செய்கின்றார்களோ, அவர்கள் அல்பகாலத்திற்காக பெறுகின்றார்கள், ஆனால், சதா காலத்திற்காக இழக்கின்றார்கள். ஆகையினால், பாப்தாதா அடிக்கடி இந்த விஷயத்திற்கான சமிக்ஞை கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். தபஸ்வி ரூபத்தில், இந்த அல்பகால ஆசையே விசேஷமான தடை ரூபமாக உள்ளது. ஆகையினால், இப்பொழுது விசேஷமாக தபஸ்யாவின் பயிற்சி செய்ய வேண்டும். சமம் ஆவதற்கான இந்த சான்று அளிக்க வேண்டும். அன்பிற்கான சான்று அளித்து விட்டீர்கள், இது மகிழ்ச்சியான விஷயம். இப்பொழுது தபஸ்வி மூர்த்தி ஆவதற்கான சான்று அளித்திடுங்கள். புரிந்ததா? பலவகையான சமஸ்காரங்கள் இருக்கும்போதிலும் விதாதா நிலையின் சமஸ்காரம் பிற சமஸ்காரங்களை அமிழ்த்தி விடும். எனவே, இப்பொழுது இந்த சமஸ்காரத்தை வெளிக் கொணருங்கள். எவ்வாறு

மதுவனத்திற்கு ஓடோடி வந்து சேர்ந்து விட்டீர் களோ, அதுபோன்று தபஸ்வி ஸ்திதியின் இலக்கை நோக்கி ஓடுங்கள். நல்லது, உங்களுக்கு நல்வரவு. இப்பொழுது விநாசம் ஆகி விடபோவது போல் அனைவரும் ஓடிவிட்டனர். என்ன செய்தார் களோ, என்ன நடந்ததோ அது பாப்தாதாவிற்கு பிடித்தமானதாகவே உள்ளது. ஏனெனில், குழந்தைகள் அன்பிற்குரியவர்களாக இருக்கிறார்கள்.. ஒவ்வொருவரும் நாம் சென்று கொண்டு இருக்கின்றோம் என்று நினைக்கிறார்கள் ஆனால், மற்றவர்களும் கூட வந்து கொண்டு இருக்கின்றார்கள் என்பதை யோசிக்கவில்லை. உண்மையான கும்பமேளா இங்கு நடந்தது. அனைவரும் இறுதியான சந்திப்பு செய்வதற்காக, இறுதியான முழுக்கு போடு வதற்காக வந்திருக்கின்றீர்கள். அனைவரும் சென்று கொண்டு இருக்கின்றார்கள் ஆதலால், சந்திப்பின் விதி எவ்வாறு இருக்கும் என்று யோசித்தீர்களா! இந்த தன்னுணர்வில் இருந்தும் கடந்து விட்டீர்களா! இடத்தை பார்க்க வில்லை, முன்பதிவை பார்க்கவில்லை. இனிமேல் ஒருபோதும் முன்பதிவு செய்ய முடியவில்லை என்ற சாக்குபோக்கு சொல்லமுடியாது. நாடகத்தில் இது கூட ஒரு ஒத்திகையாக ஆகி விட்டது. சங்கமயுகத்தில் நம்முடைய இராஜ்யம் கிடையாது. சுயஇராஜ்யம் உள்ளது, ஆனால், நிலத்தின் மீது இராஜ்யம் கிடையாது, பாப்தாதா விற்கு அவர்களுக்கென்ற இரதம் கிடையாது. இது அந்நிய உடல் ஆகும். ஆகையினால், சமயம் அனுசாரம் இந்த சீசன் புது விதியை ஆரம்பம் செய்வதற்கான சீசன் ஆகி விட்டது. இங்கேயோ, தண்ணீருக்காகவும் யோசித்துக் கொண்டு இருக்கிறீர்கள், அங்கேயோ அருவிகளில் குளிப்பீர்கள், யாரெல்லாம் வந்துள்ளீர்களோ, எத்தனை பேர் வந்து இருக்கின்றீர்களோ, பாப்தாதா அன்பின் மறுமொழியாக அன்போடு வரவேற்கின்றார்கள்.

இறுதித் தேர்விற்கு முன்னதாக தயார் ஆகுவதற்காக இப்பொழுது விசேசமாக சமயம் கொடுக்கப்பட்டுள்ளது. இறுதித் தேர்விற்கு முன்பு சமயம் கொடுப்பார்கள், விடுமுறை கொடுப்பார்கள் அல்லவா. பாப்தாதா அநேக இரகசியங்களோடு இந்த விசேசமான சமயம் கொடுத்து கொண்டு இருக்கின்றார்கள். சில இரகசியங்கள் மறைமுகமானவை, சில இரகசியங்கள் வெளிப்படையானவை ஆனால், விசேசமாக ஒவ்வொருவரும் சதா புள்ளி வைக்க வேண்டும் அதாவது முடிந்தபோன விசயங்களை முடித்து விடுவதற்கான புள்ளி வைக்க வேண்டும் என்ற கவனம் கொண்டு இருக்க வேண்டும். மேலும், பிந்து (புள்ளி ரூபம்) ஸ்திதியில் நிலைத்திருந்து இராஜ்ய

அதிகாரியாகி காரியம் செய்ய வேண்டும். அனைத்து பொக்கிஷங்களின் பிந்து நீங்கள் அனைவருக்காகவும் விதாதாவாகி சிந்து (கடல்) ஆகி அனைவரையும் நிறைந்த வராக ஆக்க வேண்டும். எனவே, பிந்து மற்றும் சிந்து'ஆகி ய இந்த இரண்டு விசயங்களை விசேசமாக நினைவில் வைத்து சிரேஷ்டமான சான்றிதழ் பெற வேண்டும். எப்பொழுதும் சிரேஷ்ட சங்கல்பத்தின் வெற்றியினால் முன்னேறிக் கொண்டேயிருக்க வேண்டும். பிந்து ஆக வேண்டும், சிந்து ஆக வேண்டும் என்பதுவே அனைத்து குழந்தைகளுக்காவும் வரதாதா அளிக்கும் வரதானமாகும். வரதானத்தைப் பெறுவதற்காகவே ஓடோடி வந்துள்ளீர்கள் அல்லவா! இந்த வரதாதாவின் வரதானத்தை நினைவில் வைக்க வேண்டும் நல்லது.

நாலாபுறங்களிலும் உள்ள அனைத்து சிநேகி, சகயோகி குழந்தைகளுக்கு, சதா தந்தையின் கட்டளைப்படி நடக்கும் ஆக்ஞாகாரி குழந்தைகளுக்கு, சதா பரந்த உள்ளம், பெரிய உள்ளம் கொண்டிருக்கக்கூடிய, அனைவருக்கும் அனைத்து பொக்கிஷங்களையும் வழங்க கூடிய, மகான் புண்ணிய ஆத்ம குழந்தைகளுக்கு, சதா தந்தைக்கு சமம் ஆகுவதற்கான ஊக்க உற்சாகத்துடன் பறக்கும் கலையில் பறக்கக்கூடிய குழந்தைகளுக்கு விதாதா, வரதாதா, அனைத்து பொக்கிஷங்களின் கடலான பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு**: 1. தங்களை பத்மாபதம் பாக்கியவான் என அனுபவம் செய்கின்றீர்களா! ஏனெனில், கொடுக்கக் கூடிய தந்தை அந்தளவு கொடுக்கின்றார், அதனால் ஒரு பிறவிக்கு பாக்கியவான் ஆகவே செய்கின்றீர்கள், ஆனால், அநேக பிறவிகள் வரை இந்த அழிவற்ற பாக்கியம் தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கும். இப்பேற்பட்ட அழிவற்ற பாக்கியத்தை எப்பொழுதாவது கனவிலாவது நினைத்தது உண்டா! சாத்தியமாகாது என்று தோன்றியது அல்லவா? ஆனால், இன்று சாத்தியம் ஆகி விட்டது. எனவே, அத்தகைய சிரேஷ்ட ஆத்மாக்கள் நாம் என்ற இந்த குஷி இருக்கின்றதா? எப்பொழுதாவது ஏதாவது ஒரு சூழ்நிலையில் குஷி மறைந்து விடவில்லை தானே! ஏனெனில், தந்தை மூலம் குஷி என்ற பொக்கிஷம் தினமும் கிடைத்துக் கொண்டேயிருக்கிறது. ஒரு பொருள் தினமும் கிடைக்கிறது எனில் அது அதிகரிக்கும் அல்லவா. ஒருபொழுதும் குஷி குறைய முடியாது. ஏனெனில், குஷிகளின் கடல் மூலம் கிடைத்துக் கொண்டே இருக்கிறது, குறையாதது. ஒருபொழுதும் எந்த விசயத்தினுடைய

கவலையிலும் இருப்பவர்கள் அல்ல. சொத்து என்னவாகும்? பரிவாரம் என்னவாகும்? இந்தக் கவலை கூட கிடையாது, கவலையற்றவர்கள் ஆவீர்கள். பழைய உலகம் என்ன வாகும்? பரிவர்த்தனை ஆகும் அல்லவா. பழைய உலகத்தில் எவ்வளவு தான் சிரேஷ்டமானதாக இருந்தாலும் அனைத்தும் பழையவையே, ஆகையினால், கவலையற்றவர்கள் ஆகி விட்டீர்கள். இன்று இருக்கின்றோம், நாளை இருப்போமா, இருக்கமாட்டோமா தெரியவில்லை என்ற இந்தக் கவலையும் இல்லை. என்ன நடக்குமோ, நல்லதே நடக்கும். பிராமணர்களுக்கு அனைத்தும் நல்லதே. கெட்டது எதுவும் இல்லை. நீங்களோ ஏற்கெனவே இராஜாவாக இருக்கின்றீர்கள், இப்பொழுதும் இராஜா, எதிர்காலத்திலும் கூட இராஜா. எப்பொழுதும் இராஜாவாக இருக்கின்றீர்கள் என்றால் கவலை அற்றவர்களாகவும் ஆகி விட்டீர்கள் என்பதாகும். உங்களுடைய இராஜ்யம் அப்பேற்பட்டது, யாரும் அதை பறிக்க முடியாது. எந்தத் துப்பாக்கியைக் கொண்டும் இராஜ்யத்தை பறிக்க முடியாது. இந்தக் குஷி சதா இருக்க வேண்டும் மற்றும் பிறருக்கும் கூட கொடுத்துக் கொண்டே செல்லுங்கள். பிறரையும் கூட கவலையற்ற இராஜா ஆக்குங்கள் நல்லது.

2. சதா தங்களை தந்தையினுடைய நினைவின் குடைநிழலுக்குள் இருக்கக்கூடிய சிரேஷ்ட ஆத்மாக்களாக அனுபவம் செய்கின்றீர்களா? இந்த நினைவு என்ற குடைநிழல் அனைத்துத் தடை களிலிருந்தும் பாதுகாக்கிறது. எந்த விதமான தடையும் குடைநிழலுக்குள் இருப்பவர்களிடம் வரமுடியாது. குடைநிழலுக்குள் இருப்பவர்கள் நிச்சயிக்கப்பட்ட வெற்றி யாளர்கள் ஆவார்கள். இத்தகையவர்களாக ஆகியிருக்கின்றீர்களா? குடைநிழலில் இருந்து ஒருவேளை சங்கல்பம் என்ற கால் கூட வெளியே வைத்தாலும் மாயை சண்டை போடும். எந்த விதமான சூழ்நிலை வந்தாலும் குடைநிழலுக்குள் இருப்பவர்களுக்கு கடினத்திலும் கடினமான விசயம் கூட சுலபமானதாக ஆகி விடும். மலை போன்ற விசயங்கள் பஞ்சு போல் அனுபவம் ஆகும். இது குடை நிழலின் அற்புதம் ஆகும். அத்தகைய குடைநிழல் கிடைக்கும்பொழுது என்ன செய்ய வேண்டும்? அல்பகாலத்திற்கான எந்தக் கவர்ச்சியாகட்டும், ஆனால், (குடை நிழலுக்கு) வெளியில் வந்தால் முடிந்து விட்டது என்று அர்த்தம். ஆகை யினால், அல்பகால கவர்ச்சியையும் அறிந்து இருக்கின்றீர்கள். இந்தக் கவர்ச்சியில் இருந்தும் எப்பொழுதும் விலகி இருக்க வேண்டும். எல்லைக்குப்பட்ட பிராப்தி இந்த ஒரு பிறவியில் முடிந்து விடும். எல்லையற்ற பிராப்தி சதா

கூடவே இருக்கும். எனவே, எல்லையற்ற பிராப்தியை அடையக்கூடியவர்கள் அதாவது குடை நிழலில் இருக்கக்கூடியவர்கள் விசேச ஆத்மாக்கள் ஆவார்கள், சாதாரணமானவர்கள் அல்ல. இந்த நினைவு சதா காலத்திற்கும் சக்திசாலி ஆக்கி விடும். யார் தேடிக் கண்டெடுக்கப்பட்டவர்களோ, அவர்கள் எப்பொழுதும் குடை நிழலுக்கு உள்ளே இருப்பார்கள். நினைவு தான் குடைநிழல் ஆகும். இந்தக் குடைநிழலில் இருந்து சங்கல்பம் என்ற கால் மட்டும் வெளியில் வந்தால் கூட மாயை வந்து விடும். இந்தக் குடை நிழல் மாயையை எதிரில் வரவிடாது. குடை நிழலுக்குள் வருவதற்கான சக்தி மாயையிடம் கிடையாது. குழந்தை ஆவது என்றால் குடைநிழலில் இருப்பது என்று அர்த்தம். சதா குழந்தை களை குடை நிழலுக்குள் வைப்பது கூட தந்தையின் அன்பு ஆகும். செல்லக் குழந்தைகள் ஆகி விட்டீர்கள், குடைநிழல் கிடைத்து விட்டது என்ற இந்த விசேசமான வரதானத்தை நினைவில் வைக்க வேண்டும். இந்த வரதானம் சதா முன்னேற்றிக் கொண்டே இருக்கும்.

**விடைபெறும் சமயம்:** அனைவரும் விழித்துக் கொண்டு இருக்கின்றீர்கள். உங்களுடைய பக்தர்கள் கண் விழிக்கின்றார்கள் என்றால் பக்தர்களுக்குக் கற்றுக் கொடுப்பவர்கள் இஷ்ட தேவதைகள் தானே. இங்கே இஷ்ட தேவதைகள் கண் விழிக்கின்றீர்கள் ஆதலால், பக்தர்கள் பின்பற்றுகின்றார்கள். அனைவரும் கண் விழித்து இருக்கின்றீர்கள் என்றால் தங்களது கணக்கில் வருமானத்தை சேமித்து இருக்கின்றீர்கள் என்று அர்த்தம். எனவே, இன்றைய இரவு வருமானம் செய்யும் சீசனுடைய இரவு ஆகி விட்டது. எவ்வாறு வருமானம் செய்வதற்கான சீசன் என்றால் அந்த சீசனில் கண் விழித்து இருப்பார்கள். இது வருமானத்திற்கான சீசன் ஆகும், ஆகையால், கண் விழித்தல் என்றால் சம்பாதித்தல் என்று அர்த்தம். ஒவ்வொருவரும் அவரவர் சக்திக்கேற்ப சேமித்து இருக்கின்றீர்கள். மேலும், சேமித்தவற்றை மகாதானி ஆகி பிறருக்கும் கொடுத்துக் கொண்டே இருங்கள். மேலும், தானும் அனேக பிறவிகளுக்கு சாப்பிட்டுக் கொண்டே (அனுபவித்துக் கொண்டே) இருங்கள். இப்பொழுது அனைத்து குழந்தைக்கும் பரமாத்ம சந்திப்பினுடைய பொன்னான வாய்ப்பின் (கோல்டன் சான்ஸ்) பொன்னான காலை வணக்கம் (கோல்டன் மார்னிங்) சொல்கின்றார்கள். உண்மையில் பொன்னானது என்பதைவிட வைரமான காலை வணக்கம். சுயம் நீங்களும் வைரம் ஆவீர்கள் மற்றும் காலையும் வைரம் போன்றது மற்றும் சேமிப்பும் வைரத்தையே செய்கின்றீர்கள், எனவே

அனைத்தும் வைரமே வைரமாக உள்ளது. ஆகையினால், வைரமான காலை வணக்கம் சொல்கின்றார்கள்.

**வரதானம்: எண்ணங்களை கூட சோதனை செய்து வீணானவற்றின் கணக்கை முடிக்கக்கூடிய சிரேஷ்டமான சேவாதாரி ஆகுக!**

யாருடைய ஒவ்வொரு சங்கல்பமும் சக்திசாலியாக இருக்கிறதோ அவர்களே சிரேஷ்டமான சேவாதாரி ஆவார்கள். ஒரு எண்ணம் கூட எதிலும் வீணாக ஆகக்கூடாது. ஏனென்றால், சேவாதாரி என்றாலே விஷ்வத்தின் மேடையில் நடிக்கக்கூடியவர்கள் என்று அர்த்தம். முழு விஷ்வமும் உங்களை பின்பற்றுகிறது. ஒருவேளை நீங்கள் ஒரு சங்கல்பத்தை வீணாக்கினாலும், தனக்காக மட்டும் வீணாக்கவில்லை, ஆனால், அனேகருக்கு நிமித்தமாக ஆகி விட்டீர்கள். ஆகையினால், இப்பொழுது வீணானவற்றின் கணக்கை முடித்து சிரேஷ்டமான சேவாதாரி ஆகுங்கள்.

**சுலோகன்: சேவையின் வாயுமண்டலத்தின் கூடவே எல்லையற்ற வைராக்கிய விருத்தியின் வாயுமண்டலத்தை உருவாக்குங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 09.04.1986 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உண்மையான சேவாதாரியின் அடையாளம்!

இன்று ஞான சூரியன் மற்றும் ஞான சந்திரன் தமது உலகின் நட்சத்திர மண்டலத்தில் விளங்குகின்ற அனைத்து நட்சத்திரங்களையும் பார்த்துக் கொண்டிருக்கின்றார். அனைத்து நட்சத்திரங்களும் பிரகாசமாக ஒளி வீசிக் கொண்டிருக்கின்றன. பல வகைப்பட்ட நட்சத்திரங்கள் உள்ளன. சில ஞான நட்சத்திரங்கள், சில சகஜ யோகி நட்சத்திரங்கள், சில குணதான மூர்த்தி நட்சத்திரங்கள், சில நிரந்தர சேவாதாரி நட்சத்திரங்கள், சில நிறைந்து விளங்குகின்ற நட்சத்திரங்கள் என்று பல தரப்பட்டவை காணப்படுகின்றன. அனைத்திலும் மிக சிரேஷ்டமானது, ஒவ்வொரு வினாடியும் வெற்றி பெறுகின்ற நட்சத்திரம் ஆகும். அத்துடன் சில நட்சத்திரங்கள் வெறும் நம்பிக்கையை மட்டும் கொண்டுள்ளவையாக விளங்குகின்றன. நம்பிக்கை நட்சத்திரங்களுக்கும், வெற்றி நட்சத்திரங்களுக்கும் இடையில் மிகுந்த வேறுபாடு காணப்படுகிறது ஆனால் அவை இரண்டுமே நட்சத்திரங்கள்தாம். உலகின் ஆத்மாக்களின் மீது, பிரகிருதியின் மீது அந்த நட்சத்திரங்களின் பிரபாவம் படிந்து வருகிறது. வெற்றி நட்சத்திரங்களின் பிரபாவம், நாற்புறங்களிலும் உற்சாகத்தை ஏற்படுத்துகிறது. வெறும் நம்பிக்கை மட்டும் கொண்டுள்ள நட்சத்திரங்கள், தாமே சிலநேரங்களில் அன்பு, மற்ற நேரங்களில் பிரயத்தனம் செய்வதில் ஈடுபட்டுள்ளதால், மற்றவர்களின் மீதும் சில நேரங்களில் அன்பு, மற்ற நேரங்களில் பிரயத்தனம் என்கிற பிரபாவத்தை ஏற்படுத்தி, முன்னேறுவதற்கான உற்சாகத்தை அளிக்கிறது. நீங்கள் எத்தகைய நட்சத்திரம் என்று உங்களை நீங்களே சோதித்துக் கொள்ளுங்கள். அனைவரிடமும், ஞானம், யோகம், குணம், மற்றும் சேவை ஆகி யவை உள்ளன ஆனால் சிலரிடத்தில் ஞானம் ஒளி வீசுகிறது, மற்றும் சிலரிடம் நினைவு சிறப்பாக ஒளி வீசுகிறது. வேறு சிலர் குணமூர்த்திகளாக ஒளி வீசுகின்றனர். நான்குமே பயிற்சியில் இருப்பினும், விகிதா சாரத்தில் மிகுந்த வேறுபாடு காணப்படுகிறது, இதனால் நட்சத்திரங்களின் ஒளி ஒன்றுக் கொன்று வேறுபாடுடன் காணப்படுகிறது.

இது ஆன்மீகவிசித்திரமான நட்சத்திர மண்டலம் ஆகும். ஆன்மீக நட்சத்திரங்களான உங்களுடைய பிரபாவம் உலகத்தின் மீது படிகிறது. உலகில் உள்ள ஸ்தூல நட்சத்திரங்களின் பிராபவமும் உலகின் மீது படிகிறது. நீங்கள் எந்த அளவு சக்தி மிக்க நட்சத்திரங்களாகிறீர்களோ. அந்த அளவு உலகில் உள்ள ஆத்மாக்களின் மீது உங்களுடைய பிரபாவம் படிந்து வருகிறது, மேலும் அது முன்னேறியும் வரும். மிகுந்த இருண்ட இரவில், வானத்து நட்சத்திரங்களின் ஒளி மிகப் பிரகாசமாகத் தெரியும். அவ்வாறே அப்பிராப்தி என்கிற இருட்டின் அளவுக்கு ஏற்ப, மற்ற ஆத்மாக்கள், ஆன்மீக நட்சத்திரங்களாகிய உங்களுடைய பிரபாவத்தை அனுபவம் செய்வார்கள். உலகின் ஒளி வீசிக் கொண்டிருக்கும் நட்சத்திரங்களாகிய நீங்கள், ஜோதி பிந்து சொரூபத்தில் பிரகாசம் அளிப்பீர்கள் மற்றும் ஃபரிஸ்தா உருவிலும் காட்சி அளிப்பீர்கள், இப்பொழுது வானத்தில் காணப்படும் நட்சத்திரங்களைப் பற்றி அறிவதில், மனிதர்கள் தமது காலத்தையும், சக்தியையும், செல்வத்தையும் செலவழிக்கின்றனர், அவ்வாறே ஆன்மீக நட்சத்திரங்களாகிய உங்களைக் கண்டு, அவர்கள் ஆச்சரியப்படுவார்கள். இப்பொழுது ஆகாயத்தில் உள்ள நட்சத்திரங்களைக் காண்பதைப் போல், இந்த பூமியில் நாற்புறங்களிலும் காணப்படும் ஃபரிஸ்தாக்களின் பிரகாசத்தையும், ஜோதி சொரூபமாக விளங்குகின்ற நட்சத்திரங்களின் பிரகாசத்தைக் கண்டு. அனுபவம் செய்து, இவர்கள் யார்? எங்கிருந்து இந்த பூமிக்கு ஒளி.வீச வந்திருக்கின்றனர்? என்று வினாவுவார்கள். ஸ்தாபனையின் துவக்கத்தின் போது, வெகு தூரத்தில் அவரவர் வீட்டில் இருக்கும்போதே, பிரம்மா மற்றும் கிருஷ்ணரின் சாட்சாத்காரம் ஏற்பட்டது. இவர் யார்? இது என்ன காட்சி என்கிற கேள்விகள் எழுந்தன. இதைப்ப புரிந்து கொள்ள பலர் விரும்பினார்கள். அவ்வாறே இப்பொழுது இந்த இறுதி நேரத்தில் ஜோதி மற்றும் பரிஸ்தா ஆகி ய இரு உருவங்களின் பிரகாசத்தை பாப்தாதா மற்றும் குழந்தைகள் மற்ற அனைவருக்கும் எடுத்துக்காட்டுவார்கள். அனைவரின் கவனமும் இவர்கள்பால் திரும்பும். நீங்கள் அனைவரும் சம்பன்னம் தானாகவே ஆகும் வரை, இந்த திவ்ய காட்சிகள் காட்டப்படுகின்றன. ஃபரிஸ்தா தன்மை ஸ்திதியை இயற்கையாகவும், எளிதாகவும் நீங்கள் அனுபவம் செய்யும்போது, நீங்கள் மற்றவர்களுக்கு உங்களுடைய ஃபரிஸ்தா ஸ்திதியை சாட்சாத்காரமாக எடுத்துக் காட்டுவீர்கள்.

இந்த ஆண்டு, ஃபரிஸ்தா ஸ்திதியை நீங்கள் அடைவதற்காக விசேஷமாக அளிக்கப்பட்டுள்ளது. நினைவு செய்ய பயிற்சி செய்யலாமா அல்லது சேவை செய்யலாமா என்று சில குழந்தைகள் வினவுகின்றனர். சேவைக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு தவம் செய்யத் துவங்கலாமா? இப்பொழுது சேவை என்றால் என்ன என்பதை பாப்தாதா விளங்கத் துவங்குகிறார்.

சேவை என்றால் சதா ஒவ்வொரு ஆத்மாவைப் பற்றியும் சுப எண்ணங்கள், சிரேஷ்ட விருப்பங்கள் கொண்டிருப்பது ஆகும். சேவை என்றால் ஒவ்வொரு ஆத்மாவுக்கும் நன்மை ஏற்படவேண்டும். எல்லைக்குட்பட்டதாக இல்லாமல் சிரேஷ்டமான எண்ணங்கள் இருக்க வேண்டும். நீங்கள் சேவாதாரிகளின் மீது ஆன்மீக அன்பு செலுத்துவதன் மூலம், சக்திகளுக்கு சகயோகம் செய்ய விரும்புவதன் மூலம், உங்களுடைய சந்தோஷத்தின் மூலம் மற்றும் உங்களுடைய உற்சாகத்தின் மூலம், ஆக பலவேறு வழிகளின் மூலம் நீங்கள் பெறும் உதவி என்கிற பலனை அனுபவம் செய்தீர்களானால், இதையே உண்மையான சேவை என்று அழைக்கலாம்! வெறும் சொற்பொழிவாற்றுவது, ஞானத்தை மற்றவர்களுக்கு எடுத்துக்கூறுவது, புதுக்கிளையைத் துவங்குவது ஆகி யவற்றை சேவை என்று கூற இயலாது. சேவைஎன்றால், மற்ற ஆத்மா எத்தகையதாக இருப்பினும், அவர் தமது உயர்வை அனுபவம் செய்ய வேண்டும். இத்தகைய சேவையுடன் தவமும் சதா உடன் இணைந்திருக்கும்.

திட சங்கல்பத்துடன் எச்செயலையும் செய்வதே தவம் என்பதன் பொருள். சேவை இருக்குமிடத்தில் தவமும் இணைந்திருக்கும். தியாகம், தவம், சேவை ஆகி ய மூன்றும் ஒருங்கினைந்திருப்பதே உண்மையான சேவை ஆகும். தியாகம், தவம் ஆகி ய இரண்டும் இல்லாத சேவை, வெறும் பெயரளவில் செய்யப்படும் சேவையே ஆகும். பெயரளவில் செய்யப்படும் சேவையின் பலன் அல்ப காலத்திற்கே இருக்கும். மிகவும் சிறப்பாக உரையாற்றினார். மிகவும் சிறப்பாக 7-நாள் பாடத்தை எடுத்துக் கூறினார், மிகவும் சிறப்பாக சேவை செய்தார் என்று பவர் போற்றப்படுகின்றனர். இத்தகைய போற்றுதல் அல்ப கால பலனையே அளிக்கும். இவ்வாறு புகழப்படுவதே அல்ப கால பலன் ஆகும் ஆனால் அனுபவம் செய்வது, அதாவது தந்தையுடன் மற்றவரை சம்பந்தம் கொள்ள வைப்பது, அவரை சக்தி மிக்கவராகச் செய்வது என்பதே உண்மையான சேவை ஆகும். தியாகமும் தவமும் இணைந்திராத சேவை,

உண்மையான சேவை ஆகாது, அது புறத்தோற்றத்திற்காக செய்யப்படும் சேவையே ஆகும்.

உண்மையான சேவாதாரியின் அடையாளம் தியாகம் அதாவது அடக்கம் (பணிவு). தவம் என்றால் ஒரே ஒரு தந்தையை அடைந்து விட்ட குஷியில் திடமாக இருப்பது ஆகும். இதை யதார்த்தமான சேவை என்று கூறுகிறோம். உண்மையான சேவாதாரியாக மாறுவதற்கு நீங்களும் குழப்பம் அடைந்து, மற்றவர்களையும் குழப்பம் அடைவதற்கு முற்றுப்புள்ளி வையுங்கள். குழப்பம் ஏற்படக்கூடிய சேவை சிறப்பானது அல்ல, ஏனெனில் சேவையின் சிறப்பே திருப்தி அடையச் செய்வது தான். உங்களுக்கோ, அல்லது மற்றவர்களுக்கோ, திருப்தி இல்லையெனில், அச்சேவையின் மூலம் உங்களுக்கும், மற்றவர்களுக்கும் எந்த விதமான பலனும் ஏற்படாது. நீங்களே முதலில் திருப்தி அடைந்து, பிறகு நீங்கள் சேவையில் ஈடுபடுவதே மிகவும் சிறப்பாகும். இல்லையெனில் சூட்சமமான சுமை இருக்கவே செய்யும். இத்தகைய பலவகைப்பட்ட சுமைகள், உங்களை உயரவிடாமல் இடையூறு செய்யும். சுமையை அதிகரிக்காமல், அதை அகற்றி விடவேண்டும். சுமையை அகற்ற, ஏகாந்தவாசியாகி விடுங்கள். ஏனெனில் ஏகாந்தவாசி ஆகும்போது சுய பரிவர்த்தனையில் உங்கள் கவனம் செல்லும்; இரவு பகலாக ஓரிடத்தில் அமர்ந்து, வெறும் தவம் புரியுமாறு பாப்தாதா கூறவில்லை. அமர்ந்து தவம் செய்வதும் சேவையே ஆகும். கலங்கரை விளக்கமாக, சக்தி விளக்கமாக மாறி, சாந்திக் கிரணங்களை செலுத்தி, மிகச் சிறப்பான சுற்றுப்புறத்தை அமைக்கவேண்டும். தவத்துடன், மனசேவையும் இணைந்திருக்கிறது. மன சேவை தனிப்பட்ட ஒன்றல்ல, மனசேவை இல்லையெனில் தவம் எதை சாதிக்க இயலும். நீங்கள் பிராம்மண ஆத்மாவாக மாறிவிட்டீர்கள். இப்போது தவம் செய்ய வேண்டும். அதாவது நீங்கள் சர்வ சக்திகளிலும் சம்பன்னம் ஆகி, ஸ்திர ஸ்திதி மற்றும் திட சங்கல்பத்தின் மூலம் உலகிற்கு சேவை செய்யவேண்டும்.

வெறும் பேச்சின் மூலம் செய்யும் சேவை, உண்மையான சேவை ஆகாது. மனதினால் செய்யும் சேவையே உண்மையான சேவை ஆகும். சுகம், சாந்தி மற்றும் பவித்திரம் ஒன்றுடன் ஒன்று இணைந்திருப்பதைப் போல், தியாகம், தவம் மற்றும் சேவை ஆகி யவை யாவும் ஒன்றுடன் ஒன்று இணைந்துள்ளன. சக்திமிக்க சேவாதாரியாக மாறுவதற்காக பாப்தாதா தபஸ்வி உருவை வர்ணிக்கின்றார். தபஸ்வி உருவின் திருஷ்டியும், சேவை

செய்கிறது. அவருடைய சாந்தி சொரூபமான முகமும் சேவை செய்கிறது. தபஸ்வி மூர்த்தியின் தரிசனமே மிகுந்த பிராப்திகளை அளிக்கிறது. இதனால்தான் இச்சமயத்தில், ஹடயோகம் செய்பவர்களை தரிசனம் செய்ய பலர் விரும்புகின்றனர். இதுவும் உங்களுடைய தவத்தின் நினைவுச்சின்னமாக இன்றும் கொண்டாடப்படுகிறது. ஆகவே சேவை என்றால் என்ன என்பதைப் புரிந்து கொண்டீர்களா?

சேவை என்றால், மற்றவர்களின் பலவீனங்களை சகித்துக் கொள்ளும் தன்மை ஆகும். பலவீனங்களை எதிர்ப்பதல்ல, மாறாக அவற்றை சகித்துக் கொள்வது ஆகும். நீங்கள் அவற்றை சகித்துக் கொண்டு, மற்றவர்கள் அவற்றை அகற்றி விடுமாறு சக்தி அளிக்கவேண்டும். இதனால் தான் சகிப்புத்தன்மை மிகவும் அவசியம் தேவை என்று கூறுகிறோம். சகிப்புத்தன்மை என்கிற சக்தியை நீங்களும் அடைந்து, மற்றவர்களும் அடையச் செய்யவேண்டும். சகித்துக் கொள்ள வேண்டுமே தவிர இறந்து விடக்கூடாது. நாம் இனியும் சகித்துக் கொள்ள இயலாது, இனி மரணம் அடைந்து விடுவோம் என்று சிலர் நினைக்கின்றனர். நாம் ஏன் மரணமடைய வேண்டும்? ஆத்மா மரணம் அடைய இல்லாது அல்லவா? அனைவரிடத்திலும் அன்பு கொண்டு உயிருடன் தான் இருக்கவேண்டும், எத்தகைய விரோதியாக இருப்பினும், ராவணனை விட சக்தி வாய்ந்தவராக இருப்பினும், ஒரு முறை மட்டும் சகித்துக் கொள்ளாமல், 10-முறை சகித்துக் கொண்டு இருந்தால், அதன் பலன் நிரந்தரமானதாகவும் இனிமையானதாகவும் அமையும், மற்றவர்களும் திச்சயமாகத்திருந்தி விடுவார்கள். நாம் இவ்வளவு சகித்துக் கொண்டிருக்கிறோமே, இப்பொழுதாவது அவர்கள் திருந்தட்டுமே என்று நினைக்க வேண்டாம்.

அல்ப காலத்திற்கான பலனை எதிர்பார்க்காதீர்கள். மற்றவர்கள் மீது கருணை கொள்வதே சேவை ஆகும். ஆகவே இந்த ஆண்டு இத்தகைய சேவையில் ஈடுபட்டு, நற்சான்றிதழ் பெறுபவர்களின் பட்டியலில் உங்களுடைய பெயர் வர வேண்டும். இதற்கான சந்தர்ப்பம் இந்த ஆண்டு அளிக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டின் விழாக்கள் சிறப்பாக அமைந்துள்ளன என்று கவனக்குறைவாக இருந்து விடாதீர்கள் ஆனால் திருப்தி அடைந்தவர்களாகி, சேவையில் முன்னேற வேண்டும். புரிந்ததா? இதைத்தான் நஷ்டோமோகா ஸ்மிருதி சொரூபம் என்று அழைக்கின்றோம். 18-வருடங்கள் முற்றுப்பெற்றதன் அடையாளமாக, நீங்கள் சம்பன்னம்

அடைந்து விட்டதை எடுத்துக்காட்டுங்கள், தந்தைக்குச் சமமாகி விட்டதாக இதைத்தான் கூறுகிறோம்.

சதா பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஆன்மீக நட்சத்திரங்களுக்கு: சதா திருப்தியுடன் விளங்கும் சந்துஷ்ட மணிகளுக்கு; சதா ஒரே சமயத்தில் தியாகம், தவம் மற்றும் சேவையில் ஈடுபட்டு வரும் ஆத்மாக்களுக்கு; சதா சர்வ ஆத்மாக்களுக்கும் ஆன்மீக பலனை அளித்து வரும், விதை உருவமாக தந்தைக்குச் சமமாக விளங்கும் சிரேஷ்டமான குழந்தைகளுக்கு, சம்பன்னமாவதற்கான அன்பு நினைவுகளும், வணக்கமும் உரித்தாகுக.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 11.04.1986 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சிரேஷ்ட அதிர்ஷ்டத்திற்கான வரைபடம் அமைப்பதற்கான யுக்தி!

இன்று அதிர்ஷ்டத்தை உருவாக்கும் பாப்தாதா அனைத்து குழந்தைகளின் உயர்ந்த அதிர்ஷ்டத்திற்கான வரைபடத்தை பார்த்துக் கொண்டிருந்தார். அனைவருமே, அதிர்ஷ்டசாலி ஆகி யுள்ளீர்கள், ஆனால் ஒவ்வொருவருடைய அதிர்ஷ்டத்திற்கான வரைபடமும் அதனதற்கே உரிய பொலியுடன் காணப்படுகின்றது. ஒருசிலரின் வரைபடம் ஆயிரக்கணக் கில் பெருமானம் உள்ளதாக இருக்கிறது. சிலர் வரைபடம் சாதாரணதாகவும் உள்ளது. இங்கு பாப்தாதா மூலமாக கிடைத்துள்ள பாக்கியத்தை அதிர்ஷ்டத்தை வரைபடமாக கொண்டு வருவது அதாவது நடைமுறை வாழ்வில் கொண்டு வருவதாகும். இதில் தான் வேறுபாடு காணப்படுகின்றது. அதிர்ஷ்டத்தை அமைப்பவர் ஒரே நேரத்தில் அனைவருக்கும் அதிர்ஷ்டத்தை வழங்கியுள்ளார் ஆனால் அதிர்ஷ்டத்தை வரைபடமாக நடைமுறையில் கொண்டு வருவதில் தான் ஒவ்வொரு ஆத்மாவும் விதவிதமாக இருப்பதால் உருவாக்கிய வரை படத்தில் வரிசைக்கிரமமாக தென்படுகின்றது. அதிர்ஷ்டம் எதுவாயினும் அதனுடைய விசேஷத்தன்மை கண்களிலும் புன்னகை யிலும் தென்படுகின்றது. இந்த இரு விசேஷத்தன்மைகள் மூலமாகவே வரைபடத்தின் மதிப்பு ஏற்படுகின்றது. அது போலவே இங்கும் அதிர்ஷ்டத்திற்கான விசேஷத்தன்மைகள் இவ்விரண்டுமே தான். கண்கள் என்பது ஆன்மீக விஷ்வ கல்யாணி, இரக்க மனம், பரோபகாரி பார்வை பார்வையில் இந்த சிறப்பம்சங்களே இங்கும் உள்ளது. முதன்மை யான விசயம் பார்வை, புன்னகை, முகப்பொலிவு இதுவே சதா திருப்தியாக இருப்பதற்கும் திருப்தி மற்றும் புன்னகையின் பொலிவாகும். இந்த விசேஷத் தன்மைகளாலே சதா முகத்தில் ஆன்மிக பொலிவு வருகின்றது. ஆன்மிக மலர்ச்சி அனுபவம் ஆகின்றது. இவ்விரு விசேஷத் தன்மைகளாலேயே வரைபடத்தின் மதிப்பு உயர்கிறது. இன்று இதையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதிர்ஷ்டத்தின் வரைபடத்தை அனைவருமே உருவாக்கினார்கள்.வரைபடத்தினை வரைவதற்கான எழுதுகோல் பாபா

அனைவருக்குமே கொடுத்துள்ளார். அந்த எழுதுகோல் உயர்ந்த நினைவு, உயர்ந்த செயலுக்கான ஞானம். உயர் செயல் மற்றும் உயர் எண்ணம் அதாவது நினைவு. இந்த ஞானம் எனும் எழுதுகோல் மூலமாக ஒவ்வொரு ஆத்மாவும் தமக்கே உரிய அதிர்ஷ்டமெனும் வரை படத்தினை வரைந்து கொண்டிருக்கின்றார்கள். வரைந்தும் இருக்கிறார்கள். வரைபடம் உருவாகி விட்டது. கண்களும், முகமும் வரைந்தாயிற்று, இப்போது இறுதி ஒப்பனையே சம்பூர்ணதா உள்ளது. பாப்சமான் ஆக வேண்டியது தான். இரட்டை அயல்நாட்டுக் குழந்தைகள் படம் வரைவதில் அதிகம் ஆர்வம் உள்ளவர்கள். இன்றும் பாப்தாதா அனைவருடைய வரைபடத்தை பார்த்துக் கொண்டிருக்கின்றனர். நீங்களும் தனது வரைபடம் எந்தளவிற்கு மதிப்பு வாய்ந்ததென பார்க்க முடியுமல்லவா. எப்போதும் தன்னுடைய இந்த ஆன்மீக படத்தைப் பார்த்து அதில் சம்பூர்ண தன்மையை கொண்டு வந்து கொண்டேயிருங்கள். உலக ஆத்மாக்களில் சிரேஷ்ட பாக்கியவான் கோடியில் ஒருவராகவே உள்ளனர். அந்த ஒரு சிலரிலும் சிலரே விலைமதிப்பிட முடியாத சிரேஷ்ட பாக்கியவனாக உள்ளனர் ஆனால் ஒன்று உயர்ந்தது மற்றொன்று உயர்ந்ததிலும் உயர்ந்தது. ஆக உயர்வாகியுள்ளீர்களா? உயர்விலும் உயர்வாகியுள்ளீர்களா? இதனை சோதனை செய்யுங்கள். நல்லது.

இப்போது இரட்டை அயல்நாட்டவர் பந்தயம் செய்வீர்களா! முதல் நம்பர் பெற வேண்டுமா? முதலில் வருபவர்களை பார்த்து சந்தோஷம் அடைவீர்களா? பார்த்து பார்த்து மகிழ்வதும் அவசியம் தான், ஆனால் பின்னால் இருந்து பார்க்காதீர்கள். உடனிருந்து பிறரையும் பார்த்து மகிழுங்கள். தானும் முன்னேறுங்கள் பின்னால் இருப்பவரையும் முன்னேற வையுங்கள். அதுவே பரோபகாரி ஆவதாகும். பரோபகாரி ஆவது அதனுடைய விசேஷமே சுயநலமின்றி சதா விடுபட்டிருப்பதாகும். ஒவ்வொரு இன்னலிலும் ஒவ்வொரு செயலிலும் ஒவ்வொரு ஒத்துழைப்பான குழுவிலும் எந்தளவு தன்னல மின்மையோ அந்தளவே பரோபகாரமும் இருக்கும். தன்னுள் சதா முழுமையே அனுபவம் ஆகும். சதா பிராப்தி சொரூப மான மனோ நிலையில் இருப்பார்கள். அப்போது பரோபகாரியின் இறுதி நிலை அனுபவம் செய்து பிறரையும் அனுபவம் செய்ய வைக்க முடியும். எப்படி பிரம்மா பபாவிடம் இறுதி சமயத்திற்கான மனோ நிலையில் உபராம் மற்றும் பரோபகாரம் இந்த இரண்டு விசேஷங்களே சதா தென்பட்டது. தனக்கென எதையுமே ஏற்கவில்லை. மகிமையோ, பொருட்களோ, இருப்பிடமோ எதனையும்

ஏற்கவில்லை. ஸ்தூலமாகவோ சூட்சுமமாகவோ சதா முதலில் குழந்தைகள் தான். இதுவே பரோபகாரி நிலை, இதுவே முழுமை மற்றும் அதி முழுமையின் அடையாள மாகும். புரிந்ததா.

முரளிகளை அதிகம் கேட்டு விட்டீர்கள். இப்போது முரளீதர் ஆகி சதா நடனமாடிக் கொண்டும் ஆட வைத்துக் கொண்டுமிருங்கள். முரளியால் பாம்பின் விசத்தையும் அழித்து விடலாம். எனவே எவ்வளவு தான் கசப்பான சுபாவம்லிசம்ஸ்காரம் உள்ளவர் களையும் வசமாக்கும் அளவிற்கு முரளீதர் ஆகுங்கள். அதாவது அவர்களையும் விடுவித்து ஆட வையுங்கள். மகிழ வைத்து விடுங்கள். இப்போது அப்படிப்பட்ட நல்லதோர் முரளீதர் யார், யாரென ரிசல்ட் பார்க்கலாம். முரளி மீதும் அன்புள்ளது. முரளீதர் மீதும் அன்புள்ளது ஆனால் அதற்கான பலன் முரளீதரன் ஒவ்வொரு குழந்தையின் மீதும் நல்லாசையிருப்பதை நடைமுறை யில் காண்பிக்கவும். அன்பின் அடையாளமே சொன்னதை செய்து காண்பிப்பதாகும். அப்படிப் பட்ட மாஸ்டர் முரளீதர் தானே! ஆக வேண்டுமா! ஆகி யே தீர வேண்டும். இப்போது ஆக வில்லையெனில் பிறகு எப்போது ஆவீர்கள். செய்யலாம் என நினைக்காதீர்கள். செய்தே ஆக வேண்டும். ஒவ்வொருவரும் நினையுங்கள், நான் ஆகாமல் பிறர் யார் ஆவார். நான் செய்தே ஆக வேண்டும் கல்பத்தின் விளையாட்டை வெற்றியடைய வேண்டும். முழு கல்பத்திற்கான விசயம் இது. முதல் பிரிவில் வர வேண்டும் என்ற உறுதியான எண்ணம் வையுங்கள். புதிய விசயம் எதுவும் செய்கிறீர்களா என்ன? எத்தனை முறை செய்த விசயம், வரைந்த கோட்டின் மீது மீண்டும் வரைகிறீர்கள். டிராமாவின் கோடு ஏற்கனவே வரையப் பட்டுள்ளது. புதிய கோடு ஒன்றும் வரையவில்லையே, நேராக வருமா, கோணலாகுமா என தெரியவில்லையே என யோசிக்காதீர்கள், கல்ப கல்பமாக செய்த முயற்சியே செய்கிறீர்கள். ஏனெனில் கர்ம பலனின் கணக்குள்ளது. வேறு புதிய விசயம் என்ன? இது மிக பழைய விசயம் தான். முடிந்தேறியது. இதில் உறுதியான நம்பிக்கை இதனையே உறுதித்தன்மை யென்றும் தபஸ்வி மூர்த்தி என்றும் சொல்லப்படும். ஒவ்வொரு எண்ணத்திலும் உறுதித் தன்மையே தபஸ்யா ஆகும். நல்லது.

பாப்தாதா உயர்ந்த தந்தையாகவும், விருந்தினராகவும் உள்ளார். தந்தையாகவும் சந்திக் கின்றார், விருந்தினராக வருகின்றார் ஆனால் கோல்டன் கெஸ்ட், பிரகாசமானவர், விருந்தினர் அதிகம் பார்த்திருப்பீர்கள்

ஆனால் கோல்டன் கெஸ்ட் பார்த்ததில்லை. முக்கிய விருந்தினரை அழைப்பது மற்றும் நன்றி செலுத்துவது. பிரம்மாபாபாவும் தந்தையாகி சமிக்ஞை தருகின்றார். விருந்தினராகி அனைவருக்கும் வாழ்த்துக்கள் தெரிவிக்கின்றார். முழு சீசனிலும் சேவை செய்தவர்களுக்கு கோல்டன் கெஸ்ட்டாக வாழ்த்து தருகின்றார். அனைத்திலும் முதன்மையான வாழ்த்து யாருக்கு? நிமித்த தாதி மார்களுக்கு பாப்தாதா நிர்விக்ன சேவைக்கான முடிவிற்கான வாழ்த்துக்களை தருகின்றார். மதுபன் நிவாசிகளுக்கும் தடைகளற்று முகமலர்ச்சியுடன் விருந்தினராக விசேஷ வாழ்த்துக்கள் தருகின்றார். பகவானும் விருந்தினராக வந்துள்ளார். குழந்தைகள் அவ்வாறே இருக்க வேண்டும். இறைவன் விருந்தினராக வருகிறார் என்றால் அவர்கள் எவ்வளவு பாக்கியசாலிகள். ரதத்திற்கும் வாழ்த்துக்கள் ஏனெனில் நடிப்பதும் சாதாரண விசயம் இல்லை. இவ்வளவு சக்திகளையும் இவ்வளவு நேரம் உள் நிறுத்தி தாரணை செய்வது இதுவும் விசேஷமான நடிப்பே ஆனால் உள்ளடக்கும் சக்திக்கான பலன் உங்கள் அனைவருக்குமே கிடைக்கின்றது. இந்த உள்ளடக்கும் சக்தியால் பாப்தாதாவின் சக்திகளையெல்லாம் உள்ளடக்குவதும் விசேஷ நடிப்பு மற்றும் குணம் என்றே கூறலாம். அனைத்து சேவாதாரிகளும் தடைகளற்று செயல்படுகின்றனர். இதற்காக வாழ்த்துக்கள் பன் மடங்கு நன்றிகள், இரட்டை அயல் நாட்டவருக்கும் இரட்டை நன்றிகள். ஏனெனில் இரட்டை அயல்நாட்டவர்கள் மதுபனின் அழகை கூட்டுகிறார்கள். பிராமண பரிவாரத்தின் அழகே இரட்டை அயல்நாட்டவர் தான் பிராமண பரிவாரத்தில் தேசவாசிகளும், அயல்நாட்டவரும் உள்ளனர், முயற்சியும் செய்கின்றனர் அதற்காக வாழ்த்துக்கள். மதுபன் பரிவாரத்தின் விசேஷ பரிசு எனவே இரட்டை அயல் நாட்டவருக்கு வாழ்த்துக்கள். எங்கிருந்தாலும் சரி, எதிரில் இருப்பவர் சிலரேயாயினும் நாலாபுறமும் உள்ள பாரதவாசி குழந்தைகளுக்கு, இரட்டை அயல் நாட்டவருக்கு பரந்த மனதுடன் வாழ்த்துக்கள் தருகின்றனர். ஒவ்வொருவரும் மிக நல்ல நடிப்பை நடிக்கின்றனர். இப்போது மீதமிருப்பது ஒரே விசயம் சமான் மற்றும் சம்பூர்ண நிலை தாதிமார்களும் மிக நல்ல முயற்சி செய்கின்றனர். பாப்தாதா இருவர் நடிப்பும் சாகாரமாக நடிக்கின்றனர். பாப்தாதா மனதார சினேகத்துடன் வாழ்த்துக்கள் தருகின்றனர். அனைவருமே மிக நல்ல நடிப்பை நடிக்கின்றனர். ஆல்ரவுண்டர் சேவாதாரிகள் அனைவருமே சிறிய சாதாரண சேவையே ஆனாலும் மகான் தன்மையாகும். ஒவ்வொருவரும் அவரவரது புண்ணியத்தை சேமித்தனர். உள்நாடு, வெளிநாடு

குழந்தைகளும் வந்து சேர்ந்ததற்கான விசேஷ குணம் வாழ்த்திற்கு தகுதியானது. அனைத்து மகாரதிகளும் சேர்ந்து சேவைக்கான உயர்ந்த சங்கல்பத்தை நடைமுறையில் கொண்டு வந்துள்ளீர்கள், கொண்டு வருவீர்கள். சேவையில் நிமித்தமானவர்களுக்கு தொந்தரவு செய்யக் கூடாது. தன் சோம்பல் தனத் தால் அடுத்தவரை கஷ்டப்படுத்தக் கூடாது. தனது பொருட்களை பாதுகாப்பதுவும் ஞானம் தான். பிரம்மாபாபா என்ன சொல்வார் நினைவு இருக்கிறதா? கைகுட்டையை தொலைத்தால் எப்போதாவது தன்னையும் தொலைத்து விடுவார்கள். ஒவ்வொரு செயலிலும் உயர்வும் வெற்றியும் காண்பதுவே ஞானம் நிறைந்ததாகும். தேகத்தைப் பற்றிய ஞானமும், ஆத்மாவைப் பற்றிய ஞானமும் உள்ளது. இரு ஞானமும் ஒவ்வொரு செயலிலும் தேவை. உடலின் நோய் பற்றிய ஞானமும் வேண்டும். எனது தேகம் எந்த விதியால் சரியாக இயங்கும். மாறாக நான் ஆத்மா சக்திசாலிதான் தேகம் எப்படியிருந் தாலும பரவாயில்லை என்றிருக்கக் கூடாது. உடல் சுகமில்லையெனில் யோகம் செய்ய முடியாது. பிறகு தேகம் தன் பக்கம் இழுக்கும் ஆகவே ஞானம் என்பதில் அனைத்து ஞானமும் வந்து விடுகிறது. நல்லது.

**சில குமாரிகளுக்கு சமர்ப்பண விழா பாப்தாதாவிற்கு முன்பாக நடைபெற்றது**: பாப்தாதா அலங்கரிக்கப்பட்ட விசேஷ ஆத்மாக்கள் அனைவரையும் பார்த்துக் கொண்டிருந்தார். அனைவரையும் பார்த்துக் கொண்டிருந்தார். தெய்வீக குணங்களின் அலங்காரம் எவ்வளவு உயர்ந்தது. அனைவரையும் அழகுறச் செய்கிறது. ஒளிக்கிரீடம் எவ்வளவு அழகாக மின்னுகிறது. பாப்தாதா அழிபற்ற அலங்கார முகங்களை பார்த்துக் கொண்டிருக் கின்றார். குழந்தைகளின் ஊக்கம், உற்சாகம் நிறைந்த எண்ணங்களைப் பார்த்து மகிழ்வடை கின்றார். பாப்தாதா அனைவரையும் எப்போதும் பிரியமுடன் அன்பு பாராட்டுகின்றார். நீங்களும் அன்பு பாராட்டுகின்றீர்கள். உறுதியான சங்கல்பம் அமைந்துள்ளது. பாப்தாதாவிடம் ஒவ்வொரு வரின் அன்பான எண்ணம் மிக வேகமாக சென்றடைகிறது. இந்த எண்ணத்தின் உயர்ந்த பந்தனம் ஒருபோதும் தொய்வடையாது. அந்தளவிற்கு உறுதியாக கட்டப்பட்டுள்ளது. எத்தனை பிறவிகளுக்கு வாக்கு கொடுத்தீர்கள்? பிரம்மாபாபாவுடன் சதா சம்மந்தத்தில் வருவதற்கான உறுதியான வாக்கு உள்ளது. 21-பிறவிக்கும் சதா வித விதமான பெயர் ரூபத்தில் உடனிருப் போம் என்ற உத்திரவாதம் உள்ளது. எவ்வளவு குஷி, கணக்கு பார்க்க முடியுமா? இதனை கணக்கு

பார்ப்பவர் யாருமில்லை. அப்படியே சதா அலங்காரத்துடன் இருக்கவும், சதா கிரீட தாரியாக இருக்கவும் சதா குஷியில் ஆடிப்பாடி ஆன்மீக ஆனந்தத்தில் இருக்கவும். இன்று அனைவரும் திட எண்ணம் வைத்துள்ளீர்கள் இன்னும் ஒவ்வொரு அடி வைப்பவர் ஆவீர்கள். அவர்கள் ஸ்தூலமான அடி மீது அடி வைக்கின்றார்கள் ஆனால் நீங்கள் அனைவரும் எண்ணத் தால் அடி மீது அடி வைப்பவர்கள். தந்தையின் எண்ணமே குழந்தைளின் எண்ண மாக வேண்டும். அப்படி எண்ணம் வைப்பீர்களா? ஒரு அடி கூட பாபாவின் அடியை விட்டு இங்கும் அங்கும் மாறக் கூடாது. ஒவ்வொரு எண்ணமும் சக்திசாலியாக இருப்பது அதாவது பாப்சமான் அடி மீது அடி வைப்பதாகும். நல்லது.

**அயல் நாட்டு சகோதர சகோதரிகளுடன்**: எப்படி விமானத்தில் பறந்து பறந்து வந்தீர்களோ அது போலவே புத்தி என்னும் விமானமும் அந்தளவு வேகமாக பறக்கிறதா? ஏனெனில் அந்த விமானம் சூழ்நிலையின் காரணமாக கிடைக்காமல் இருக்கலாம் ஆனால் புத்தி எனும் விமானம் சதா தன்னுடனே இருக்கிறது. சதா சக்திசாலியாக இருந்தால் ஒரு நொடியில் எங்கு வேண்டுமோ அங்கு சென்று சேர வேண்டும். இந்த விமானத்திற்கு நீங்களே எஜமான். சதா இந்த புத்தி எனும் விமானம் எவரெடியாக உள்ளது அதாவது சதா புத்தி லைன் தெளிவாக உள்ளது புத்தி சதா பாபாவுடன் சக்திசாலியாக இருப்பது, எப்போது வேண்டுமோ எங்கு வேண்டுமோ அங்கு சென்று விடலாம். யாருக்கு புத்தி விமானம் சென்ற டையுமோ அவருக்கு அந்த விமானமும் இயங்கும். புத்தியெனும் விமானம் சரியில்லை யென்றால் அந்த விமானமும் இயங்காது.

**பார்ட்டிகளுடன்**: சதா தன்னை இராஜயோகியென, சிரேஷ்ட ஆத்மாக்களென அனுபவம் செய்கிறீர்களா? இராஜயோகி என்றால் சர்வ கர்மேந்திரியங்களுக்கும் இராஜா, இராஜாவாகி கர்மேந்திரியங்களையும் செயல்படுத்துபவர். கர்மேந்திரியங்களுக்கு வசமாகுபவர் அல்ல. கர்மேந்திரியங்களுக்கு வசமாகுபவர் பிரஜா யோகியே தவிர இராஜயோகி அல்ல. ஞானம் கிடைத்தவுடன் இந்த கர்ம இந்திரியங்கள் எனது சேவகர்கள், நான் எஜமான். எஜமான் ஒரு போதும் சேவாதாரிகளுக்கு வசமாக முடியாது. ஒருவர் எவ்வளவு தான் முயற்சி செய்தாலும் இராஜயோகி ஆத்மாக்கள் சதா சிரேஷ்டமாகவே இருப்பார்கள். சதா இராஜ்யம் செய்வதற்கான சம்ஸ்காரம் இப்போது இராஜயோகி வாழ்வில் நிரம்ப வேண்டும். எது நடந்தாலும் நான்

இராஜயோகி என்ற தனது டைட்டிலை சதா நினைவில் வைக்க வேண்டும். சர்வ சக்திவானின் பலம் உள்ளது. நம்பிக்கையிருப்பதால் வெற்றி அதிகாரமாக கிடைக்கின்றது. அதிகாரம் சகஜமாக கிடைக்கிறது, கடினமல்ல. சர்வ சக்தி களின் ஆதாரத்தால் ஒவ்வொரு செயலிலும் வெற்றியே அடங்கியுள்ளது. நான் தில் தக்த் நஷின் (மனம் என்னும் சிம்மாசனத்தில் அமரும்) ஆத்மா என்ற பெருமிதம் சதா இருக்க வேண்டும். இந்த பெருமிதம் அனேக கவலைகளை தூர விரட்டி விடும். அந்த ஆன்மீக பெருமிதம் இல்லையெனில் கவலையே கவலைதான். எனவே சதா பெருமிதத்துடன் இருந்து வரதானியாகி வரதானம் வழங்குங்கள். தானும் முழுமை பெற்று பிறரையும் முழுமை பெறச் செய்யுங்கள். பிறரை மாற்றுவது என்பது சொர்க்கத்திற்கான இருக்கைக் குரிய சான்றிதழ் தருவதாகும். காகிதத் தாலான சான்றிதழ் அல்ல. அதிகார மெனும் சான்றிதழாகும். நல்லது.

ஒவ்வொரு அடியிலும் பன்மடங்கு வருமானம் சேமிப்பவர், அழியாத பொக்கிஷத்திற்கு எஜமான் ஆகி விட்டீர்கள். இப்படியே குஷியை அனுபவம் செய்கிறீர்களா? ஏனெனில் இன்றைய உலகமே ஏமாற்று உலகம் ஏமாற்று உலகை விட்டு விலகி விட்டீர்கள். ஈர்ப்பு அங்கில்லை. சேவைக்காக தொடர்பில் வருவது வேறு விசயம் ஆனால் மனதின் ஈர்ப்பு செல்லக் கூடாது. தன்னை ஒருபோதும் தரக்குறைவாக கருதாமல் சிரேஷ்ட ஆத்மா, சதா தந்தைக்கு அன்பாக குழந்தைகள் எனும் போதையில் இருங்கள். தந்தையைப் போல் குழந்தை அடி மீது அடி வைத்து பின் பற்றி நடந்தால் பாப்சமான் ஆகி வடுவீர்கள். தந்தைக்கு சமமாவது முழுமை பெறுவது இதுவே பிராமண வாழ்வின் செயலாகும்.

சதா தன்னை ஆன்மீக தோட்டத்தில் ஆன்மிக ரோஜாவாக உணர்கிறீர்களா! அனைத்திலும் சிறந்த மனம் வீசும் மலர் ரோஜா. ரோஜா நீரை எத்தனையோ வேலைக்கு பயன் படுத்துகிறார்கள். வண்ணத்திலும் வடிவத்திலும் ரோஜா அனைவருக்கும் பிரியமானது. நீங்கள் அனைவரும் ஆன்மீக ரோஜா மலர். உங்களது ஆன்மீக நறுமணம் பிறரையும் தானாகவே கவர்ந்திழுக்கிறது. வாசனையான பொருள் எங்கிருந்தாலும் அனைவர் கவனத்தையும் தானே ஈர்க்கிறது. அவ்வாறே ஆன்மீக ரோஜா மலரான உங்கள் வாசனையும் உலகையே கவர்ந்திழுக்க வல்லது. ஏனெனில் உலகிற்கு இந்த ஆன்மீக நறுமணம் தேவைப்படுகிறது. எனவே நான் ஆன்மீக தோட்டத்தில் ஆன்மீக

ரோஜா என்ற பெருமிதம் சதா இருக்கட்டும் ஒரு போதும் வாடாத சதா மலர்ந்த மலர். அப்படி மலர்ந்த மலர் சேவைக்கு தானாகவே நிமித்தமாகின்றது. நினைவு, சக்திகள், குணங்களெனும் நறுமணத்தை அனைவருக்கும் வழங்கிக் கொண்டேயிருங்கள். சுயம் பகவானே (தந்தையே) வந்து மலர்களான உங்களை தயார் செய்கிறார் என்றால் எவ்வளவு பாக்கியசாலி நீங்கள். நல்லது.

**வரதானம்: விலகியும் அன்பாகவும் இருப்பதற்கான இரகசியத்தை தெரிந்து கொண்டு சமாதானமாக இருக்கும் இராஜயுக்த் ஆகுக!**

எந்த குழந்தைகள் இல்லறத்தில் இருந்தாலும் விலகியும் அன்பாகவும் இருப்பதற்கான இரகசியத்தை தெரிந்து கொண்டிருப்பார்களோ அவர்கள் சதா தன் மீதும், குடும்பத்தின் மீதும் திருப்தியாக இருப்பார்கள். அது மட்டுமின்றி உண்மையாக இருப்பதால் இறைவனும் அவர்கள் மீது எப்போதும் திருப்தியாகின்றார். அப்படி திருப்தியாக இருப்பவர்கள் தன் பொருட்டோ, பிறர் பொருட்டோ புகார் செய்ய வேண்டிய அவசிய மில்லை ஏனெனில் தனக்குத்தானே தீர்வு காண்பார்கள். ஆகவே அவர்களுக்காக வேறு யாரும் வக்கீலோ, நீதிபதியோ, சமரசமோ செய்ய வேண்டியதில்லை.

**சுலோகன்: சேவையின் மூலம் கிடைக்கும் ஆசீர்வாதமே ஆரோக்கியத்தின் ஆதாரமாகும்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 31.12.1986 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தை சிறந்ததாக (சிரேஷ்டமாக) உருவாக்குவதற்கான விதி!

இன்று பெரியதிலும் பெரிய தந்தை (பிரம்மாபாபா) மற்றும் காட் ஃபாதர் (இறை தந்தை -சிவபாபா) தனது மிகவும் இனிமையான, மிகவும் அன்பான குழந்தைகளுக்கு மனதார ஆசிர்வாதங்களின் வாழ்த்துக்களை கொடுத்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு செல்லமான குழந்தைகளும் எவ்வளவு சிரேஷ்டமான, மகான் ஆத்மாவாக இருக்கிறார்கள் என்று பாப்தாதா தெரிந்திருக்கிறார். ஒவ்வொரு குழந்தைகளின் மகான் தன்மை மற்றும் தூய்மையின் தன்மை -பாபாவிடம் நம்பர்வாராக (வரிசைக்கிரமாக) சென்றடைகிறது. இன்றைய நாள் அனைவரும் விசேஷமாக புது வருடத்தை கொண்டாடுவதற்கான ஊக்க உற்சாகத்துடன் வந்திருக்கிறீர்கள். உலகத்தினரை சேர்ந்தவர்கள் விளக்குகளையும் மெழுகுவர்த்திகளையும் ஏற்றி கொண்டாடுகிறார்கள். அவர்கள் விளக்கேற்றி கொண்டாடுகிறார்கள், மேலும் பாப்தாதா சுடர்விட்டு எரிந்துக் கொண்டிருக்கும் தீபங்களின் மூலம் புது வருடத்தை கொண்டாடுகிறார்கள். அணைந்து போனதை ஏற்றுவதில்லை, மேலும் ஏற்றிய விளக்குகளை அணைப்பதும் இல்லை. அப்படிப் பட்ட இலட்சக்கணக்கானவர்களின் ஏற்றியுள்ள ஆன்மீக ஜோதி களின் குழுவினரோடு சேர்ந்து வருடத்தை கொண்டாடுவது -இது பாபா மற்றும் குழந்தைகளாகிய உங்களை தவிர வேறு யாராலும் கொண்டாட முடியாது. ஒளிரும் வண்ணமயமான தீபங்களின் ஆன்மீக அமைப்பின் காட்சி எவ்வளவு நன்றாக இருக்கிறது. அனைவருடைய ஆன்மீக ஜோதியும் பிரகாசமாகவும் ஒரே சீராகவும் ஜொலித்துக் கொண்டிருக்கிறது. அனைவருடைய மனதிலும் ஒரே ஒரு பாபா -இந்த ஆர்வம் தான் ஆன்மீக தீபங்களையும் சுடர்விட்டு எரிய வைக்கிறது. ஒரே உலகம், ஒரே எண்ணம்,

ஒரே இரசனையின் மனநிலை -இதைத் தான் கொண்டாட வேண்டும், இதைத் தான் செய்ய வேண்டும். இதன் மூலம் தான் காலத்திற்கு விடைக் கொடுத்தல் மற்றும் வாழ்த்துக்கள் இரண்டின் சங்கமமாகும். பழையவற்றிற்கு விடைக் கொடுத்தல் மற்றும் புதுயுகத்திற்கான வாழ்த்துக்கள். இந்த சங்கமயுகத்தில் அனைவரும் வந்து சேர்ந்து விட்டீர்கள். ஆகையால், பழைய எண்ணங்கள் மற்றும் புதுயுகத்திற்கான ஊக்க உற்சாகத்தோடு பறப்பதற்காகவும் கூட வாழ்த்துக்கள்.

எது இப்பொழுது நிகழ்காலமாக இருக்கிறதோ, அது சிறிது நேரத்திற்கு பிறகு கடந்த நேரமாக ஆகி  விடுகிறது. நடந்துக் கொண்டிருக்கும் வருடம், அது இரவு 12-மணிக்கு கடந்த காலமாகி விடுகிறது. இந்த சமயத்தை நிகழ்காலம் என்று சொல்லாம், மேலும் நாளைய தினத்தை எதிர்காலம் (வருங்காலம்) என்று சொல் கிறார்கள். கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் -இந்த மூன்றின் விளையாட்டு தான் நடக்கிறது. இந்த மூன்று வார்த்தைகளை இந்த புதிய வருடத்தில் புதுமையான முறையில் பயன்படுத்துங்கள். எப்படி? கடந்து காலத்தை சதா பாஸ் வித் ஆனர் (மரியாதையுடன் தேர்ச்சி பெறுதல்) ஆகி  கடந்துச் செல்ல வேண்டும். நடந்தது நடந்து முடிந்தாக ஆகி யே தீர வேண்டும், ஆனால் எப்படி கடக்க வேண்டும். நேரம் கடந்து விட்டது, இந்து காட்சியும் கடந்து விட்டது என்று சொல்கிறார்கள் அல்லவா! ஆனால் பாஸ் வித் ஆனர் ஆகி  கடந்துச் சென்றீர்களா? நடந்து முடிந்ததை கடந்து விட்டோம், ஆனால் கடந்த காலத்தை நினைவில் கொண்டு வரும்பொழுது ஆஹா, ஆஹா! என்ற வார்த்தை இதயத்திலிருந்து வெளிவருகிற மாதிரி சிரேஷ்ட விதியோடு கடந்து சென்றீர்களா? உங்களுடைய கடந்த காலத்திலிருந்து மற்றவர்கள் அனுபவ பாடம் கற்றுக் கொள்ளும்படி கடந்து வந்தீர்களா? உங்ளுடைய கடந்த காலம் நினைவு சொரூபமாகி விடுகிறது, கீர்த்தனை களை அதாவது புகழாக பாடிக் கொண்டிருக்கிறீர்கள். பக்தி மார்க்கத்தில் உங்களுடைய செயலின் புகழை தான் பாடுகிறார்கள், உங்களுடைய செயலின் புகழின் மூலம் அநேக ஆத்மாக்களுக்கு இப்பொழுது கூட உடல் நிர்வாகம் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த புது வருடத்தில் ஒவ்வொரு முடிந்து போன எண்ணங்கள் மற்றும் நேரத்தை கூட சிரேஷ்ட முறையில் கடக்க வேண்டும். புரிந்ததா, என்ன செய்ய வேண்டும்?

இப்பொழுது தற்சமயத்திற்கு வாருங்கள், ஒவ்வொரு நொடி மற்றும் எண்ணத்தின் மூலம் விசேஷ ஆத்மாக்களாகிய உங்களின் மூலம் உலகில் யாருக்காவது வெகுமதி கிடைக்க வேண்டும், அந்த மாதிரி நிகழ்காலத்தை நடைமுறையில் கொண்டு வாருங்கள். அனைத்தையும் விட அதிகமான குஷி எந்த சமயத்தில் கிடைக்கிறது? யாரிடமிருந்தாவது ஏதாவது பரிசு கிடைக்கும் பொழுது, எப்படிப்பட்ட அசாந்தியில் இருந்தாலும் துக்கத்தில் இருந்தாலும் அல்லது குழப்பத்தில் இருக்கிறார்கள் என்றாலும் கூட, யாராவது ஏதாவது அன்போடு பரிசு கொடுக்கிறார்கள் என்றால், அந்த நிமிடம் குஷியின் அலை வருகிறது. வெளிதோற்றத்திற்காக அன்பளிப்பு கொடுப்பது அல்ல, மனதார அன்பளிப்பு கொடுக்கும் பொழுது, அனைவரும் அன்பளிப்பை எப்பொழுதுமே அன்பின் அடையாளமாக கருதப்படுகிறது. அன்பளிப்பாக கொடுக்கப்பட்ட பொருளின் மதிப்பு அன்பிற்கு தான் கொடுக்கப் படுகிறது, பொருளுக்கு அல்ல. எனவே நிகழ்காலத்தில் அன்பளிப்பு கொடுப்பதற்கான விதியின் மூலம் வளர்ச்சியை அடைந்துக் கொண்டிருக்க வேண்டும். புரிந்ததா? எளிதானதா அல்லது கடினமானதா? பொக்கிஷம் நிறைந்திருக்கிறதா அல்லது வெகுமதி கொடுக்க -கொடுக்க பொக்கிஷம் குறைந்து விடுமா என்ன? பொக்கிஷம் சேமிப்பு ஆகியிருக்கிறதா என்ன? ஒரு நிமிடத்தின் அன்பான பார்வை, அன்பான உதவி, அன்பான பாவணை (உணர்வு), இனிமையான வார்த்தை, மனதின் உயர்ந்த எண்ணத்தின் உதவி -இது தான் வெகுமதி அதிகமாகவே இருக்கிறது. தற்சமயத்தில் பிராமண ஆத்மாக்களாகிய உங்களுக்குள், உங்களுடைய பக்தர்களாக இருந்தாலும், உங்களுடைய சம்மந்தத்தின் மூலம் தொடர்பில் வரக்கூடிய ஆத்மாக்களாக இருந்தாலும், குழப்பத்திலுள்ள ஆத்மாக்களாக இருந்தாலும்-அனைவருக்கும் இந்த அன்பளிப்பின் அவசியம் இருக்கிறது, மற்ற வெகுமதிகள் அல்ல. இந்த பொக்கிˆங்களின் ஸ்டாக் (இருப்பு) இருக்கிறது அல்லவா? ஆகையால் ஒவ்வொரு நிகழ்கால நொடியிலும் வள்ளலாகி நிகழ்காலத்தை கடந்த காலத்தில் (சரித்திரமாக) மாற்ற வேண்டும், ஆதலால் அனைத்து ஆத்மாக்களும் மனதின் மூலம் உங்களின் புகழை பாடிக் கொண்டிருக்கிறார்கள். நல்லது.

எதிர்காலத்தில் என்ன செய்வீர்கள்? எதிர்காலம் என்னவாகும் என்று அனைவரும் உங்களிடம் கேட்கிறார்கள்? எதிர்காலத்தை தனது தோற்றத்தின் மூலம் வெளிப்படுத்துங்கள். உங்களுடைய தோற்றம் தான் எதிர்காலத்தை வெளிப்படுத்தும். எதிர்காலம் என்னாகுமோ, எதிர்கால காட்சி

எப்படி இருக்குமோ, எதிர்காலத்தின் புன்னகை என்னாகுமோ, எதிர்கால சம்மந்தம் என்னாகுமோ, எதிர்கால வாழ்க்கை என்ன ஆகுமோ? -தனது தோற்றத்தின் மூலம் இந்த அனைத்து விˆயங்களையும் (கேள்விகளையும்) சாட்சாத்காரம் செய்ய வைக்க வேண்டும். எதிர்கால உலகத்தை பார்வையின் மூலம் தெளிவுப்படுத்துங்கள். என்ன ஆகுமோ? -இந்த கேள்வி முடிந்து விட வேண்டும், அப்படித்தான் இருக்குமென்று மாறிவிட வேண்டும். எப்படி என்பதற்கு பதிலாக இப்படித் தான் என்று மாற வேண்டும். எதிர்காலம் என்றாலே தேவதை ஆவது. தேவதையின் சம்ஸ்காரம் என்றாலே வள்ளல் தன்மையின் சம்ஸ்காரம், தேவதையின் சம்ஸ்காரம் என்றாலே கீரிடம், சிம்மாசனதாரி ஆவதற்கான சம்ஸ்காரம். யார் உங்களை பார்த்தாலும், அவர்களுக்கு உங்களின் கீரிடம் மற்றும் சிம்மாசனம் அனுபவம் ஆக வேண்டும். எப்படிப்பட்ட கீரிடம்? சதா லைட்டாக (லேசாக) இருப்பதற்கான லைட்டின் (ஒளி) கீரிடம். மேலும் சதா உங்களின் கர்மத்தின் மூலம், வார்த்தையின் மூலம் ஆன்மீக நஷா மற்றும் கவலையற்றத் தன்மையின் மனநிலை அனுபவம் ஆக வேண்டும். சிம்மாசனதாரியின் அடையாளமே கவலையற்றத் தன்மை மற்றும் குஷியில் இருப்பது. நிச்சயிக்கப்பட்ட வெற்றியின் நஷா மற்றும் கவலையற்ற மனநிலை -இது தான் பாபாவின் இதய சிம்மாசன தாரியின் அடையாளமாகும். யார் வந்தாலும், அவர்கள் இந்த சிம்மாசனம் மற்றும் கீரிடதாரி மன நிலையின் அனுபவம் செய்ய வேண்டும் -இது தான் தோற்றத்தின் மூலம் எதிர்காலத்தை வெளிப்படுத்துவது. புது வருடத்தை கொண்டாடுவது என்றாலே அவ்வாறு ஆவது. புரிந்ததா, புது வருடத்தில் என்ன செய்ய வேண்டும்? மூன்று வார்த்தைகளின் மூலம் மாஸ்டர் திரிமூர்த்தி, மாஸ்டர் திர்காலதரிசி (முக்காலத்தையும் அறிந்தவர்) மற்றும் திரிலோகிநாத் (முன்று உலகத்தின் தலைவன்) ஆவது. இப்பொழுது என்ன செய்ய வேண்டும் என்று அனைவரும் யோசிக்க வேண்டும். ஒவ்வொரு அடியிலும் அதாவது நினைவின் மூலம், சேவையின் ஒவ்வொரு அடியிலும் இந்த மூன்று விதமான விதியின் மூலம் வெற்றி அடைந்துக் கொண்டேயிருக்க வேண்டும்.

புது வருடத்தின் ஊக்க உற்சாகம் மிகுதியாக இருக்கிறது அல்லவா. இரட்டை வெளி நாட்டினருக்கும் கூட இரட்டை ஊக்கம் இருக்கிறது அல்லவா. புது வருடத்தை கொண்டாடுவதில் எத்தனை சாதனங்களை தன்னுடையதாக்கி உள்ளீர்கள்? உலகத்தினரோ அழியக் கூடிய சாதனங்களை தன்னுடையதாக்கியுள்ளார்கள், மேலும் குறுகிய காலத்தின் பொழுது

போக்காக இருக்கிறது. அப்பொழுதே ஏற்றி, அப்பொழுதே அணைத்து விடுவார்கள் ஆனால் பாப்தாதா அழிவற்ற விதியின் மூலம் அழிவற்ற வெற்றியை அடையக் கூடிய குழந்தைகளுடன் கொண்டாடிக் கொண்டிருக்கிறார். நீங்கள் கூட என்ன செய்வீர்கள்? கேக் வெட்டுவீர்கள், மெழுகுவர்த்தி ஏற்றுவீர்கள், பாடல் பாடுவீர்கள், கை தட்டுவீர்கள். இதைக் கூட நன்றாகவே செய்யுங்கள், ஆனால் பாப்தாதா எப்பொழுதுமே அழிவற்ற குழந்தைகளுக்கு அழிவற்ற வாழ்த்துக்களை கொடுக்கிறார், மேலும் அழிவற்றவர் ஆவதற்கான விதியை சொல்கிறார். சாகார உலகத்தில் அவர்கள் கொண்டாடுவதை பாப்தாதா கூட பார்த்து குஷி அடைகிறார். ஏனெனில் முழு குடும்பமே கீரிடதாரி, சிம்மாசனதாரியாக இருக்கிறார்கள், மேலும் இத்தனை இலட்சணக் கணக்கானவர் ஒரு குடும்பமாக இருக்கிறார்கள், இப்படிப்பட்ட குடும்பம் முழு கல்பத்திலும் ஒருமுறை தான் கிடைக்கும், அப்படிப்பட்ட அழகான குடும்பமாக இருக்கிறது. ஆகையால் நன்றாக நாட்டியமாடுங்கள், சாப்பிடுங்கள், இனிப்பு உண்ணுங்கள். பாபா குழந்தைகளை பார்த்து, உணர்வுகளை ஏற்று குஷி அடைகிறார். அனைவரும் என்ன பாடலை மனதில் பாடிக் கொண்டிருக்கிறீர்கள்? குஷியின் பாடலை பாடிக் கொண்டிருக்கிறீர்கள். சதா ஆஹா! ஆஹா! என்ற பாடலை பாடுகின்றீர்கள். ஆஹா பாபா, ஆஹா அதிர்ஷ்டம்! ஆஹா எனது இனிமையான குடும்பம்! ஆஹா சிரேஷ்ட சங்கமயுகத்தின் மங்களகரமான நேரம்! ஒவ்வொரு காரியமும் ஆஹா -ஆஹா என்று இருக்கிறது, ஆஹா! ஆஹா! என்ற பாடலை பாடிக் கொண்டிருங்கள். பாப்தாதா இன்று புன்முறுவல் செய்து கொண்டிருக்கிறார் -பல குழந்தைகள் ஆஹா என்ற பாடலுடன் கூடவே மற்ற பாடல்களையும் பாடிக் கொண்டிருக்கிறார். அது என்னவென்று தெரியுமா? இந்த வருடம் அந்த இரண்டு வார்த்தை களின் பாடலை பாட வேண்டாம். அந்த இரண்டு வார்த்தைகள் -ஏன் மற்றும் நான்? என்று சொல்வ தன் மூலம் பாப்தாதா குழந்தைகளை டி.வி-யில் பார்க்கிறார், குழந்தைகள் ஆஹா ஆஹா,... பதிலாக ஏன்? ஏன்? என்று கேட்கிறார்கள்.. எனவே நான் என்பதற்கு பதிலாக ஆஹா-ஆஹா! என்று சொல்ல வேண்டும் மற்றும் நான் என்பதற்கு பதிலாக பாபா -பாபா என்று சொல்ல வேண்டும். புரிந்ததா.

யாராக இருந்தாலும், எப்படி இருந்தாலும், ஆனாலும் பாப்தாதா அன்பானவராக இருக்கிறார், அதனால் அனைவரும் அன்போடு சந்திப்பதற்காக ஓடிவருகிறார்கள். அமிர்த வேளையில் அனைத்து

குழந்தைகளும் -அன்பான பாபா, இனிமையான பாபா என்ற பாடலைத் தான் பாடுகிறார்கள் மற்றும் பாப்தாதாவும் கூட பதிலுக்கு அன்பான குழந்தைகளே, அன்பான குழந்தைகளே என்ற பாடலை பாடுகிறார். நல்லது. எப்படி இருந்தாலும், இந்த புது வருடத்தில் விடுபட்டவராகவும் அன்பானவராக இருப்பதற்கான பாடமாக இருக்கிறது, ஆனாலும் கூட குழந்தைகளின் அன்பின் அழைப்பிற்கு பாபாவை கூட தனிப்பட்ட உலகத்திலிருந்து அன்பான உலகத்தில் கொண்டு வருகிறது. ஆக்கார உலகத்தின் சட்டத்தில் இந்த அனைத்தையும் பார்ப்பதற்கான அவசியமில்லை. சூட்சம உலகத்தில் சந்திப்பதற்கான சட்ட முறையில் ஒரே சமயத்தில் அநேக எல்லைக்கு அப்பாற்பட்ட குழந்தைகளை சந்திப்பதற்கான அனுபவத்தை செய்ய வைக்கிறார். சாகார உலகத்தின் நியமத்தில் எப்படியிருந்தாலும் எல்லைக்குட்பட்ட நிலையில் வர வேண்டியிருக்கிறது. குழந்தைகளுக்கு முரளியும், திருஷ்டியும் தானே வேண்டும். முரளியில் (வாணி) கூட சந்திக்க செய்கிறோம். தனிப்பட்ட முறையில் பேசினாலும், குழுவிற்காக பேசினாலும், பேசுகிறார் என்றாலே அதே விஷயம் தான். குழுவில் என்ன பேசுகிறாரோ, அதைத் தான் தனிப்பட்ட முறை யிலும் பேசுகிறார். ஆனாலும் கூட பார்க்க போனால், முதல் வாய்ப்பு இரட்டை வெளிநாட்டினருக்கு தான் கிடைக்கிறது. பாரதத்தை சேர்ந்த குழந்தைகள் ஜனவரி 18-ம் தேதி எதிர்பார்க்கபட்டுக் கொண்டிருக்கிறது, மற்றும் நீங்கள் அனைவரும் முதல் வாய்ப்பு பெற்றுவிட்டீர்கள். நல்லது. 35-36 நாடுகளிலிருந்து வந்துள்ளீர்கள்.. இது கூட 36-வகையான உணவு வகைகளாக மாறிவிட்டது. 36'க்கும் புகழ் இருக்கிறது அல்லவா. 36-வகைகள் ஆகி விட்டது.

பாப்தாதா அனைத்து குழந்தைகளின் சேவையில் ஊக்க உற்சாகத்தை பார்த்து குஷி அடைகிறார். யாரெல்லாம் உடல், மனம், பொருள், சமயம், அன்பு மற்றும் தைரியத்தோடு அனைத்தையும் சேவையில் ஈடுபடுத்துகிறார்களோ, அவர்களுக்கு பாப்தாதா பலமடங்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டிருக்கிறார். இந்த சமயத்தில் அருகாமையில் இருந்தாலும், சூட்சமத்தில் அருகாமையில் இருந்தாலும் கூட பாப்தாதா அனைத்து குழந்தைகளும் சேவையில் அன்பில் மூழ்கியிருப்பதற்கான வாழ்த்துக்களை கொடுத்துக் கொண்டிருக்கிறார். உதவி யாளராக ஆகி விட்டீர்கள், மற்றவர்களையும் உதவியாளராக மாற்றுங்கள். எனவே சகயோகி ஆவதற்கும் சகயோகி ஆக்குவதற்காகவும் கூட இரட்டை

வாழ்த்துக்கள். பல குழந்தைகளின் சேவையில் ஊக்க-உற்சாகத்தின் செய்தி மற்றும் கூட கூடவே புது வருடத்தின் ஊக்க உற்சாகத்தின் வாழ்த்து மடலின் மாலை பாப்தாதாவின் கழுத்தில் சுழன்றுக் கொண்டிருக்கிறது. யாரெல்லாம் வாழ்த்து மடல் அனுப்பியிருக்கிறார்களோ, பாப்தாதா மடலுக்கு பதிலாக மரியாதை மற்றும் அன்பு இரண்டையும் தருகிறார். விசயங்களை கேட்டு-கேட்டு மகிழ்ச்சி அடைகிறார். மறைமுகமாக சேவை செய்திருந்தாலும், வெளிப்படையாக சேவை செய்திருந் தாலும், ஆனால் பாபாவை வெளிப்படுத்துவதற்கான சேவையில் சதா வெற்றியே தான் இருக்கிறது. அன்பினுடைய சேவையின் விளைவு -சகயோகி ஆத்மாக்கள் ஆவது மற்றும் பாபாவின் காரியத்தில் அருகாமையில் வருவது -இது தான் வெற்றியின் அடையாளமாகும். சகயோகியாக இருப்பவர்கள் இன்று சகயோகியாக இருப்பார்கள், ஆனால் நாளை யோகியாக கூட ஆகி விடுவார்கள். எனவே சகயோகி ஆவதற்கான விசேஷமான சேவையில் நாலா பக்கத்திலும் உள்ள அனைவருக்காகவும் பாப்தாதா அழிவற்ற வெற்றி சொரூபம் ஆகுக என்ற வரதானம் கொடுக்கிறார். நல்லது.

உங்களுடைய பிரஜைகள், உதவியாளர்கள், உறவினர்களின் வளர்ச்சியை அடைகிறார்கள் என்றால், வளர்ச்சிக்கான விதிகள் கூட மாற வேண்டும். குஷியாக இருக்கிறீர்கள் அல்லவா, நன்றாக வளர்ச்சி அடையுங்கள். நல்லது.

எப்பொழுதுமே அன்பானவராக இருக்கும் அனைவருக்கும், சதா உதவியாளர் ஆகி, உதவியாளராக மாற்றக் கூடிய, சதா வாழ்த்துக்களை பெறக்கூடிய, சதா ஒவ்வொரு நொடியும், ஒவ்வொரு எண்ணத்திலும் உயர்ந்ததிலும் உயர்ந்ததாக, புகழுக்கு தகுதியுடையவராக மாற்றக் கூடிய, சதா வள்ளல் ஆகி அனைவருக்கும் அன்பு மற்றும் உதவி தரக்கூடிய -அப்படிப்பட்ட சிரேஷ்ட, மகான் பாக்கியசாலி ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் சங்கமயுகத்தின் இரவு வணக்கம் மற்றும் காலை வணக்கம்.

**வெளிநாட்டு சேவையில் பொறுப்பில் இருக்கும் டீச்சர்களுக்காக:** நிமித்தமாக உள்ள சேவாதாரி குழந்தைகளுக்கு பாப்தாதா சதா சமான் பவ (சமமானவர் ஆகுக) என்ற வரதானத்தின் மூலம் முன்னேற்றி கொண்டேயிருக்கிறார். பாப்தாதா அனை வருக்கும் பாண்டவர் களாக

(சகோதரர்களாக), சக்திகளாக (சகோதரிகளாக), யாரெல்லாம் சேவைக்கு நிமித்தமாக (பொறுப்பில்) இருக்கிறார்களோ, அவர்கள் அனைவரையும் விசேஷமான கோடான கோடி மடங்கு சிரேஷ்ட ஆத்மாக்களாக புரிந்திருக்கிறார். சேவையின் வெளிப்படையான பலன் குஷி மற்றும் சக்தி, இந்த விசேஷமான அனுபவத்தை செய்து கொண்டு தான் இருக்கிறீர்கள். இப்பொழுது எந்தளவு தன்னை சக்திசாலியாக லைட் ஹவுஸ் (கலங்கரை விளக்கு) மைட் ஹவுஸ் (சக்தி ஸ்தலம்) ஆகி சேவை செய்வீர்களோ, அந்தளவு விரைவாக நாலாபக்கமும் மேலும் பாபாவின் பிரத்யக்ஷதாவின் (வெளிப்படுத்தலின்) கொடி பறக்கும். ஒவ்வொருவரும் பொறுப்பான சேவாதாரிகளும் விசேஷமாக சேவையின் வெற்றிக் காக இரண்டு விஷயங்களை கவனத்தில் வைக்க வேண்டும் -முதலாவது விˆயம் சம்ஸ்காரங்கள் இணைந்து போவதற்கான ஒற்றுமை, ஒவ்வொரு இடத்திலும் இந்த விசேஷத்தன்மை தென்பட வேண்டும். இரண்டாவது சதா ஒவ்வொரு பொறுப்பான சேவாதாரிகளும் முதலில் தனக்கு இந்த இரண்டு சான்றிதழ்களை தர வேண்டும், ஒன்று ஒற்றுமை, மற்றொன்று திருப்தி. சம்ஸ்காரம் விதவிதமாக இருக்கும், மேலும் இருக்கத் தான் செய்யும், ஆனாலும் கூட சம்ஸ்காரங்களில் மோதல் வருவது அல்லது ஒதுங்கிச் சென்று தன்னை பாதுகாப்பாக வைத்துக் கொள்வது -இது தன்னுடைய கையில் தான் இருக்கிறது. எது நடந்தாலும், ஒருவேளை ஏதாவது சம்ஸ்காரம் அப்படி இருந்தால் மற்றொருவர் கை தட்ட (ஒத்துப்போக) வேண்டாம். மற்றவர்களிடம் மாற்றம் ஏற்படுகிறதோ -இல்லையோ, ஆனால் நீங்கள் மாற்றிக் கொள்ள முடியும் அல்லவா. ஒருவேளை ஒவ்வொருவரும் தன்னை மாற்றிக் கொள்கிறார்கள், புலனடக்க சக்தியை தாரனை செய்கிறீர்கள் என்றால், மற்றவர் களின் சம்ஸ்காரம் கூட அவசியம் சீதளமாகி விடும். எனவே ஒருவர் மற்றவர் களிடம் அன்பான உணர்வோடு, உயர்ந்த உணர்வோடு தொடர்பில் வாருங்கள், ஏனெனில் நிமித்தமான சேவாதாரி என்றாலே பாபாவை வெளிப்படுத்தும் கண்ணாடியாகும். எனவே உங்களுடைய நடைமுறை வாழ்க்கை தான் பாபாவை வெளிப்படுத்தும் கண்ணாடியாகும். ஆகையால் எப்பொழுதுமே பாபா யாராக இருக்கிறாரோ, எப்படி இருக்கிறாரோ, அப்படியே வெளிப்படுத்தும் கண்ணாடியாக நமது வாழ்க்கை இருக்க வேண்டும். மற்றபடி முயற்சி மிகவும் நன்றாகவே செய்கிறீர்கள், தைரியம் கூட நன்றாகவே வைக்கிறீர்கள். சேவையின் வளர்ச்சிக்கான ஊக்கம் கூட மிக நன்றாக இருக்கிறது, ஆகையால் வளர்ச்சி அடைந்துக் கொண்டிருக்கிறீர்கள். சேவை செய்வது கூட நன்றாக

இருக்கிறது, இப்பொழுது பாபாவை வெளிப்படுத்துவதற்காக நடைமுறை வாழ்க்கையை சதா வெளிப்படுத்துங்கள். இந்த ஞானத்தின் தாரணை செய்வதில் நம்பர் ஒன்றாகத் தான் இருக்கிறீர்கள், ஆனால் சம்ஸ்காரம் இணைவதில் கூட முதல் நம்பரில் இருக்கிறோம் என்று அனைவரும் சேர்ந்து ஒருமித்த குரலில் சொல்லுங்கள். இந்தியாவின் டீச்சர்கள் வேறு, வெளிநாட்டை சேர்ந்த டீச்சர்கள் வேறு என்பது கிடையாது. அனைவரும் ஒன்று தான். இவர்களோ (வெளிநாட்டை சேர்ந்தவர்கள்) சேவைக்காக நிமித்தமாக இருக்கிறார்கள், ஸ்தாபனையின் காரியத்தில் உதவியாளர் ஆகியிருக்கிறார்கள், மேலும் இப்பொழுது கூட சகயோகம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள், ஆகையால் இயல்பாகவே அனைவரிடத்திலும் விசேஷமான நடிப்பு நடிக்க வேண்டியிருக்கிறது. பாப்தாதாவிடம் நிமித்தமான ஆத்மாக்களுக்குள் வெளிநாட்டை சேர்ந்தவர்கள் வேறு, பாரதத்தை சேர்ந்தவர்கள் வேறு என்ற பாகுபாடு கிடையாது. யாருக்கு எந்த சேவையில் விசேஷத்தன்மை இருக்கிறதோ, யாராக வேண்டுமானாலும் இருக்கலாம், அங்கு அவர்களின் விசேஷத்தன்மையின் பயனை பெற வேண்டும். மற்றபடி ஒருவர் மற்றவர்களுக்கு மரியாதை தர வேண்டும், இது தான் பிராமண குலத்தின் நியமமாகும். அன்பை பெற வேண்டும், மரியாதை அளிக்க வேண்டும். மனிதர்களின் விசேஷத்தன்மைக்கு மகத்துவம் தரப்படுகிறது அல்லவா. நல்லது.

**வரதானம்: ஒவ்வொரு நொடி மற்றும் எண்ணத்தையும் விலைமதிக்க முடியாத முறையில் கடந்து செல்லக் கூடிய விலைமதிக்க முடியாத இரத்தினம் ஆகுக!**

சங்கமயுகத்தின் ஒவ்வொரு நொடியும் மிகவும் மதிப்பு வாய்ந்ததாகும். எப்படி ஒன்று இலட்ச மடங்கு ஆகிறதோ, அப்படியே ஒரு நொடி கூட வீணாகிறது என்றால் இலட்ச மடங்கு வீணாகி விடுகிறது -ஆகையால் அந்தளவு கவனம் வைத்தீர்கள் என்றால், சோம் பேறித்தனம் முடிந்து விடும். இப்பொழுது கணக்கு பார்க்க யாருமில்லை, ஆனால் சிறிது காலத்திற்கு பிறகு வருத்தப்பட (பச்சாதாபம்) வேண்டியிருக்கும், ஏனெனில் இந்த சமயத்திற்கு மிகவும் மதிப்பு இருக்கிறது. யார் தனது ஒவ்வொரு நொடியையும், ஒவ்வொரு எண்ணத்தை யும் மதிப்பு வாய்ந்த முறையில் கடந்து செல்கிறார்களோ, அவர்கள் தான் விலைமதிப்பிட முடியாத இரத்தினம ஆகிறார்கள்.

**சுலோகன்: யார் சதா யோகயுக்த் (யோக நிலையில்) இருக்கிறார்களோ, அவர்கள் தான் உதவியின் (சகயோகத்தின்) அனுபவம் செய்து வெற்றியாளர் ஆகிறார்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## பொருளடக்கம்

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂